14

T. D. R. C. 1818

R. R. No. 14. 1.19..

D -,892 MSS.
No 1
119939

உ

ஸ்ரீராமஜெயம்.

ஜானகிபரிணயநாடகம்.

தமிழ்.

இஃது திருநெல்வேலிஜில்லா அம்பாசமுத்திரத்தாலுகா அரிகேசநல்லூரிலிருக்கும் புனல்வேலி மகா-ள-ள-ஸ்ரீ முத்துசப்பபாரதியவர்களின் பௌத்திரரும் மகா-ள-ள-ஸ்ரீ வரதராஜய்யரவர்களின் புத்திரருமான

பு. வ. முத்துசப்பய்யரால்
இயற்றி,

புனல்வேலி மகா-ள-ள-ஸ்ரீ இராமசுவாமிபாரதியவர்களாலும், அம்பாசமுத்திரம் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரு மகா-ள-ள-ஸ்ரீ அரி. ரா. அரிகரபாரதியவர்களாலும், திருநெல்வேலி மகாவித்வான் மகா-ள-ள-ஸ்ரீ கவிராஜநெல்லையப்பபிள்ளையவர்களாலும்பார்வையிடப்பட்டு, பெரியோர்களுடையவும், இந்நூலரங்கேற்றிய ஸாரஸ்வதவிலாஸமஹாசபையின் காரியதரிசி மகா-ள-ள-ஸ்ரீ எஸ். பால்வண்ணமுதலியாரவர்களுடையவும், மகா-ள-ள-ஸ்ரீ எ. வி. திருமலையப்பபிள்ளையவர்களுடையவும், அரிகேசநல்லூர் மகா-ள-ள-ஸ்ரீ எ. டி. சேதுராமலிங்கம்பிள்ளையவர்களுடையவும்
வேண்டுகோளின்படி,

திருநெல்வேலி ரெயில்வேஸ்டேஷன் ஆரியப்பிரகாசின்
அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பெற்றது.
இதன் விலை அ. 2

1901

Copy Right Registered.

OFFICE OF THE REGISTRAR OF
REGISTERED
4 - JAN. 1902
MADRAS.

நோட்டீஸ்.

இப்புத்தகம் வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசங்களெந்த விலாசத்திற்காவது எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

இதன் விலை ரூ. 2

தபால் ஜார்ஜ் பிரத்தியேகம்.

பு. வ. முத்துசுப்பையர்,
அரிகேசநல்லூர்,
வீரவநல்லூர் போஸ்டு.

எஸ். பால்வண்ணமுதலியார்,
தெற்குப்புதுத்தெரு,
திருநெல்வேலி.

ஈ. அரிகரபாரதி,
தமிழ்முனிஷி, ஹைஸ்கூல்,
அம்பாசமுத்திரம்.

119939
894/181

உ

ஜானகிபரிணய நாடகம்.

முகவுரை.

இந்நூல், சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே, வடநூல் வல்ல வித்துவ சிரோரத்தின விப்பிரகுல சப்பிரதீபரான, ப்ரம்மஸ்ரீ, இராமபத்திர தீக்ஷிதரவர்களால், வடமொழியிற்றமது, போதிவாலாய்ந்து தெளிந்து, நகரமுற நாடகமாக நவின்றருளப் பெற்றுலகிற் பரவியிருக்கின்றது. அதன்பொருளைத் தமிழ்நாட்டார் யாவரும் எளிதிலுணர்ந் தானந்தத்தை அநுபவிக்க இடமில்லாததுபற்றி, கசடறக்கல்லாச்சிறியேனெனினும், யான், கருதரியசிற்சகோதயக்கடலான இராமசரிதமென்பதிலுண்டாம் பேரவாவினே வுதலைக்கொண்டு, என்சிற்றறிவுக்கெட்டியபடி, செந்தமிழின்மொழி பெயர்த்தம்முறைவழாது, சந்தமுறநாடகமாய்ப், பற்பல தினுசுதினுசான, செய்யுட்களும், கீர்த்தனை, தரு, பத-ஜாவளிகளும், கண்ணிகளும், கேட்போர், படிப்போர் மனத்தைக்கவரும்படியான, நன்னயந்தருஞ் சொன்னயம்பெறும் உசிதாலங்கார வசனசிங்காரங்களுமா யியற்றியிருக்கின்றேன். இதனை யாவரும் எளிதிலுணர்ந் தத்தியானந்தத்தை அநுபவிப்பார்களென்பதிற் சந்தேகமில்லை. மற்றப்பிரபந்தங்களிற் காண்டம், சர்க்கம், அத்தியாயமென வகுப்பு ஒத்திருப்பதுபோ லிந்நூலும், வடசொல் ஆரியநா டேழங்கங்களா யமைக்கப்பெற்றபடியே, தமிழிலும், ஏழங்கங்களாய்ப் பொருந்தி யிருக்கின்றது. பொதுவாகவே, பரமயோகியருள்ளம், எந்தவஸ்துவினிடத்திற் பொருந்தியிருக்கின்றதோ அந்தவஸ்துவே, இராமனெனப் பொருள்படலாலும், இந்நாடகத்திலொவ்வொரு பதங்களிலும், ஒவ்வொருவாக்கியங்களிலும், பதங்கடோறும், யுக்தியும், ரசமும், பொருந்தியிருத்தலானும், இதைப்படிக்க வாரம்பிக்கும்போதே, படிப்போர், கேட்போர்களின், சித்தாலவாலத்திலுற்சாகவித்தங்குரித்து, மென்மேலும், சந்தோடமாரி பொழியப்பொழியச், சாகோபசாகையாய்த்தருவாய்வளர்ந்து, அறம், பொருள், இன்பம், வீடு, என்னும்பலவர்க்கங்களைச் சொரியாநிற்கும். இந்நூல் அத்தகைப் பயனுடைத்தென்பதற்கறிகுறியாய் இந்நூலின் கதாநாயகனான இராமபிரானால், வனவாசிகளான தபோதனர்களெல்லாம், அரக்கர்களின்பயங்களற்று, தங்கடங்கடப்பொருள்களை ரக்ஷிக்கப்பெற்றார்களென்றும், அவ்விராமபிரானாற் சுக்கிரீவ விபீடணர்கள், சத்துருபயங்களற்று, இராஜ்யாதி மகைசுவரியங்களைப்பெற்றார்களென்றும், சுக்கிரீவன், தாராதிசுகபோகங்களை யுமடைந்தானென்றும், அவ்விராம

பிராணைப் பமென்று நம்பித்தொண்டுபுரிந்த, அனுமத்விபீஷணாதிகள், நித்தியானந்தச் சிரஞ்சீவி வாழ்வைப் பெற்றார்களென்றும், பிரத்தியக்ஷமாகவும், அப்பிரத்தியக்ஷமாகவும், இந்நாடகத்தில்* விஸ்தரிக்கப்பட்டிருப்பதைக் காண்க. இன்னமும், இந்நூலின் கதாநாயகனை இராமபிரான், விபீஷணன், பக்தர்கள், முமுக்ஷுக்கள், ஆகிய மூவகை அதிகாரிகளான, இவ்வுலகத்தவர்களின், அறிவிற்கெட்டியபடியுள்ள, தியானத்திற்கிசைய, சாதாரணமனிதனாகவும், உபாசனைக்குரிய ஈஸ்வரனாகவும், நிர்விகாரச்சச்சிதானந்த ஆத்மசுருபமாகவும், விளங்குகின்றனனென்பதற்கறிகுறியாய், இந்நாடகத்தில், ஸர்வசம்பன்னனான சாதாரணமனிதனுக்குச்சனனமெடுத்து, விவாகாதிசுகங்களும் வனசஞ்சாராதிகஷ்டகஷ்ட சோகமோகாதிகளுமடைந்தும், சிவதனுர்ப்பங்கமென்ன, அகலிகை சாபவிமோசனமென்ன, சேதுபந்தனமென்ன, வனவாசர்களான தாபசர்களின் அபயப்பிரதான சம்ரக்ஷணைகளென்ன, கொடிய துன்மார்க்கர்களான தாடகை சுபாகு, கரனமாரீசர், விராதகரதூடணாதியர், வாலி, இராவண கும்பகர்ணாதி துஷ்டர்களின், சங்காரமென்ன, ஆகிய அமானுடப்பிரவிர்த்தியான, அருந்தொழில்களைடாத்தியும், நிர்விகார சச்சிதானந்தமாகிய ஆன்மாவே, மானுடப்படிவங்காட்டி, ஜீவபாவத்தைக்கண்டிக்கவேண்டி, காமக்குரோத அகங்காராதிகளால் வசிகரணமனத்தர்களான மூடர்கட்கெல்லாம், துக்கானுபவமே யெனவாங்காங்கே, சோகமோகாதிகளை நடிப்பித்து, ஆர்த்தகமான இச்சீவத்துவத்தையொழித்தலே, சுகானுபவமென, அதற்குமுதலிற் குருகுலவாச குருவுபதேசங்கண்முக்கியமென, வசிஷ்டவிஸ்வாமித்திரர்பாலடைந்து மந்திரோபதேச வரிசைகளடைந்து, ஈடணைவிலக்கல் நன்றென, இராச்சியாதி மகதைஸ்வரிய பரித்தியாகஞ்செய்து, வாதனாட்சயம்பெறலவசியமென, வனவாசஞ்செய்து, சாதனமன்றிச்சாதிப்பரிதென, சுக்ரீவ சக்யஞ்செய்து, பவக்கடல்கடக்க, நால்வழிகடத்தலே, சரியெனச்சேதுபந்தனஞ்செய்து, காமக்குரோதாதி சத்துருக்களுடன் சகவாசஞ்செய்வதாயினும், காமக்குரோதாதிபதின்றனுன், சித்தாபத்திகளைக்கொண்டு மற்றவைகளைக் கெடுத்தலுசிதமென, சத்துருவினுடன் பிறந்தவனாயினும் வீடணனைக்கைக்கொண்டு இராவணாதி இராக்கதர்களைமடித்து, நிஷ்க்காம தபஸால், அவித்தையால் மூடப்பெற்றவர்தக்காரணத்தைச்சுத்திசெய்யவேண்டுமென, சிறையில்நின்றும், மாயாசொருபிணியான. சீதாபிராட்டியை, அக்கினிசுத்திசெய்து, தானேதானாய் நிர்விகார சச்சிதானந்த சொருபியாய் அகண்டாதி பத்தியமுற்றிருந்தவனென இராச்சியாபிடேகம்பெற்றுச் சுகமுற்றிருந்தனன், என உருவகத்திற்கிசைய நவையப்பெற்றிருக்கின்றது.

மேலும் அகிலாண்டகோடி பிரமாண்டநாயக சச்சிதானந்தமாகிய ஆதிபரப்பிரம்ம சொரூபமே, துட்டநிக்ரகசிட்டபரிபாலனஞ்செய்து, சத்திய

தன்மத்தை நிலைநாட்டுவதற்காக், ஸ்ரீராமனாய்வந்தவதரித்து, பிரபஞ்சமாயையின் விநோதங்களை விளக்கி, தமது பிரபாவசக்தியையுந்துலக்கி, ஸம்புமடியார்களின் பக்குவாபக்குவங்கட்குத்தக்கபடி, இஷ்டகாமிய நிஷ்காமிய பலதாதாவாயிருந்து, பரிபாலித்ததாகவேதான், வான்மீகமுதலிய இராமாயணங்களின் முக்கிய தாற்பரியமுமே. அங்ஙனமாயின், இதன்பெருமை, சகலகலைக்கியானவல்லி, இரண்டாயிரநாவுடைய ஆதிசேடனாலும், அறையப்படலதன்றன்றோ? அத்தகைய மகத்தான இவ்வற்புத திவ்விய சரித்திரத்தை, இவ்வற்பனேன் சொல்லப்புகுந்தது, தரையிலூருகின்ற வோர் சிற்றெறும்பானது, வான்மதியினமுதருந்த, இச்சித்ததொக்குமாயினும், அப்பிபீலிகையும், கொன்றை, தும்பை முதலிய புட்பஜாதிகளில், மதுவாசைகொண்டு பொருந்தியிருந்ததும், அப்புட்பங்கள், திருத்தொண்டர்களாற்கொய்து, சந்திரகலாதரனுடைய சாக்ஷாத்பரமசிவனது, திருமுடியிற் சூடப்பெற்றகாரணத்தால், அவ்வெறும்பும், அழகிய திங்களின் திவ்யாமுதருந்தப் பெற்றதென்னுங் கதைபோல், ஏதோ, எனது புண்ணியவிசேடத்தாலும், கற்றறிந்த பெரியோர்களினனுக்கிரகத்தினாலும், அருமையான இந்நாடகம், என்னாற் பூர்த்திசெய்யப்பெற்றதென்றறிக. அவ்விராமபிரானது சரித்திர வர்ணனையினால், பூவுடன்சேர்ந்தநாரும் மணம்பெற்றதுபோல், புன்கவியாயினுமென்கவி நன்கமையப்பெற்றதாகவே பெரியோர்கள் அன்புகூர்ந்து மாணிக்கக் கேட்டுக்கொள்கின்றனன்.

உ

ஜானகிபரிணய நாடகம்.

சாற்றுக்கவிகள்.

அம்பாசமுத்திரத்தாலூகா அரிகேசநல்லூரிலிருக்கும் மக-ள-ள-ஸ்ரீ மகாவித்வான் புனல்வேலி அ. இராமசுவாமி பாரதியவர்களியற்றியகவிகள்.

சதுரகவிக்குருசிகரமதிபூடிகனையோசிதனைக்குமாச த்
அதுரகவிதவிரவிதழினரேரும்பிரதாபசாலிகல் வி
முதுரகவிசேஷகலைஞானசேஷனுமகிழமொழியுத்தின் ய
மதுரகவிவளமருவும்புனல்வேலிகர்செய்தவத்தில்வந்தோ ன்.

டடமாதவர் புகழும்பிரமநிலை யறிஞானகுரு வேதாக் ந
நாடகவிசித்திரமே செய்தமுத்துசப்ப பாரதிபேர் கவிஞன்போ ன்
மாடவாழ் வல்லோர்சவிசைபாடக் கேட்டமரர் மகிழவான்றோய்
ஆடகன்மாட மலிஅரிகேசநல்லூர் வாழுனி காவலோ ன்.

தருவரதராஜனெனு வேதியர்கள் குலதிலகன் றவத்தில்வந் த
உருவமதவேண் முத்துச்சப்பயவேள் தமிழ்க்கடலே யுண்டஞானப்
பருவமுகில் ஜானகிபரிணயமா மழைபொழிந்து பயிற்றுர்க்கும்
திருவசன மாமழையாய்ப் பதமழையாய்க் குளமழையாய்ச் செழிக்கத்தாவே

மேலப்பாழூரிலிருக்கும் ஆரியத்தமிழ் மகாவித்வான் மக-ா-ா-ஸ்ரீ புனல் வேலி வரதசாஸ்திரிகளியற்றிய சாற்றுக்கவிகள்.

சீதமணக்கும் பணிபுனைவீசர் தொண்டரித்தினை வாக் கு
வாதமணக்கும்பட செய்முன்னூல் சேர்புனல்வேலி வாழுங்கல்வி
போதமணக்கும்ப முனிவேதாந்த வடகஞ்செய் புனிதன்கோடி
காதமணக்கும்ப தமத்தாரணிபுமுத்துசப்பகவின் முன்னூலோன்.

அன்னவன் தன் பேரரிகேசநகர் மும்மாடமதனில் வாழ்வோன்
சொன்னவனத்தென் வரதராஜனருள் முத்துசப்பசமுக னென்போன்
கன்னவாளைத்தேடு செய்ஜானகியின் பரிணயத்தை நன்றாய்க்கேட்டின்
இன்னமுதைப் பாமரவருளார் மென்வலமி வியம்புவா ரே.

அரிகேசநல்லூரிலிருக்கும் மக-ா-ா-ஸ்ரீ புனல்வேலி அனந்தசப்பையா வர்கள் இயற்றிய சாற்றுக்கவி,

பொன்வளரரிகை வன்கைநனிற் பெருந்திவாழ் புகழ்ப்புனித ன்
சொன்மணிமாலே தொடுத்தருள் முத்துசப்பாரவலவ னென்கமுக ன்
தன்மனத்துறைந்தின் பயனெலமுதவுஞ் ஜானகிபரிணயத் தமிழி ல்
நன்மைசேர்திவ்ய நாடகமாகவின்று நற்புகழைநாட்டின ளே.

அரிகேசநல்லூரிலிருக்கும் ஸங்கீத வித்துவ சிரோன்மணியான மக-ா-ா-ஸ்ரீ புனல்வேலி முத்தையபாகவதரவர்கள் இயற்றியது.

ஆசிரியவிருத்தம்.

சீர்பெருங்கல்விநிறை திகழ்புனல்வேலி வாழ்சிலன்வேதாந்த வழுமைத ச்
சிறந்தநாடகமென வறைந்துலகர்பல நோய்கடர்க்கு நன்மருந்தாக்கினோ ன்
பாரிலியான்னதானத்தின் மிக்கோன்மிகப்பாக்கியவான் முத்துசப் ப
பாரதியருள் புதல்வன்வரதராஜன் றவப்பயனென வுதித்தபால ன்
காரேயகைமன் வெகுசிருடையனரிகைவாழ் கவிமுத்துசப்ப வள்ள ல்
கன்மொழிசெம்மொழி, கனகவிடைகடல் விழிக்கமலே ஜானகிபரிணயம்
ஆரமுதமென்னவே செந்தமிழ்கன்றுடைகமதா வியற்றினன் யாவரு ம்
ஆனந்தமதுவுண்ட வளியராய்க்களியரா யாச்சரியமாய்ப் புகழ வே.

திருநெல்வேலி மக-ா-ா-ஸ்ரீ மகாவித்வான் கவிராஜநெல்லையப்பபிள்ளை யவர்கள் இயற்றிய கவிகள்.

திருமகளும் வெண்கமலத் தொருமகளுமகலாத செல்வமென் று
மருவுபுனல் வேலிநகர்வந்த முத்துச்சப்பயமால் வாத்துதித் த
வொருவரதராசனெனு முயர்நாமந் தரித்திநெல்லு சிதறுமி வ்
விருவருக்கும்பொன்மகனெனும் பெருமைபெற்று மகிழியல்பினனே.

வேறு.

மதனனும்பெண்மைய காவுறவனப்பன்னசமானிகை திகழ்மார்ப ன்
இதமுனைவசனன் கருணைசால்விழியனிவ் விசைநாடக மெனு மு
விதமுறுதமிழும் வழுவறவுணர்ந்த விவேகவான்விமலனைப் பணிய ற்
புதமிகுபக்தியுடைய நன்மனத்தன் பொறுமையிற் பூமகட்போல்வா ன்.

எவ்விதவிழியார் தொழுமையாக விருவரைக்கொண்டதை யெய்ப்ப ச்
செல்வமார் சிசீராமயிற்சேர்த்த ஜீவனைச்செந்தமிழ் தேர்க ந
வல்லவிவறிவனருந்தவர் திலகனிகரப்பெயர் வெண்பமாசு ந்
சொல்விருப்புடனிக் காசிலன்பாகத் தொழுமையெனக் கொளுக்தோன் றல்

தருமனையனையான் போகத்திலருவிற் சனகனைத்தவத்திலனி ருவர ன்
அருமறைபயிலும் நாவினனரிகை யம்பதிவாழ் தருமன்னர ல்
கருமுகில்லெஃகும் வண்மையும்பொய்மை களைவிருஞ்சொற்றிடமக்களும் ம்
மருவியசம்தம் சிறிமுத்துசப்ப மபெபதிதமிழ்க்கருள் வள்ள ல்.

பனவர்தங்குலத்துற்ப வித்தவனிராம பத்திரதீக்ஷிதன் பண்பாச்
சொனவடமொழிச் சானகிபரிணயத்தைச் சொற்சுவை பொருட்சுவைதோ
யமருவிய செந்தமிழ்நாடகமா வகுத்தனன் சீர்த்தியும்மாபுகு [ன்ற
ணகவான்பொருப்புங் கயிலையும்போல நிலைக்கவெக்காலத்து மாதோ.

சேற்றூர்ஸமஸ்தானம் மகாவித்வான் மூவலூர் மக-ள-ள-ஸ்ரீ இராமசாமிக்கவிராஜரவர்கள் இயற்றியகவிகள்.

பொன்சேரு கழுங்கமலப் பழனமெலாமுப்போகப் பொலிவைக்காட்டுந்
தென்சேறைத் தலபுராணத்தை வடமொழியதனுற் றெளிவித்செய்து
மின்சேருக்கத்தியர் பொன்னிலமெலாமிதத்தையெனும் வேதாந்தத்தைத்
தன்சேமநாடகஞ் சீர்த்திலைபதமென்றப் பெயராற்சாற்றும் வல்லோன்.

பொன்றுதனிநிலையோர் கவிமாலையாத்திரட்டிப் புகன்றோனருமை
குன்றுதபுனல்வேலி முத்துசப்பபாரதி யாங்கும்பன் றன்னைத்
தன்றுணைதன்றுணைத் தெனப்புகன் றன்றோன்பெயருந் தரித்தோன்வெளி
மன்றுடியருள்பெருகும் வரதராஜயர் தவத்தால்வரு குமாரன்

இக்காளிவதிகேச கல்லூரிலுவந்து வசித்திருப்போன் மேலோர்
அக்காளில் வடமொழியிலுறை ஜானகிபரிணயநாடகத்தை வாய்மைச்
சொன்றேமுகில் ராமசுவாமிபாரதி யெனச்சொல் சுமுகன்றன்னைத்
தன்றுணையுடன்றாதிசோதரனென் றுரைக்குந் தன்மைதனைப்பெற்றுள்ளான்.

அக்கரையாய்க்கற்றோர்க்குங் கல்லார்க்கும்பொருள் விளங்கவன்புட்கொண்டே
தக்கசந்தசுரநயஞ் சொன்னயம்பொருந்த நாடகமாத்தன் முன்னோர்போல்
மிக்கபுகழ்பெற்ற முத்துசுப்பபாரதி வாக்கால் விளம்பினனேல்
எக்கலையுங்கற்ற காவலருமா காவலவனெனச் சொல்வரே.

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனவித்வான் சேற்றூர் மக-ள-ள-ஸ்ரீ சுப்பிரமணியக்கவிராயரவர்கள் இயற்றியகவி.

அருந்தவர்மெச் சரிகேசநூர்வாழ் முத்துச்சுப்பய்யன் செவ்வி
திருத்துஜானகிபரிணயத் தமிழ்நாடகமாகச் செய்தான் விண்ணோர்
மருந்தினுங்கற் றமிழாகுமிதுவே நாடகமெனத்தமடைக்குக் கற்றோர்
பொருந்தவுரைத்துவப் பவெளிவிதன் பெருமையாமென்றே புகலுமாறே.

திருநெல்வேலி, இக்காலக்கேற்றிய ஸரஸ்வதிவிலாச மகாசபையின் காரியதரிசியாயும் ஆரியப்பிரகாசினி அச்சியந்திரசாலையின் செக்ரட்டேரியாயுமிருக்கிற மகாவித்வான் மக-ள-ள-ஸ்ரீ என். பால்வண்ணமுதலியாரவர்கள் இயற்றிய கவி.

மானிநேர்க்கியர் தங்களுக்கெல்லாம் வாழ்வொடுதிருவினை வயக்குந்தன்மையாள், ஜானகிபரிணயந்தராதலம் புகழத்தமிழிலோர் நாடகமாகச்சாற்றினன், பாவலக்கவியோ டொழுக்கமாசாரப் பண்புறுவான் கழல்பரவிசித்தியான், ஞாலிலம்புகழுந் திருமறைவாயால் கவிமுத்துசுப்பய்யனெனு மபேர் காவலோனே.

ஸ்ரீவில்லிபுத்தூர் மகாவித்வான் மக-ள-ள-ஸ்ரீ பொன்னுப்பெருமாள்செட்டியாரவர்கள் இயற்றியகவி.

சங்கநிறைதவழ் பழனப்புனல்வேலிப் பதிவரதராசவேதப்
புங்கவன்செய் புண்ணியத்தாற் புத்திரனுதித்து மிருபோதமேவும்
பங்கமில்சீர் முத்துச்சுப்பபாரதிகள் செயுஞ்சீதாபரிணயத்தைத்
துங்கவல்லப் புலவருஞ்செவி வாய்க்கொண்டமிழ்தாய்த் துதிக்கின்றாரே.

திருநெல்வேலி டிஸ்டிரிக்டு கோர்ட்டு பிளீடர் மக-ள-ள-ஸ்ரீ எஸ். எம். ஸைமல்பாகம்பிள்ளையவர்கள் இயற்றிய கவிகள்.

பொன்மருவுமணி மாடகூடமேவு புனல்வேலிசெய்தவப் பொலிவீனுவே, மின்மருவுசடைக்கடவுள் பாதம்போற்றும் விப்பிரிலெஞ்ஞான்றுமேன்மையான, சொன்மருவுங்குணசீலன் வரதராஜத்துங்கன் வழித்தோன்றலெனுஞ் சுமுகனான, மன்மருவுமாரிகைவளர் முத்துச்சுப்ப வள்ளறமிழ்ப்பயிருலவில் வளரவென்றே.

வேறு.

செய்தனவிவசத்தமிழ்த் தெளிந்துதேன்மழை
பெய்தனவெனப்புகழ் பேர்பெற்றேகவே
ண்பதமிழ்ச்சானகி பரிணயப்பெய
செய்தியநாடக மென்னுநூலையே.

வேறு.

இப்புவனக்கடலமுதம் புலவோர்க்குறுவினுக்கே இனிக்குமென்றும்,
அப்புவனப்புவனத் தெழில்வளஞ் சேரிசைமுத்துச் சுப்பமுனிவருமையாகச்
செப்புவனத்தமிழ்ப்புதிய நாடகத்தின் றெள்ளமுதந் தெவிட்டாதென்று ம்
முப்புவனப்புலவோர்கண் மனஞ்செவி நாவினிக்குமிது முசுமனன் றே.

ஸ்ரீவைகுண்டம் மக-௱-௱-ஸ்ரீ தாசில்தாரவர்கள் வித்வசிரோன்மணி வெங்கிடசாமிபிள்ளை அவர்கள் இயற்றிய கவிகள்.

ஓர்பெருமைத்தமிழ்ப் பொலிவுத் திருவளரு மெஞ்ஞானத் திகழ்வும்வாய்ந் தே
ஏர்பெருமோரின்ப நூலிவ்வுலகில்யான் காணவேர்க்குமோ வெ ன்
றோர்பெரியகாதன் மனத்துற்றிட்ட திலதினைமெய் யுணர்வாலோர்ந்தா ன்
ஊர்பெரியஅரிகேச உயர்நல்லூர் யுறையவரு முரவோன்றானே. *

நான்மறையா றங்கமுத னவிலும்பல் கலையனைத்தும் நன்குயோர்ந் து
வேன்மறவாப்புனல்வேலி வரதராஜப் புனிதன் மிகுதவத்தி ன்
கான்முளையாங்காரணத்தால்முத்துச் சுப்பய்யனெனக் கவின்பேர்வாய்த்
[தோன்
மேன்மையுறுதவநிலை மிருங்கலையின் கடலெனவே விளங்குமேலோன்.

சுருதியஞானதீப வினாயகன் னாடகத்தைக் கவிஞர்போற்ற ப்
பொருதலிலா வடமொழியா லிராமபத்திப்புனிதன் புனைந்தான்முன்னுன்
இரிதலிலாததிறம் பல்லுயிர்களும் கேட்டுவந்துகொடும் பவநோய்தீர த்
தருத்தகைய நாடகத்தைச் சாற்றினனெப்புவியுந் தழைக்கமாதோ. *

இயலிசைநன்னாடக மென்றியம்புதிரி புடையதனி னிறுதியாவு ஞ்
செயலுடையதாதலினுற் றெலமொழியிற் றேன்மொழிசேர்த் திசைத்தான்
[நங்கள்
மயலொழியமார்க்க மினியாங்கொல்லோ வன்னுவனூர் வருத்துசொல்லு ஞ்
கயலாமோவின் புறதலுலகென்றால் காமுறுவர் களிவேழுண்டோ. *

செந்தமிழ்நற்கவிக்கு மலரவனெவ் வானெனுமுனையைச் செவ்விதா க
இந்நான்முகன் கண்டேனெவ்வாறோவென் றிடிலெம் மிறைவன்முன்னுன்
பந்தமறுபிரணவத்தின் பொருள்கேட்பப் பதுமன்மிகத் திகைத்தவாற்று ல்
விந்தையதாய்த் தளையிட்ட வேலவன்பேரிக்கவிக்கு விதித்தவாறே. *

சாற்றுக்கவிகள் முற்றிற்று.

ஞானதீபவினாய நாடகம்

சிறப்புப்பாயிரம்.

அம்பாசமுத்திரம் சைவநற்கூடல் தமிழ்முனிவிப்பிரவர்களாகிய மக-௱-௱-ஸ்ரீ ரா. அரிகரபாரதியவர்கள் இயற்றியகவிகள்.

மன்றிடம்புரிந்தருளும் வரதனெனுமொரு வணிகன்வசுதைப் பொன் னை
அன்றுதிருத்திடக் கலையமுனிவனெனு மொருபடியை அருளத்தாங் கி
வன்றிறல்கூர் அத்துலையின்வலத் தட்டினிலையமுறு மலையப்பொங்க ற்
தென்றியொடுதமிழ் மணக்குந்தென்னூட்டு மடந்தைநுதற் றிலதம்போன்ற

மின்முத்தத்தொளிர் வைகைவளமளித்த வுலகமெல்லாம் விரும்பிக்காம ப்
பொன்முத்த முடிதரித்தகடவுளுறை தடமதுரைப்புரிக்கும் வேர ல்
நன்முத்தர்வதிந்தருளும் நெல்லையெனுந் தொன்னகர்க்கும் நிலவேனுக்கு ம்
தென்முத்தப்பழனமலி புனல்வேலி மாநகரில் நீடுவாழ்வோ ன்.

ஒருபிறப்பனுயிடினு மிருபிறப்பன் முப்பொழுது முணர்வோனுங்கா ய்
பொருமறைநசன் முழுதறியுமஞ்ச முகனுறுதொழிற் புனிதனேழா ய்
மருவுதனைபுகழ வட்டாவதானஞ்செய் புலவர்தமணி சம்பந்தி வ்
கருதியகுபோனுயர் கற்பகத்தின் வள்ளண்மை கதித்தகையா ன்

நாதாந்தங்கடந்த பரப்பிரமநிலை தனையுணர்ந்தோன் ஞானமுய்வா ன்
தாதாந்தமென நடிக்கும்வேதாந்த நாடகமுந்தயவாய்ப் பின்ன ர்
வேதாந்தக்கீர்த்தனையும் கவிமாலைமுதற் பலவும்விரும்பிச் சொற்ற ன்
பூதாந்தத்துட்புருடமுதந்தமிழால வைசெழுமொழிய மேறு ம்

வடமொழியாங்கடல் கடந்தவனுமையினு லொருமுனிவரைந்துவைத்த தி
டமுடையராமகதைப் பாதிரட்டிப் பலெனவே செய்தவொப் ப
அடைவுறச்சுருக்கித்த ராமாயணமென் றிவ்வுலகிலுரைத்தான்முன்னு த்
றடம்புயத்த முத்துசுப்பசதானன்ஞேன் பேரெனச் சாற்றுவோனு ம்.

செய்மனைக்கும்பூங் கரும்பின்றீன்பாலு முக்கனியுந் தேனும்பாலு ம்
செய்மனைக்குமாறு சுவைப்போனகமும் யாசகர்க்கு நிதமும்வழங் க்
கைமனைக்கும்பெருவறமே திருவாதராசனுக்குக் கவின்கொண் டோங் கு
மெய்மணக்கவந்தருள் சற்புத்திரசிகாமணி யென்னவிளம்பு வோனு ம்.

அங்கமிருமூன் றுமறை நான்கறிந்தோனு பனிடதமாறும் நானு ம்
சங்கரபாடியத்தினுங்கோர் சாயையென வடமொழியிற் றமைவுதர்க ப்
பங்கமுறு இவ்வுலகோர் பவப்பிணிக்கு மருந்தெனவே பரிந்துசொற் ற
பொங்குபுகழிலக்குமணசாஸ்திரிகளுடைமையன் வரபுத்ர னென்று ம்.

தாண்டருந்தென்வடமொழிகள் கற்றருள் ஸ்ரீசுப்பய்யர் தமக்குமான்கா ய்
மீண்டமுதக்கவிபொழியும் அரிகரபாரதியெனச் சொல்லெனக்குங் கற்றோர்
வேண்டுவனவியந்தருளும் வேளாளர்வஞ்செழுமாம் விர்கடற்கோ ர
சுண்டைமையகந்திரனுங் கல்விடைச் சுப்பிரமணிய சுனவானுக்கு ம்

வேதமாயு நித்தருளி வடிவன்னை இடமன்னி விளங்கக்கொண் ட
தாயகராம் செல்வகை மனவர்த்தனாமிரு தாண்மலர்க் கே
தூயகமாய் பாட்டிசைக்கும் வேள்ளாளர்மாவேடி துலங்கித்தோன்ற ம்
நாயகமர்மணி யெனச்சொல் கவிராஜசெல்லையப்ப நாவலோர்க்கு ம்.

சேர்விளங்குந்தென்னாட்டுச் செல்லையங்கண் மெய்மேனுஞ் சிறப்புற்றோங்கு
ஏர்விளங்குப்புரிசபைக்கண் சேர்விளங்கவீற்றருளு மிராஜலிங்க ய்
கார்விளங்குமகராணிக் குப்பினிறாவிஸி தமைந்தோன் கங்கைவம்ச ப்
பேர்விளங்கப் பார்விளங்கும் பெரும்புகழ்சேர் திருமலையப்பேந்திரனுக்கு க்.

தாபதர்க்கு சிலைதிருப்புவைமருவு ராஜியங்கட்டமைப்புச் செய்வோ ன்
சோலைப்பதுமனை மெச்சிக்கோவென்றற கவிக்கிர்திசொரியுஞ் சோ லை
கோபயிலிகாரகர் நரபெனச்சொல் மாமேருக்கோட்டின் வைத் த
தியமணத்திறம் சேதுராமலிங்க வள்ளலுக்குஞ் சினேகனென்று ம்.

செங்கவிலருந்தமிழை வடமொழியினுடன் பயின்ற தன்மையாலு ம்
அங்கசவேள்ளெனப்பானுங் கவிப்புலவருவப்ப வருள்வண்மையாலு ம்
பங்கயமலர்க்குலம் வாய்மைக்குணத்தாலும் நிகற்றபான்மையா வே
பொங்குகடலுலகமெலாஞ் சீர்த்தியெனும் வெண்கொடிபோர்த் பேர்த்தா டெ

சொன்னமணிக்கோ புமோட்டுமின் பனிமாடத்தெருவாய்ந்த செய ய
கன்னலொடுசெந்நெல்வளர் பூஞ்சாலித்தன் சோலைசூழுங் குற்ற ாலத்
மன்னரிகைப்பெண்களுகே ராயகமாய் நாயகமாய் வாழ்வோனென் று
பன்னுமனைவிதானம் முத்துச்சப்பாத்தியப்ப பாலவாணகிரெ ன்

குறையாருஞ் சிலையனுணர் மலைவிபுதர்களையுமருட் கொடுக்காத ன
கறையாருங்வடமொழியின் நாமபத்திரிக்கதனைத் தென்னுட்சொற் ற
கறையாருஞ்ஞானமெனு நிர்ணயமெனுநாடகத்தைக் கடல்சூழ்வைய த்
திறையாரும்படித்துயச் செந்தமிழ்ப்பாற்கவேண்டு சிவர்க்கிசைந்து மன்னோ.

தேன்பாலினான் பாலைக்கலந்ததெனப் பரிபாகச்செஞ்சொல் யாத்த ன்
நடன்புாவிணமிருக்கு மீள்வியசாரவளிப் பதங்களோ வியங்க ன்
தான்புகழ்ந்தசிவை கடலைதுளக்கும் பல்தருக்கன் கனிகள்பூமே ல்
வான்பாலினின்ற பொருள்வசமுறும் பலசந்தமலர்த்த பாக்க ள்

மங்காதங்குறுவேடம் பொருத்தமுறத் தரித்தவர்கள் மன்றில்கா டி
அங்காருமகிழ்ந்திடச் சமயத்திலுக் கந்திரைப்படி யமையச்சொல்வா ன்
இங்காரவாசக மிந்துன்தானிக் கீர்த்தியை வெளிக்கும்பாரி ற்
புங்காநுபுவமதாய் நாடகமாய் நவரஸமும் பொழியச்செய் தே

சாத்திரத்திற் சிறந்தசெல்வச் சரவணதிவிஸ்ர மகாகவிப்பின்மேவு ம்
பாத்திரத்திற்சிறந்த பலபுலவர்தமை துனக்கினிதிப்பாசெய்ஞ்ஞோ த்
கோத்திரத்திற்சிறந்திடு மாயிரத்தெழுப்பத்தொரு சிலுகார் கொல்லத்திங்கள்
சேத்திரத்திற்சிறந்த சிதம்பரத்திரைநாள் அரங்கேற்றல் செய்தானன்றே.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

* * *

ஞானபரிணய நாடகம்.

கதாசாரசங்கிரகம்.

(முதலாவதங்கம்).

நாந்தியந்தே (சூத்திரதாரன் அரங்கத்திற்றோன்றி, தான், நாடகம் நடத்துவதான, பிரவிர்த்தியைச்சொல்லிக்கொண்டு, நடிப்பெண்ணவளை எதிர்பார்த்ததும், அந்நடிப்பெண்ணும், தோன்றியவள், இவ்விருவரும், நாடகமுறைப்படியே, ரூப, ரஸ, ?ட்டிய, ஸங்கீத, நடையுடைபாவனைகளுடன்,

உபசாரங்களும் நன்குவிளங்கும்படி, நாடகம் நடத்துவதாய் நவின்றுகொண்டு, சங்கீத நடன நாட்டியவிசேஷங்களாற், சபையைச்சந்தோஷிக்கச் செய்துகொண்டு, அந்தப்பாத்திரப்பிரவேசங்களை, (அதாவது) அந்தந்த ரூபங்களை வேடதாரிகளைச் சந்தர்ப்பங்களுக்குத்தக்கபடி சபையிற்செலுத்தலாயினர், எங்ஙனமெனின், முதன்முதலில், இலங்காபுரியை ஆளுகின்ற இராக்கதகுலச்சக்ரவர்த்தியாகிய, இராவணேச்சுவரனுக்கு, மிதிலாபுரியையாளுகின்ற, ஜனகராஜனது தவப்புத்திரியாகிய ஜானகியென்னுங் கன்னியாரத்தினத்தை மணம்பொருத்தவேண்டி, அவனது ஏவுதலைக்கொண்டு, அம்மிதிலேசனிடம் யாசனைசெய்யப்போகின்ற விதமாய், அவனது சாரனான சாரணனென்னுமிராக்கதன், பிரவேசிக்கின்றனன், மேற்கண்ட காரியார்த்தமாய் முன்னரே, மிதிலாபுரிக்குச்சென்று, அங்குள்ள வர்த்தமானங்களைக்கூடமாய்த் தெரிந்துகொண்டு, திரும்புவருகின்ற விதமாய் (சுகன்) என்னுமிராக்கதன், பிரவேசிக்கின்றனன், அவ்விருவரும் சந்தித்துக்கொண்டு, அரமடந்தையர்களையும், சங்கையற்று விராகேஷபனையாய்க் கவர்ந்துகொண்டு வந்து, சுரேசன்முதல் யாவரையுஞ்சிறையிட்டுத் தானே இன்பசுகமனுபவிக்கின்ற அவ்விராவணேச்சுரனுக்கிந்தப்புவிமடந்தையைப் பலவந்தத்திற்கவர்ந்துவந்து, சுகமனுபவிக்கக்கருதாது, ஜனகராஜனிடம் யாசனை செய்யும்படி கருத்துவந்ததெல்லாம், அவனுக்குத்தனக்குமுள்ள சைவநேயத்தாலென்றறிந்துகொண்டவர்களாய் மிதிலாபுரியில், முப்புவனத்தினும், ஒப்பற்ற வனப்பினளாகிய ஜானகியென்னுந் தையலர்க்கரசி, தனது சொற்பனத்தில் மன்மதனுற்காண்பிக்கப்பெற்று, அயோத்தியாபுரியையாளுகின்ற, தயரதசக்ரவர்த்தியின் றவப்புத்திரர்களில், முன்னவனான இராமனது திவ்யசுந்தரத்திருமேனியைக்கண்ணுற்று, அவன்மீதடங்காக்காதல்கொண்டு, அவனையேமணம்புரியக்கருதினவளாய், விரகதாபத்தால் வருந்துகின்றனளென்றும், தனது சைவநேயனாகிய இராவணேசுவரன், அவள்மீததிகக் காதல்கொண்டு, மணம்புரியக்கருதி தன்னிடம்யாசனைசெய்ய எத்தனித்துக்கொண்டிருக்கின்ற சங்கதியைக் கர்ணாகர்ணிகையாய்த்தெரிந்துகொண்ட ஜனகராஜன், கன்னிகாமணியின் காமாவஸ்தையைக்கண்ணுற்று, அவளது மனோபீஷ்டம்போல், இராமனுக்குக்கலியாணஞ்செய்து கொடுக்கக்கருதினாலினும், அதுவிஷயமாய், இராவணேச்சுவரனது பகை, தன்னைச்சேராதிருக்கும்படிக்கும், அம்மணத்தினால் விகாதம் வாராதிருக்கும்படிக்கும், நிர்விக்கினமாய் ஜானகிக்கும் இராமனுக்கும், மன்றல்நடத்திவைக்கும் விஷயமாய், சுவர்க்கப்பிரதி சுவர்க்கஞ்செய்த, மகா தபோ விசிஷ்டரான, விசுவாமித்திரமுனிவரை, மத்தியஸ்தராயிருந்து நடத்திவைக்கும்படி, வேண்டிக்கொண்டானென்றும், அம்முனிச்சிரேஷ்டனும், அங்ஙனமேசம்மதித் தயோத்தியாபுரிக்குச்சென்று, இராமனைத் தயரதன் முதலானவர்களுடனழைத்துவ

ந்து, தந்திரமாய்க்கலியாணஞ்செய்து வைக்கக்கருத்துட்கொண்டு, தானொரு வேள்விசெய்யப்போகின்றதாயும், அதற்காக, தனதிஷ்டரான, தயரதன்முதலானவர்களை, அழைத்துவரச்செல்வதாயும், கபடமாய்ச் சொல்லிக்கொண்டயோத்தியாபுரிக்குச்சென்றிருக்கின்றனனென்றும், அதற்கிணங்கிய, அச்சனகராசனும், தன்னரசைத்தம்பியாகிய குசத்துவஜனிடம், ஒப்புவித்துவிட்டுக் கௌசிகர்செய்யப்போகின்ற யாகத்தைக்கண்ணுறுவர, ஆவல்கொண்டவன்போற்கபடமாய்ச் சொல்லிக்கொண்டு, கன்னிகாமணியுடன் கௌசிகரது ஆச்சிரமத்தில், முன்னரேவந்திருக்கின்றனனென்றும், அறிந்துவந்துரைத்த சுகனுடன், சாரணன், ஆலோசனைபுரிந்ததாவது, இராவணனுக் கப்பெண்மணியின் மணத்தைப்பொருத்தி வைப்பதற்கு, ஜனகராஜனிடமினியாசனை செய்வதிற்பயனன்றென்றும், இராவணனுக்குச் ஜனகன்மீதுள்ள சைவநேயத்தானும், மனையில்லாப் பெண்டிரைப்பலவந்தத்தின், மருவிடக்கருதினால்; மண்டை வெடிக்குமென்றும், வன்சாபமொன்றிருத்தலானும், வன்மையிற் கவர்தலொண்ணாதென்றும், ஆகையால், அவ்விராவணேச்சுரனே, அம்மாதரசியின் மனதிற்கிசைந்த, அவ்விராமனது வடிவத்தை, மாயையாற்புனைந்துகொண்டு, அச்சனகன்பாற்சென்று, அவளைப்பரிணயஞ்செய்து கொண்டுவரவேண்டும், அங்ஙனமாயின், மணத்தின் பின்னர், இராவணனென்றறிந்துகொண்டாலும் பாதகமில்லையென்றும், வித்திச்சிருவனென்றமந்திரியை விசுவாமித்திர வடிவந்தரிக்கச்செய்து, இராவணன் இராமவேடந்தரித்துக்கொண்டு, விசுவாமித்திரன் இராமனையழைத்து வரும்பான்மைபோல், ஜனகராஜன்பாற்செல்லவேண்டுமென்றும், ஆனால், அதற்கிடையில், அயோத்திக்குச்சென்ற விசுவாமித்திரர் இராமாதிகளையழைத்துக்கொண்டு, இடையூறுக வந்துவிடாமல், கொடியதாடகாதியரைக்கொண்டு, இராமாதிகளை மார்க்கமத்தியிற்றடுத்துமாயையாற் கொல்லுவிக்கவேண்டுமென்றுந் தீர்மானித்துக்கொண்டவர்களாய், இராவணேசுரனுக்கறிவிப்பதற்குச்சுகனை அனுப்பினன். அப்பால் அக்கானம், தாடகையென்னுங்கொடியஇராக்ஷஸி, பிரவேசித்தனள், சாரணன், அவளது வரலாற்றைத் தெரிந்துகொண்டு விசுவாமித்திர முனிவரின் தந்திரோபாயத்தைவிளக்கித்தானும் சுகனுமாலோசித்தபடி இராமாதிகளை இடைவழிக் கட்டிமாய்த்து விடும்படி மாரீசன் சுபாகு காவலன் இவர்களுடன் தாடகையை அனுப்பிவிட்டுச் சென்றனன். அப்பால், இலங்காபுரியில், வித்திச்சிருவ சாரணருடன் இராவணேசுரன் பிரவேசித்தாலோசனைபுரிந்து ஜானகியென்னுந் தையலாள்மீது க்ஷணம் பொறுக் காதல்கொண்டேங்கின்றவனாயினும், இராமனென்னுமவன்றன்வடிவத்தைத்தரிப்பதில் இலச்சையடைந்து காதல்ஒருபக்கம், இலச்சை ஒருபக்கம், கருக்கக்களவருத்தமுற்றவனாய் கடைசியில்வெட்கத்தைத்துறந்துவேடந்தரிப்பதற்கிணங்கி அவ்விருவருடன் புட்பகவிமானத்திலேறிக்கொண்டு விசுவாமித்திர முனிவ

ரின் ஆச்சிரமவனத்தை அடைந்தங்கோர்பால் விமானத்தை மறைத்து வைத்துவிட்டு, திரஸ்கரணி, யென்னும் மந்திரமகத்துவத்தால் மற்றவர்கட்புலன்கட்கறியப் படாதவர்களாய்த் தங்களைமறைத்துக்கொண்டு அன்றுள்ளவர்த்தமான வதந்திகளைத் தெரிந்துகொள்ளும் நிமித்தமாய் சஞ்சரிந்தனர். அங்ஙனம், விசுவாமித்திரருடையவும், சதானந்தருடையவும் சீடர்களான சத்தியவிரதன், தேவவிரதன், என்ற இரண்டு வன்னியர் பிரவேசித்து, ஒருவருக்கொருவர் சம்பாஷித்துக்கொண்டு அவரவர்கள் தர்ப்பைமுதலியவை வாய்ந்துகொண்டாச்சிரமத்திற் சென்றனர். அவர்களால் வர்த்தமானங்களை இரகசியத்திற் றெரிந்துகொண்டஇராவணேச்சுவரன் மற்றிருவருடன் சஞ்சரிக்கின்றனன்.

முதலாவதங்கம் முற்றிற்று.

இதில் 1-வது இலங்கையினின்று மிதிலாபுரிக்குச் செல்லுகின்ற விதமாய் சாரணன் பிரவேசம்.

2-வது மிதிலாபுரியினின்றும் வருகின்றவிதமாய் சுகன் பிரவேசம்.
3-வது தாடகையின் பிரவேசம்,
4-வது வித்திசிருவனுடன் சாரணனுடன் இராவணேச்சுவரன்பிரவேசம்
5-வது புட்பகவிமானத்துடன் சாரணன் பிரவேசம்.
6-வது சத்தியவிரதன் தேவவிரதன் இவ்விருவரின் பிரவேசம்.

ஆக பாத்திரப்பிரவேசம் 9.

உ-வது அங்கம்.

விசுவாமித்திரமுனிவரின் ஆச்சிரமப்பிரதேசத்தில், அத்திரிமுனிவரும் அவரதுபத்தினியாகிய அநசூயாதேவியும் பிரவேசித்து, அவர்கள் கௌசிகர் ஆரம்பிக்கப்போகின்ற யாகதரிசனநிமித்தம் வந்தவர்களாய்ஸம்பாஷித்துக்கொண்டு, அவ்வாச்சிரமத்தில் வந்திருக்கின்ற ஜனகராஜனிடஞ்செல்வதாய்ச்சென்றனர், அப்பால், அங்ஙனம், திரஸ்கரணீ மந்திரமகத்துவத்தால் பிறர்கட் புலன்கட்கறியப்படாதவர்களாய்த் தங்களை மறைத்துக்கொண்டு சஞ்சரிக்கின்ற இராவணவித்திச்சிருவ சாரணர்கள் பிரவேசிக்கின்றனர், அவ்விருவருடன் இராவணேச்சுரன் அவ்வனத்தில் வந்திருக்கின்ற ஜானகியின் பேரழகைப்பார்க்க ஆவல்கொண்டு, சஞ்சரித்துக்கொண்டிருக்கையில் அங்ஙனம் ஓர்பால் திவ்வியமங்கள சுந்தராங்கியான ஜானகியென்னுங்கோதையைநோக்கி. காமாவஸ்தையாற்றாதவனாய்ப் பற்பலவிதமாய்ப் புலம்புகின்றனனாய், தனிச்சயனத்திற்சயனித்துக்கொண்டிருப்பவளாய், இதுகாரணத்தால் அரக்கர் கட்புலன்கட்கறியப்படாதவளாய்த், தன்னந்தனியே பிரவேசித்த

னள். இராவணன், மற்றிருவருடன், அவளதுபுலம்பத்தைச் செவியார்த்திறக்கமுற்று, அவளது இன்பமான சப்தத்தினால் அவள் திரிலோகசுந்தரியாயிருத்தல் வேண்டுமென நிதானித்துக்கொண்டவனாய், ஆதரத்துடன் அவ்வடன்னெழிலுருவத்தைக் காணக்கருதி எவ்வளவெவ்வளவோ பிரயத்தனப்பட்டும் காணப்பெறாதவனாய், இவளின்னாளென்றே அறிய மார்க்கமற்றுப் பரிதவித்துக்கொண்டிருந்தனன், அங்ஙனமிருக்க, சுசரிதை, என்னுந்தோழிப்பெண், தாமரைத்தண்டுமுதலிய சைத்தியோபசாரசாமான்கள் சகிதம்பிரவேசித்து, ஜானகிக்குப்பற்பலவிதமாய்சைத்தியோபசாரஞ்செய்தனள், சிலவதியென்னுஞ்சகி, சித்திரப்பலகைமுதலியசாமான்கள்சகிதம்பிரவேசித்தனள். அவ்விரண்டுதோழிப்பெண்களுஞ்ஜானகிக்குப் பற்பலவிதங்களாய்விரகாக்கினியை ஆற்றுவித்துக்கொண்டிருக்கிற ரீதிகளையும், அந்தச்சகிமார்களையும், அந்தச்சித்திரப்பலகையையும் அதிற்ஜானகியால் தன்சொற்பனத்திற் கண்டகணவனதுருவத்தை யெழுதப்படுகின்ற ரேகைகளையும், கண்குளிரப்பார்க்கின்ற இராவணனும் இராக்கதர், அத்தகைய ஜானகியினுருவத்தை மட்டும்பார்க்கமுடியாமற்றிகைத்துக்கொண்டிருக்குங்கால், அவளை அரக்கர் கட்புலன்கட்கறியப்படாமல் மறைத்துக்கொண்டிருப்பது, விசுவாமித்திர முனிவரின் றந்திரோபாயத்தாலேற்பட்ட இராக்ஷஸாந்தர்க்கரணமென்னும் பேர்வாய்ந்த மணிமயமான கங்கணங்கள் அவள்கைகளிற்றரித்துக்கொண்டிருக்குமகுத்துவமென்றும், அவள் ஜானகியென்றும், தோழிப்பெண்களின் வாய்மொழியின் ஸாரங்களாற்றெரிந்துகொண்ட, இராவணன், மாயையால், சாரணனை அயோத்தியினின்றும்வருகின்ற ஒரு பிராமணனைப்போல் வடிவந்தரிக்கச்செய்து, அவதரித்துக்கொண்டிருக்கிற அரக்கர் கட்புலனடைக்கு மக்கங்கணங்களைத் தந்திரத்தாலபகரிக்கச்செய்தும், அவளது திவ்விய சுந்தராங்கத்தை இராவணனுக்கு நன்றாய்த்தரிசிக்க இடமில்லாமல், அத்திரிமுனிவர் அநசூயாதேவி, இவர்களின் பாதவந்தனத்திற்காக அழைக்கப்பெற்றவளாய், தோழிப்பெண்களுடன் ஜானகி, ஜனகராஜன்பாற் சென்றனள், அவளிடங் கங்கணங்கள் பெற்ற ஸாரணன், அவளெழுதிய இராமரூப சித்திரப் படத்தையும் கவர்ந்துகொண்டு இராவணனிடம் பிரவேசித்தனன். இராவணன் இத்தனை செய்தும் அவளங்கத்தைத்திருப்தியாய்ப் பார்க்கப்பெறாதது பற்றி மனவருத்தமுற்றவனாய், மாயையால் இராமவேடத்தைதான் புனைந்துகொண்டு, வித்திச்சிருவனை விசுவாமித்திரவேடமும், சாரணனை இலக்குவன்வடிவமும், தரிக்கச்செய்து, அவ்விருவருடன் வஞ்சனையாய் ஜானகியை விவாகஞ்செய்யும் நிமித்தமாய், ஜனகராஜன்பாற் செல்வதாய்ச்சென்றனன்.

இரண்டாவதங்கம்முற்றிற்று.

1. அத்திரி, அநசூயை இவ்விருவரின் பிரவேசம்.

2. இராவணன், வித்திச்சிகுவன், சாரணன், இம்மூவரின் பிரவேசம்.
3. காமஅவஸ்த்தைக்காற்று தூதனிர்ச்சயனமுற்றஜானகியின்பிரவேசம்
4. தாமரைத்தண்டு மலர், இலை, இதுகள் சகிதம் சுசரிதையென்ற சகியின் பிரவேசம்.
5. சித்திரசாமான்கள் சகிதம் சிலவதியென்ற சகியின் பிரவேசம்.
6. ஸாரணப்பிராமணன் பிரவேசம்.
7. கங்கண சித்திரபடசகிதம் ஸாரணன்பிரவேசம்.

ஆகப்பாத்திரப்பிரவேசங்கள் 10.

௫-வது அங்கம்.

கடலில் விழுந்தெழுந்த விதமாய், மாரீசன் பிரவேசித்து, இராமாதியரை இடைவழிக்கட்டி மறிக்கப்போனதில், இராமபாணத்தால், தன்தாய் தாடகையென்ன, தன்தம்பி சுபாகுவென்ன, இவர்களிறந்தே போனார்களென்றும், தான் இராமபாணத்தாற் சாகரத்தில் வீழ்த்தப்பட்டு, விதிபலத்தாற்றப்பிப் பிழைத்ததாயும், தன் மற்றொருதம்பி காளனென்பவனுடைய ஸ்திதி இன்னவிதமென்றறிய வில்லையென்றும் சொல்லிக் கலக்குறவேளையில், காளனென்னுமரக்கன், இராமபாணத்திற்குத் தப்பிப் பிழைத்து மாரீசனைத் தேடிக்கொண்டு வருகின்றவிதமாய் பிரவேசித்தனன், அப்பால் கடலோரம் மகேந்திரகிரியின் சூழ்வுகரையில் மாரீசனை வந்தடைந்தனன். அவ்விருவரும் இராமனை மாயையால் வெல்ல நினைத்து, இராமாதியர் தங்கியிருக்கின்ற ஒருசோலையின்பாற் சென்று, இராமன், தன்னந்தனியே, வனத்தில் வேட்டைக்குச் சென்றிருக்கின்ற விதந் தெரிந்துகொண்டு இராமனுக்குயிர்ச்சகனான பிங்களனது வடிவத்துடன வஞ்சகோபாயத்தா லிராமனை வனாந்தத்திற்குக் கூட்டிவரும்படி காளனையனுப்பிவிட்டு, தான் காசிபனது வடிவத்துடன் மாயாசீதையைச் சிருஷ்டித்து, அவள் இராமனிமித்தமான காமநோய் சகிக்கக்கருத்தற்றவளாய்க்கடைசியில் விதனமொழிக்கிற்று தக்கினிப்பிரவேசஞ்செய்வதுபோலும், மாயையாலிராமனுக்குக் காண்பித்து, அவன்மீதுள்ள மயக்கத்தினால் இராமன், தானாகவே அனலில்மூழ்கி ஆவி இறக்கும்படிசெய்கின்றேனென்று சொல்லிக்கொண்டு சென்றனன்.

அப்பால் வனத்தில் வேட்டையாடுகின்ற விதமாய் தனியாய் இராமன் பிரவேசித்தனன். சமீபதூரத்திற் பிங்களனுருப்புனைந்த காளன், மாயையாற் காட்டுயானை, தன்னை இழுத்துக்கொண்டு போவதுபோலும், இராமனுக்

குத் தோற்றும்படி பிரவேசித்துப் பிரலாபித்தனன். அதனை நிஷ்கபட இராமன் மெய்யென நினைத்துத் தன்னுயிர்ச்சக பிங்களனை வனத்தந்தி பிடித்திழுத்துக்கொண்டு போகின்ற கஷ்டஞ் சகிக்கமாட்டாதவனாய் அவனை விடுவிக்கும்பொருட்டாய் வெகுதூரம் பின்றொடர்ந்து போயினபோது, அங்கொரு சோலையிற் காட்டானையால் விடுபட்டுக் களைப்புற்றவன்போலும், பிங்களருபனான காளன் பிரவேசித்தனன். இராமன் அவனைப் பிங்களனென்ற பரமார்த்தபுத்தியுடன், அவனைக் களைப்புமாற்றி அவனுடன் முன்போல் ஸரஸமாகப் பேசிக்கொண்டிருந்தனன். அவனும், இராமனுக்குத் தன்னிடத்திற் களங்கந்தோன்றா வண்ணம் சம்பிரதாயமாய் ஜானகி விஷயமான பிரிய ஸமாசாரங்களாலே இராமனுக் கதி மோகத்தையுண்டு பண்ணிக்கொண்டு மாரீசன் வரவை மனத்திலெதிர்பார்த் திருந்தனன். அங்ஙனம் ஓர்பால், மாயையின் திறத்தால், வாஸ்தவ சீதையைப்போலும், அவளது சகிகளைப்போலும் சிருஷ்டித்துப் பற்பல விநோதங்களுடன் வாஸ்தவ அக்கினியும் சிருஷ்டித்துக்கொண்டு மாரீசன் பிரவேசித்தனன். இராமனும் பிங்களனுருப்புனைந்த காளனும் ஓர்பாலிருக்கக்கண்டு, தானும் காசிப ரூபத்துட னிராமனிடம் வர எத்தனித்தபோது, அவ்விருவருஞ் சம்பாஷித்துக் கொண்டிருக்கும் வார்த்தைகளின் ஸாரங்களால், பிங்களனுருப்புனைந் திருக்கின்ற காளனை, யதார்த்த காசிபனென்று ஸந்தேகங்கொண்டவனாய் மேலும் மாயையாற் பற்பல விநோதங்களைத் தோற்றுவித்துக்கொண் டொதுங்கியிருக்கவும், அவனது மாயாவிநோதத்தாற் றோன்றுகின்ற மாயாசீதையும், சகிகளும், இவர்களது ரூபவசனப்பிரலாபங்களும், ஆகிய இவைகள் மெய்போற்றோற்றிக்கொண் டிருக்கவும், இவ்விதம், ஜனகராஜன் றவபுத்திரியாகிய ஜானகியும், அவளது தோழிப்பெண்களுமேயாம், என் பிரியனுக்குப் போதித்து விரகத்தை விர்த்திசெய்துகொண் டருகில் பிங்களனுருப்புனைந்த காளன் நிற்கவும், அதனை வாஸ்தவ புத்தியுடன் பார்த்துப்பார்த்து மோகபரவசனா யிராமன் நிற்கவும். ஆகிய இத்தருணத்தில், அங்ஙனம் மற்றோர்பால், யதார்த்த காசிபர், தர்ச்செயலாய், இராமனைத் தேடிக்கொண்டு வருகின்றவிதமாய் பிரவேசித்தனர். அவ்வாறு இராமன்பால் நின்றுகொண்டிருக்கிற பிங்களனுருப்புனைந்த காளன், நின்ற வாறதிற்பார்த்து, காசிபனுருப்புனைந்து வருவதாய்ச் சொல்லிய மாரீசனென்றெண்ணிக் கருத்துட்கொண்டு, இராமனுக்குக் காசிபனை அழைத்துவருவதாய்ச் சொல்லிவிட்டுப்பிரிந்து காசிபனைத் தொடர்ந்துசென்றனன். அத்தருணத்தில், மாரீசன் மாயையால் காசிபனது வடிவம் புனைந்துகொண்டு, இராமன்பாற் பிரவேசித்தனன்.

இராமனவனைக் காசிபனென்ற பரமார்த்த புத்தியுடன், அம்மாரீசனுடன் சம்பாஷித்துக்கொண்டிருக்க, இராமனைத்தேடிக்கொண்டு வருகின்றவிதமாய், யதார்த்த பிங்களன் பிரவேசித்தனன்.

அவனிராமனிடம் வந்துசேரவும், அவனை எதார்த்த பிங்களனெனத் தெரிந்துகொண்ட மாரீசனால், இவனிராக்கதனென இராமனுக்குப் போதிக்கப்பட்டு, அதனால் இராமனிடம் தன் சொல்லொன்று மேறாமல், எதார்த்தபிங்களன் ஒதுங்கித் தலைகவிழ்ந்திருந்தனன். இங்ஙனமிருக்க, இராமனைத்தேடிக்கொண்டு மற்றொருபால் வந்த எதார்த்தகாசிபர், அங்கொருபால் நின்று அம்மாயாசீதையைக்கண்டு திகைத்துக்கொண்டிருக்குங்கால், தன்னைத்தொடர்ந்துவந்த பிங்களனுருப்புனைந்த காளனைச்சந்திக்கவும், இவர் அவனை எதார்த்த பிங்களனெனவும், அவன் இவரை மாரீசனெனவுமாக, ஒருவர்க்கொருவர் பரமார்த்தபுத்தியுடன் சம்பாஷித்துக்கொண்டபோது, பிங்களனுருப்புனைந்திருக்கின்ற காளனை இராக்கதனெனத்தெரிந்துகொண்டஎதார்த்தகாசிபர், இராமனிருக்குந்திசைநோக்கி ஓடத்தொடுத்தனர். அத்தகைய காசிபரை மாரீசனென்றெண்ணிக்கொண்ட காளன், மாரீசனென்னும் இராக்கதன் காசிபருபனாய், என்னைக்கொல்ல வருகின்றானென்றறிந்துகொண்டு, ஓரேஓட்டத்தி லிராமனை வந்திறுகத்தழுவிக்கொண்டனன். ஆகவே அம்மாயாகாசிபனாகிய மாரீசனும், அம்மாயாபிங்களனாகிய காளனும், ஒருவருக்கொருவர் தெரிந்துகொண்டு, எதார்த்தமானமற்றிருவரையும், இராக்கதர்களென, இராமனுக்குப் போதிக்கவும், அவ்வண்ணம் இராமனும் நம்பவும், எதார்த்தகாசிபபிங்களர், இருவரும், இராமனிடத்தங்கள்சொல்லொன்று மேறாமல் தவிக்கவுமாயினார். அங்ஙனம், பின்னும் மாரீசனது மாயையால், ஜனகராஜனை இராவணன் கொலைசெய்துவிட்டுச் சீதையை அபகரிக்கவருகின்றானென்று சொல்லிக்கொண்டு, சோக அவசரத்துடன், ஒருமாயாசகி, பிரவேசித்தனள். அவ்விதன வார்த்தையைக்கேட்டு மாயாசீதை, அவ்விதனத்திற்கும், இராமன் விஷயமான விரகாக்கினிக்கு மாற்றாதவளாய், அக்கினிப்பிரவேசமானதைக் கண்டு, இராமன் அவள்மீதுள்ள மோகத்தினாற்றானும் அவ்வக்கினிக்கிடங்கிலேயே வீழ்ந்திறப்பதாய்ச்சொல்லிக்கொண்டு, சோகபரவசத்துடன் அவ்வக்கினிக்கிடங்குக்கருகிலுள்ள ஒருகருப்பாறையிற் காலைவைக்கவே, அப்பாறையே ஒரு திவ்யமங்கள சொருபமான பெண்ணுருவாய்ப் பிரவேசித்தனள். அவளை அகலிகையென்றறிந்துகொண்ட இராமன், அவளால் எதார்த்த பிங்களகாசிபர்களையும், மாரீசகாளனர்களையும், இன்னாரின்னாரென்றறிந்துகொண்டதுமன்றி, அவ்வரக்கரின் மாயாவிலாசத்தையும் கண்டறிந்தனர், உடனே அவ்வரக்கரிருவரும், தக்கணம் மானுருப்புனைந் தோடத் துணிந்தனர். இராமபாணத்தாற் காளனிறந்தனாயினும், மாரீசன் தப்பி மாயமாய்விட்டான். அப்பால் இராமர் எதார்த்த காசிபபிங்களருடன் அகலிகையை அனுப்பிவிட்டுத்தயரதர் கௌசிகர் முதலியோர் தங்கியிருக்கின்ற ஸ்கந்தவாரத்தை அடைந்தனர்.

8-வது அங்கம் முற்றிற்று.

1. கடலின் வீழ்ந்தெழுந்தவிதமாய் மாரீசன் பிரவேசம்.
2. இராமபாணத்திற்குத் தப்பிப்பிழைத்த காளன் பிரவேசம்.
3. வேட்டையாடுகின்ற விதமாய் இராமன் பிரவேசம்.
4. காட்டானையால் விடுபட்டு களைப்புற்றுக் கிடக்கின்ற விதமாய் பிங்களனுருப்புனைந்த காளன் பிரவேசம்.
5. மாயையால் மறைந்துகொண்டு மாரீசன் பிரவேசம்.
6. தவிர்ச்சயனமுற்றிருக்கின்ற மாயாசீதையும், சகிகளும் பிரவேசம்.
7. எதார்த்த காசிபர், பிரவேசம்.
8. காசிபவேடத்துடன் மாரீசன் பிரவேசம்.
9. எதார்த்த பிங்களன் பிரவேசம்.
10. சோக அவசரத்துடன் மாயாசகி பிரவேசம்.
11. முனிபத்தினி பிரவேசம்.
12. கோதண்டத்தினின்றும் பாணத்தை இறக்கிக்கொண்டு இராமன் பிரவேசம்.

ஆக பாத்திரப் பிரவேசங்கள் 14.

௯-வது அங்கம்.

முதலில் சித்திராங்கதனென்ற கந்தருவன் பிரவேசித்தனன், அவன் இராமனால் தாடகாதியர் மடிந்துபோனபிறகு, சுவர்ணவநத்தைச் சகியாதவனான இராவணன், திருப்பியாதுமுயர்ச்சை செய்கின்றானென்பதை அறிந்து வரும்படி, தேவராஜனு லனுப்பப்பட்டபடி, இலங்கைக்குச்செல்வதாய் மாயையால் ஒரு இராக்கதவடிவொடு செல்லுகையில், ஒட்டகமுகியென்ற ஒர் கோரஅரக்கி, எதிரேபிரவேசித்தனள். அவளால் இராவணனது இரகசியப்பிரவிர்த்தியைத் தெரிந்துகொண்ட கந்தருவன், தான்தெரிந்துகொண்ட இராவணோதவர்க்கிய வஞ்சனைப்பிரவிர்த்திகளை, முன்னர் மிதிலேசனுக்கறிவித்துவிட்டுப் பின்னர் தேவராஜனுக்கறிவிப்பதாய்ச்சொல்லிக்கொண்டு சென்றனன். அப்பால் ஜனகராஜனும் சதாநந்தரும் பிரவேசிக்கின்றனர். அவ்விருவரும் அயோத்திக்குச் சென்றிருக்கின்ற விசுவாமித்திரர், இராமனையழைத்து வருகின்ற வரவையெதிர்பார்த்திருக்கின்றனர். அப்போது அவ்வந்த விசுவாமித்திர இராமலெட்சுமணர்கள் போல் மாயையால் வடிவந்தரித்து விசித்திரசிருவ இராவணசாரணர் பிரவேசித்தனர். ஜனகராஜன் அவர்களை விசுவாமித்திர இராமலெட்சுமணர்களென்று பரமார்த்தபுத்தியுடன், அவர்களையுபசரித்துக் கல்யாணஸமாசாரஞ்சொல்லிக் கல்யாணம் ஆரம்பிக்கும்போது, கந்தருவன், விசித்திரசிருவ ராவணசாரணர்களான இராக்கதர்கள்,

விஸ்வாமித்திர ராமலெட்சுமணர்களாக, மாயையால் வேடந்தரித்து வஞ்சனையாய் ஜானகியைமணஞ்செய்பவர்களென்றந்தரத்தினின்றுரைத்துவிட்டுச்சென்றனன். அதைப்பற்றி ஜனகரும் மற்றவரும் திகைத்துக்கொண்டிருக்கும்போது, வாஸ்தவராமலெட்சுமணருடன் வாஸ்தவவிஸ்வாமித்திரர் பக்கத்தில் வருகின்ற விதந்தெரிந்து, இராவணாதியர், திரஸ்கரிணியால், மறைந்துகொள்ள வாஸ்தவ இராமலெட்சுமணருடன் விசுவாமித்திரர், பிரவேசித்தனர். விசுவாமித்திராதிகளும் ஜனகராஜனும் ஸம்பாஷித்துக்கொண்டதில் இராமனால், தாடகாதியர் இறந்துபோன விபரங்களை, இராவணாதியர் தெரிந்துகொண்டு கவலையடைந்தனர். ஜனகராஜன் வாஸ்தவ இராமலெட்சுமண விசுவாமித்திரர்களிடம் இராக்ஷஸ சங்கைகொண்டவனாய் அரன்றனுவளைப்பவனுக்குக்கன்னியை மணஞ்செய்ப்பேனென்றுரைத்தனன். அங்ஙனமே அவ்வில்லைக்கொண்டு வரச்செய்து அதை யாரோபணஞ்செய்யும்படி விசுவாமித்திரர் இராமனையேவ, இராமன் அவ்வில்லின் பாற்சென்றனன். இராவணாதியர் திகைத்துக்கொண்டிருக்கின்றனர். அத்தருணம், மாண்டவி, ஊர்மிளை, சுருதிகீர்த்தி, யென்ற கன்னியருடன், சீதை, பிரவேசித்தனள்; அவர்கள் விசுவாமித்திர பாதவந்தனத்திற்காக வருகின்றதில், ஒருவருக்கொருவர் பரிகாசஞ்செய்துகொண்டு களிப்போடுவந்து, ஒருபாலொதுங்கியிருந்தனர். இராமர் அவ்வில்லைக் கையிலெடுத்ததும், நிறுத்தியதும், வளைத்ததும், ஒடித்தெறிந்ததும் எல்லாரும்பார்த்து சந்தோஷித்தனர். இராவணாதியர் இனி இங்கிருப்பதிற் பயனில்லை, இலங்கையிற்சென்று மந்திரிகளிடம் ஆலோசித்து, தந்திரமாய்ஜானகியை அபகரிப்போமென்று சொல்லிக்கொண்டு சென்றனர். ஜனகராஜன் அகமகிழ்ந்திராமனுக்கு ஜானகியையும், இலக்குவனுக்கூர்மிளையையும், பரதனுக்கு மாண்டவியையும், சத்துருக்கனுக்கு சுருதிகீர்த்தியையும், விவாகஞ்செய்து கொடுத்தனர்.

4-வது அங்கம் முற்றிற்று.

1. கந்தருவன் பிரவேசம்.
2. ஒட்டகமுகியென்ற இராக்ஷஸிபிரவேசம்.
3. ஜனகராஜனும் சதானந்தரும் பிரவேசம்.
4. விசுவாமித்திர வடிவமாய் வித்திச்சிகுவனும்,
   இராமவடிவமாய் இராவணனும்.
   இலக்குவன்வடிவமாய் சாரணனும் இவர்கள் பிரவேசம்.
5. கந்தருவன் பிரவேசம்.
6. விசுவாமித்திரர், இராமர் இலக்குவன் இவர்கள்பிரவேசம்.
7. வில்லுடன் சதானந்தர் பிரவேசம்.
8. சீதை, மாண்டவி, சுருதி கீர்த்தி ஊர்மிளை, இவர்கள் பிரவேசம்.
9. தேவவிரதன் பிரவேசம்.

ஆகப்பாத்திரப்பிரவேசங்கள் 17.

௫-வது அங்கம்.

முதலில் விராதன் பிரவேசிக்கின்றனன்; பஞ்சவடிவனத்திற் பன்னசாலையிற்றம்பியுடன், தாரத்துடன் வசிக்கின்ற இராமனை, வதைசெய்து வரும்படி, ஜனஸ்தானத்தினின்றும், தனதுசிநேகிதனான, கரனாலனுப்பப்பட்டவனாய்ச்சொல்லிக்கொண்டு, அவ்விதம்பிரவேசித்து, கோகிலவடிவனாய் ஓர் மரத்தின்மேலேறி, பன்னகுடிவாயிலில், இலக்குவன் ஆயுதபாணியாய்நிற்பதைக்கண்ணுற்று, அவனைக்கொல்லத் தன்னாலாகாதகாரியமென்று சிந்தித்து ஜானகியின்பேரில் மையல்கொண்டு, சமயம்பார்த்து, ஜானகிதனிப்பட்டபோது இராமரூபத்துடனவளை அபகரித்துச்சென்றவளுடன் சுகிக்கவேண்டுமெனச்சமயம்பார்த்துக் கொண்டிருந்தனன், அப்பால் சூர்ப்பனகை, பிரவேசித்து, ஜானகியை அபகரித்து வரும்படி இராவணனாலனுப்பப்பட்டவளாய்ச்சொல்லிக்கொண்டு, கரிக்குருவி வடிவம் புனைந்து, பன்னகுடியில் இராமனும், சீதையும், இருப்பதைக்கண்ணுற்று, இராமன்மேலதிமோகங்கொண்டு, சமயம்பார்த்து, இராமன் தனிப்பட்டபோது தான் ஜானகிவடிவத்துடன், அவனுக்கு மோகத்தையுண்டுபண்ணி, தந்திரமாயவனை, அபகரித்துச்சென்றிஷ்டப்படி சுகிப்பேனென்று சொல்லிக்கொண்டொதுங்குகின்றபோது, அங்கொருபால் விராதனும், சூர்ப்பனகையும் சந்தித்தொருவர்க்கொருவர், அந்தரங்கத்தை வெளியிடாமலே, இராவணேசுவரன், மந்திரோபாயத்தாலே வியமந்தரைப்பிசாசத்தால், அயோத்தியாபுரியினின்றும் இராமனை வனத்திற்கு முடுக்கப்பட்டுப்பஞ்சவடியிற் பன்னசாலையில் வசிக்கின்றவனை யுள்ளமற்ற வார்த்தைகளைப் பேசிக்கொண்டு, அவரவர் தத்தமிடஞ்செல்வதாய்க், கபடமாய்ச்சொல்லிக்கொண்டு தனித்தனியேசென்றனர். அப்பால் பன்னகுடியின்பக்கத்திலங்கொரு, பருப்பதத்தினின்று வனவேடிக்கை பார்க்கின்ற விதமாய், இராமர், சீதையுடன்பிரவேசிக்கின்றனர். அவ்விருவரும் ஒருவருக்கொருவர் பரிகாஸங்களோடு, வனத்தின் வளப்பங்களைப்பார்த்து ஸந்தோஷித்துக்கொண்டிருந்தபோது, அவ்வனத்தில் ஓர்பால் விராதனாகிய அரக்கனும் சூர்ப்பனகியாகிய அரக்கியும் ஒருவர்க்கொருவர் தாக்கலன்னியிற் றனித்தனியே பிரவேசித்தனர். அவர்களைப்பார்து சங்கித்துக்கொண்டிருக்கவும் அத்தருணத்திலேயே, அவ்வரக்கனே இராமனாகவும், அவ்வரக்கியே, சீதையாகவும், தனித்தனியேபிரவேசித்தனர். அவன் அரக்கனெனத்தெரிந்த இலக்குவன், ஆயுதபாணியாய்ப்புலனறியவேண்டி மறைந்துபார்த்துக்கொண்டிருந்தனன், இராமனும், சீதையும் மலைமேல்நின்று பார்த்துக்கொண்டிருந்தார்கள், சூர்ப்பனகி இராமனை விராதனைக்கண்ணுற்று, வாஸ்

த்தவ இராமனென்று நினைத்து, மோகங்கொண்டு அவனை மயக்குமாறு சல்லாபவிசேடப் பேச்சுச்செய்யுஞ்சூழுடையாய்ப்போய்ப் புகுந்தனள். அவளைச் சீதையென்ற பரமார்த்தபுத்தியுடன், அவள்மீது மோகங்கொண்டவனுமாய் வனமே போய்ப்புகுந்தனன். இலக்குவன் அவ்வேடிக்கையைக்கண்டபாருகி மறைந்து மறைந்து பின் சென்றனன். அவ்வரக்கனும், அவ்வரக்கியும், ஒருவர்க்கொருவர் பரமார்த்த புத்தியுடன், ஒருவர்க்கொருவர், அபகரித்து வஞ்சிக்கப்பட்டவர்களாய், அந்தரத்திற், கிளம்பிச்செல்லுகையில் ஜடாயுவால் தடுக்கப்பட்டவர்களாய் ஒருவர்க்கொருவர், இனந்தெரிந்துகொண்டு கீழிறங்கவே, இலக்குவனால் அவ்விராதனென்னும் அரக்கன் எம்புரிக்கனுப்பப்பட்டான். அந்தச்சூர்ப்பனகையும் மூக்கு, மூலை அறுப்புண்டு சென்றனள். பின்னர், ஜடாயுவுடனிலக்குவன், பர்ணசாலை வந்துசேர்ந்தனன், இத்தனையும்பார்த்துக்கொண்டிருந்த இராமனும், சீதையுடன் கிரியினின்றுங் கீழிறங்கிப்பர்ணசாலைவந்துசேர்ந்தனர், அவ்வரக்கனும் அரக்கியும், விராதனும் சூர்ப்பனகியுமெனத் தெரிந்துகொண்ட இராமன், ஜடாயுவை யுபசரித்தனுப்பிவிட்டு தம்பியோடு களித்திருந்தனர். அங்ஙனமிருக்க, ஜனஸ்தானத்திற் கரனென்னுங் கொடிய இராக்கதன்றன் தங்கையாகிய சூர்ப்பனகியின் மூக்கு முலையரிபோன விபத்தினைச்சகிக்கமாட்டாதவனாய் கோபாவேசத்துடன், தன்றுசேனைகளோடு மிராமனோடுயுத்தஞ்செய்யக்கருதி வந்துவளைந்துகொண்டனன். இராமனுடனே சீதையை இலக்குவன்பாலொப்புவித்துவிட்டு, அரக்கனை அதஞ்செய்வதாய் கோதண்டபாணியாய்ச் சென்றனன்.

ஐந்தாவதங்கம் முற்றிற்று.

1. விராதன் பிரவேசம்.
2. சூர்ப்பனகையின் பிரவேசம்.
3. இராமனும் சீதையும் பிரவேசம்.
4. இலக்குவன் பிரவேசம்.
5. விராதன் சூர்ப்பனகையின் பிரவேசம்.
6. இராமரூப விராதன் சீதாரூப சூர்ப்பனகி பிரவேசம்.
7. விராதன், சூர்ப்பனகி, சொந்தரூபத்துடன் பிரவேசம்.
8. ஜடாயு பிரவேசம்.

ஆகப்பாத்திரப்பிரவேசம் 12.

ஆறாவது அங்கம்.

முதலில், அனலையென்னும் வீடணராஜகுமாரி பிரவேசிக்கின்றனள். அப்பால் ஸம்பாதியென்னும், வீடணராஜமந்திரி, பிரவேசிக்கின்றனன். அவ்வனலை, இராவணனுஞ் சீதையைக்கவர்ந்து வந்து அவளை அசோகவனச்சிறையில் வைத்திருக்கின்றகாலமுதல், ஏழுமாதகாலமாயவளுக்குத் துணையாயிருந்துகொண்டு, அவளது துக்கத்தை மாற்றித்தேறுதல் செய்துகொண்டிருந்த சங்கதியைப்பற்றியும், சம்பாதி சீதைபிரிந்ததற்பின், இராமலக்ஷ்மணர் வனத்திற்றேடித்திரிந்து, சடாயுகடன்முடித்து, சுக்ரீவஸக்யமடைந்து வீரவாலியை வதைத்து அவ்விராச்சியத்தை நம்பிய சுக்ரீவனுக்களித்தனர் என்ற, விருத்தாந்தங்களையும், இராவணனைச்செயித்த அவ்வீரவாலியையும், இராமன் கொன்றனென்றவிபரம், இராவணனுக்கறிவிக்கும்பொருட்டு வீடணனியூரால் ஆலோசனை செய்து இராமன் சீதையைத்தேடவாரம்பித்தது முதல் வாலி வதைபரியந்தம் உள்ள ஸகல விருத்தாந்தங்களையும் சுக்கிராசாரியனைக்கொண்டு நாடகமாயமைக்கச் செய்து கந்தர்வப்பெண்களால் அந்நாடகத்தை இராவணசபையில் பாத்திரரூப சமையுடை பாவனைகளுடன் பிரத்தியக்ஷம்போல் முறையே நடத்தும்படி யேற்பாடுசெய்திருக்கின்ற ஸங்கதிகளையும், ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு அந்நாடகக்காரர்களை அழைத்துவருவதாய் சம்பாதி சென்றனன். அவ்வனலையும் பிரத்தியக்ஷத்தில் அந்நாடகத்தில் இராமரூபத்தைக்காட்டி சீதையை சந்தோஷிக்கச் செய்வதாய் சொல்லிக்கொண்டு சென்றனள். அப்பால், மகாபார்சனென்ற விநோத மந்திரியுடன் இராவணன் பிரவேசிக்கின்றனன். அப்பால், அந்த நாடகத்தை ஆரம்பஞ்செய்கின்றனர். அந்நாடகக்காரரில் ஒருவன் பிரவேசிக்கின்றனன்.

சூத்திரதாரன் பிரவேசிக்கின்றனன். நடி கானஞ்செய்கின்றனள். சூத்திரதாரன் அந்நாடக சூசகம் சொல்லுகின்றபோதே இராவணனுக்கு மிகக்குதூகலம் பிறந்தது. அந்நாடக அரங்கத்தில் இராக்கதாங்கனைக்கணம் ஒருசேர்க்கனிந்தசீதையும் அப்படியே அனலையும்பிரவேசித்தனர். சீதை அவ்வனலையால் தேறுதல்செய்யப்பட்டுக்கொண்டு இராக்கதர்கட்புலன்கட்கறியப்படாதவளாய் ஓர் புறமிருந்து நாடகம் பார்க்கின்றனள். அங்ஙனமிருக்க அந்நாடகத்திலேற்பட்ட வேஷ இராமலக்ஷ்மணர்கள் பிரவேசிக்கின்றனர். அவர்கள் சீதையைக்காணாமல் பர்ணகுடில் சூனியமாயிருப்பதைப்பார்த்து அதிகமான சோகசந்தாபத்துடன் வனமெங்குந்தேடித்தவித்து மதிமோகித்து காட்டிலுள்ள மரமுதலிய அசேதனங்களிடத்தும் அவளை

ப்பற்றிப் புலம்பிக்கொண்டு தென்றிசையை நாடிச்செல்லலாயினர். அது கண்டு இராவணன் சந்தோஷமடைகின்றான். சீதை துக்கிக்கின்றனள். அநிலன் அவளது துக்கம் மாற்றுகின்றனன். ஆகவே தென்றிசை குறித்துத்தேடிச்செல்கின்ற இராமலெட்சுமணர் இரதமுதலியன முறிந்து கிடக்கின்ற சிற்சில அடையாளங்களைக்கண்ணுற்று அவ்வழிகொண்டே அங்ஙனம் சென்றனர். இரத்தம் பெருகின்ற மலைபோன்ற காத்திரத்தோடு களைப்புற்றுக்கிடக்கின்ற விதமாய் ஜடாயுபிரவேசிக்கின்றனர். அவனைச்சடாயுவெனத்தெரிந்துகொண்டு அவனிடம் வினவ, ஜடாயு இராவணனென்ற இராக்கதனால் ஜானகி அபகரிக்கப்பட்டாளென்றுரைத்துவிட் டாயிறந்தனர். அவர்க்கீமத்தொழில் முடித்துவரும் இலக்குமணனால் கவந்தனிறந்து சாபமொழிந்து திவ்விய தேகம்பெற்று சுக்கிரீவனைச் சேரும்படி இராமனுக்குரைத்துவிட்டுச் சென்றனன். அதுகண்டு இராவணன் மனவருத்தமுற்றனன். சீதை களிப்புற்றனள். இராமலெட்சுமணர் பம்பா நதிக்கரைவழியாய் ரிஷியமூககிரியைநாடி வருகையில் பிக்ஷுரூபனான அனுமான்பிரவேசிக்கின்றனன். அவன் அனுமானெனத்தெரிந்துகொண்டு அவனுடன் ரிஷியமூககிரியின்பாற் செல்லுகையில் பிக்ஷுரூபத்துடன் இருக்கின்றவன் வாலியென்று நினைத்துக்கொண்டிருந்த இராவணன் இவன் அனுமானெனத்தெரிந்தவுடனே கோபத்துடன், அவனைக் கொலைசெய்வதாய் கட்கபாணியாயெழுந்திருந்தனன். இது நாடகமென்றுணர்ந்து மற்றுமவர்களுந் தடுக்கப்படாமற்போனாற் கொலை செய்தேயிருப்பான் நிற்க, துந்துபியின் எலும்புக்குவியலை பத்துயோசனை தூரத்தில் விழும்படி எற்றிவிட்ட ஸ்ரீராமன் மராமரங்களை விழவெய்தனன். அதுகண்டு அனுமான் சந்தோஷித்து அத்துஷ்டவாலியை மடித்துச்சுக்கிரீவனைக் காக்கின்ற தெய்வம் இவனேயென மதித்தனன், ரிஷியமூககிரியைவிட்டு சுக்கிரீவனும் இதையெல்லாங்கண்டு எம்மையாளுங் குலதெய்வமிவனேயென்றகமகிழ்ந்து மந்திரிகளுடன் இராமனைவந்து வணங்கி நின்றனன். இராமன், சுக்கிரீவனுக்கபயங்கொடுத்து சீதையினணிகளை அவனாற் காண்பிக்கப்பெற்ற பின்னர் அக்கணத்தில் இராமன்மீது, யுத்தஞ்செய்யக்கருதி அட்டகாசஞ்செய்து வருகின்ற வீரவாலியின், சப்தங்கேட்டு வியப்படைந்த ஸ்ரீராமன், வாலியுடன் யுத்தஞ்செய்யச் சென்றனன். அச்சமயமே இராமபாணத்தால் வாலி இறந்தானென் றுரைக்கின்ற அவனது பத்தினி தாரையின்முழக்கங்கேட்டு, சக்குருதலைக்கடவென்னும் ஆக்ரோசத்துடன் இராமபாணத்தைப் பிடுங்குதற்கு தனது பரிஜனங்களுடன் சுக்கிரீவன் சென்றனன். இதையெல்லாம் பார்த்திருந்த இராவணன், இராமனால் வாலி யிறந்ததென்பதைச் சற்றும் நம்பாதவனாய்க் கந்தர்வப்பெண்கள், பொய்க்கூடகஞ் சாத்தினவென்றெண்ணங்கொண்டு, கந்தர்வப்பெண்களைக் கொலைசெய்ய யத்தனித்தனன். அதற்கிடையில், மஹாபாரீசன் சுக்கிரீவபரிஜனங்களைக்கப்

பெற்று இந்நாடகம் பொய்யன்று, இராமனால் வாலி இறந்தது வாஸ்தவமே, அதனைத் தங்களுக்குத் தெரிவிக்கும்பொருட்டே இக்கனைசேர்க்கலாடத்தலாயிற்று என்னவே, இராவணனதனைக் கப்பினவனாய், வாலி யிறந்துபற்றி க்லேசத்தை அடைந்தனன்.

வாலி ஜெயம்பெற்ற இராமன் பிரவேசிக்கின்றனன். வாலிமகன் அங்கதனுக் கிளவரசுப் பட்டங்கட்டித் தம்பியாற் கப்பிய சுக்கிரீவனுக்கு, கிட்கிந்தா ராஜ்யத்தை முடிசூட்டி வைத்தனன். பின்னர் சுக்கிரீவனுலனுப்பப்பட்ட வானரப்படைகள் சீதையைத்தேடச் சென்றனவென்பதைக் கேட்டு இராமலக்ஷ்மணர் களிப்புடன் பதிற்றெரியுமட்டும் பிரஸ்ரவணகிரியில் வசிப்பதாய்ச் சென்றனர். சம்பாதியென்னும் கழுகரசனால் சீதையிருப்பு தெரிந்துகொண்ட அனுமான் இலங்காபுரிக்குப் போகக் கடல்கடக்கின்றனென்ற சங்கதியை, சாரர்களாற் றெரிந்துகொண்ட இராவணன், வானரம் வந்து இலங்கையி னுழையாமலிருப்பதற்கு வேண்டிய பந்தோபஸ்து ஏற்பாடு செய்து கவலைகொண்டு மந்திரிகளிடம் ஆலோசிக்கச் சென்றனன். சீதையும், அனலையும் அதிகளிப்புடன் அசோகவனத்தை அடைந்தனர்.

ஆறாவதங்கம் முற்றிற்று.

1. அனலை, ஸம்பாதி, இலங்கிணிப் பிரவேசம்.
2. மகாபார்சனுடன் இராவணேசுவரன் பிரவேசம்.
3. சூத்திரதாரன், விதூஷகன் கூட பிரவேசம்.
4. ஒருதைக் கைக்கணையணிந்த சீதையும், அனலையும் பிரவேசம்.
5. இராமலக்ஷ்மண வேடந்தாங்கி கந்தர்வப் பெண்கள் பிரவேசம்.
6. சிறகற்று இரத்தத்தைப் பெருக்கிக்கொண்டு கண்டிதப் பிராணனாய்க் கிடக்கின்ற ஜடாயுவின் பிரவேசம்.
7. ஜயம்பெற்ற இலக்குவன் பிரவேசம்.
8. பிக்ஷு பிரவேசம்.
9. அனுமானுடன் சுக்கிரீவன் பிரவேசம்.
10. வாலிஜய இராமன் பிரவேசம்.

ஆக பாத்திரப் பிரவேசங்கள் 13.

௭-வது அங்கம்.

முதலில் சோகவனத்துடன் சூர்ப்பணகி பிரவேசிக்கின்றனள், இராமனுக் [illegible] இராவணனுடைய

இராக்கதர்களின் மரணசோகத்திற் காற்றாதவளாய் விதனத்தை அடைந்து கொண்டிருந்தனள் அங்ஙனம் வீடண ராஜனது மந்திரி ஸம்பாதியென்பவர் பிரவேசிக்கின்றனர், இராவண கும்பகர்ணாதி கொடிய இராக்கதர்களைச் சங்கரித்ததிலும் தன் இராஜனை வீடணர்க்கிலங்காராஜ்யமளித்ததிலும் அதியானந்தபரிதனாய் இராமனைப்புகழ்ந்துகொண்டும், சூர்ப்பனகையைச்சிந்தித்து அவள் விதனப்படுதலையும் அவள் துர் நினைப்பையும் தெரிந்துகொண்டும், சற்று ஸம்பாஷித்துவிட்டுச்செல்கின்றனன், இராவணாந்தகனை, இரகுராமனை புடத்தங்கமென அக்கினியிற் குதித்தெழுந்த கற்பலங்காரியான ஜானகியுடன், இலக்குவனுடன், மற்றப்பரிவாரங்களுடன் திரும்ப அயோத்திக்குப் பிரயாணமானவனாய்ப் பரதனுக்குத் தன் வரவை முன்னதாகவே சென்றறிவிக்கும்படி அநுமானை யேவிக்கொண்டிருக்கின்றானென்று, தெரிந்துகொண்ட சூர்ப்பனகை இராமன்மீதுரோசங்கொண்டு, தன் இரண்டு சகோதரர்களான இராவண கும்பகர்ணர்களின் வதத்திற்கு பதிலாய் இராமனது சகோதரர்களான அப்பரத சத்துருக்கனரை இவ்வநுமான் இராமன்வரவைத்தெரிவிப்பதற்குச்செல்லுமுன்னமே யான் மாயையால் ஒரு தவமடந்தையைப் போல் வேடங்கொண்டு, விரைவிற்சென்று, உசிதமான விதனவார்த்தைகளைச்சொல்லி அக்கினியில்விழுந்தாவியிறக்கும்படி செய்கின்றேனெனச்சென்றனள், அப்பால், பரதசத்துருக்கனர் பிரவேசிக்கின்றனர் வனாந்தரத்திற்றமது முன்னோனை இராமனையுமன்னை ஜானகிப்பிராட்டி அரக்கனாலபகரிக்கப்பட்டாளென்று, கேள்வியாய் அந்தத்திருட்டரக்கனை வதை செய்யும் பொருட்டு இராமனுக்குச் சகாயமாக அவரவர் தம்படையொடு மற்றச்சிற்றரசர்களை வரவழைத்துக்கொண்டு, இரதகஜதுரகபதாதி சேனைகளுடன் பிரயாணசன்னத்தராய் இராமனை நினைத்து நினைத்து அவனதுபிரிவாற்றாமையினால் துக்கத்தை அடைந்துகொண்டிருக்கின்றனர். அங்ஙனமிருக்க இராமனுக்கு வனாந்தரத்தில் சுக்ரீவசகாயங் கிடைத்ததென்றும் ஆகையாலொருவரும் உதவிக்குவரத்தேவையில்லையென்றும் சுக்ரீவ சகாயத்தால் சீதையிருப்புத்தெரிந்துகொண்டு, கடலிற் சேதுபந்தனஞ்செய்து அதன்வழியாய்க் கவிப்படையொடு சத்துருவின் நிவாஸநகரடைந்தனனென்று, மாகவேடராஜனான குகனால் அனுப்பப்பெற்ற நிருபத்தைப்பார்வையிட்டு சந்தோடங்கொண்டு, இலங்கைத்தீவில் இருதிறத்தவர்க்கும் கலகமூண்டிருக்குமென்று நிதானித்துக்கொண்டவர்களாய் ஒருவர்க்கொருவர் கவலைகொண்டிருக்கின்றனர், அத்தருணத்தில் தாபசிவேடங்கொண்ட சூர்ப்பனகை பிரவேசிக்கின்றனள். அவள் இலங்கைத்தீவில் தனக்கு ஆப்தசிநேகிதர்களான சுக்ரீவாதிகள் அரக்கர் செருவிலழிந்துபோனார்களென்றும், இராமனுமிலக்குவனும், வல்லரக்கர் வஞ்சனையில் மாய்ந்தார்களென்றும், சீதாப்பிராட்டியும், காண்றுகொண்டா ருயிர்நசித்தாளென்றும், உண்மைபோல் வஞ்சனையால், வழுத்திய பொய்மொழியை மெய்மொழியெனக்கொண்டு, அந்தச்சோகபரத்திற் காற்றாதவர்களாய் அந்தப்பரத சத்துருக்கனர், அக்கினியில் மூழ்கு

விடிந்துமிஞ்சின இருட்டெனப்பின்படைகள் வளைத்தாரே (ஆவை)
விரும்பியே வசஞ்செயமுடியாமற் சமர்விளைத்தாரே (ஆவின்)
கடிந்தபெருமூச்சினில் மிலேச்சர்களாய் முளைத்தாரே (அவர்கள்)
கடுகளவு முடவிவிட மறமிகத்துளைத்தா ரே (அதனாற்)
படிந்திரத்தநதிகள் கடலில்முட்டவும் பொல்லா ப்
பாவியிவன்றவிர மற்றப்படைகளெல்லா ம்
மடிந்திடக்கண்டுதானும் மறுபடியுஞ்சொல் ல
மலைந்துகொஞ்சச் சீவனாய்வந்ததென்னசொல் ல
மனதிடிந்தச்சத்தோடு ஆனாலுமிது
மிகவுமேலச்சைக்கேடு (எனநினைத்து]
வாடிபிராமணத்துவம் நாடித்தவஞ்செயவே
ஓடிவனத்திற்றுக்கம் பாடிச்சென்றானய்யா (வி)

கலிவிருத்தம்.

மன்னுவாய்மையும் மானமும்விட்டதோர்
சின்னக்கோசிகன் றன்னையோர்தீரனென்
றுன்னியோதினன் உற்றறியாப்பயல்
துன்னுமற்புதமற் புதஞ்சொல்லவே.

(தேவவிரதன்) ஈ அருமை நண்பே (அடுக்குமொழி.) புரவலனாதயாதார்க்கு, ஒருகலைசிருங்கமுனி, பெருமையொடியற்றுவித்த, வரமகமகத்தில் வந்த, சருவினதுபங்கினாய், வருபுதல்வர்நால்வர்மிக்க, விரிவுளநன்னூல்

கன்கற்று, பிரமசரியாச்சிரமத்திற், றெரிதாவிளங்குகின்ற, உரைவிதுசதையையொப்ப, பரிவொடுகுளிரவார்ந்து, இருசெவிநிறம்பிற்றன்றே.

(சத்தியவிரதன்.) ஆம், ஆம்.

விருத்தம்.

ஒளிகொணூல் வரிலுத்தமக்களஞ்சியம் ராமன்
களிகொடாதைக்குகந்த கற்காதலனென்றும்
அளிகொணற்குண சீலனுமற்புதனென்றும்
தெளிகொள்பூதச் சயம்புபோற்றெரிகின்றதன்றே.

(இராவணன்) வசனம். (அழுக்காறுகொண்டு) இப்பிராமணப்பயல் யென்னபிதற்றுகின்றான்.

(வித்திச்சிகுவன்) உலகவசனமப்படியிருக்கின்றது.

(சாரணன்) [வசனம்] அதனாற்றான் அச்சானகியுமிவன்பேரிலாசைகொண்டவளாக ஆயினள், ஆகையாற்றான் ஜானகியின் கல்யாணத்தின் பொருட்டு மஹாராஜனாலேயும் அவனது ரூபத்தைத்தரிக்கும்படி நேரிட்டிருக்கிறது.

(தேவவிரதன்) வசனம். [சிரக்கம்பத்துடன்] ஆம் ஆம் அறிவேனறிவேன் ஜனகமகாராஜஸன்னதியில் எங்கள் குருநாதரான சதானந்த முனிவரால் அடிக்கடி இராமனைப்பற்றி பேரை அனுசரித்தகுணமும் குணத்தை அனுசரித்தபேரும் உடையவனென்று புகழக்கேட்டிருக்கின்றேன். எங்ஙனமெனின்.

விருத்தம்.

நிலமேவியுரைவார்க ணசைகடறுமதிவீரன் மனுநீதிநெறிநின்றான்
விலைமேவுகலைநாலு மறையாதிஅறனீடு முறையாவும் விதிகொண்டான்
கலமேவுமதியாள னனிநீனாளியான னயவாய்மை நவில்கின்றான்
ஒலிமேவுமலையாழி மகிமீதுபதியாகி ரகுராமனொளிர்கின்றான்.

இராகம் கமாஸ். ஜம்பைதாளம்.

பல்லவி.

ஸ்ரீராமன்மகிமையைச்சேடர்களொருகோடி
சேர்ந்தாலுஞ்சொலப்போமோ.

அனுபல்லவி.

மாராபிராமன் புகழ்வாமன்பலவீமன்
மங்களகரபூமன் துங்கபானுகுலசோமன் (ஸ்ரீராமன்)

சரணங்கள்.

கோலமுடியழகும் குணபுருவத்தழ கும்
சாலநுதலழகும் தந்தபந்தியழ கும்
தயவுபொழியுமலர்
நயனங்களும்விமல
சரதவிந்துநேர்புன்னகையும் உயர்ந்ததோ ளும்
தார்புனைமார்பின் விஸ்தாரமுமிருதா ளும்
கரியின்றுதிக்கை நிகர்துடைகளும் கண்டால்வேளும்
கவிழ்ந்துவெட்கிக்குறுகிக் குனிந்துபோகானோநாளும். (ஸ்ரீ)

திரண்புயவீரா சிங்காரஒய்யார ன்
சூரன்மிகஉதாரன் தூயமதிவிஸ்தார ன்
துர்ச்சனநாசன்
சர்ச்சனநேசன்
துங்ககுணாலயன்மங்களகாய ன்
சுமுகஇங்கிதவாக்சதுரனுபாய ன்
தங்குசத்தியதனன்றன்மத்தினேய ன்
சகலகலாநிபுணன்றவர்க்குசகாய ன். (ஸ்ரீ)

பார்த்தாலும்பசிபோமே, பாவந்துலைந்திடு மே
நேர்த்தியாய்நினைத்தாலும், நித்யத்வம்பெறலா மே
நிர்மலன்கண்ணன்
அம்முகில்வண்ணன்
நீதவானென்றுசதானந்தருமவிதே க
நிருபனிடத்திற்சொல்லிபுகழுவர்பலவா க
ஆதிமூர்த்திதானேஅவதரித்தாற்போலா க
அய்யன்விளங்குகின்றானவிபரமா க. (ஸ்ரீ)

(இராவணன்) புளகத்துடன் (தன்னுள்) இதுவென்கொல், குணவர்ணனையீது எதார்த்தமாகுமா

[வெளிப்படை] அட அச்சனகசன்னிதியில் உபஜீவனஞ் செய்துகொண்டிருக்கின்ற.

விருத்தம்.

அகலிகைமகனாந்தந்தை அறியாச்சதானந்தன்றான்
மிகமிகராமன்கீர்த்தி சனகன்பால்விரித்திட்டானும்

மகிழ்வுடனதனைக்[illegible]டு மதிகெட்டுப்புலம்புகின்றான்
புகல்கெட்டசிறவ[illegible]ப் புத்திமான்வித்திச்சிருவா.

(வித்திச்சிருவன்.) (பாட[illegible]ன்) சாரணபார்க்கக்கடவாய்.

விருத்தம்.

அடர்ந்ததன் னனையைவிரகினிற் புணர்ந்ததுட்ட வலாரியைச்சிறைக்கே
குடும்பியாய்ப் பணித்தானவ்வுபகாரக் குணக்குன்று மிராவணேச்சுரனை
மடந்திகழ் அவ்வகலிகையின் மகன்முன்வாழ்த்திடல் வேண்டுவதிருக்க
திடம்பெறு ஜனகனவைதனில் ராமன்சிறப்பினை எவ்விதமுரைத்தான்.

(சத்தியவிரதன்) (வசனம்). ஆசையினுற்றான் குணநிதியான இராமனிடத்திற்றானுகவே ஆசைகொண்ட ஜானகியை இராமனுக்குமணஞ்செய்துகொடுப்பதாய் ஜனகராஜனால் தீர்மானஞ்செய்யலாயிற் றென்றெண்ணுகின்றேன்.

(சாரணன்) (வசன[illegible]) கஷ்டம். கஷ்டம். அந்த நன்றிகெட்டபயல் அடிக்கடி இராமனைப்புகழ்[illegible] கழ்ந்து அவனது ஆசையை சீதைக்கு உச்சிக்கேறும்படி செய்துவிட்ட[illegible]

(இராவணன்) ஹா ஹா கஷ்டங் கஷ்டம். அந்தச்சாணகியின் கதையைக்கேட்கின்ற எனக்கு.

வெண்பா.

ஆசைகொண்டாள் ராமன்மீதம் மடந்தைசீதையென்று
பேசுமுறை யோர்பாற் பிளந்திடவும்—வீசுமனற்
காச்சிடு நாராசமென்னக் காமன்கொடுஞ் சரங்கள்
பாய்ச்சலிற் பாய்கின்ற தோர்[illegible] பால்.

(வித்திச்சிருவன்) (கோபகெட்டுயிர்ப்புடன்,) அவ்வகலிகை மகன்றானை மாரீசனால் முதன்முதலிற் கொல்லப்படவேண்டியவன் (மற்றவர்பின்னால்.

இல்லாமற்போனால்)

வெண்பா.

கண்டமட்டுந் தோத்திரித்துக் காலங்கழிக்குமுனி
விண்டிட்டபோதிலு நம்வேந்தனுக்குப்—பண்டுதொட்டு
ஒப்பிலுயிர்ச் சகனென்றோது ஜனகன்பயம[illegible]ற்
றெப்படிக் கேட்பா னிதனை[illegible]யே.

75

38

(தேவவிரதன்) (வசனம்.) யீதிவ்விதந்தான், ஆயினும் அவ்விராமனைப் பற்றிய புகழ்ச்சியிற் குதூஹலரான எனது குருவினிடத்தில், அச்சனகர் இவ்விதம் பதிலுரைத்தனர்.

(சத்தியவிரதன்) எவ்விதம்.

(மற்றவர்களும் ஆதரத்துடன் செவிகொடுக்கின்றனர்.)

வெண்பா.

கன்னிகையுங் காமுற்றாள் காகுத்தன் மேற்புகழை
என்னெதிரினீரு மியம்புகின்றீர்—நன்னயமாம்
பாதமதிக்குலசம் பந்தங்கள் பாங்குற்ற
தேனும்பொருத்தலரி[illegible] தே.

(என்றே)

(வித்திச்சிருவன்.) நன்று நன்று, ஜனகா, நன்று நன்று, நின்றால் காரியா காரியங்கள் நன்றாய்ச் சிந்திக்கலாயிற்று.

(இராவணன்.) அட்ட, இவன் யாவுமறிந்த மஹா ஞானவனன்றோ.

(சாரணன்.) ஆனால் கன்னிகையைக் காதல்கொண்டிருக்கின்ற நமது மகாராஜனுக்கு கொடுக்கப்போகின்றான் கொல்.

(சத்தியவிரதன்.) ஈதேது.

(தேவவிரதன்.) எனது குரு சதானந்தரிடத்தில் அச்சனகர்சொல்லிய சமாசாரங்கள் முற்றுங்கேட்கவேண்டும்.

(எங்ஙனமெனில்,)

ஆசிரியவிருத்தம்.

என்னிரு கண்மணியனைய பெண்மணியை ராவண ன்
யாசிக்க நேயத்திற ல்
இனிதுகசை கொண்டன னெனக்கன் பரம்பரை யி
லிங்ஙனங் கேட்கின்றதா ல்
அன்னபடி மூவுலகு மெச்சச் சிறந்த தோ
ளாண்மைபெறு வலியுமில ம்
ஆக்கும் விதிக்கு முப்போ[illegible] சிவபூ சை
யாற்றுர்[illegible]தானுமெ ன்
றன்னிகரி னன்பனு[illegible] ன்
சார்ந்திங் கிராகவன்மே ற்
றுவுமன மாமகள் சீதையுந் தாவெனி ற்
சாற்றவந்து மென்னையவனு க்

இன்னவினை யெங்ஙனம் யீகுவே னல்லதி   லை
                    யென்றெப்படிப் புகலுவே   ன்
எனது மனமொரு புடையினிலையாது சஞ்சல   த்
                    திடைகொண்டு மலைகின்ற   தே.

(என்றே)

(வித்திச்சிருவன்.) அந்தச் சனகராஜனால் சதானந்தனிடம் உசிதமாயுரைக்கப்பட்டிருக்கின்றது.

(இராவணன்.) (சோகநீரால் தொண்டை தத்தவிட்டுக்கொண்டு) ஹா ஜனகா, வீரத்துவச, எனதாருயிர்ச்சகனே, இவ்வித கிலேசத்தை, விட்டிடுவாயாக, என்னிமித்தம், உனக்குச் சோகமினிவேண்டா, யான் நினது பிராணகண்டித சோகாஸ்பதனாய் பவிப்பேனு, ஹா, ஹா, கஷ்டங், கஷ்டம்.

சாரணன் அசரீரிமொழி.

மன்னவர்மன்னவா தன்னுருவத்தொடு
கன்னியையவ்விட உன்னுகின்றீர்கொலோ.

அங்ஙனமன்றே) பின்னை, அன்னவளாசைகொண்ட, பன்னிருகுமரன், தன்னுருவம்புனைந்தே, மின்னவடன்னைக்கொள்வீர். (இதிலென்னபரிதாபம்.

(சத்தியவிரதன்.) (சிரித்துக்கொண்டு) இத்தகைய இராவணனைப்பற்றியோ, இவ்விதம் ஜனகராஜன் உரைத்தனர் ஸஹபாஸ் நிரம்ப ஸந்தோஷம்.

(தேவவிரதா.) கேட்கக்கடவாய்.

ஆசிரியவிருத்தம்.

கவிநாயகன்சக்கமதிலேபணிப்புண்டுகெதறினான்றசகந்தர   ன்
   கால்கைகளுதறினன்பதறினன்மிகமிகக்கண்கலானுன்கினைவு   ம்
புவிமீதுநீராய்ப்பெருக்கினன்பற்பலபுலம்பிவாயாற்கக்கின   ன்
   புரிந்துமிப்படியுடலைவிடுவிக்கமுடியாதுபுலிவாய்ப்பசுப்போல   வே
சவமானவிதமொக்குமிருபதுபுயங்களுந்தலைபத்துமுற்புறத்தா   ய்
   சரணங்களுன்குமேபிற்புறத்தாய்நொந்துசாற்றிமிடுக்கெலியனு   ன்
அவமானமெய்தினனடடாவகோவகோஅசைக்கத்திருப்பமுடி   யா
   அவ்வரக்கனைமூன்றுபுவனஜயவீரனென்றறைவதெவ்விதமைய   னே.

(இராவணன்.) (கோபாக்கிரகத்துடன்) [illegible] பயலான இப்பிராமணச்சிறுவன்றன் கண்டத்தை இப்பொழுதே [illegible] ன்றேன் என்று குபீரென்றெழுந்து மற்றிருவராற்றகையப்பெற்ற [illegible] ரும்ப உட்கார்ந்தனன்.

(வித்திச்சிருவன்.) அடடா நிர்மூடா நின்னாலறியவசமா.

இராகம் பியாகு. ஏகதாளம்.

பல்லவி.

முட்டாள்நீயறிவாயோ இவன்பெருமை.   (முட்டாள்)

அநுபல்லவி.

எட்டானைக்கொம்புமுரித்திட்ட இலங்கேசன்றன்
அட்டாளதேசம்புகழ் கட்டானபெருமையை.   (முட்டாள்)

சரணங்கள்.

வளிவந்துவாயிற்பெருக்க   தினந்தினமும்
வாசல்வருணன்றெளிக்க   கைகட்டிநின்று
களிறுதன்முதலோர்   எளியார்போலேவல்கேட்க
ஒளியார்புவனங்காக்கும்   வளல்ராவணனுக்கினை.   (முட்டாள்)

மேருட்கைலையைவிரற்க   ளீரைம்பதாலும்
வேரோடசைத்தெடுக்க   திகில்கொண்டுமை
தானுய்ப்புல்லிடவுண்   டானகளிப்பாலான்
நானுவிதங்கொண்டடினு   னவ்விலங்கேசனை.   (முட்டாள்)

(இராவணன்.) (வினயத்துடன்) இதுமட்டிலுமன்று, வித்திச்சிறுவா, ஸாக்ஷாத் அந்தப்பரமசிவத்தினால் புகழப்பெற்றிருக்கின்ற யீதெவ்வளவு. கேட்கக்கடவாய், பூர்வத்தில் ஒருக்கால், ஹோராகேஷத்திரத்தில், யான் மகத்தான தவம்புரிந்துகொண்டிருக்குங்காலத்தில்.

விருத்தம்.

மலைமகள் கும்பத்தனங்களின் குங்குமத்தினிற்றோய்ந்த செங்கரக
மலதலத்தா லென்னங்கத்தை வருடிமகேச்சுர னம்மதிருடி
மலைநிகர் புயத்திராவணா நீயுமாதவத்தா லிளைத்தனையேன்
மலமில் நின்மனத்தினினைத்ததுபெறுவையெனவரம்நல்கினர்மதித்தே.

(தேவவிரதன்.) ஓ எனதாவலுக்குறிய நாவலநண்பனே.
சத்தியவிரதா மேவி நீயுரைத்த, வித மிகவிந்தையே.
என்சொல்கின்றாய்.

கலிவிருத்தம்.

சதிரவன்றிசைமாறிடக்கடிந்த
முதன்மைவீரனும்புவனத்திலும்

அதிபனுக்கிதுவுங்குறைவாகுமோ
மதவத்திக்குமடிவழுக்காததோ.

(வசனம்.) மாகாவீரரில் யார்க்காகிலும் பிரதாபத்திற்சற்று நழுவுதலேற்பட்டால் அதனுலென்னகுற்ற மேற்படும்

(இராவணன்.) (சின நகைப்புடன்) அதுவென்கொல், பிரதாபத்தில் நழுவுதலென்று செப்புதல் என்கொல்.

விருத்தம்.

எந்தனுடைப்பலமறியா வாலிவீரனெனைப்பிடித்துக்கக்கமதிற் கொண்டான்மெய்யே, உந்தியொருமுஷ்டியினு லவனைத்தள்ளி யுதறிவிட்டெதிர்த்திட வென்சரண்பணிந்து, சந்ததமுமெனைக்காப்பா யெனவேவாலிசக்ய மதைக்கொண்டதனுற் பிழைத்தான்கண்டாய், இந்தவிதம்நடந்ததிலேபுகழ்ச்சிக்கீனம் யெனையெத்தவிதஞ்சொலிப் பல்லிளிப்பதென்னே.

(சாரணன்.) மூடஜனங்கள் மஹா ராஜாதிராஜனுகிய இலங்கேச்சுவரனுடைய பிரதாபத்தைச் சிஞ்சித்தாகிலுமறிகின்றதில்லை.

ரு. இராகம் பியாகடை. ரூபதாளம்.

பல்லவி.

வாலியென்றகுரங்காலேபெருத முன்னுலேவந்துசிறக்கவாகுமோ.

அனுபல்லவி.

தாலமேலுலகுமப்பாலும் புகழ்வீரனை
காலகாலனும்ப்ரதாப சாவிராவணேச்சுரனை. (வாலி)

சரணங்கள்.

பத்துக்கரத்தாற்பருத்தகைலைப் பருப்பதத்தையெடுத் தோங்கி வானிற்
பந்துவிளையாட்டெனவெறிந்தே மற்றப்பத்துக்கரங்களிற்றாங்கி கீழே
வைத்துத்துடையிற் புயத்தில்மப்புத் தட்டி
வந்தயிந்தமன்னர்மன்னவன்றன் முன்னஞ்சாதுகிட்டி. (வாலி)
(நாளும்)
எட்டுத்திக்குஞ்ஜயித்தெட்டானைக் கொம்புமிலங்கிடமார்பினில் ஒடித்தான்
இந்திரதேவன்முதலானயாவரும் யேவல்புரிந்திடஅடித்தான் இது
மட்டிலுமோபடைத்திட்டான் பலவான
வஞ்சமிஞ்சிடுந்தசான னன்சமரினிற்பஞ்ச லான. (வாலி)

(சத்தியவிரதன்.) தேவவிரதா, போதும், போதும், அவ்விலங்கேசனுடைய அவமானங்களை ஒளித்துவைத்துப் பேசவேண்டாம். அது மறைத்தாலும் மறைபடுமோ, அடட கேட்கக்கடவாய்.

ஆசிரியவிருத்தம்.

அலையாரமெறிகின்றவோவாகதித்துறையிலங்காறுகைகளா லே
அணையாய்த்தடுத்துமற்றைன்னூறுகைகளாலரிவையர்குழாங்களோ டு
சலமேவிளையாடுமென்றுகின்னைத்திடச்சர்வாங்கமுந்துலங்க த்
தலைகுனிந்தவர்சிற்குஞ்சாலையிற்பின்னலைந்தான்றெட்டிழுத்திடுவதும்
முலையின்மேற்றுகிலவிழ்ந்திடுமோவிழுப்பதும்முத்தெனநகைத்தார்கட ம்
முதுகினைத்தட்டுவதுமிப்படிப்பலவிதம்முன்னாளிலர்ச்சுனன்று ன்
சல்மாகவிளையாடிமகிழ்கின்றவேளையில்நாட்டமர்மதத்திறே டு
நாடியவிராவணன்காவலுட்பட்டூவிதுநாடெங்கும்நன்கறியுமா ல்.

(இராவணன்) வசனம். அந்தோ அந்தோ அந்தகிசத்திரிசங்குவின்யாசனைக்குகந்த சீர்கெட்ட முனியின் சேடனுகிய இந்தச் சின்னப்பயல் அம்மூடனைப்போலவே புலம்புகின்றனன். ஆதலின் இவன் இராக்கதரால் சங்கரிக்கப்படவேண்டியவன்.

(தேவவிரதன்) வசனம். ஓ ஓ உத்தமச்சக, சத்தியவிரதனே, அஃது நிற்க, நிற்க, இங்ஙனம் என்னுரை கேட்கக்கடவாய்.

தரு. இராகம் கேதாரகௌளம். ரூபதாளம்.

பல்லவி.

இலங்காதிபனுக்கோ இழிவெடுத்துரைக்கின்றாய் யேற்குமோடாபோடா.

அனுபல்லவி.

கலங்காமனத்தோன் கைலைதன்னை கல்ல
பலங்கொள்கைகளாற்றூக்கிப் பந்தாடின வல்ல. (இலங்

சரணங்கள்.

என்றும்விஜயஞ்செய்து எமபுரிக்கிலங்கேச ன்
எய்தினனெருக்கா லன்றே
அங்கங்குள்ளதேவர் அசுரர்கள்யாவ ரும்
அதிவியப்புடனேசிச் சென்றே
எங்கள்பெருந்தவமின்றேபலித்த தென்
றியம்பியிதுவிது வென்றே
தங்குநற்காட்சிகளெல்லாங்காண் பிக்கச்
சரிசரியெனக்கண்டு நின்றே

பங்காரதண்டனை கொண்டாரை விடுவிக்க
பாதம்பணிந்தவர்கள் பரிவுடனே துதிக்க
பொங்குங்களிப்பாலவன் சிங்கம்போற் கர்ச்சிக்க
பொல்லாயெமன்கீழ்வீழ்ந்தானெல்லாருமே நகைக்க. (இலங்)

அனுதினமுஞ்சா கணம்மிக வாடி
அரக்கர்பதியின் றயை நாடி
இன்மாய்ப்பூங்காவனநீர் இறைப்புமுத லாய
வேலைசெய்து கைகால்புண் ணுடி
தனதாம்பதிசெல்வரின்னமுஞ்சூரி யன்
றன்பயந்தே யொளித் தோடி
மனதேங்கிடத்திசை மாறிச்செல்கின்ற னன்
வரமும்உரமும் பெற்றான் கோடி.
தனதன்பாற்புட்பகத்தை தானப கரித்தான்
தடமார்பினில்வெற்றி மாலையைத் தரித்தான்
முனிவுடனகிலமுழு நடுங்கவார்ப் பரித்தான்
மூன்றுலோகமும் ஓராங் காணியாய்ப் பரித்தான். (இலங்)

(வசனம்.) அகோவகோ! யாவராலும் வழுத்தற்கொண்ணு அளவிறந்த கீர்த்தியையுடைய அவ்விராவணேச்சுவரன் புகழ்ச்சிசெய்தற்கருகனன்றே, ஆகையால் இகழத்தக்கவனன்று.

(வித்திச்சிகுவன்). வசனம்.) நன்று, நன்று, தேவவிரதா, நன்று, நன்று, இனிமையான நின்வார்த்தையினால், ஆனந்திக்க யோக்கியனாக ஆகின்றாய்.

(சாரணன்.) இவன்மட்டுமென்று) பின்னையோவெனில்) இவன் யாவனுடைய சீடனோ அவனுமேயாம்.

(இராவணன்) யாவனொருவன் அச்சனகராஜன்றன் சேர்க்கையை அடைகின்றானோ, அவனும் யெனக்கெவ்விதத்திலும் இஷ்டன்றான். ஏன் செண்பகமலர்களின் சேர்க்கையால் அக்குடலையும் வாசனைபொருந்தும் அத்தன்மையேயாம்.

(சத்தியவிரதன்.) அடடா, என் வீண்வாக்கலகம் இதிலென்பயன், வீண் காலதாமிதந்தானாகின்றது. யாம் குருகுலத்தையடைவோம்.
(என இருவரும் சென்றனர்.)

(இராவணன்.) யாமும், இக்கௌசிகீ தீரத்திற் கலங்காரமாய்விளங்காநின்ற இப்பக்கவனங்களின் மார்க்கத்தோடேசென்று ஆங்காங்கே தெர்ப

01

41

கின்ற பற்பல அற்புதக்காக்ஷிகளையும் அதிரகசிய ஸமாசாரங்களையும் நன்கறிந்துகொண்டே, அம்மங்கையர்க்கரசி ஜானகியைப்பெற்ற வள்ளல் ஜனகன்பாற்செல்வோம்.

மற்றிருவர்., மஹாராஜன், சித்தமெப்படியோ அப்படியே.

என எல்லாரும் சென்றனர்.

முதலாவதங்கமுற்றிற்று.

இரண்டாவதங்கம்

ஆரம்பம்.

அப்பால் அத்திரிமாமுனிவரும் அவரது பத்தினியாகிய அநசூயாதேவியும் பிரவேசிக்கின்றனர்.

அத்திரி சொல்.

ஞானவிளக்கம்.

பிரமமென்பது சத்தியங்கோவிந்தா, பின்னுளதெல்லாமனித்தியங்கோவிந்தா, சற்குருபாதத்தைச் சாரடாகோவிந்தா, சாத்திரத்தைத் தூரத்தள்ளடாகோவிந்தா, சாதனங்களைச் சாரடாகோவிந்தா, சார்ந்தால்மெஞ்ஞானந் தழைக்குமேகோவிந்தா, இந்தமெஞ்ஞானம் வந்தெய்திற்கோவிந்தா, யேக ஐக்கியபாவனையெய்துங்கோவிந்தா, அந்தச்சோதிதனை யடைந்தாற்கோவிந்தா, அல்லற்பிறவி யகற்றுமேகோவிந்தா, சுகாதீதமாமதனிற்கோவிந்தா, சொல்லமுடியாச் சுகங்காண்கோவிந்தா.

(அத்திரி.) என் காதலுக்குரிய மாதசூயையே.
(வசனம்.) வேள்விசெய்யப்போகின்ற விசுவாமித்திரமுனிவராலழைக்கப்பெற்றபடி அவரது ஆச்சிரமஸ்தானமாகிய இவ்வனத்திலுன்னுடன் வந்துசேர்ந்தேன், சகியே, ஜனகமஹாராஜனுடனிங்கு வந்திருக்கின்ற ஜானகிக்கு ஏதேனும் அபூர்வமான வஸ்துக்கள் யென்னயிருக்கின்றது.

(அநசூயை.) சரணஞ் சரணம் முனிநாதரோ என்பாலிருக்கின்றதன்றோ.

விருத்தம்.

எக்கராக்கதராற் பீதியுற்றப் பட்டாலு மாறு
தக்கதங்கற் பினின்றுஞ் சலித்திடார் தரித்துக்கொண்டால்
முக்கியபலனு மென்ன மொழிந்தென்பாற் றேவரீயந் த.
சுக்கிலநிறத் தின்பட்டுந் தூயங்கராக முந்தா ன்.

(அத்திரி) வசனம். நன்று, நன்று, ஸபாஸ், என், கேள்விப்படுகின்றோமன்றோ, இராவணனென்ற இராக்கதன்வந்து ஜானகியை யாசிக்கிறதற்கெத்தனப்படுகின்றானென்றே, ஆகையாலிவை அவட்கவசியந்தான் நன்று, நன்று மெத்தஸந்தோஷம்.

(எதிர்நோக்கி.) ஓ! இவளார், கரங்களில் தாமரையிலைகள், தாமரைத்தண்டுகள், தாமரைமலர்களிவைகளைக் கொய்துகொண்டொருத்தி வருகின்றனள்.

(அநசூயை.) பார்த்து.

விருத்தம்.

தூய்யநாளமு மிலைகளுங்கொ ணர்ந்திடுசுந்தரி ஜனகியின்றோ ழி
தையலாளிவள் சுசரிதையெனும் பேர்தழைத்தவ ளாகுமாலதனாற்
செய்யஜானகி மதனச்சுரத்திலோ செறுக்குளநடுப் பகற்சிறந் த
வெய்யிலுற்றிடு விதத்திலோநினைக் கிறேன்வேதைகொண் டுழல்கிறா
ளென்றே.

(அத்திரி.) ஞாபகம் ஓர்ந்துகொண்டு) ஆ, ஸகி, ஆம் ஆம். மதனச்சுரத்தினாற்றான், சமாதியிலிருந்த யென்னால் முன்னமே நன்கறியலாயிற்றன்றோ. எங்ஙனமெனில்,

விருத்தம்.

சனகசுதையொருசமயந்துயில்கின்றதினின்மாரன்றனைப்போ லீ
கனவிலதிசுந்தரமாங்கார்த்திரளாங்காத்திராமனைக்கண்கண் டு
மனதவன்பாற்சென்றிடவுஞ்சகலகன்மங்களிலுமகிட்சியின் றி
பனிநறும்பூப்பாயலுற்றாள்பாங்கியர்காப்பாற்றிடவும்பாவைநல்லாள்.

(நல்லதிருக்கட்டும்) யாம் ஜனகராஜனது பக்கல்சார்வோம். என்று சென்றனர்.

(அதன்மேல்,) வித்திச்சிருவ சாரணருடன், இராவணன், பிரவேசிக்கின்றனன்.

(இராவணன்.)

விருத்தம்.

எவருடை யெழிலைக்கண் ணுற்றிந்திரியம் வெட்கின்றனோ
தவஜன கேந்த்ரன்வேள்வி தனினின்று மெவள்வந்தாளோ
அவடனைக் காண்பேனிப்போ தென்றொரு வினைவானந்தக்
குவியலற்பு தங்களாகக் குமிழ்த்தெழுகின்ற துள் ளே.

(வசனம்.) ஆகையால் அச்சுந்தராங்கியை இப்பொழுதே பார்க்கவேண்டியதவசியம். ஆகவே, அக்கௌசிகாச்சிரமத்திற்செவ்வழி செல்லலாகும்.

(சாரணன்.) மகாராஜனே, இதோ இந்த விகங்கதாட்விக்குத்தென்புறமாய், அந்தக்கிம் சுகாரண்ணியத்திற்கு வடபுறமாய்.

விருத்தம்.

குரவகங் களுக்குமோங்கு கோங்குர சாலதா ல
தருவினங்களுக்கு நாப்பட்சார் மணற்பாதை சென்று ல்
கிரியெனப் பணைத்தகொங்கைக் கீரவாணி தனைக்கா ண
ஒருகொடிப் பொழுதுமிக்க வுயர்ந்ததாம் வேந்தர்வேந் தே.

(வித்திச்சிருவன்.) இராஜாதிராஜனே, இங்ஙனம், இங்ஙனம்.

(மூவரும் நடக்கின்றனர்.

(இராவணன்) வசனம். சாரண, இக்கௌசிகாசிரமத்திலும், நந்தனவனமிருக்கின்றதோ.

(சாரணன்.) அன்று, அன்று.

விருத்தம்.

கலகலெனப்பிகங்கள்வளர்ந்தோங்குதேன்மாக்காவுகளும்வகுளமலர்க்கந்தம்வீசும், உலவனிலனூதுநலுமிகரீங்காரத்துயர்பிரசத்தொனியுமீறுற்றமங்குற், குலவுக்முகாதிகளும்வாழைத்தோப்புங்குளுகுளெனுங்குளிர்நிழலுமிகக்கொண்டாட்டம், நலமுறுமவ்விருடியின்சிருடசத்தானம்நன்றுநன்றுனத்தம்விழிவத்திடிமிக்காணம்.

(வித்திச்சிருவன்) வசனம். அகோவகோ! இம்முனியாச்சிரமஸ்தானங்கள், யென்ன, யென்ன அழகாயிருக்கின்றன.

இங்ஙனம்,

விருத்தம்.

உயர்கமுகங்களினுறுபழக்குலைகளுதிர்வனக்கதலிகளொழுங்கா ய்
சுயபழக்குலையின்கனம்பொறுக்காதுதுவண்டனவந்துவந்தல வ்

நயமுறுந்தேமாங்கனிகணிறைந்தனநன்மரத்தடியிற்குமரிய ர்
குயசெயம்பெறுசெவ்விளநீர்கள்குலுங்கத்தெங்கினங்க ளோங்கினவே.

(——) (திரை) கொச்சகம்.

சீலவதி யென்றோழி சித்திரம் பொருத்திட வே
கோலமய சாமான்கள் கொண்டுவரப் போயினளா ல்
மேலுமென் வெப்பாற்றுதற்கு வெண்ணளினங் கொய்துவரச்
சேலெனுங் கட்கசரிதைச் சேடியளுஞ் சென்றனளா ல்.

(அவர்கள், என்னைவிட்டுப், பிரிந்ததுமுதலாய்

கலிவிருத்தம்.

ஏகாங்கி யிவளென்றென்னை எண்ணியே
மாகாம் பீரிய மன்மதன் வாட்டுறு ன்
பாகா ரின்மொழிப் பாங்கியர் காண்கில
ஞகா வினியென் செய்குவனுர் கதி.

(இராவணன்) கேட்டு.

விருத்தம்.

காமவேட்ச் சாஸபோகக் கலவியின் படனமென்ன க்
கோமள அவ்வியக்த குளிர்மதுரசப் பெருக்கா ய்
தோமறும் உட்கொண்மாகந் தத்தளிர்க் கஷாயமா க
மாமரக் குயிற்யேடின்றன் வார்த்தையீ தாகுங்கொல்லோ.

(சாரணன்.) வசனம் மகராஜ், அக்கரங்களடங்கியும், அர்த்தனைதெளிவில்லாமலும், ரமணீயமாயுமிருப்பது, பிகசப்தமன்று, பின்னையோவெனில், நினைக்கின்றேன், அழகிய சாரிகைகளின் சப்தமென்றே.

(——) அடுத்ததிரை.

விருத்தம்.

கன்னற்சிலைவேட் காமவிபோ கருதிப்பணிவன் காலிணை யே
இன்னற்புரியே லொருதினமு மெழில்சேர்விசித படத்தினிலெ ன்
மன்னற்பெருமான் றனைக்கண்டு வந்துன்பொருட்டென் வல்லுயிரை
முன்னர்ப்படைப் பேனுன திறல் முனியேல்முனியே லொருகணமே.

கொச்சகம்.

நாயகனில்லாவேளை நாடியெனைப் புண்படுத்த ல்
ஞாயமுண்டோடாபாவி நானிலத்திற் பெண்ணென்று ற்

பேயுமிரங்காதோ வென்பிராணேசன் வந்ததற்பி ன்
காயமிலா தின்சமர்த்தைக் காட்டுவை நீயேயனங் கா

(இராவணன்) கேட்டு, ஹ. ஹ.

விருத்தம்.

வல்லவனிமித்தஞ் சகிக்கவொண்ணாது மாவிரசப்பாவசமாய் ச்
சொல்லினிற் றளம்பிப்புலம்புகின்றவொரு சுந்தரிஇவளையாரென் றே
ஒல்லையிற்காணல் வேண்டுமால் மொழியாலொப்பிலம் பூவையைக்குயிலை
வெல்லலாற்றிரி புவனத்தினிலுமெழின் மிக்கவளாகுவளிவ ளே.

(வசனம்.) ஆகையால் அந்தச்சுந்தரி; இன்னாளென்று துலக்கமாய்க் காணவேண்டும்.

(சாரணன்.) மஹாராஜன் கட்டளைப்படியே (என்று போய்ச்சுற்றிப்பார்த்து, திரும்பவந்து, அதிவியப்புடன்) மஹாராஜா, ஒன்றும் புலப்படவில்லை, யாதொரு ரமணீயசப்தத்தின் வழியாய்ச்சென்று சுற்றிச்சுழற்றிப்பார்த்தும், அங்கொரு பூதரும் தென்படவில்லையே.

(இராவணன்.) ஆச்சரியத்துடன் ! தானே எழுந்து சுற்றிச்சுற்றிப்பார்த்து, அடடா. (வசனம்.)

அந்தோ, அந்தோ, ஓரிடத்திலும் ஒன்றும்புலன்படவில்லையே, யீதென்னவற்புதம், இம்மண்ணும் வாய்திறந்துரைக்குங்கொல் ! ஒன்றுந்தென்படவில்லையே, ஆச்சரியமாச்சரியம்.

தரு. இராகம் தருபார். ஆதிதாளம்.

பல்லவி.

காதுவழி இன்பநினாதம் புகுந்தென்னைக்காமன் கணைக்கிலக்காக்குதே.

அனுபல்லவி.

மேதினிமயமாயோர் மாதரசி யிருந் து
விரகமாயுருகின்ற உரைகள்யென்னுலந் து. (காது)

சரணங்கள்.

ஒருத்திமற்றொருவனை நினைத்துக்கொண்டு ம்
ஒண்டொடியவனை காணுள்ளத்திலிருக்கவு ம்
காத்திலம்பெடுத்தெனைக் காமனுங்கருக்கவு ம்
காணப்படாவடிவினு ளிவளுருக்கவு ம். (காது)
புதுமையிதெங்குங்காணே னிதுவரையினு மோ
பூமிசடமாச்சுதே பொருந்தப்புகலு மோ.

கதையோகனவோவிழி கண்ணைப்பகலு மோ
கருத்துமயக்கும்அல்ல காமன்விற்கொலு மோ. (காது)
பிரியாதுநாம்கொண்ட கொள்கைபோ ல
பெண்ணொருத்தியுங்கொண்டனளோ ஒருஜால ம்
விரகங்கொண்டுருகின்ற மென்குயிலினற்சா ல
விழிகளைக்கிட்டத்துடிக்கின்றதி தென்னகோல ம். (காது)

(———) அடுத்தகிளை.

தரு. இராகம் கமாஸ். சாப்புதாளம்.

பல்லவி.

மன்மதாயேன் வன்மம் சும்மா
வாதுசெய்வதுத, காதுகாண், மயங்கிறேனடா.
(மன்)

அனுபல்லவி.

தன்மமா யென்கன்மமா நீ
தஞ்சம டா
கெஞ்சுமென்மே ல்
வஞ்சமி லை
என்செய்குவே ன். (மன்)

சரணங்கள்.

சொல்லச்சொல்ல வில்லைவளைத் து
துடுக்காய்க்கூர் சரங்கள்தொடுக்கிறாய டா
வல்லவர்தாம் இல்லாவே ளை
வந்துமிக த்
தொந்தரித்தா ல்
உன்றன்புக ழ்
சிந்துமட டா. (மன்)

சின்னஞ்சி [illegible] ரானே ன்
செய்வதி [illegible] செய்யாதேடாசெய்திடி லோ
அன்னபாவம் உன்னைவிடு மோ
அருநரக
தீருந்திடுவோ

87 44

சரியல வே
பொறு பொறு நீ (மன்)

கொச்சகம்.

தஞ்சமெனயான்சொலியுஞ் சற்றுந்தயையில்லாம ல்
வெஞ்சரங்களேவுகின்றான் · மேனியெல்லாம்நோகுதந் தோ
பஞ்சசரனெஞ்சமென்ன பாறாங்கல்லோ இரும் போ
கொஞ்சமிரங்காததென்ன கூருவேனோ விதி யே

மேற்படி கொச்சகம்.

பாவிமதனேவேவிப் பங்கப்படுத்துகின்றா ன்
கூவிக்கூவிக்கதறிக்கூவியும் நீயிப்பொழு தே
தாவிவிங்குவாராமற் றமதித்திருப்பதென் னே
மேவியென்வலவா விரைந்தெழுந்துவாரா யோ;

(வசனம்) ஆ. பரமதயாளுவே. ஆ. அனங்கவாதைக்கிக்கவசமா; ஆ. யென்னுயிர்துறக்கின்றேன், மகத்துரோகி யென்னைக்கொல்கின்றான் ஆ. பிராணேசா, சடிதியில்வந்து, மதனவாதை விலக்கினாலாகாதா, வா வா வென்றலறியும் வன்னெஞ்சு படைத்திருக்கின்ற பாதகா, வாராததேன்.

தரு. இராகம் உசேனி. ரூபதாளம்.

பல்லவி.

வருவாயோ வரமாட்டாயோசாமி நீ. (வரு)

அனுபல்லவி.

கருணைப்பெருங்கடல் கண்ணாளனே அடா
சரணம்நீயல்லால் விடந்தானுகுங்கலந்திட. (வரு)

சரணங்கள்.

தப்பிலிமதப்பயல் வைப்புவரம்பிலாம ல்
தயைதாக்ஷிணியமென்ற யிடத்திலுமில்லாம ல்
செப்புமென்மொழி செவிக்கொப்பாதலைக் ல்
சிறியம்பிறைக்கிறான் மீறியட்டிசொல்லாம பருசுவு ல். (வரு)

பாலைஞ்சும்பிசைந்தே சோலைக்கனிரசந்தே ன்
படைத்துனைன்றுமோங்கரித்து மிகச்சுகந்தே ன்
நாலுங்கையுமசந்தேன் மேலும்பச்சப்பசந்தே ன்
கனதனங்களுசந்தேன் கலந்தணையவிலைசந் தே. (வரு)

(ஆ) பாவி, வதைக்கின்றனே.

கலிவிருத்தம்.

☞ சரணமென்றினிதாய்ப் புகழ்சாற்றியும்
கருணையற்றவன் காமன்வருத்துறான்.

(சாரணன்) வசனம். அகோ வகோ! திரும்பத்திரும்ப, யாதொருபிடிமானமில்லாமல் இன்சொற்களெங்கிருந்தோ கிளம்புகின்றனவே, இதுவென்ன விந்தை.

(இராவணன்) அந்தோ வந்தோ அடுக்குவசனம்.) மாகமதிற்சிறு, மேகமுமின்றிவை, போகமழையமு, தாகப்பொழியுதே.

தரு. இராகம் ஆனந்தபைரவி. ஆதிதாளம்.

பல்லவி.

என்னமாயமடா ஓகோகோ இனிநான் எப்படிச்சகிப்பேனடா. (என்)

அனுபல்லவி.

அன்னியாயமோ, இன்னிகாதமென்
ஆவிதுடிக்க விப்பூவில்வெடிக்குதடா. (என்ன)

சரணங்கள்.

ஊருமில்லைப்பேருமில்லை உருவமுமில்லை யே
ஒருவனக்குயில்வெட்கி யோடவுங்கல்லை யே
நீராயுருக்கிடவுஞ் சொல்கின்றசொல்லை யே
நிகரற்றபெண்மணியாய் நினைக்கின்றேன்தொல்லை யே. (என்ன)

ஆனாலும்பெரும்பாவி யானேனோநா னே
அடவிற்றேன்மாறி பொழிந்ததெனத்தா னே
தீனவின்மொழிதனைச் செவிகளிற்கேட்டே னே
திவ்யமடமயிலைக் கண்களிற்கா ணே. (என்ன)

வல்சொல்வம்புகளென் செவிகளிற்பாயவு ம்
வில்மன்மதன்கைகள் பூங்கணையெய்தோயவு ம்
இவலைசுகமின்றினன் யெண்ணியெண்ணித்தேயவு ம்
தெய்வமிசைத்ததடா அய்யோநான்மாயவு ம். (என்ன)

(வித்திச்சிருவன்) வசனம். அடட, அருந்தவர்களினாச்சிரமத்தானங்கள் அடங்காமருத்துவமுள்ளவையன்றே.

(——) (அடுத்ததிரை) ஷை கலிவிருத்தத்தொடர்ச்சி.

☞ தருணமிதலத்தான் கதியாங்கொலோ

(எல்லவருங்கேட்டு) வசனம். ஆ, ஆ நிச்சியமாய் நமதக்கங்களுக்ககோசரமாய், இவ்விதமாய்ச்செய்துகொண்டோ, ஒருத்தி விரகதாபத்திற்காற்றாது புலம்புகின்றனளென்பதிற்சந்தேகமில்லை, ஊ, ஓ கஷ்டங் கஷ்டம்.

(திரைச்சீலையைத்தள்ளிக்கொண்டு.) தாமரையிலை, தாமரைத்தண்டு, தாமரைமலர், இவைகளைத்தாங்கிய கரத்தினளாய், சுசரிதையென்ற சகி, பிரவேசித்து,

என்னுருயிர்ச்சகி, வேண்டாம், வேண்டாம் அமங்களவாச்சியம், மங்களவாச்சியம் புகலுதி.

(அப்பால்.) தளிர்ச்சயனமுற்ற ஜானகி பிரவேசிக்கின்றனள்.

(சீதை.) ஷை கலிவிருத்தத்தின் கடையடி.

☞ சரசாதன்றனைக்காண் சுகங்கொலோ,

(எனக்களிப்புற்றனள்.

(சுசரிதை.) ஆ, ஸகி, ஆச்சுவாஸங்கொள்வாயாக, ஆச்சுவாஸங்கொள்வாயாக.

(என.) தாமரையிலையால் விசறுகின்றனள்.

(இராவணன்.) ஊ, ஊ, ஊ.

விருத்தம்.

வளிவந்துலவச் சேடியன்னவளை மாட்டினின்றிலை கொடுவிசிறித்
தெளிவுறச்செய முயற்சியால்சாதனைச் சிந்தித்தாள் சோர்ந்தனடிவன்னம்
அளியின்றனுடையணங்கவாதை வெளிவடலைக் கண்டிடவென்னக்கே
வினைநற்புண்ணிய மிலைவிதனமேன் வெடிக்குங்கல்லும் நோக்கிடவே.

(சாரணன்) வசனம். அவளோ, கட்புலன்கட்குச் சற்றுந்தென்படவில்லை.

அவளுஞ் சகியோ, என்றாய்க்காணப்படுகின்றனள், ஆச்சரியமாச்சரியம்.

(வித்திச்சிருவன்.) அஃதும் அடைவே, அறியலாகும்.

(சுசரிதை) வசனம். ஆ, ஆ, கெட்டது காரியம், இவளுக்குத்தாபம் மேன்மேலும் அதிகரித்துவிட்டது.

ஆகையாலிப்பொழுது சந்தனத்தளிர்களின் மலங்களினால் இவளுடம்பை நனைக்கின்றேன். (என்று கரங்களினால் சந்தனத்தளிர்களைக் கசக்குகின்றனள்.

(இராவணன்) விருத்தம்.

வன்னமானோக்கி தேகமார்த் தவங்கவர்ந்த தென்   று
தன்னியல் மருவிடாத சந்தனத்தளிர் கடம்   மை
கன்னலிற் கனிந்தநிஞ்சொற் கவர்தரு சேடிமா   று
துன்னுகை யேந்திரத்தாற் றுன்பஞ்செய்கின்றா டிண்ணம்.

(சுசரிதை) கசக்கிப்பிழிந்து) வசனம். அடி சகி, இந்தச் சந்தணரஸத்தால் நனைத்தில், ஏதேனும் சுகம்பிறந்ததோ, சற்றேனுந் தெளிவுக்கிடமுண்டோ, தையலர்க்கரசியே.

(சீதை.) சற்று தெளிந்தவளாய்

சிங்காரக்கவி.

உற்றவென்றோழியர்க், கெத்தனைபோதுதான்
மெத்தமெத்தச்சிர, மத்தைவிளைப்பனோ.

(சுசரிதை) சிங்காரக்கவி.

காளத்தனத்தினாய், நாளைத்தினத்துன்ம
ணாளன்றனைக்காண, வேளைவந்திட்டதே.

(அப்படியாய்க் கேட்கப்படுகின்றதன்றோ.
(சாரணன்.) இவளுக்கு வல்லபன் யாவன்.
(இராவணன்.) புண்ணியஞ்செய்தவன் யாவனோ, அவனே யாம்.

(சீதை) சிங்காரக்கவி.

இன்றுயிர்தங்கிடி லன்றோஅடுத்தநாள்
நின்றென்கணாரா தன்றனைக்காண்கலாம்.

(இராவணன்) விருத்தம்.

எவனைநினைத்துமதனவாதைஇன்னலெய்துகின்றாளோ
அவன்மிகப்பெருந்தன்னிய னெனவுரைவோமானாலு   ம்
குலக்கன்னிஇவளைமருவிக்கூடாததனா   லே
சவலமில்லைத்தவமிலனவன்றானேயென்சொல்வே   னே.

(சுசரிதை) வசனம். அஃ தென்றோழியரசே, அங்ஙனஞ் செப்புதலடைவன்று, சித்திரத்திலங்கும், நின்வல்லபனைப்பார்த்துக் கொண்டின்றொருதினமுங் கழிப்பாயாக.

அப்பால், சித்திரசாமான்கள்கொண்ட, செங்கரத்துச்சிலவதி, பிரவேசிக்கின்றனள்.

(சிலவதி) விருத்தம்.

மெய்வியர்த்திடவும் பெண்கள்விரகநோய்கொண்டுகா   ம
னெய்கணை சகியேனென்ன இறைச்சலிட்டழுவர்சொல்   லோ
மெய்கணவா வாவென்று வெளிவிட்டுவிளம்புவார்கொ   ல்
கையிலைமறைவுகளோர் காய்மறைவுகள்வேண்டா   வோ.

(வசனம்.) கல்லதடி நங்கைக்கரசே, ஈது சித்திரப்பலகை, இவை சித்திரசாமான்கள், என்றுகொடுத்தனள்.

(சுசரிதை) வசனம் எனதாருயிற்றோழிநல்லாய், எப்படியாவது, சற்று தைரியத்தை வகித்துக்கொண்டு, சித்திரமெழுதுவாயத்திரவிழியினாய்.

(சீதை.) ஆவலொடு, சித்திரப்பலகைமுதலிய சாமான்களை வாங்கிக்கொண்டு, சித்திரமெழுத ஆரம்பித்தனள்.

சுசரிதை. சகி,

அடுக்குமொழி.

சித்திரப்பத்திரிக்க யித்தனைதிகைப்பதேன்
வித்தாரமானகைச்ச மர்த்தெங்கேபோச்சுதடி.

(சிலவதி.) சகி, சுசரிதாய்.

அடுக்குமொழி.

அப்படிக்கல்லவடி, முப்புவனாதிபனைச்
சொப்பனமோர்ந்தலவோ, ஒப்பமாய்ப்பத்திரிப்பாள்.

(வசனம்.) யாதொரு மகானுபாவன், இவளுக்குப்பிரத்தியக்ஷத்திற்காணப்படவில்லையன்றோ, யாதொருமன்மதனால், சொற்பனத்திற்றானே காண்பிக்கப்பெற்றிருக்கின்றனள்.

(சாரணன்) மகாராஜ், வசனம். மகாபாக்கியசாலியாக வர்த்திக்கின்றீர். அன்றியேல், திரிலோகாதிபனாய் மகா[illegible]ருனையிருக்கின்ற, ஒருவன், தாங்களன்றி திரிபுவனங்களிலும் மற்று யா[illegible]றான்.

(இராவணன்.) ஆம், ஆம், [illegible]ந்தான், மேற்கண்டறிவோம்.

(சீதை) வசனம். ஆ! மதனவாதை சகிக்கவசமா, அந்தோ, அந்தோ, பாவி வருத்துகின்றான், ஆ! அனங்கதேவா, அபலையாகிய, என்னிடத்தும், அடஞ்செலுத்தலாகுமா, யான் இம்மடலெழுதுமட்டும், வருத்தாதே, வருத்தாதே, மன்மதா.

ஜாவளி. தரு. பருல்ன்னமரட்ட, நமஒத்து, என்ற வர்ணமெட்டு.

இராகம் இந்துஸ்தானி காபி. ரூபதாளம்.

பல்லவி.

இதுவோஉன்னீதி என்மேற்சினமேனோமன்மதா. (இதுவோ)

அநுபல்லவி.

அதிபாவமுன்னைவந்து அடையலாகு   மே
பதியில்லாததிரியிலென்மேற் பாணம்விடுத்தாரோருமே. (இது)

சரணங்கள்.

கெஞ்சிக்கெஞ்சிநானயுந்தும் கிருபையில்லையே   காமா
வஞ்சிநானென்செய்வேனோ வாதுசெய்தாற்றொல்லையே. (இதுவோ)

கொன்றிடவே, நீதுணிந்தாய், கொஞ்சங்கேளடா,   பாவி
நன்றன்றுபெண், பழிபொல்லாது, நானேஉனக்காளடா. (இதுவோ)

சரிபலங்கொண்டாரிடத்திற், சார்வதேவீரம்   அய்யோ
திறமையில்லா, ஸ்திரீயென்மீது, தீங்கிழைத்தாலென்சாரம். (இதுவோ)

கொச்சகம்.

ஓகோ வம்மம்ம ஒருவாறென் சோபமெல்லாம்
போகாது போச்சுதந்தோ போனதுகாண் லச்சையுமே
காமச்சுரமே கணப்பொழுது வாட்டாதே
வாகா யென்றுதன் மடலெழுது வேளைமட்டே.

வெண்பா.

பெரிதாமெனது வெட்கப் பீடொழித்து விட்டேன்
அரிதாயுரத்தை அடைந்தேன்—சுரமே
விரும்பிக் கணமளித்த மேற்புண் ணியத்தை
நிரம்பெய்திடப் [illegible] றனள்

எனக்கொஞ்சம், வரைகின [illegible]

(இராவணன்) விருத்தம்.

ஓவியப்பலகை யுற்றுவெனாக வொளிர்பெரு மிடந்தொறுமொழுங்கா   ய்
மேவினவெனது விழிகளுக்கிலக்காய் விளங்குகின்றன அந்தவிதம்போ   ல்,

---

ஆவலுற்றிடுமென் செவிகளுக்கமுதா யன்பனைவனைகின்ற வெழிற்சே   ர்
பாவைநல்லாளைக் கங்கணவரவம் பகர்ந்திடக்கேட்டனன் பரிந்   தே.

(சீதை) வசனம். சகி, சுசரிதாய், கைவருந்தப் பிரயாசைப்பட்டும் இச்சித்திரத்தலைவனாலென்ன பிரயோஜனமென்றிலச்சிக்கின்றதென்மனம். என்று கண்ணீருகுத்தனள்.

(இராவணன்.) ஆ, ஆ, இவள் ரோதனஞ்செய்கின்றாளென்பது, திண்ணம்.

எங்ஙனமெனில்,

விருத்தம்.

கண்ணினிற் புலன்படாத காரிகை கண்மைசேர்ந்   து
வண்ணக்க போலக் குங்குமத்தினிற் புரண்டுகெஞ்ச   த்
துண்ணெனத் துழல்வண்டென்னத் துளிகள் சொட்டிடுதலாலே
இன்னமாய் ரோதனந்தான் செய்கின்றாளிதென்னகா   க்ஷி

(சுசரிதை.) சகி, சும்மாவிதனிக்கவேண்டுவதில்லை, நாயகனை வெகு சுலபமாய் அடையலாகும்.

(சீதை) தொடர்மொழி. கடுந்துயர்விடுத்துக், கண்களைத் துடைத்து, கனவினைநினைத்துக், கணவனைத்தொகுத்துக்கனிவுடன் திரும்ப, வரையலாயினள்.

(சிலவதி) இரகசியமாய், வசனம். சுசரிதாய், நமதுயிர்த்தலைவிக்கி, இந்தப்புருடனிடத்திலுண்டாய ஆசைகள் அளவில்லாமல் வளர்கின்றன.

எங்ஙனமெனில்,

கலிவிருத்தம்.

ஒளிர்க போலங்கள் புளக முற்றிட
உளமதின் மிக வுன்னி உன்னியோ
தளிர்க்கர விரற் சஞ்ச லித்திட
களிகொண் டெழுதிக் கண்களி லொத்துறுள்.

(சுசரிதை) வசனம். எப்படி, சொற்பனத்திற்கண்டனளோ, அப்படியே, எழுதவேண்டுமென்றிவட்கபிப்பிராயம்.

(இராவணன்) வசனம். ஆ, என் மனமே, எனதற்குள் சஞ்சலத்தை அடைகின்றாய், மென்மேலுங்கண்டறிவோம்; சற்று சலியாதிருப்பாயாக.

(சீதை.) எழுதியமட்டிற் சித்திரத்தைப்பார்த்து.

(தன்னுள்) வசனம்.

குவலையப்போன்ற நீலாங்கமும், காதுவரை நீண்டகண்களும், கடைக்

கண்சிவப்புகளும், தீர்க்கப்புயங்களும், அடட, அவனே இவனென்றுசொல்லும்படியாயெழுதப்பட்டிருக்கின்றது.

(அளவற்ற களிப்புடன்.) இங்கிப்பொழுது

சந்தவிருத்தம்.

மாணமாகரத்திலொருகார்முகம்வளைக்கிநிகர்வாகிருபுயத்திலணிசேர்
ஆணிகள்பொடித்திலதமார்பிலும்மைக்கினியசோதிகொடருப்பையதனுற்
பேணணியெழிற்பெருமவுஞ்சியுமமைப்பன்முகபீடிபதுமத்துளளியோர்
சேணியில்முளைத்துமுளையாததுமெனக்கவினவீசைகடிருத்திடுவனால்.

(என்று) திரும்பவும் எழுதுகின்றனன்.

(இராவணன்) சித்திரத்தை, நோக்கி, பெருஞ்சுவாசத்துடன்.

(தன்னுள்) வசனம்.

ஆ! இது வேறாய்க்காண்கின்றதே, என்பாழ்த்தமனமே, நின்னதுகோரிக்கை வீணாய்முடிந்ததே.

அடட,

விருத்தம்.

ஐந்துநாற் கரங்களில் லனெனமொரு பத்தில்லன்
சிந்துரக் கொம்பினங் கடிகமொரு மார்பனில்லன்
கொந்தின மெய்யன்பால குமரனிரண்டு கையன்
சுந்தரனிவனோ வேந்தாய்த் துலங்குகின்றா னென்சொல்வேன்.

(சீதை,) நன்குவரைந்து, சித்திரத்திலங்குகின்ற நாயகனைக்குறித்து. அஞ்சலிசெய்துகொண்டு,

கட்டளைக்கலிப்பா.

நீல வண்ணனே வந்தனம் வந்தனம்
நிர்மல முகச் சந்திரனே வந்தனம்
சீலனே ஜக வீரனே வந்தனம்
சித்திரக் கணவா எழில் வந்தனம்.

இன்னமும், மதிமயங்கி, ஓ! பிராணகாந்தா, இப்போது.

கலிவிருத்தம்.

தென்றலாவிதுசிறாவாமதி
யன்றகாண்செந்தணற்கணமாகும்வே

ளின்றுகொல்லுருனென்னிதையேச்சுவரா
பொன்றிடாதுசுகத்திற்பொருத்துவாய்.

சிங்காரப்பத்தியம்.

சாமளவண்ணனே, தாமரைக்கண்ணனே
சைலபுயதிண்ணனே, தயாளமன்னு
கோமளவுல்லாசனே குருமந்தகாசனே
கோதண்டப்ரகாசனே குணக்கடலே
தேமற்கொங்கைசாலவே திரண்டுகடம்போலவே
தினவுதின்பதாலே வேள்செய்தஞாயம்
எமனுளஆர்கதி எந்தனுக்குவிண்மதி
யென்னதனலாவதின் இருமாப்பென்ன.
சாமிதயவுசெய்வாயெனைத்தழுவயிதுவே
சமயமிதுதவறிடுற்சகியேன்கண்டாய்
நீமலைத்தன்மதனசெய்கைதெரிவாய்
சித்திரக்கணவனேசேரவாராய்.

இன்னமும்,

தரு. இராகம் சாவேரி. ஆதிதாளம்.

பல்லவி.

தருணமிப்போதெனைத் தழுவாவிடிலுயிர்தரியாதடா சாமி

அனுபல்லவி.

கருணாகராவெழிற் சாரவிந்தனே
அருணதராவெனக் கருணையகாவந்தனம். (தருணம்)

சரணங்கள்.

பங்கஜநயனமுந் துங்ககோதண்ட
பாணியும்பருத் தூணியுமுதண்ட
மெங்கும்புகழ்ப்பலந் தங்குபுயமுங்கண்ட
என்மனமுருகுதே தன்மயிலேயோத்தண்ட. (தருணம்)

சித்தசன்கரும்பைவளைத்துக் கணைபூட்டுறான்
சீறிச்சினந்தாக மீறியெனைவாட்டுறான்
நித்தியமென்சொப்பனத்திலுனைக்காட்டுறான்
நீயும்பராமுகமாயெனை யோட்டுறாய். (தருணம்)

அன்றிற்கூடவும்வீசு தென்றல்கொடியபோல் லா
அரவமாய்ச்சிறவும் அருகாலேரலமுங்கெல் ல
பொன்ருக்கடவெரவியும் கொன்றிடாமற்கொல் ல
புண்யனேதவிக்கிறேன் கண்யனேமிகால் ல. தருணம்

(வசனம்.) ஆ, பிராணேசா, இன்னம் மனமிரங்கவில்லையா, யானென் செய்வேன்,

இப்போது,

விருத்தம்.

மலையமாருதனுமனற்பொறித்திரளைவாரியேவருடித்தாற்போலு ம்
கலமுறுத்தவளப்பனிக்கதிர்கனலானனியென்மேனனைக்கின்றற்போலு ம்
பலமதாந்துயரைத்தருகின்றார்மதனப்பாவியின்கொடுமையென்பகர்வே ன்
வலவனீயாகைவலேனயிப்போமருவியாடள்ளிடல்வம் பே

(இன்னமும்,) மானதா, யென்று அரைவார்த்தையில்

(தன்னுள்) வசனம்.

ஆ, மதிமோசம்போயினேன், சித்திரத்திலிலங்குகின்ற நாயகனை வாஸ்தவநாயகனென நினைத்துக்கொண்டு, மோகங்கொண்ட என்னால் மதிகெட்டு வாய்விட்டுப் புலம்பலாயிற்று.

[என்று வெட்கித்திருந்தனள்.]

(சிலவதி.) (சிரித்துக்கொண்டு,) அடி சகி, நின்வார்த்தை, குறையுற்றதுபோலும்,

(சீதை.) இலச்சையுடன்,) சகி, ஒரு குறையுமில்லை; எனது நாயகனை சித்திரத்திற் பூர்ன்னமாய் யெழுதியாய்விட்டது.

(சகிகள்.) (சித்திரத்தைப்பார்த்து,) ஒருவருக்கொருவர், சகி, நமதுயிர்த்தலைவிக்கவ்வளவாசைவந்ததுசிதக்தான், என், இந்தச்சித்திரத்திலங்குகின்ற, இந்தச்சுந்தரசொரூபத்தினிடமாய், எவ்வளவெவ்வளவோ, ஆசையுண்டாவதற்காக்ஷேபனை யென்னயிருக்கின்றது.

(சாரணன்.) பார்த்து, அதிவியப்புடன்,

கட்டளைக்கலித்துறை.

செந்தாமரை விழியானனம் நீண்டதிருக் கரமு ம்
சுந்தரக் குவவியதோள்களும் ஆர்ந்ததனி யுரமு ம்
நந்தாது மேவியசாம்ப் ராச்சியக்குறி நாடுமி ரு
பைந்தாரணி பதன்யாரிவன் போலெங்கும்பார்த்திலனே.

(இராவணன்.) தன்னுள்,

விருத்தம்.

இவனுடையங்கம் நீலமெழிற் குவலயமே யொக்கு ம்
இவன்கருதலர் கண்கட்கு மேற்றவா னந்தனுகு ம்
இவன்கபாவமு முதாரும் யாவர்க்கும் புகழ்விலாக்கிய ன்
இவன்மகாவென்னைச் சொல்கின்ற இவனுடைக்கவர்வந்தா னே.

தரு. இராகம் தனுக. ஆதிதாளம்.

பல்லவி.

இந்தசுந்தரத்தைப்போலெங்குங் காணேனே. (இந்த)

அநுபல்லவி.

எந்தவுலகிலு மிசைக்கெழிற்றங்கும்
சந்தமுறுசுகர்த மடவிலோங்கும். (இந்த)

சரணங்கள்.

எற்குமதிமுகமும் வேஷக்குறைபூநப்பெட்டும்முக்கு ம் நாசனும்வாயும்
கேட்குமிருகாதும் பார்க்குங்கண்களினருமேக்கு ம் திரள்புயமும்
நீர்க்யோகுகளும் தாக்குகார்முகமுமார்க்கு ம் தழுவவின்பந்
சேர்க்குமணிமார்பும் பூக்குமெத்திப்பதமும்பார்க்கு ன் மதனரூபம்
வாய்க்குமாணிடவடிவாய்க் குணபூடணமாய்
பார்க்கப்பார்க்கப் பிரியமாக்குமிவ்வணமாம். (இந்த)

எட்டுத்திசைக்கப்பாலு மெட்டிடுமிவன்கோதண்ட ம் வளைக்குமுன்னம்
தட்டிநெறுக்கியள்ளிக் கொட்டும்பொடியாகுமாண்ட ம் அஞ்சலெனவே
இஷ்டமாய்நம்புவர் கஷ்டங்களைசண்டப்ரசண்டம் செய்தான்வான்போலும்
திட்டமாய்க்காண்கின்றான் துட்டமதமாதங்கக்சண்டம் எனுந்துடையான்
வட்டவாருலகிற் கட்டழகியரெல்லாம்
இட்டவந்து முத்தமிட்டிடத்துணிவர்கல்ல. (இந்த)

வையகந்தனிலிப்பையன் வாழ்வதெந்தவூ ரோ எந்தநாட்டோ
செய்யவாயன்காயாம்பு மெய்யனிவனுக்கென்னபே ரோ இவனன்னையும்
அய்யனுமென்னதவஞ் செய்திவனைப்பெற்றா ரோ அவர்தான்யாரோ
துய்யனிவனைக்கண்டாற் றெய்வமெனத்தொழுவர்பாரோர் அதிற்கொஞ்
ஐயமில்லையெதிர் வெய்தினெய்தியொரு [சமும்
செய்திபையவுரை செய்யுமாறுபொரு. (இந்த)

(வெளிப்படை.) அடா வித்திச்சிகுவா, இந்தச்சித்திரத்தில் இலங்குகின்றவனைப்பார்த்தனையா.

(வித்திச்சிகுவன்.) ஆம், ஆம், நன்றாய்ப்பார்த்தனன். எப்படியென்றால்,

சந்தவிருத்தம்.

காமருவிழிக்கடைபுலாவரிகண்மெச்சியமகாவெனைவளர்த்ததுசளா ல்
தாமரைபொற்புரவிபூதியுமெழிற்பிரமசாரியைநிகழ்த்தினதுவா ல்
வாமமுளையுற்றவருவீசைநிரையற்புதவுவாவெனவழுத்தியதுவா ல்
பூமலாயொத்தகரமேவிவளைவுற்றசிலைபூவலனெனைப்புகலுமா ல்.

(சீதை.) சகிகாள், இதைப் பாருங்கள் என, சித்திரத்தைக்காண்பித்தனள்.

(பொது) விருத்தம்.

வாங்கினார் மடலைத்தங்கண் மலர்க்கண்ணி லொத்திப்போற் றி
தாங்கினார் மனமடங்காச் சந்தோடக்கடலி லாழ்ந்தா ர்
வீங்கினா ருடலஞ்சற்றே வெட்கினா ருளமருண்டா ர்
பாங்கிய ரிவண்முன்செய்த பாக்யமே பாக்யமென்றா ர்.

(சுசரிதை.) சிரித்துக்கொண்டு, அடி- தோழியரசே.

விருத்தம்.

தடித்தினை நிகர்த்தமேனி தங்கத்தை யுருக்கிவார்த் த
குடத்தினை நிகர்த்தகொங்கைக் கோவைவாய் மானேயித்த ப்
படத்தினை யான்பார்த்தென்ன பரிந்துன்னையகன் பார்த்திட்டா ல்
இடத்தகும் நின்கரத்தி லித்தினைக் கடகந்தா னே.

(இராவணன்.) ஸபாஷ், உள்ள துரைத்தனள் சுசரிதை.
(ஏனெனில்,)

விருத்தம்.

வன்னங்கள் மாறிடாமல் வரையொன்றே டொன்றுறும ல்
மன்னிய அவையவங்கண் மனக்குறி வெளியிற்றோன் ற
துன்னு சொரூபம்வாய்ந்த சைதன்யஞ் சொலிக்குவண்ண ம்
மன்னிய மடல்வரைந்த நங்கையைப் புகழும்நா டே.

(சிலவரி) விருத்தம்.

சைத்திரங் கண்டுதானே கன்னி சுசரிதாவித் தி
உத்திர விழிவிளுட்கு இரகசியாய மலாகா . றி

புத்திரர் கொடுத்துப்போன பொற்கடகங் கட மை
உத்தமி மணிக்கரங்கட் குகந்துநீ முதலிவிட்டா ய்.

(வசனம்.) இராக்கதாந்தகரணம், அதாவது அரக்கர்தம் கட்புலனடைத்தல், என்ற தத்துவமுள்ள இரத்தினமமைந்த, கடகங்களை, ஜானகியின்ரக்ஷணையின்பொருட்டு, கரங்களில்ப்பூட்டும்படி, விசுவாமித்திரமகாமுனிவரால், நின்னையிற்கொடுத்தான, கடகங்களை, முதல் முதலில், இவனைக்கட்டுப்பூட்டினதெல்லாம், இவனது, கௌசலத்தைக்கருதித்தானே.

(இராவண சாரணர்.) ஒருவருக்கொருவர் வற இறங்கவிழித்தனர்.

(வித்திச்சிகுவன்.) கேட்கவேண்டுவன கேட்டாய்விட்டது, அறியவேண்டுவன அறிந்தாய்விட்டது.

கலிவிருத்தம்.

கன்னிற் புலன்படாக் கன்னிவை தேகிதா ன்
வண்ண விம்மடல் வாழ்வது விராமன்று ன்
நன்னிடை யிருவர் கனுவல் சகிகடா ன்
அன்னல் யாம் கன்கறிந்தன மல்ல வா.

(இராவணன்) வசனம். ஆ, ஆ, இவன்றான், வைதேகிக்கியென்மீதாசை வராமல் அவளது ஆசையை அடியோடே அபகரித்துக்கொண்ட இராமனென்ற கெட்டபயலிவன்றான்.

(கோபத்துடன்) சித்திரத்தைப் பார்த்துக்கொண்டு) அடா பாவி.

விருத்தம்.

அடாகுலப்பதடியாரேய்சிதையாசைகொளயோக்கியமாந்தேகந்தன்னை
உடையவனன்றோ மெனக்கொள்கருவந்தன்னையொழித்திடு நீ யொழித்திடு நீ
உன்னைமாய்க்கத், திடமுடையமாரீசன்றன்னைக்கொன்றுதின்றவிடயே
விவிட்டேனவனேயிப்பான், கொடியனைக் கொன்றிடத்தக்கவனேவெ
ன்னக்கொஞ்சமுஞ்சந்தேகமனங்கொள்ளவேண்டாம்.

(சாரணன்) வசனம். மகாராஜ் அந்தவிசுவாமித்திரனது, வின்யசப்படம், என்னென்றுசொல்ல, இவளுடைய இரக்ஷணையின்பொருட்டு, அரக்கர்கட்புலனடைத்தலென்ற, இரத்தினமழித்தியதான, கங்கணங்களைப்பூட்டினதால் இவளைக்காண்கின்ற மாத்திரத்தில், தாங்கள் அபகரித்துக்கொள்வீர்களென்றவனால், தீர்மானயோசனை செய்யப்பட்டிருக்கின்றதன்றோ.

(வித்திச்சிகுவன்.) ஆம், ஆம், மகாகபடியன்றோ, அந்த க்ஷத்திரியப்பாப்பான்.

(இராவணன்.) (ஆகாயத்தில் வஷியத்தை வைத்துக்கொண்டு) கோபச் சிரிப்புடன்) வசனம். அடே, அடே, குசிகுலப்பதிதப்பயலே, யான்நினைக்கின்றேன். நீ என்னிடம் இவ்வித வஞ்சகம்புரிந்து வருவதால், நினக்கு முடிவுகாலம் நெருங்கிற்றென்றே பயலே, விசுவாமித்திரா.

விருத்தம்.

குதிரையின்வாலதன்குண்டியளவலாதுகுவலயமெல்லாம்வீசக்கூடுமோகாண
பதிற்சுவர்க்கமமைப்பாய்மாரீசனைப்போற்பரிபவஞ்செய்தற்கு சமர்த்தன்பாலு
ண்டோ, மதிமுகத்தரம்பைதனைமயக்கவல்லோய்வன்சமரிற்றாடகையைவ
தைக்கவுண்டோ, கதியிற்றிரிசங்குவைக்காப்பாய்காண்மாய்க்கக்கருதியராம
னைக்காக்கத்திறமுமுண்டோ.

ஆகையால் அடே, அடே, விசுவாமித்திரா, நீ மாளுவதற்காக, அடிக்கடி என்னிடம் சேஷ்டிக்கின்றாய்.

(சாரணன்) வசனம். ஆ, ஆ, மகாராஜ் எதிப்படிக்குத்திரவாகின்றது மாளும்பொருட்டு வந்து சேஷ்டிக்கின்றானென்று, வருத்தல் வேண்டாம் அவன் மாண்டவன்றானே.

(இராவணன்.) உற்சாகத்துடன்) அதுநிற்க, ஞானகிரியென்னுந்தையலாள்காசைப் பார்ப்பதற்கு, தந்திரம் யாதெனச் சிந்திக்கல்வேண்டும்.

(சாரணன்.) அதற்கோருபாயம் ஆலோசித்திருக்கின்றனன்.

(இராவணன்.) உற்சாகத்துடன்) அஃதெப்படி.

(சாரணன்.) இன்னின்னபடியெனக், கன்னத்தியம்பினன்.

(இராவணன்.) சிரித்துக்கொண்டு) சாரணா, நின்னால் கன்களைப்பிடலாயிற்று.

விருத்தம்.

காசினிபுகழயோத்திச்சதிநகர்வளர்வோரு ண
பூசுரமுனிபோற்போகிபொற்கடகங்கடம் மை
யாசினிப்பேனிவன்பாலென்றாயிதுசரிநீயுட்கொண் ட
யோசனைப்படியேசெய்வாய்சாரணாவுகந்திப்போ தே.

(சாரணன்) நல்லதப்படியே செய்கின்றேன்)

என்று முனிவேடத்தோடு நடக்கின்றனன்.

(முனி) விருத்தம்.

உய்யகல் விழலிராதேநகரதனிலனு பிரா தோ
கையிரு கால்களோவக் கண்களு மிருண்டதிப் போ

வெய்யிலும் வாட்டுதக்கோ விப்பிர விருத்தன்நா னே
அய்யோகோ அதிதூரத் தயோத்தியி லிருந்துவந்தே ன்.

(வசனம்) ஆ ஆ இங்ஙனம் யாவரிருக்கின்றார்களோ, யானோ, அயோத்தியிலிருந்து வந்த அகதிப்பிராமணன், வழிச்சிரமத்தினால் மிகவும் ஆயாசப்படுகின்றேன். இங்குள்ளயாவரேனும், ஓர் குடையினிழலும், ஓர் விசிறியின் காற்றும் எனக்குக்களித்து என் சிரமத்தை யுபசாந்திசெய்வாராயின் யானுச் சீவிப்பேன்.

என மூர்ச்சைகெட்டவிதமாய் நடிப்பிக்கின்றனன்.

(விந்திச்சிருவன்) மகராஜ் நமது சாரணனுடைய கவுசலத்தைக்காணல்வேண்டும்.

விருத்தம்.

விரிசடைக் கட்டுமிக்க வெள்ளையா னுதல்விபூதி த்
திரிபுண்டர நனைந்து திகழ்வது மான்றோலும்வே ய்
ஒருதண்டங் கரங்கொண்டேன்றி ஒருதுயர் ஆதுலஞ்சே ர்
இருடிபோல் விளங்குகின்றான் இறைவகம் சாரன்று ன.

(சீதை) பரபரப்புடன்.

விருத்தம்.

எதடிசகி யேயிங்கே எழிலயோத் தியிலிருந் து
வேதிய ரொருவர்வந்த விதமென்னை யென்பிரா ண
நாதனி ராமன்க்ஷேம நற்சொல்லு மற்றுமுள் ள
சேதியும றிவோம்நீபோய்ச் சீக்கிர மழைத்துவாரா ய்

(அடி சகி அயோத்தி நகரென்று சொல்வதால் சீக்கிரம்போயுபசரிப்பாயாக)

(சுசரிதை.) நல்லதென்று கிட்டிநடந்து) ஓ, வேதவேதியரே ஆயாசந்தணிவீராக,

என்று, தாமரையிலையால் விசிருகின்றனன்.

(முனி.) கண்களை விழிக்கமாட்டாது விழித்து

காரணமில்லாத வாச்சல்யமவதியானநின்னால் யான்களைப்புத்தீர்ந்து சுகத்தனை ஜீவன்பிடித்தனன்.

(சுசரிதை.) தன்னுள்.

சிங்காரக்கவி.

மெய்யவனத்திலென், செய்வதயர்ந்திடில்,
தெய்வபலத்தினால், அய்யர்பிழைத்தனர்,

வெளிப்படை.

சிங்காரக்கவி.

விப்பிரவரனே, இப்பொழுதுமது,
நட்புளவரவைச், செப்பிடுவீரே.

(வசனம்.) நீவிர் யாரையா, எங்கனமிருந்து வருகின்றீர்.

(முனி.) ஒ, பெண்ணரசே, அயோத்தியாபுரியில் தசரதசக்கிரவர்த்தியின், முதற்புதல்வர் கேள்வியுண்டோ.

(சீதை) பரபரப்புடன் ஆம், அவருக்கென்ன, ஏதேனுமாபத்துண்டோ.

(இராவணன்.) அருவையுடன்.

விருத்தம்.

என்னடிபரபரப்போ டேக்குறாய் அப்பன்காணி
பொன்னெலாம் புதைத்துவைத்த பொருளெலா மிழந்தாயோ
தன்னுமாரீசனாலே துட்டதாடகையினா
சின்னமானிடன்செத்தான் விசேடம் வேறில்லைமா

(சுசரிதை.) சேதியைச்சொல்வீர் வேதவேதியரே.

(முனி) அடுக்குமொழி.

பாவையர்க்கரசியென், நாவறள்கின்றதே,
சாவனோவென்செய்வேன், தாவருண்டாகுதே,

(இராவணன்) சிரித்துக்கொண்டு,

அடுக்குமொழி.

படிக்குளெம்மரிதனை, எடுத்துரைக்கின்றனை
வெடித்திடக்காணனுன் அடித்திடுங்கொடியனா,

(சீதை) வேகத்துடன்.

சிங்காரக்கவி.

விவரிதஞ்சொல்லிடக், கவலைகொண்டவரென,
இவர்முகஞ்சொல்லுதில் வவதிக்கென்செய்குவேன்

(என்று விதனத்தையடைகின்றனள்.

என்னமாயினிச்சகிப்பேன் என்றவர்ணமெட்டு.

இராகம் காம்போதி. தாளம் ரூபகம்.

பல்லவி.

எப்படிச்சகிப்பேனடி நானினிமேல் (எப்படிச்சகிப்)
நானினிமேல், ரகுராமனைக், காண்பேனோ (எப்படிச்சகிப்)

அநுபல்லவி.

சொற்பனத்தினிற்கண்ட சுமுகனிருந்தாலல்லோ
எப்போதுங்காண்பேனடி, என்னமாயமோ
என்னென்ன, மாயமோ, பாவையே, நான். (எப்படிச்சகிப்)

சரணங்கள்.

ந்தமனற்கிழவர் தந்தார்மொழிக்குமேல்
ந்தமட்டிற்கண்சுழன்றார், மெத்தவுழன்றார்
ழன்றார், விழுந்தார், தளர்ந்தார். (எப்படிச்சகிப்)

ஆசைநாயகர்க்கென்ன மோசமோதெரிகிலேன்
பேசுமிதிற்சந்தேகமே, அய்யய்யோபாவமே பேசுமிதிற்
அய்யய்யோ, பாவமே, நானென்ன, செய்குவேன். (எப்படிச்சகிப்)

(சீலவதி) சகி சுசரிதாய்,

அடுக்குமொழி.

உதகங்கொணர்ந்திவர்க், கிதமாய்க்கொடுத்தருள்
அதன்மேலுண்டாமசங், கதியாவுமறியலாம்.

சரிதை போய் தாமரைத்தொன்னையிற் சலிலமேந்தி யம்மாமறையவர்க்கு வரிசையாயீந்தனள்.

(முனி) ஆ. மடவார்கொடுத்தாலருந்தேனடி.

(சீதை) (கண்ணீர்ப்பெருக்கோடு) வசனம். ஹா, கெட்டதேடி காரியம். இந்தவேதியர், ஜலபானத்தில் விமுகராய் மிகவியாகுலசிலராய் அதிசோபத்தை, அடைவதால், என்னுயிர்வல்லபனுக்கு ஜீவனிருப்பது துர்லபமென்றே நிச்சியமாய் நினைக்கின்றேன், ஹா, ஹா, கஷ்டம், கஷ்டம்.

இராகம் நாதனாமக்கிரியை. திரிபுடைதாளம்.

பல்லவி.

என்னவிபரீதமோ வதோவறிகிலேனே.

அநுபல்லவி.

என்னதிர்ஷ்டமோ ஓரோதென்னப்பெருகின்றதே. (என்)

சரணங்கள்.

அந்தத்தசரதற்கு மைந்தனெனறதன்மே
அந்தணர்சொல்லாமலே சிந்தைவருந்தலா (என்ன)

சலமுமருந்தேனென்றூர் தன்னுவறண்டதென்று
தலமிதிலேவிழுந்தார் தயங்கிமிகத்தளர்ந்தா (என்ன)

வினைப்போகமெப்படியோஸாமி, மேலவருவா
ளெனைப்பரதேசியாய் யேங்கவேவிடுவா (என்ன)

(முனி) தன்னுள்) வசனம். அது அவர்மட்டிலுமன்று, அந்தக்கோசிகனுக்கும் அவன் அபிமானிக்கிற சர்வஜனங்களுக்குமே ஜீவனிருக்கிறவிஷயம் சந்தேகந்தான்.

(வெளிப்படை.)

அடுக்குமொழி.

விரதமுண்டம்மணி, பூரதவித்திடுவேதேன்
திரியர்வளிக்குமீர் சரதமிதருந்திடேன்.

(சுசரிதை) அடுக்குமொழி.

ஈதென்னவையரோ சாதனைகள்செய்கிறீர்
போதுமிதுபோதுமேல் ஓதுமிப்போதினில்.

(சீதை.) அடி சகி, இப்பொழுது,

கலிவிருத்தம்.

இந்தனக் குழிச்செந் தழலெய் து
சந்தனக் குளிர்ச் சலிலத் தாழு
அந்தரத்தில் நிற்கின்ற தென்றூர் மன
அந்தணர் மொழி தந்திடன் னோ

(அடி சுசரிதாய்)) என்செய்வேனடி.

இராகம் ஆனந்தபைரவி.

மாதே சந்திரமதியே என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

என்னசொல்வாரோ அறியேன், சகியேயிவர்
எதுசொல்வாரோ அறியேன்.

அநுபல்லவி.

கன்னற்சிலையார்செய் யின்னற்றவிர்த்துகைக்
கன்னக்கலைத்தலைய மன்னனெப்போதுவரு
வாரோ, இவர்தானறிவாரோ, அறிந்தாலுஞ்சொல்வாரோ, சொல்லாமலிருப்
பாரோ, மயங்குறேனோ. (என்ன)

சரணங்கள்.

வந்தமறைதங்கிழவ ஞர் தயரதரின்
மைந்தனென்றுமட்டும்விளம்பின ர்
அந்தமொழிக்குமேலு கந்தபடிசொல்லா த
இந்தவிதத்தாற்பெருஞ் சந்தேகம்ராமர்க்கென் ன
தத்தோ, முடிவானவிடத்தோ, அல்லதிவர் சொல்லெத்தோ, வந்ததில்மெ
ய்யிலேத்தோ, பசப்புறுமேல். (என்ன)

நற்சொலமுதம்வார்ப்பரோ, என்னிதயத்தி ல்
நற்சொல்விடத்தைச் சேர்ப்ப ரோ
எச்செய்கையோயிவர் வாய்ச்சொல்லிலிருக்கு து
நிச்சியம்வராமற் றவிக்கக்கொண்டிருக்கிறதெ ன்
மீதே, தெய்வசோதனையீதே, கர்மவினைதப்பாதே, விப்பிரரிப், போதே ராக
வன்செய்தி. (என்ன)

முனி கலிவிருத்தம்.

என்னகஷ்டமிப்போதெனைப்பார்த்திடி ல்
அன்னைதந்தையரானபுதல்வரு ம்
முன்விழுந்துமுயன்றுகிழ்முட்டி யே
தன்னிடுங்கொடுந்துக்கத்துழல்வரா ல்.

(வித்திச்சிருவன்.) பரிஹாஸத்துடன்,
ஆ, அவர்கள்மட்டுமன்று, பின்னையோவெனில்,

கலிவிருத்தம்.

விருத்தமானவில்வேடமெடுத்தலா ல்
பருத்ததிண்புயபாரகெம்பீரா ம்
கருத்தமெய்யினர்இராக்கதர்யாவர்க்கு ம்
வருத்துமிக்கப்பெருந்துயர்வன்மை யே.

(சீதை.) ஆ, கஷ்டங் கஷ்டம் அடி சுசரிதாய்.

கலிவிருத்தம்.

எந்தனுயகன்செய்தியியம்பி டா
இந்தவாசகஞ்சேர்ந்துரைத்தார டி
வைந்துநொந்துவருந்திடுங்கிடு ஞ்
சிந்தையேற்கிதுசெப்பிடிலென்பய ன்.

(சிலவதி.) சகி, சுசரிதாய்.

கலிவிருத்தம்.

சொன்னவார்த்தைகுறையுஞ்சொலாதிவ
மின்னிணைச்சகிவேதைபொருந்திட
துன்னலாலிவர்துட்டநிசாசர
என்னவேநினைக்கின்றதென்சிந்தை

(முனி.) பயத்துடன்) தன்னுள்,
ஓ, இவனென்னைத்தெரிந்துகொள்வானோ.
(சற்று நிதானித்து.) ஏதேது இது ஒருக்காலும் நடக்கத்தக்கதில்லை.

(வெளிப்படை.)

கலிவிருத்தம்.

சுந்தரக் குழற் கன்னி நல்லார்க
இந்த நானவ்வி ராஜ குமாரனு
சுந்த ராங்க உத்துங்க வீராகவர்
கந்தரங்கசினேகிதனுமா

(இராவணன்.) கலீரெனநகைத்து) அதிற்சந்தேகமா. மூதன் முதலில் அவனைக்கொல்லும்படி பிரவிர்த்திக்கின்றவன். இஷ்டனென்பதற்காக்ஷேபனையென்ன.

(சீதை.) அய்யோ! எனக்கிதெல்லாம் ஆசுவாஸஞ்செய்யுமா,
நசனிதை,

சிங்காரக்கவி.

தொந்திரவாகுது, சுந்தரிநோகுரள்.
அந்தணவரரே, வந்ததுபுகல்வீர்.

(முனி) வசனம். எல்லாம் உரைக்கின்றேன், நீவிர், தசகந்தரன் றன் பக்கத்தைச்சார்ந்தவர்களல்லரேல், யாவுமுரைத்தலாகும்.

(சீதை) தன்னுள்) இவரிப்படியுரைத்தலால்,

(அடுக்குவசனம்).

மாயமெண்ணுவ தபாயமிவரெனது
நாயகன்றன்னருமை நேயரென்பதுநிசமே.

(சிலவதி) சுசரிதாய்,

அடுக்குமொழி.

அகமதிலையமாய், மிகவைய்யர்நம்மிடம்,
புகல்தசக்ரீவனூர், சகியதைச்சாற்றுவாய்.

(இராவணன்) கோபத்துடன்,

கலிவிருத்தம்.

திட்டமுண்டடகெடுசெச்சி
மட்டிலாசபுயபலவன்மையா
அட்டதிக்கும்புவனங்களுஞ்சயி
திட்டவீரன்றனைத்தெரியாய்கொ

(முனி) விருத்தம்.

திகழுமரன்கிரியையெடுத்தெரிந்தானெட்டுத்திசையும்விசயஞ்செய்தான் சீர்பெற்றோரெங்கும், புகழுமரிஅயன்முதல்வராலென்றொரும்பொருந்திலங் கிறைஞ்சிமிகப்போற்றப்பெற்றான், மிகவரிமி [illegible] ரிபட்டபுண்டமும் பாய்விளங்குகின்றசுந்தரனாலத்தான்காணு, [illegible] ப்பேரான்சகப்ர சித்தன்மொய்குழலீர்தசக்ரீவன்கேட்டிலீரோ.

(சீதை.) கோபத்துடன்.

கலிவிருத்த

குலைசெய் கூற்றினுக் கொத்த கொடி
உலகெல்லாந் தனக்குற் பிராக்கத னெ
திலகலங்கு தன்னிசி சரன் கீர்த்திக
பலவுறைப் புதிற்பய னென்னுங் கொ

(இராவணன்.) முகபங்கத்துடன்.
வித்திச்சிகுவா, கேட்கவேண்டுவது கேட்டோம்.

(வித்திச்சிகுவன்) விருத்தம்.

அஞ்சுவாளரக்கனென்ன ஆகையாற் றனேயிக்
வஞ்சியை வசஞ்செய்தற்கு மற்றுயோசனை வாயாம்
மஞ்சநேர் வண்ணராமன் வடிவமே கொள்ளவேண்டு
மிஞ்சகல் வளப்பிதென்ன விளம்பலாச்சுது கோவேந்

(இராவணன்.) வித்திச்சிகுவா, இது இவ்விராவணனுக்கு, யோக்கியமில்லை.

சற்று கவனி.

விருத்தம்.

முதன்முதலிற்கவனியிஃதொழுங்கோவென்னமுறைமைகொலோவனு ராகமில்லாடன்னை, வதுவைசெயல்வசக்கொளற்குமனிதருபங்கொப்பதி லென்மகிமைகுறைவயதுதோன்றி, யிதுவரையுமடப்பமைத்தனைவனைக்கு

தியற்றிவஞ்சித்திடுவெதுவுமேற்குமோகாண், சதிர்பெருமென்மானபுகழ் விடுத்துக்கர்மந்தனையடைதல்தகுதிகொலோசாற்றலென்னே.

(வித்திச்சிருவன்.) ஆ, இராஜாதி ராஜனே இதுவென்சொல், அகாரணமாய்க் கோ த்தனம் வகிக்கலாகுமோ.

விருத்தம்.

வஞ்சகஞ் சூதுசெய்தல் மாயஜாலங்கள் செய்த
கஞ்சென் வமர்விளைத்தல் நங்குல வழக்கந்தா
வஞ்சியை நினைத்தபாங்காய் வசஞ்செய்வோ மிதற்காய்சும்
அஞ்சுவதென்னை சாமிராய ரெழிதுரைச் சிங்கே

(சுசரிதை.) சகி சீலவதி.

விருத்தம்.

தனதந்தர ண் நச ர்வன் மிகச்சிலாக்ய
கனவரிசைக ன் யென்னகஞ் சனகராஜ
அனுதினம் புக னைரோ அறியாய்சொல் அறிவின்மிக்
வனிதையென்சகியே சீலவதி யென்ன மறந்திட்டா

(இராவணன்.) ஆகையாற்றானே, சிநேகத்தினால், என்றாலிதுவரை ஜானகி வஞ்சிக்கப்படாமலிருக்கின்றாள்.

(சீலவதி.) சரி, சரி.

விருத்தம்.

காசினிதனி லோர்பத்துக் கண்டனைக் கேள்வியுண்
பூசுரவதிங்கேன் வீணாய்ப் புகல்வது நாங்களன்
சாசுரவர்க்க மன்று ஜானகி யிவளிவட்கு
பேசுற்சகி களுங்கள் மனத்தய்யம் பிரித்திட

(முனி) தன்னுள்) ஆச்சரியம், ஆச்சரியம், விசுவாமித்திரமுனியின் பிரதாபமே பிரதாபம்.

அடுக்குமொழி.

என்னவாச்சரியமிக் கன்னிஜானகியென
முன்னின்றிவள்பூமி தன்னைக்குறிக்கிறாள்.

(சுசரிதை.) சிந்தைதேற மொழிந்திடுமெய்யரோ.

(சீலவதி) விருத்தம்.

அய்யகோ ராமன்செய்தி அரைச்சொல்லில் நிறுத்திவிட்ட
மெய்யதா யவன்றன் சேதமம் விளம்புவீராகிவிக்

---

(107)

வையகம் புகழ்வைதேகி மணிக்கடகங் கரிவா ன்
கையினிற் பெறவீரஸ்தே கனகசம்மான மா மே.

(முனி) தன்னுள். எதற்குத்தான் இங்ஙனம் அதற்றுத்தான் வந்தனம்.

(வெளிப்படை) வேறு, என்னதான் விள்ளுவேன், கன்னிகாளிங்ஙனம்.

(சீதை) வேகத்துடன், ஆனால் இந்த இப்புவனாலங்காரரான என்வல்லவர் இந்தலோகத்தைக் கடந்தனர்சொல்.

ஹா ஹா கஷ்டங்கஷ்டம் இனியென்செய்வேன் தெய்வமே ஹா ஹா.

இராகம் பியாகு. ஆதிதாளம்.

பல்லவி.

ஐயய்யோ தெய்வமே அனியாயத்தெய்வமே,

அனுபல்லவி.

வையகவலங்காரன், மடிந்தானோ இன்னேரம்
உய்வேனோ, நைவேனோ, என், ஊழ்வினையை வைவேனோ (ஐயய்)

சரணங்கள்.

கனாவில்வந்துநின்றானைக், காண்போமென்றிருந்தேனே
தினைவெல்லாங், கனவல்லால், நிஜமோ, யென்னென்றுசொல்ல (ஐயய்)

இராமனென்றிவருருகி, யேங்குமப்போதேபகீர்
என்றதே, இன்றதே, எதிரில், நிங்காய்நின்றதே (ஐயய்)

பாவியென்பேர்சொலினால், பலிக்குங்கேடாதலினால்
சாவாது, பூமீது, தரிப்பேனோ, கணப்போது (ஐயய்)

என்று அலறினளாய் மூர்ச்சைகெட்டுவிழுந்தனள்.

(சகிகள்) ஒருவரோடொருவர்) ஆ ஆ இதென்னடி மாயம். என்று பரபரப்புடன்.

விருத்தம்.

இப்புவனாலங்கார வெழில்விளக்கொளியேதே
கைப்பிடித்திதுகாரமட்டுங் கண்ணெனவிருந்தவெம்மை
குப்புறத்தள்ளிவிட்டுக் கொஞ்சநாட்களவிற்றேன்றி
செப்பியபழக்கம்வைத்துச் சென்றாய்கொல் கொழுனன்பின்னே.

எனச்சோகமுற்றனர்.

(முனி) இதுவென்கொல், அகாரணமாக ஆதங்கத்தை அடைகின்றீர்கள். நன்றாய் எனது வார்த்தை முற்றிலுங்கேளுங்கள்.

(சகிகள்) வசனம். ஹா, எம், தோழியரசே, பிராமணவாக்கில் நல்வாக்குப்பிறக்கின்றது, சற்று களைப்புவிடுத்து, கண்விழித்து, இளைப்பாறி, காதுகொடுத்துக்கேட்போம், கண்ணாட்டி, சற்றுதெளிவாயாக.

(சீதை) களைப்புத்தீர்ந்து—முனியைப்பார்க்கின்றனள்.

(முனி) கட்டளைக்கலித்துறை.

நின்றவமேயுருவாகிய கோசிகரின் மலரோ
இன்றதிசுந்தரமன்மதராம னெழுந்துனை
மன்றகடாத்தி மகிழ்ந்திடவே வருவானிதனி
பொன்றுவதென்னை துயரெழிமெல்லியற் பூங்கொடி.

(இராவணன்.) சிரித்துக்கொண்டு.

கலிவிருத்தம்.

சாரணமுனி வேடந்தரித்துமி
னேரம்பொய்யுரை நிகழ்த்தனி இ
சாரமாய்வித்திச்சிருவன் றன்னொ
வீரன்ராவணனென் றிடல்வேண்டுமோ

(சகிகள்) அம்மம்ம, தெய்வாதீனந்தான், தெய்வாதீனந்தான்.

(சீதை) அத்தியானந்தபரிதையாய் பரபரப்புடனெழுந்து.

(பொது) கட்டளைக்கலித்துறை

மின்னார்சிரோன்மணி மெல்லியற்சானகி வேகமதா
தன்றுபகன்வரு னெம்மொழிகேட்ட சந்தோஷத்தினு
பொன்னார்மணிக் கடகங்கள்சம்மானமப் பொய்முனிவ
இன்னுவினைத்திடு சாரணன்கைதனி லீந்தன

(இராவணன்) ஆச்சரியத்துடன்) அகோ, வகோ, ஈதென்ன அற்புதம்.

கட்டளைக்கலித்துறை.

இனமான மேகசம்பந்த மிலாதெழில்லாய் நிலைத்து
சனமான குங்குமக்காந்திக வேந்துங்கதிர் மின்னா
தனிமாத்திசைக்கப்புடம்வைத்துருக்கிடு தங்கமோ தா
னிமா னிலத்திலிதிக் கெங்குமேஒளி நாட்டிட்ட
அந்தோ அந்தோ ஈதென்ன,

கட்டளைக்கலித்துறை.

அடங்கா ஒளித்திரட் கண்களைமூடி யடைத்திடினு
மடங்காவென் வல்லமைகொண்டிற்று நோக்கிடவான் றடித்தா
படங்கால்முத லங்கமெல்லாஞ் சமைத்திட்ட பான்மையதாய்
தடங்காசினிக் குணிகரற்ற பெண்மெய் தழைக்கின்ற

(——) (இரை)
கட்டளைக்கலித்துறை.

காதி சுதர்செயும் மாமகம் நாடிக்களித்திட
மாதனுரு வையொட்டித்திரி மாமுனிவந்தனர் கா
கோதிலவர் பதமேவி வணங்கிடக் கோதையெழி
சீதையை ஆதரவோடழைத்தா ரவ்விதேகம

(சீலவதி) வசனம். தெய்வாதீனமாம் நமதுயிர்ச்சகிக்கு, மென்மேலும் நன்னிமித்தமே, காணப்படுகின்றது. புண்ணிய புருடர்களுடைய தரிசனமென்ன, ஸாமான்னியமா.

(சீதை) ஆச்சரியத்துடன்! எனக்குக்குதூகலமாயிருக்கின்றது. சீக்கிரம் செல்வோம் வாருங்கள்.

என்று சென்றனர்.

(இராவணன்) வசனம்) ஆ, ஆ, யாதொரு சுந்தரி. எனதுகண்களுக்கெட்டாதவளாக ஆயினள்போலும், ஆ, ஆ, இனியென்செய்வேன் (கைகெட்டியும் வாய்க்கெட்டாத கதைபோலாயிற்றே)

கட்டளைக்கலித்துறை.

மதவாளெனவவள் பின்னலைக் கண்டனன்வாய்த்தமு
விதுவானனமுங்குவிர்நோக்கும் மென்முலைவிம்முதலு
துதிவாழைமென்றுடை யங்கமெலாங்கனிற்றேன்றமுனை
விதிபானகத்துரும்பாய்த் தடுத்திட்ட திவ்வேளையி

(வித்திச்சிருவன்) மகராஜ், சாரணனிடம், அவள்கங்கணங்களைக்கொடுத்துத் திரும்புகையில், பல்லவம்போன்ற, அவளது திருக்கரங்கள் காணப்படவில்லையா.

(இராவணன்) ஓ ஓ, நன்று, நன்று. வித்திச்சிருவா, நின்னால், எனது ஞாபகம், நன்குணர்த்தலாயிற்று.

கலிவிருத்தம்.

கொஞ்சமுன்னலை வாய்க்கூருணமதா
அஞ்சுகாசியோ லங்கை நகங்களு

சஞ்சமென்போ தெனக்காந் தியுமங்குலி
குஞ்சவிரற்கர கோமளங்கண்டவ
(இன்னமும்) அடட, என்சொல்வேன்.

விருத்தம்.

இருந்தென்னெப்போயென்னவென்வசத்திருக்கின்றவெழில்மன்னர்கன்னியர்யாவரும், விரித்தவான்மடக்கையரிருக்கினுங்காவல்விட்டுப்போய்ச்செல்வினுமென்னே, பாந்தமென்றனத்திறுனகமலம்போல்வனப்பின்றேன்பாக்கியலக்குமிஇவடன், பொருந்துநற்கங்கணம்பூண்டசெங்கைகள்யான்புகழுதாய்த்தீண்டிடப்பெற்றுல்.

(வித்திச்சிருவன்) மகாராஜ், இராமவேடந்தரிக்கின்ற தங்களுக்கிதென்ன துர்லபமா..

(இராவணன்) விருத்தம்.

ஷட்பலாய்முன்கொண்டிட்ட வாரிசூழிலங்கைமன்யா
கொய்யதாமனிதவேடமரிது கொனெடியிற்கொள்வே
துய்யதனமணிவிளக்காஞ் சோதியினொளிருமேனி
செய்யவனாகினின்ற சீதையைக்கொள்வதற்க்

(வசனம்.) வித்திச்சிருவா யானிப்பொழுது இராமவேடத்தைத் தரித்துக்கொண்டேன், நீயும், கௌசிகவேடத்தை அதிசீக்கிறம் அடையவாயாக.

(வித்திச்சிருவன்) வசனம். யான் அந்த விசுவாமித்திரவேடம்பூனைத்துகொண்டாய்விட்டது, சமூகசாரணனும் இலக்குமணன் வேடத்தைத் தரிக்கப்போகிறன்.

(சாரணன்) ஆ, மகாமுனிவர்களின், மகத்துவம், மனதிற்களவிடப்படாததன்றே. அடட, யென்னென்று சொல்வேன்.

விருத்தம்.

மத்திவக்கங்கணங்கள் வாங்கிறோமெனுஞ்சங்கோட
அகத்திற்பூரித்ததிப்போ தாகினுமிகவாச்சரிய
சகத்தில்யாரைக்கவென்ப தாலெனக்கேயென்றேற்ற
தினக்குதேவிசுவாமித்திரன் செய்கையென்னென்றுசொல்வே

(பக்கத்திலேநோக்கி) ஓ, ஓ! நன்று, நன்று, பந்துஜனங்களைப்பார்க்கப்போவதிலுண்டாகிய குதூஹலத்தினால், கன்னியர்கள், சித்திரபடத்தையெடுக்காமல் மறந்துவிட்டார்களோ, சரி, சரி, இப்படத்தையும் யெடுத்துக்கொண்டுபோய் நமதரசனிடம் கொடுக்கிறேன்.

(என்று, சித்திரப்படத்தையும் எடுத்துக்கொண்டு)

விருத்தம்.

இவைகளவனுடங்கணையுகளமே யீதவளெழுதியமடலே
(வித்திச்சிருவன்) மகாராஜ், பார்க்கல் வேண்டும்.
குவளையங்கணியைக்காணவொட்டாமற் குறித்துநம்கண்களையடைத்
தவமணிச்சடகத்தினையைப்பார்ராம நரனுருநாட்டியமடல்பா
சிவனுடமலையையெடுத்தெரிந்திட்ட திண்புயாசலவிலங்கே

இராவணன்

அரவாபரணனே அபிராமிநேசனே என்றவர்ண மெட்டு.
இராகம் இந்துஸ்தான் கவரோஸ். தாளம் ரூபகம்.

அடடாவென் மனமனல் மெழுகாகுதே, ஆருடன், சொல்வேனா
இடமும்யென் பெருமையும் புகழுமிழந்தேனே, சிறப்பெலாம்போச்சுத
வழிற்சனகியைக்காண லபிக்காதகண்களேன் இருபதுகொண்டேன
பழிப்புக்கிடமாயவளை மறைத்திடுவேளைபர்க்கவும், படுமோ
பேரழகைமறைத்த பெரும்பாவிக்கடகங்கள் பிரியமாய்க்காணலா
தூரத்திலெடுத்தெறி சகேசுவென்னவினிற் றற்கடகங்களி
என்மீதவள்விரும்பா திடையூறுசெய்தபய லிவன்முகம்விழிக்கலா
துன்மதிப்பயல்ராமன் துலங்குமிப்படத்தினை சுகேசுகொணலா

(சாரணன்.) அதிகமாய்ச்சொல்வதிலென்ன, மகாராஜ், இக்கடகங்களை, தாங்கள் வைத்திருக்கிறமட்டிலும் தங்களையெங்களுக்குத் தோன்றப்படவில்லை.

(வித்திச்சிருவன் வசனம்.) நல்லதிருக்கட்டும் சாரணா, இவைகளை விமானத்திற்கொண்டுபோய் மறைவாக பந்தோபஸ்த்துச் செய்யவேண்டும். இவைகளால் பின்னால் யேதேனும் உபகாரப்படக்கூடும்.

(சாரணன்) அப்படியே செய்கிறது.

(இராவணன் வசனம்.) சற்றுலோசித்து, எடுக்காதவேடமாயினும் எடுக்கவேண்டியதுதான் வஞ்சிக்கத்தகாத இஷ்டனெனினும் வஞ்சிக்கப்படவேண்டியவன்தான் என், யாதொரு என் இருதயேசுவரியின் பாணிக்கிரஹணசுகமும் இடைவிடாது யானனுபவிக்க வேண்டியதுதான்

(என்று, எல்லவர்களும் போய்விட்டார்கள்)

2-வது அங்கம் முற்றிற்று.

மூன்றாவது அங்கம்.

ஆரம்பம்.

(அப்பால்) மாரீசன் பிரவேசிக்கின்றனன்.

(மாரீசன்.) நினைந்து, நினைந்து.

கட்டளைக்கலித்துறை.

வன்னியிரண், டென்னுவன்னன் விடுகணை மாருதத்தா
லின்னமுஞ்சீ துட்டர்ச்சந்திகள் போய்மிகச் சிர்குலைச்
சன்னஞ் சுழிப்பதெனக் ககனத்தினிற் சுற்றியிந்த
கன்னங் கருத்தகட லாழ்ந்தெழுந்தன னக்கணத்

(வசனம்.) ஆ, நிகரற்ற அடங்காப்பலசாலி அந்தச்க்ஷத்திரியச்சிறுவன்; ா, ஹா, என்னையெனில்.

கட்டளைக்கலித்துறை.

குட்டிநான்விடு பாணத்தினாற் கும்பல் கும்பலதா
மூட்டிவிழுந்திடு சேனையைக் கண்டுமுகிற் குலத்
லொட்டியொளிந்து பயந்தோடி மாய்கையு பாயத்தினி
கெட்டியென் றேதுஞ்சுபர்குவு மாண்டு கிடந்தன

(ஹூ, ஹூ, கஷ்டங்கஷ்டம்) இன்னமும்,

விருத்தம்.

சரவரியாலெலவனவின்மாயாமண்மாரி, தனைக்கடிந்தக்ஷத்திரியத்தனய
னை, திறமுடையவவனால்முன்றோன்றானின்ற, நீத்தொழிற்றாடகைத
னைக்கண்ணுற்றுச்சிச்சி, தெரிவையெனும்வெட்கத்தாற்செய்யார்க்கிர்க்கு,
த்திருக்காஞ்சோர்ந்திடப்பெற்றததற்குட்டானாய், பரிவுடனேயிளம்பிமெ
ப்பசழிதன்னாற், பகாரக்கியவனுமுயிர்ப்பிரிந்திட்டானே.

(சோகவேகத்துடன் வசனம்.) ஆ, ஆ, என்ன அருமையாய்ப்பெற்றெடுத்த அன்னாய், ஆ, ஆயிரம்யானைப்பலசாலி நீ, மக்களிடங்களில் வரற்

சல்லியமுள்ளவளே, உனக்கும் கேவலம், க்ஷத்திரியச்சிறுவனால் அந்தகைப் துர்த்தெசைவரும்படி தெய்வமிசைத்ததே. அந்தோ, அந்தோ.

ஷ விருத்தம்.

ஈன்றெடுத்ததாயேயெங்ஙனஞ்சென்றாய்கொ ல்
வங்கியமுமெனக்குவதிற்சொல்வாயம்மா ஈ (கோபத்துடன்)
தோன் நீமுதல்முதல்வைரம்விளைவித்தாய் நீ
துட்டமானிடனுன்னையுவெதில்லை (கருணையுடன்)
ஆன்றவெனைச்சுடுசெடுவென்முன்பிற்ற னே
அனியாயமிக்கநியுற்றாய்சுபாகு (ஒருவிதநினைப்புப்பெருமூச்சுடன்)
சான்றனிஉன்போக்கறியேனின்னந்தானெ
காளசிறுவைப்யாலிவன்கழறுவே

(அப்பால்) கராளன் பிரவேசிக்கின்றனன்.

(கராளன்) விருத்தம்.

பொருதலிற் பயிழுமோடப் புத்திவந் ததுவந்தெய்
கிருபைதா னடடா மிக்கக்கெம்பீர ராமனேவு
சரமதற்கிலக் காகாமற்றப் பினேனுயி ரோடப்
கருதிடப் படுமோபெந்தன் கீர்த்திக் கண்டுவ்குதந்

(பின்னும் வசனம்.) அந்த இராமாஸ்திரத்தால் பிடிபட்ட அம்மாரீசன் ஜீவனோடிருக்கின்றானோ இல்லையோ ஒன்றுமறிகிலேன்,

(எப்படியென்றால்.)

விருத்தம்.

மணிமகுடம் நழுவவிட்டுக் கத்திகேடயங்கள்விட்டு மகிமைகெட்
டணியெனக்கை காலயர்ந்து அற்றுடுங்கேசங்குலைந்து சுழலவிட்
பிணிகொண்மாரீசனை யிராமன்பாணம் முகிலைப் பெருங்காற்றென
அணிவுடனெங்கோ அடர்ந்து துரத்தித்தெவ்வாறுகித் துன்புற்று

இராகம் உசேனி. ரூபகதாளம்.

பல்லவி.

பிழைத்தானோ அல்லால் பிரேதமாயானானே.

அநுபல்லவி.

கொழுத்ததேகப்ப்ராகாசன் கோணைவிழிமாரீசன். (பிழை)

சரணங்கள்.

அன்னையுடன்சுபாகு தன்னையுங்கொன்றப்பா
அந்தராகவன்பாணம் அவனைத்தொடர்ந்ததா (பிழை)

வேலைதனிலோமலைமேலே விழுந்தாயினு
விசையவனம்புக்குத்தப்பித் திசையிற்சென்றாயினு (பிழை)

அருமையண்ணன்மாரீசன் பெருமைகளெல்லாம்போச்
ஆனைக்குமிஞ்சுமோ ஓராட்டுக்குட்டியிதேச் (பிழை)

(வசனம்.) அடடா, என்சொல்வேன் இங்கிருந்தழுதாலென்பயன் தேடிப்பார்க்கல்வேண்டும், கிரமமாய் இம்மஹேந்திர சைலத்தாழ்வு கரையிலாவது அலைகட்லிலாவது வீழ்ந்திருக்கல்வேண்டும், அதைப்போய் தேடிப்பார்க்கின்றேன், அப்படியே மாரீசனைத் தேடிக்கொண்டிருக்கிற வென்றால் அம்மஹேந்திரகிரியே வந்தடையலாயிற்று.

அங்ஙனமன்றே,

விருத்தம்.

இம்மலைச்சிகரக்குகைகளுமருவியிருஞ்சிலைநெருக்கத்தினோ
கொம்மையினிரட்டுஞ்சாமரம்போன்றுகுளிர்ந்தநீர்க்கணம்விழுமஃதி
செம்மைசேரிலதைச்செறிவுறுங்கரிகள்தின்றவாய்நழுஉமரைக்கவளம்
கம்மெனும்வாசக்கரைப்புறம்கான்குங்கதியுடனடப்பனவரிக
(இன்னமும்)

விருத்தம்.

இபத்திரள் சிங்கக்கரத்தடிய தனிவெழிற்பெரு மத்தகமிழிந்
உபத்திரவத்தினால் வனத்தலஞ்சிவக்க உதிரங்கள் முத்தினோடொழுக்
விபத்தினைச்சகிக்க வசத்திகொண்டவைக ளாய்வீழிடப்பல்லு கவினங்கள்
தபித்தன உரோமஞ்சிலிர்த்தன கனைத்துத்தாவின அதிசயமிது வே.

(எதிர்நோக்கி வசனம்.) இதோதென்படுகின்றவன் நம்மாரீசன்கொல் ஆம், ஆ, இந்தச்சாகரத்தில் வீழ்ந்தெழுந்தவனாய்க் காண்கின்றனன்.

(எங்ஙனமெனில்)

விருத்தம்.

தகிலெலாம் கனைந்துசொட்டிடப் பாசித்துணிகளதில்கனி நூலங்
கிசையெலாம் வெளுத்த தன்மையதாகத் தெரிந்திடக்கண்சிவப்பெய்

கிழ்கைகாற்றலங்கள் வெளுத்ததிலிரத்தஞ் சிறிதுமிலாமலிங் கெதி. ரே
புகழ்மஹேந்திரத்தி னடியினிற்காண்பான் பொருநருதாடகை புதல்வ ன்.

(மாரீசன் காரனைப்பார்த்து, ஆச்சரியத்துடன் வசனம்.) அட கரா, நல்லுயிருற்றனையா, அட அய்யா, கரனா, வினை, இருகரதழுவிக்கொள் வாயாக.

(கரனென் வசனம்.) அண்ணா, மாரீசா, தெய்வச்செயலல்லது இராமபாணத்தினின்றும் விடுபட்டாருயிர்பெற்றீரே, என, கண்ணீர்ததும்ப இருகைத்தழுவிக்கொண்டனன்.

(மாரீசன்.) தம்பி கரனா, யான்மற்றென்னென்று சொல்வேன்.

விருத்தம்.

நரனவன்வில் வளைத்திழுத்து டீங்காரஞ்செய்நாணோசை சாவேகத்தொனியவ்வம்பே, பரிவுடனிப்பாதகனை யீர்த்துக்கொண்டு புக்குதெனக்கனி கொள் வித்யாதரர்தஞ்சொல்லே, வீரிகடலினிறைச்சல் ஜலநந்துவெல்லாம் வெவ்வடவாக்கினி விழுந்ததுஞ்சதம், ஒருசமயத்திவைகளெல்லாஞ் செவியுற்றேன்னானுளம் நடுங்குகின்னமு மென்னுயிர்க்காரனை.

(மேலும்) தம்பிகாரனா,

விருத்தம்.

என்விழவின் வேகத்தான்மொத்துண்டு பேரொலிசெய் வெளிநீகல்லோலம்
புன்மையுறு திவலைகளாய்ச்சிதறவும் நீர்பிளந்திடக்கீழ்ப் புகுந்தவோக த்
தின்னவேழ் புகுந்தேனை யக்கனைத்தன்னீர்வேகத் தெனைமேலாச் தி
நன்மைசெய் ததம்போதியாம் மறக்கற்பாலதன்றன் னன்றிதா னே.

சாகரத்தைநோக்கி, (கரனென்) நன்று நன்று நதிபதியே, நன்று நன்று சலநிதியே.

கொச்சகம்.

நல்லவன்ம கோததியே நல்லவனீ நல்லவன்கா
வல்லவலஞ் சேச்சுரன்றன் மாபிரதாபப் பயத்தா
சொல்லவனைப் பின்றொடர்வான் றொல்லையிம்மாரீசனை
கல்லியஞ்செய்யா திரக்ஷித்தாண்டனை தாண் சத்திய

(மாரீசன்) அனுசயத்துடன், கரனா, யென்சொல்கின்றாய்.

விருத்தம்.

எப்படிவந்தவனைக் கடல்வன்திரி தெனைக்கண்டுநீ நடுங்குதி
அப்படியென்பாற் றகவண்டராஜன் அருமையாய்க் கருணைகாட்டினை

இப்படியினில் யான்றன்ன வறிழந்திலுமுதாசின னுயிருங் ஆ
செப்பியவேந்தர்க் கிடங்கொருந்தானே நியவெங்கனங்கஞ் சேர்க்கின்றேன்.

(கரானன் வசனம்.) ஆ, அண்ணா மாரீசா அப்படிவிளம்பல் வேண்டாம்.

விருத்தம்.

அதிபலசாலி ராமனுயினு மவனையிங்
எதிரினின் றமித்தஞ்செய்தால் யாவரும்ஜயிக்க மாட்டா
இதமுடன் மாயையாலே இனிவெல்ல வேண்டுங்கண்டா
சதிசெய் மாரீசாகும்மா சஞ்சலப்படத் தகா.

(வசனம்.) யாதொரு இராமனைக்கொல்லாமல், இலங்காபுரிக்குத் திரும்புவோமாகில், இலங்கேசன், நமக்கு, வெகுமதிதான் செய்வனு, தவிரவும், அக்கௌசிகனும் அந்தச் சத்திரியப்பயலுடன்வந்து சீதா கல்யாணவிஷயமாய் அவனது ரூபங்கொண்டிருக்கின்ற, இராவணனுக்கு இடையூறுசெய்வானல்லவா, ஏன், அம்மனிதரூபத்தை இராஜன் தாரணை செய்யப்போகின்றனென்று, முன்னமே, தாடகையால்ச் சொல்லப்பட்டிருக்கின்றதன்றே.

(மாரீசன் வசனம்.) ஆம், அதனாற்றானே, தொடுத்துவராநின்ற அம்முனியின்கூட்டப் பிரயாணத்தை முறிக்கவேண்டியதாய் வந்த பிரவிர்த்தி.

(கரானன் வசனம்.) அதற்கு யாதுபாயமெனத் தமது ஞாபகம் சிந்திக்கின்றதோ,

(மாரீசன்.) சற்றாலோசித்து ஆம், ஆம்.
(கரானன்.) எப்படி.

பொது.

(மாரீசன்) சிங்காரக்கவி.

அன்னவிஷயத்தினிற், கென்னளப்பென்னெனில்
இன்னின்னபடியெனக், கன்னத்தியம்பிறேன்.

(கரானன் சிரிப்புடன்.)

சிங்காரக்கவி.

அதிபலகாயன், சதிவினைமாயன்
மதமாரீசர்க், கிதுவொருமலையா.

(எப்படியென்றால்,)

கொச்சகம்.

அப்பிரியக்கேள்வி யதனுவுடனனவி
குப்புறவீழ்மாயக் கோலமுமாசி.

பொய்ப்படிவத்தானைப் போழ்த்துட்டர்வானன்னவண்மே
செப்பிடுமையற்பெருக்காற் சீர்குலைந்தசிராம

(வசனம்.) பேஷ், பேஷ், அப்பால் புத்திரசோகத்தால் மோகத்தை அடைந்த நயரதனை, ஆசுவாசஞ்செய்துகொண்டு, விசுவாமித்திரனும் அவனுடன் அயோத்திக்குத் திரும்பிவிடுவான், அப்பால், அம்முனி இல்லாவிடத்தில் மாயாப்பிரயோகஞ்செய்யவேண்டியது.

(மாரீசன் வசனம்.) ஸஹபாஸ், நீ சொல்லுவது யுக்தந்தான், ஆகையால் சீக்கிரஞ்செல்வோம், எவ்விடத்தில் இராமன் முதலானவர் இருக்கின்றார்களோ, அங்ஙனஞ்செல்வோம்.

(என நடக்கின்றனர்.)

(கரானன், எதிர்நோக்கி) வசனம். ஓ, கௌசிகாச்சிரமத்திற் கனாயோஜனைதூரத்தில், கௌசிகீதீரத்திலேயே, அத்தயரதன் முதலினோர் தங்கியிருக்கின்றனர்போலும், அங்ஙனமன்றே.

விருத்தம்.

அடிக்கடியிரதப்புரவிகள் கனைப்பால் ஆற்றொறு வனம்கிடங்க ள்
வெடுக்கெனப்புற்றச்சிதறிடத்தாக்கி விளங்கிடுசெருங்கத்தாலடிக்க
படக்கொடியரவங் கொடியதீயென்னப் பகர்விடங்கக் குமூக்கா ர
முடுக்கினுற்காதி மகணதிக்கரையின் முழுதுமேபயங்கரமுளவே.

(இதுவுமது) விருத்தம்.

ஆடகப்பேரித்தொனியினுல்மதமாயறியகூன்மந்திகள்களித்
காடகம்சூழப்பத்தளமதவலாகணை றங்குசஞ்சின்றமிழ்கபள
காடகமுழ்துங்குறைவறநிறைந்துகாண்டகுகௌசிகீதீர
தாடகைச்செற்றான் றங்கிடமிவ்கெனச்சாற்றலப்போற்றமைக்குதா

அடுக்குமொழி.

நேராய்விளங்கின்ற, டோரசீதாவிறைவில்
வராமன்றங்கிடம், பாராய்மாரீச னே.

(மாரீசன் வசனம்.) ஆம், ஆம், தம்பி கரானா, இப்பொழுதே இவ்விடத்தினின்றும் இராமனைத் தூரத்திற் கடத்திக்கொண்டுபோகவேண்டும்.

(——) (கிளா)

விருத்தம்.

வருவழிக்கனைப்பாற் கனவளர்தந்தை மன்னவன் வருதிபெற்றம்
சிரமமதகற்றவாங் கங்கேயினைஞர் சென்றனர்பாற் செப்பிடாம

சாமுறவில்லினேடோர் வனங்குறித்துத் தனிமையாய் வேட்டையை
இருபதத்தினுமே தொடுசெருப்பார்த்தே யேகுமிப்பொழுதினில்ராம ந்தேன்.

(வசனம்.) ஆசையால் யானும், எவ்வளவிற் பின்றொடர்கின்றேனே, வண அவ்வளவுக்குள், ஆங்கங்கே சென்றிருக்கின்ற, இராமப்பரிஜனங்களும் யாதொரு அரணியபாகத்திற்குப் பின்றொடரக்கடவன.

(சுராணன் வசனம்.) ஓ, இங்ஙனஞ்செப்புவது, இராமனுக்கு, உயிர்ச்சிநேகிதனுன, பிங்களனென்ற பிராமணச் சிறுவனே, அவ்விதமேயாம்.

(மாரீசன் களிப்புடன் வசனம்.) தெய்வச்செயலாய் நமக்கோர், அந்தரலாபம், கிடைத்தது, அட தம்பி சுரானா.

கட்டளைக்கலித்துறை.

இவன்வனத் தேகுமுனப்பா சுரானெ யெழிலிவன்ற
வவுருக்கொண் டென்மாயை யிஞல்வனத் தக்திகைப்ப
வதியுற்றே னென்றற்றிச் சினேகத்தி ஞசையிஞ
லேயுற்றுத் துடர்ராமனைச் சேர்க்குதி கானிடை

(யானுமே) கொச்சகம்.

காதிமகன் றன்சிடன் காசிபருபங்கலக்
மேதகுராமன்நிமித்தம் விறகத்துயர்கொண்
சீதையைவன்மாயையினுற் சிருட்டிசெய்தின்னவனு
காதரத்துடனிளைத்த அப்படியேசெய்வேனு
எனச்சென்றனர்.)

(அப்பால்.) வெவொடு தனுவு, மேவு செங்கரத்தி, ராமன் பிரவேசிக்கின்றனன்.

இராகம் இந்துஸ்தானி பியாகு. ஏகதாளம்.

பல்லவி.

இந்தக்கானமே வேட்டைக்
கேற்றஸ்தானமே.

அனுபல்லவி.

வந்தகுலிக கந்தளொா டு
மைந்தரோடு தகதனத்தொ டு
எந்தை, பொருந்து ம்
கந்தவா, ரந்தனி, விரு ந்
து, வந்தே, முந்து, வந்தே ன், (இந்த)

சரணம்.

மெத்தநெருக்கமே
விருக்கவருக்க
மத்தகயங்கள், சுற்றுகின்ற
புத்திற்கோலங்கள், குத்துகின்ற
வெற்றி, சிங்கத்தி
சத்தமி, குத்துப, யத்
மெத்த, விர்த்தி, செய்யு (இந்த)

(இராமன் வசனம்.) ஆ் எனது விண்ணுளைச வியாபித்த இக்கானகத்தில், வெகுநேரம் வேட்டையாடுகின்ற என்ளுல், விநோத விநோதமாய் பற்பல காக்ஷிகள் காணப்படுகின்றன.

என்னவெனில்.

விருத்தம்.

எனதுவிற்றுணைத் தொனிகிரைவனத்தில் யானைகள்சிற்றத்தி னெழுந்
தனமதத்தொடு நடக்கின்றவையும் கனலெழுசினத்தொடு சிங்க
கணிகளத்திலைக் குடிலமாய்வளைத்து நாடுகின்றதும் ஞம
இனஞ்சிறைவிரித்து நடனங்கள்புரியுமெழிற் பெருஞ்சிறப்புங் கண்ணுற்றேன்.

(இன்னமும்) இங்ஙனம்.

விருத்தம்.

காட்டகமெங்கும் குவலயவடிவாய்க் கண்டிடவிளங்கு கின்றனவா
மாட்டினின் றிடுவேவெமுடர் மதித்திடாமகிமையை யுளவா
வாட்டடங்கண்ணுர் கடைவிழிநோக்கம் வாஞ்சைகொள் குணமுடையன
வாய், கூட்டமாய்ப்பயஞ்சேர் மானினச்சலனக் கோலமாவிழிகள் காண்கின்றேம்.

(ஆசையொடு)

கட்டளைக்கலித்துறை.

மனத்திவிதாகுல மான்பிரட்ப் பார்வைம ஞேக்கியமா
லினைத்திடுகின்றனன் அதனினுமோங்கன் னேறிஎழ மா
கனத்த தனத்தினட்பூ மகடன்சுழற் கண்ணினை யி
இனித்திடெழிற் பெருநோக்கங் கண்டிக்கவுமேற்ற மென் றே.

௩-வது அங்கம்.

(——) (திரை.)

(வசனம்.) ஆ, ஆ, அந்தோ, அந்தோ, அருமைமணப்பனே, ஆருயிர்ச்ராமபத்திரனே, யான் அநியாயமாய், ஹதமாய்ப் போயினேன் ஹா கஷ்டம் கஷ்டம்.

(இராமர்) கேட்டு (பரபரப்போடு) வசனம். ஓ, ஓ இதுவென்கொல், ஜனஸஞ்சாரமில்லாத இவ்வருங்கானில், என்னைநோக்கிப்புலம்புகின்ற ஒருமனிதனுடைய தீனச்சுரம்போற் கேட்கப்படுகின்றது.

என, கணையுந்தனுவுங் காட்டெழிற்காரத்தனாகக் கடுக்கெனவெழுந்து நடக்கின்றான்.

(——) (அடுத்ததிரை.)

ஆ! ஆ! (வசனம்.) கஷ்டங்கஷ்டம், துஷ்டமதகஜத்தின் துதிக்கரத்திற்கட்டுண்டு, ஆவி துடிக்கின்றேன் அஃதென்னை யிழுத்தடிக்கின்றது, ஊ, ஹூ, கஷ்டங்கஷ்டம்.

(இராமர் எப்படி! வசனம்.) பிங்களனுடைய சப்தம்போற்கேட்கப்படுகின்றதென்கொல் என, விரைவில், நடந்துகொண்டு, அடட, கஷ்டங் கஷ்டம்.

விருத்தம்.

பிரியமுளார்தமைப்பிரிந்து நவ்வேட்டையின் விழைவாற் பெருங்காட்டுடே
திரமொடுதிரிகின்றேன்பாற் சீக்கிரத்திலொருத்தனைத் தேடிவந்
பரிவுளவெம்பிங்களனைக் காட்டானை சுண்டையென்னும் பருத்ததண்ட
கரமதனால்மெய்சுற்றிக் கொடியகத்திற்கேகுதந்தோ கஷ்டங்கஷ்ட
கஷ்டங்கஷ்டம்.

(——) (அடுத்ததிரை.)

தரு இராகம் ரீதிகௌளை.

பல்லவி.

ஐயயோ அநியாயம், ஹரே ராமா (அய்ய)

அனுபல்லவி.

மையவனத்தினில் வந்தபாயம்
செய்வதறியேனுபாயம், என்னமாயம் (அய்ய)

சரணங்கள்.

ட்டிபிடிக்கப்போய் சிக்கப்பட்டாற்போ லே
ருதிவனவேடிக்கை காணவந்தொருக்கா லே
ாமெதகரியின் கைக்குளாகப்பட்டே னே
ய்வழிகாணேனே, பிங்களன்நா னே. (ஐய்ய)

தவமிருந்தெனைப்பெற்ற தாய்சுகிப்பா ளோ
தந்திக்கிரையாய்வந்து சேர்ந்திடுகோ ளோ
எவனின்றெனையிர் மூண்டமெனமுளைத்தா னோ
என்னசகுனப்பலனோ, விதிதா னோ, (ஐய்ய)

சகனெயென்றயர்கண்டால் சகித்திடாய்சீ யே
சமையத்திலெனைத்தேடித் தவித்திடுவாசீ யே
புகழுடையோய்வேட்டை போதாதோவென்ற னே
போயினையோயிங்ஙனே, மயங்கினே ன். (ஐய்ய)

ஏழைப்பிராமணனென் பிடரியிற்றுதிக்கையா ல்
இறுகப்பிடித்தெங்கோ இழுத்துக்கொண்டேகுதய் யா
நாழிகைதுரைகழித்தாலெனைக் காண்லா மா
காயகபலவீமா, அரோ மா. (ஐய்ய)

(இராமர்) இதோ வந்துவிட்டேன், வந்துவிட்டேன் எனநடந்துகொண்டே)

தரு. இராகம் செஞ்சுருட்டி. ஆதிதாளம்.

பல்லவி.

இதுவென்ன மோசம் ஆ தெய்வமே.

அனுபல்லவி.

ததியிற்பிங்களநாசம், சாருமோகிலேசம். (இது)

சரணங்கள்.

இவனையார்வரச்சொன்னார் என்வந்தா னோ
அவனையில்லாமல்வந்து, கரிபீடனத்தில்மாரக் து
காளந்தனிலிறந்தேன், கைவிடுவா னோ. (இது)
என்னுயிரையென்கண்ணே கண்ணிற்காண்பே னோ
அன்னமதக்கரியின், கையகப்பட்டபோ தே
காண்பதேதப்பாதீதே, கருத்தழிந்தேனிப்போ தே. (இது)
(என, நடக்கின்றார்.)

(——) (அடுத்தநிரை.)

இராகம் பியாகு. ஆதிதாளம். ஜாவளி.

பல்லவி.

ஏ ரகுராமா, ஏ பலவீமா, ஏழையைக்காத்தருள், ரவிகுலசோமா.

அநுபல்லவி.

பாரபுயாசல, தீரனேகோசலை
பாலா, சீலகு, ஞாலா, லோலா. (ஏ ரகு

சரணங்கள்.

நானேவந்தனன், கானகம்வந்தனன்
கடுவிற்கரிபீடனத், தால்மிக, நொந்தனன். (ஏ ரகு)
இபத்தின்கையகப்பட்டேன், உபத்திரவமேவிட்டேன்
இனியெப்படிப்பிழைப்பேன், இறந்திட்டேனிறந்திட்டேன். (ஏ ரகு)
ஹா, ஹா, கஷ்டங்கஷ்டம்.

இராகம் இந்துஸ்தான் நவரோஸ். தாளம் ரூபகம். ஜாவளி.
அரவாபரணனேயென்றவர்னமெட்டு.

இதுவோவென்விதி, இனியென்னசெய்குவேன், எப்படியுயிருய்வேன்
மதயானைக்கிறை, யாகவோ ராமனுடன், வந்தேன்வனந்தனிலே
வனந்தனில்வந்தாலும், மன்னவன்றன்ஸ்கந்தா, வாரத்திலிருக்காமல்
தனந்தனியாயிங்கேன், சார்ந்தேன்விதிவசந், தப்புமோவதைக்காமல்
தனியாய்வந்தநான், தந்திக்கிறையாகின்றேன், தப்பவழிகாணேன்
அனியாயமாயிங்கே, ஆருந்துணைகாணேன், அய்யோஅநாதையானேன்.
ஆ, கஷ்டங்கஷ்டம்.

விருத்தம்.

அய்யனேதனயனுசையையுடையாய் அதோகதியாகினனென்னை
வெய்யகூற்றன்வாய்வீழ்த்தவோபெற்றாய்விளைந்திடுதவமுறுவன்றாய்
வையகத்திலினுயிர்ச்சகராமமன்னவென்பால்நின்சினேகஞ்
செய்யபக்குவசமையத்திற்பொல்லாத்தீமையாய்முடிந்ததென்செய்வேன்.
(இராமர்) கருணையுந் தீரமுங்கொண்டு, அஞ்சேலஞ்சேல்.

கலிவிருத்தம்.

அஞ்சலஞ்சலென் றுருயிர்ப்பிங்களா
மிஞ்சுவேகத்திதோ மேவிவந்தனன்

(என) விரைவில் நடந்துகொண்டு, அகோவகோ, ஈதெங்ஙனமறைந்ததுகொலோ.

ஷை கலிவிருத்தம் பிற்பாதி.

குஞ்சரப்பெருங் குன்றுகடந்ததால்
எஞ்சரத்திற்கி லக்காகவில்லையே.

(த்துர்வேகத்தைத்தணித்துக்கொண்டு எதிர்நோக்கி) வசனம். ஆ, ஆ, மதகஜங்காணப்படவில்லையே, அதற்குண்மறைந்திட்டதா, சற்றுநிதானித்து,

விருத்தம்.

இதுநிற்கஅம்மதக்கரிபோனவழியெங்கேயெனப்பார்க்கின்றேன்
சதிர்பெற்றவன்பனையிவ்வாறேகிவிடுவிப்பேன்றடத்தைக்காவனப
தநிகஷ்டமெவ்விதமுமொளிர்பாறைத்தலமீதிலனுவந்தானே
நுதிபெற்றவண்டொழுங்கார்மததாரைக்குறியிதனாற்றோன்றப்பெற்றேன்.
(என நடந்துகொண்டங்கொருபானோக்கி,)

விருத்தம்.

மருத்தலைத்திடமுகுளவாகுலநீர்வஞ்சியின்றாளமதனுட்ப
பருத்தவோசைகொளருவிபாய்ந்திடக்கூப்பாட்டொடுமுழுகுநீர்க்காக்கை
வருக்கநற்கிளர்ச்சிறிலைகளோடுயர்ந்தவட்தருப்பொந்தின்வாய்ப்பார்த்தட்
செருக்கிறுற்பயப்சொண்மான்களினீலத்திருக்கொளிதிகழ்தடச்சிறப்பே

(வசனம்.) ஆகையாலிங்ஙனமே, மதயானைகொண்டொளித்திருக்கல்வேண்டும், அதனைத் தேடிப்பார்க்கின்றேன்.

(எனப்பார்த்து களிப்புடன் வசனம்.) ஓ, ஓ, தெய்வாதீனமாய், இங்கு காட்டானையின் கையினின்றும் விடுபட்டுப் பிங்களன் மயங்கிக்கிடக்கின்றவன்போற்றென்படுகின்றான்.

(அப்பால்) பிங்களவேடத்துடன் பாறைத்தலத்தில் மயமுற்றுக்கிடக்கின்ற பான்மையாய் (காளன்) பிரவேசிக்கின்றான்.

(இராமர் கிட்டவணுகி) ஆ, ஆ, எனதருமை நண்பே, ஆருயிர்ப்பிங்களா ஆயாசம்விடுத்தாச் சுவாஸம்பெறுவாயாக.

(என) மேன்முந்தியால், விசிறிக்கொண்டே.

இராகம் தோடி. கண்ணிகள்.

என்னசெய்குவேனென்னசெய்குவேன் என்சினேகிதபிங்க
எடாதெய்வசோதனைகொலோ இப்படிமயங்குகிறு

தன்னுனின்முகத்தின்னெழிற்பெருஞ் சோபைகாண்கிலன்றேழ
சொக்கினுப்போலிருக்கிறுயிந்தத்துன்பம்நீக்கடா அன்ப
அப்பனேயென துட்புறஞ்சோக அக்கினியெறிக்கின்ற
அந்தமோகம்யெந்தனைவளைந்து தொந்தறிக்கின்ற
இப்படிமண்மேற்குப்புறவீழ்ந் திருப்பதென்பாலென்செய்ய
இஷ்டனேமிகக்கஷ்டங்கஷ்டம் யேங்கியேங்கிநொன்றைய

(காாளன் தன்னுள்.) இராவணேசுவரனுக்கிதமான காரியம் யாதோ அதுவேயாம்.

(வெளிப்படை.) கண்களை மிகப்பிரயாசத்தினுல் விழிக்கமாட்டாது விழித்துக்கொண்டு, ஆ, என்னுயிர்ச்சகன் ராமபத்திரனே,

(இராமர்.) ஆம்.

(காாளன்.) ஆயாஸந்தெளிந்து.

விருத்தம்.

என்னுயிர்ச்சகனே ராமா இவ்வடவியினில் நீசெ
நன்னய வேட்டங்காண ஆவலாய் காடிவந்
என்னைவெம்மத மாதங்கம் இடைவழி தனிற்றுடர்ந்
மென்னியைச் சுண்டஞ்சுற்ற வேதைசெய் திட்டதங்

(அப்பால்)

கலிவிருத்தம்.

துங்கனின் ஞெணிவன்ஞெனி யொப்பாக ஒ
சிங்கநாதஞ் செவிப்புலன் சேர்ந்தி
இங்கெனைக் களைகொண்டிடத் தன்ளிவி
டெங்கேயோ ஒளித்திட்டது யானை

வசனம். யானுெ களைப்புற்று வீழ்ந்தனன், மேல் ஒன்றுமறிகிலன்.

(இராமர்). வசனம். ஆகையால், நினைக்கின்றேன், எனது நாஞேறைசையல் சிங்கத்தின் கர்ச்சனையென்று நடுக்கங்கொண்ட அம்மா தங்கத்தின் காத்தினின்றும் தெய்வாதீனமாய் நழுவினுயென்றே நன்று, நன்று, பிங்களா.

கலிவிருத்தம்.

கல்ல காவிங்கை நாகத்திடஞ் சலா
அல்லவ் நீங்கினை அவ்வகுளத்த
பல்லவத்தின் குளிர்நிழற் பாங்கிரு
தொல்லை நின்களைப் பொழிக்கலாகுமா

(காாளன்) சிங்காரக்கவி.

தாட்டிகராக்வ, வேட்டமதால்வரும்
வாட்டமுமிங்ஙனம்,ஓட்டிடவொக்குமால்.

எங்ஙனமெனில்.

விருத்தம்.

தருவின செறுக்கத்தாலே தனிக்கறுப்படர்வ ளுத்த
பெருகின்ற தெதிர்ப்பிற்பூக்த பீடுதாமரைப் போா
விரிமலர்க் கந்தந்தோய்ந்து மிகக்குளிர்ந்தனில மே
பருவமாங் குயில்கள்சத்தம் படித்திடப்பாவு திங்

இராமர் அடுக்குமொழி.

ஆம் ஆம் அரணியமிதில்வகுளத், தருநிழல்ரமணீயம்
பரிசனம்வருமளவும், சாஸமதாயிருப்போம்.

(காரளன் தன்னுள்) மாரீசன் வருமளவும், எனவழுத்தல்வேண்டும்.

(வெளிப்படை) அங்விதமே செய்வோம்.

(இராமர் வசனம்.) ஓ ஸாஸ, ஸல்லாப, உல்லாஸ, நேசனே, நின்னை இங்ஙனமாயினும், உயிருடன் காணப்பெற்றது தெய்வச்செயலேயாம்.

என் (அங்ஙனமன்றே)

விருத்தம்.

என்னுயிர்ச்சக நீஇலையெனிற் சனகனெழிற் கனியின்கரம்பற்று
நன்னயசுபமெற் கெய்துங்கொல் நழுவினதுவன்றே வதுநிற்கநிற்
நின்னுடைமரணத் தினில்வருதுயரம் நிகழ்த்துமென் னிதயமன்மத்தை
பின்னமதாகப் பிளக்தெரியாது பிரியுங்கொல் பேசிடாய்நண்

(காாளன் தன்னுள்) வசனம். இப்பையலிராமனும் அத்தையலர்க்கரசியின் திருக்கரம்பற்று மஹோற்சவத்தைத் தெரிந்துதானிருக்கின்றான்.

(வெளிப்படை) ஆ, எனதருமை நண்பே, அங்ஙனமன்று.

விருத்தம்.

என்னுரு சோகத்தால்நீ எழிற்சனகியை வேட்கா
சொன்னவாய் மொழிப்படிக்கித் தோகையை வெறுப்பையாகி
உன்னது மோகத்தாலே உயிர்தவிர்ப்பாளல்லாம
இன்னிலந் திருப்பாளென்றே எண்ணுாாய தேதிரா

(இராமர்.) ஆசையுடன், ஓ எனதாசை நேசனே.

அடுக்குமொழி.

என்னிடம்நீசொல், அன்னகாசிபன்
பன்னிடுவார்த்தை, நன்னயமெய்சொல்.

விருத்தம்.

சனகிதன் னேறிற்சித்த சன்சதிருயுன் றன்னை
கனவெனுங் கபடத்தாலே காட்டிடவெழிலைக் கண்
டினமுத லவண்மயங்கிச் செந்தளிர்ச் சயனநீதோய்க்
மனமகிழ் சகியர்தேற்று வார்த்தைகொண் டுய்கின்றாளா
(என்றே)
காளன், செவிகளை வேறுசாய்த்து.

(தன்னுள்) வசனம். அடட என் இன்னமும் மாரீசன் வரவு காண்கி லேன், (எனச்சிந்திக்கின்றனன்.)

(இராமர்.) பிங்களா, நீ என்முன்னுரைத்த, அக்காசிபன்சொல், மெய் மொழிசொல்.

என, திருப்பவினவினன்.

(காளன், வெளிப்படை.) ஆ, காசிபனென்பவன் யாவன்.

(இராமர் வசனம்.) ஆ, நினைவுகெட்டவனையா, யாவனொருவனைக்கௌ சிகமுனிவரின் சிடனென்றன்று வென்பாலுரைக்கலாயிற்றே, அவனை மறந்துவிட்டனையா,

(காளன்) பயமும் நடுக்கமுங்கொண்டு (தன்னுள்) வசனம். அகோ வகோ, தீவினைவிளைந்ததே, யீதென்னமறதி, யாதொருமாரீசன்பாற்சென்றி ருந்த மனத்தனாய், ஆரம்பித்தகாரியத்தில், தகவல்தப்பாய், மறதியினால் மதிமறந்துரைக்கலாயினேன். நல்லதிருக்கட்டும்.

(வெளிப்படை) அவனையார் மறந்தது, பின்னையோவெனில்.

கலிவிருத்தம்.

கயத்தின் கைக்குளாய் கொந்தவென் ஞாபக
பயத்தினாற் பரிபோக்குதன் பாமி
ஜயத்திலோங்கிய சிற்றச்சிலை தமூ
புயத்துமன்னவர் போற்றுபுர வ

வசனம். ஆயின் அக்காசிபன் சொல்லிலுங்களங்குமுண்டோ. (கேட்கக்கடவாய்)

விருத்தம்.

செந்தளிர்ப் பஞ்சணை பங்கயத்தண்டினஞ் செங்கைத்திருப்பணி
சிந்தைகுளிர்ந்திட நின்புகழ்கேட்குதல் திவ்வியசங்கீத
உந்தன் திருநாமமோது தவன்னவளுட்கொளும் போனக
இந்தவிதமொழிற் சுந்தரியின்றுறை யென்னென் றியம்புவ

௭௨ விருத்தம்.

அன்னத்தூவிகொண் மெத்தையிருந்தும் அருணப்பல்லவ மெத்தையதா
சொன்னச்சுடர்வளை மிக்கவிருந்துஞ் சொன்னாங்கைக் கங்கணமா
உன்னர்க்கசமகிழ் கீதமிருந்தும் உன்புகழ்கேட்குதலே இசையா
மன்னப்பெருவை தேகியுனலே வாடுகிறளெவ்வா றுரைசெய்வே

(இராமர்) தன்னுள்,

அடுக்குமொழி.

ஹ ஹ, கன்னிகல்யாணியாள், என்னிமித்தத்திலோ
துன்னுமித்துயர்க, டன்னையுற்றாளரே.

(வெளிப்படை) வசனம். என்காதலுக்குகந்த சிநேகிதபிங்களா, யீதெ ன்ன பரிகாசம்.

(காளன் தன்னுள்) வசனம். எனது பிரவிர்த்திக் கனுசரணையாயி ருக்கின்றதவனது மனோவிர்த்தி.

(நிரம்பச்சந்தோஷம்) நல்லதிருக்கட்டும், யானிவ்விதம்புகல்கின்றேன்.

(வெளிப்படை) தொடர்மொழி, ஓ எனதாவலுக்குரிய நாவலநண்பு ராமநாயகனே, நினக்கென்னுரையிலும் நம்புதலில்லையா,

(இப்பவும்) நின்னினைப்பினால் அங்கேரிளையாள் காமவெக்கைக்காற் றாது, இளந்தளிர்ச் சயனத்தில், சயனித்துக்கொண்டிருந்து வருந்துகின்ற னளென்றறிந்துகொள்.

விருத்தம்.

குளித்திடாள் சந்தமப்பாள்குழல் மலர்மாலை சூடா
களித்திடாள் விளையாடா ளற்கன்னியர் வதனம் நோக்கா
தளிர்க்கர தலத்தில்வைத்த முகத்தினளாகைக்கண்ணு
வெருத்து தடலருயிர்ப்பாள் விழித்துக்கொண் டிருக்கின்றாளே.

வசனம். ஓ யித்திரகுலசிரோரத்தின ராமபத்திரனே, நின்னினைப்பி னால், அதிமையற்கொண்டு, இன்னமும், அம்மடவல்லாள், மிகமிக வருத்தப் படுகின்றனள்.

௩-வது அங்கம்.

தரு. இராகம், செஞ்சுருட்டி. ஏகதாளம்.

பல்லவி.

நான்சொல்லக்கேளாய் ரகுநாயகா.

அநுபல்லவி.

தேன்சொல் சீதாதேவி தியக்கமயக்கமெல்லாம்.

சரணங்கள்.

கனவிலுனை மன்மதனுங் காட்டி
கருப்புச்சிலையிற் கணைகள்பூட்டி
அனவரதமெய்திட லென்பிராட்டி
அதிகமையற்கொண்டு சீமாட்டி
அல்லும், பகலுமுனை, யல்லால், நினைப்புவே, றில்லாள், மயங்குசெய்கை,
யல்லாந், தெரிந்தமட்டும் (நான்)

மையலினி நான்சகியேனென்பாள்
மதிசுடுவனலோ சகியேனென்பாள்
அய்யய்யோ யென்செய்வேன் சகியேயென்பாள்
அனிலனல்லத்தென்றல் அகியேயென்பாள்.
அங்கந், தனிற்பனிநீர், சந்தந், கலைச்சகிகா, ளெங்குந், தடவி
வீ, சுங்க ளெனப்புகல்வள். (நான்)

மயங்கிக்கிடப்பா ளொருசமயம்
வாய்துறந்தாற்றவ ளொருசமயம்
பயந்துநாணடைவ தொருசமயம்
பிராணவல்லவாவென்ப தொருசமயம்
பாலும், பழமுமா, றலுங், கசக்குதென்பள், மேலும், பசந்த
திரு, காலும, சர்ந்ததென்பாள். (நான்)

(இராமர்) தன்னுள்.

விருத்தம்.

சந்தியான்று சந்திரிகணைத்தாற் சாகரந்தளம்பிட வலைக்கு ம்
அந்தவாறென தாருயிற்றேழன் அறைதருவரிசை இம்மொழிகள்
கந்தலாங் காத்திருணிறத்திலங்கு நாயகன் சேயெனப்பிறந் து
வந்தமர்னதனு லெனதுளத்தை மயங்குற வலைக்கின்றமா தோ.

(காளன்) வசனம். இன்னமும் அக்காசிபனால் மற்றொன்றும் வழுத்தலாயிற்று.

(இராமர்.) (அஃதென்னே.)

(காளன்) விருத்தம்.

குமுதமாமலர்க் கோறகம்விரிந்திடக் குளிர்கந்தம பகரித்து
சமயமாலை வந்தலவிட் யேழையாய்ச்சானகி சஞ்சலக்கண்
நிமிடமாயினு மகல்புறச் சங்கற்பநின்று விங்கனசுகத்தா
சுமதிமாதுனே மதியிர வெல்லாந் துலைக்கின்று ளென்னுத்துங்க

இராமர். புளகாங்கிதங்கொண்டு தன்னுள்.

கொச்சகம்.

சாரமிகு காரிகையின் சங்கற்பாலிங்க
யாரமதைக் கேட்டவுடனாசையின் விளைவா
வீரமுள வென்மனது வெடிநெற்றுத் தேங்காய்போ
லேரிற் பிளக்கப்பட்ட நேர்மையெனக் கீறினதா

ஆகையாலிப்பொழுது,

விருத்தம்.

மனதினிலிடை வெளிதுறந்திட மாவிலச்சையுந் திரமு
ளனைவிட்டப்புறம் நழுவின்றன வேழுனம்பிர வேசி
னென்மன்மதனுங் கொடியதாவமுஞ் சேர்ந்துவந்து நுழைந்த
இனியென் செய்வது சனகிவந்தெனக் கென்றுதான் சுகமீவளோ.

௨, கொச்சகம்.

பொன்மலிவி தேசமன்னன் புண்ணிய குமாரியினை
என்மீதமர் செய்யுமென்றே யெண்ணினன் கொல்பாவிமத
பன்மலர்கள் தாவிடவன் பாணங்களென்மேல் வீழ்ந்தா
கன்றினைத் தாங்கும் மல்லுக்கட்டுவோ ராகா.

௩. கொச்சகம்.

தேன்போலுஞ் சானகியின் செவ்வாயிதழுங்
வான்பிறைபோலெசுக முகம்வைத்து முலைநெரு
மான்போனுங் கண்ணிறைந்துடன் மருவிநோய் தீர்க்
யான்போதனங் கனுடைக் கருவந்துலைப்ப தென்.

(காளன்.) அன்புமிகுந்த நண்பர் நாயகமே.

கலிவிருத்தம்.

வாகனப் பெடைமா மயில்ச் சீதையி ன்
மோகம் யாவுமொழிந்திடக் கேட்டு மை

நாகம் நேர்புய நாயக ராக   வா
மூகமா யிருப்பா னேன்மொ ழிகுவா   ய்.

(இராமர் தைரியத்தைக்கடைப்பிடித்து வெளிப்படை) வசனம். அடல் கேவலம் இக்கன்னியின் பிரஸ்தாபத்தாலென்பயன்.

(கரானன்.) கலீரென்று நகைத்து.

சந்தவிருத்தம்.

அடைவோமுன்பிலணிபணிகூர்விளங்கிழையினமுதாமருஞ்சரிதையது
சொற்றாய், கடுவேபெரும்புளகவடையாளவன்பதுடன்நலமாமிரண்டுசெவி
களிபெற்றாய், கடையேநெருங்கிவெகுதடைமேபுரிந்தனெயொர்சடைவேழ
மொன்றைஒருகலைசுற்றும், படிமீதிலெங்கெவர்கள்மதனால்வெலுந்தகைமை
பவியாதிருந்தவர்கள்பரிவுற்றே.

(இராமர் இலச்சையுடன் தன்னுள்) வசனம். ஓ, ஓ, என்னிதய சஞ்சலத்தை இவனுந் தெரிந்துகொண்டனன்.

(அட்ட, எறிகின்ற கெட்டமனமே என்ன தவிக்கின்றனை.)

ஹா, ஹா, இப்பொழுது,

விருத்தம்.

வைப்பினட்பகவான்மானதனியற்றுமாயையொப்பாமங்கமயி   லை
இனப்படிகனவிற்கண்விழுங்கண்டிலேனெனிது மவ்வலஸ்தையாடனைச்சே
தனித்தவானந்தமற்புதம்சோகமியம்பிடுகுதகலம்பீதி   [ட்
னத்தமாவிலச்சையிவைகளென்மனத்திற்கலங்கியேகுழம்புகின்றனவால்.

(வெளிப்படை வசனம்.) ஓ, ஒப்பில்லாத, உயிர்ச்சகபிங்களா, உனக்குத் தெரியாததொன்றிருக்கின்றதா, ஆனல், எனக்கு அச்சுந்தரி கிட்டுதல் துர்லபமென்றெண்ணி, அங்ஙனமுரைத்தனன்.

(கரானன் தன்னுள் வசனம்.) இவனுக்கவள் விஷயமான ஆசையைச் சகியாவண்ணம் என்னுற்றிடஞ்செய்யலாயிற்று.

(வெளிப்படை வசனம்.) ஓ, ஓ, இரகுகுலதிலகா, நீ இப்படியா நினைக்கின்றாய்.

அடுக்குமொழி.

இத்தனைசந்தேகமேன், முத்தன்விசுவாமித்திரன்
எத்தனித்தகாரியம், வெற்றியாய்க்கைகூடுமால்.

(வசனம்.) அக்காரியத்தை நிறைவேற்றி வைப்பதற்கு விசுவாமித்திர மகரிஷியன்றோ பிணைப்பட்டிருக்கின்றனர்.

(இராமர், தன்னுள், இதுவென்சொல்.) பிங்களன் அஸம்பாவிதமாய்ப் பேசுகின்றனன்.

(வெளிப்படை வசனம்.) என்தருமை நண்பே, யீதெவ்வாறறிந்தனை,

(கரானன்) தன்னுள், வசனம். இஃதிவனறியான்போலும்.

(வெளிப்படை வசனம்.) ஓ, ரவிகுலராமச்சந்திரா, யான் பேசியதெல்லாம், ஹாஸ்யமுரையேயாம்.

(——) (திரை.)

விருத்தம்.

பாழ்வாய் வாட்டுகின்றான் பாவியப் பனிக்கரன்று   ன்
எனய்யவன்ம மெனும்திக்கு வில்லோய் மூனியே   ல்
யானினிச் சகியேனம்மா வென்சகிகாள் கனி   ன
வான்மலரிலேயுக்தண்டும் வகையுடன் கொண்டுவாரீ   ர்.

(கரானன் தன்னுள் வசனம்) ஓ, ஓ, [illegible]ரீசனுடை[illegible]யாப்பிரயோகமோ.

(அப்பால்) மாரீசன் மாயையில் மறைந்துகொண்டவனாய்ப் பிரவேசிக்கின்றனன்.

இராகம் செஞ்சுருட்டி. ஆதிதாளம்.

பல்லவி.

மாமாயம் மாரீசனீயம் மாமாயம்.

அநுபல்லவி.

கோமான் ராமனைக் கொல்லநினைத்த உபாயம்.   (மாமா)

சரணங்கள்.

மிதிலைவல்லியைப்போலே சதுரவென்மாயையா   லே
மதனவல்லியைச்செய்தேன் மென்மே   லே
கதிர்குலராமன்மேல் அதிமயலானவன்போ   ல்
விதவிதமாய்ப்புலம்பி மதிமயங்கிடச்செய்தே   ன்.   (மாமா)

சிவிச்சிங்காரிக்க வெற்பெண்களைச்செய்தே   ன்
தாவிப்பொய்ப்பிதிர் வதித்தாவிறப்பவள்போ   ல
பாவனைகாட்டியப் பாவிராமனிறக்   க
வேமனல்நிஜமதாய்த் தாவித்திட்டே   னே.   (மாமா)

(மாரீசன்) விருத்தம்.

சீதையெவ்விதமாய்த்திகழ்கின்றாளோவவள்சேடியரிருப்பதெப்படியோ
மாதவனுடையசன்மங்களெவ்வாறோமாயையாலகிலமுமதுபோ
ருதினிற்படைத்தேன்பினும்பிதிர்வதப்பொய்ச்சொல்வினிற் ஜனகிமாய்வ
போல், பேதமைகாட்டிராமனைவீழ்த்தப்போனல்மெய்யதாய்ப்படைத்தேன்

(வசனம்.) ஆகையால் இப்பொழுது தாடகாவதத்திற்கு பதிலும் இலங்கேசுவரனுக்குமனோரதமும் முடிவுபெற்றதுபோலும்.

ஸபாஸ் கிரம்பசந்தோஷம்.

(காற்புறமும் நோக்கி) ஓ இதோ, இங்ஙனம் இராமன், மாகந்தத்தரு நிழலில், மாயா, பிங்களனாய, நம்கராளனால், அழைத்துவரப் பெற்றவன்போலுங்காணப்படுகின்றனன்.

(இராமர்) வசனம். காசிபனின் சொல் இங்ஙனமன்றோ.

வெண்பா.

காசிபனீ வேள்விதனைக் காக்கக் கருதினாய்
கோசிக ருன்னைக் கூட்டிக்கொண்டேக—————நேசமுடன்
வந்தன னென்றென்முன் வரிசையாச் சொல்லினதும்
இந்த விதமன்றோ விசைந்து.

(மாரீசன்) ஆசங்கையுடன் தன்னுள் (வசனம்.) ஓ, இவன், காசிபனோ, வெனனில், யாவனொருவன், இவனால் காசிபனீ யென்றழைக்கப்படுகின்றானோ, அக்காரணத்தினாலேதான், ஆனால் இவனுக்கிப்பிங்களவேடமேற்பட்டதெப்பயன்கருதியோ) நல்லதிருக்கட்டும், இப்பொழுது, யானோ, இதோ அடர்ந்து நெருங்கியிருக்கின்ற கதலீவனத்தில் மறைந்திருந்துகொண்டு எல் அடைவே தெரிந்துகொள்கின்றனன்.

என மறைந்திருந்து கொண்டனன்.

(ராமன்) தன்னுள் வசனம். யாகரக்ஷணைக்காக, அழைத்துக்கொண்டுபோவது நிமித்தமாகவே, கௌசிகன் றன்வரவு, என்றே, நிச்சயமாயிவனெண்ணியிருக்கின்றனன்.

(வெளிப்படை) தொடர்மொழி.) கண்ணிற்சிறந்த, கருத்திற்குகந்த காதற்கிசேகி, காகுற்ச, ராகவா, இங்ஙனங்கழறுதல்வேண்டா.

அடுக்குமொழி.

மாதவமுனிவரரம், காசிபுதல்வரின்,
ஓதிதுவாகுமால், ஓதிடத்தகுதிகொல்.

(மாரீசன்) கேட்டு பயத்துடன் (வசனம்) ஆ ஆ, நன்குணர்த்தலாயிற்று, காசிபனீ யென்ற பதப்பிரயோகத்தை ஆக்ஷேபித்த இப்பையலால், இவனுக்கு இப்பிங்கள வேடதாரணம் அக்கௌசிகனது கபடமென்றே நன்குணர்த்தலாயிற்று.

ஆகையால் நினைக்கின்றேன், காசிபவேடத்தினால், வஞ்சகஞ்செய்யப் போகின்ற, என்னைக் காண்பித்துக்கொடுக்க, அக்கௌசிகனுடைய, ஆரம்பமென்றே.

(மாரீசனுடைய மாயாசிருஷ்டியில்.)

2-வது (——) (திரை.)

(வசனம்.) சகி, தாமரையிலை, தாமரைத்தண்டு, தாமரைமலர்கள் இவைகள் விரைவிற் கொய்துகொண்டு வந்தீனன்.

(இராமர் வசனம்.) அடடா, ஈதென்ன, தென்பக்கத்திலோர்திவ்விய ஆலாபம்போற் கேட்கப்படுகின்றது. இதுவென்கொல்.

(கராளன் சுற்றிப்பார்த்து (தன்னுள் வசனம்.) இம்மட்டிலும், காசிப வேடதாரியான, நம்மாரீசனோ, தென்படவில்லை, ஆதலாலிது அவனது மாயாப்பிரயோகமென்று, நினைப்பதற்கிடமில்லை.

(வெளிப்படை வசனம்) ஓ, இராஜகுமாரா, இஃது இருண்டகாட்டுப் பிரதேசமாகையால், ஏதேனும் வனதேவதைகளின்விளையாடலாயிருக்கலாம்.

(மாரீசன் வசனம்.) இவன் நிச்சயமாய் காசிபனேயாம், அதற்கேதும் ஐயமில்லை, எங்ஙனமெனின், எனதுமாயையென்றறிந்த, இவனால் இது ஜானகிபரிஜனாலாபமென, எங்ஙனம் சாற்றப்படவில்லையோ, அங்ஙனமேயாம்.

(சற்று நிதானித்து) வசனம். எங்ஙனஞ்சென்றனனோ, நம் கராளனென்று, என்மனந்தவிக்கின்றது.

அந்தோ, அந்தோ.

விருத்தம்.

பூசல்ராமனை யுபாயப்போக் கிலேகூட்டி வரவென்
றேசிவ புகன்றனுப்பித் தேன்கராளனைக் காணேனே
கோசிகன் கண்டரக்கன் கொல்லென வினையாஞ்சிறி
நாசமேசெய் திட்டான்கொல் நானென்ற மதிகிலேனே

விருத்தம்.

பிங்களவடிவம் புனைந்தகராளனைப் பிடித்துக்கொண் டிலக்குவன்வஞ்சம்
இங்கியற்றவோ வேடமாறுடி எய்தினையினி விட்டேனென் றே

துங்கவன்பசழி யானுயிர்துலைத்தான் தூய்முனிவென சிகன்சொல்லா ல்
சங்கையொன்றில்லை யென்செய்வேனடட வென்றம்பிநீயெங்கட்டசார்ந்தாய்

(இது நிற்க) வசனம். இவ்விருவரும், இராமனும் காசிபனுமேயாம். மாயையாலிவர்களை, ஹதஞ்செய்கின்றேன், அங்ஙனமாயின், சபாகு கராளர்களின் துக்கசாந்தியதாகும்.

(இராமர் வசனம்.) ஓ, ஸரஸஸல்லாப; உல்லாசகேசனே, தழை, குழை, செறிந்தசெடி, கொடிபடர்ந்த இந்தக் கொம்பினங்களின் மறைவினில், மறைந்துசென்று என்னை நோக்குவாம், என் வில்லுஞ்சரமும் விளங்குகரத்தனாய் எழுந்து நடக்கின்றனன்.

(கராளன்.) நல்லதென்று பின் நடக்கின்றனன்.

(மாரீசன்) விருத்தம்.

திடம்படுகணையும் வில்லும் செய்யதாமரைக் கரத்தி ன்
இடங்கொண்ட வெழில்ராமன் யெறிதரு விடத்தைச்சிந்து ம்
படங்கொண்ட நல்லகுட்டிப் பாம்பெனவெனக் கிப்போதி ல்
அடர்ந்திடு பீதியோடு மாசையுந் தருகின்றுறு ல்.

(வசனம்.) நல்லதிருக்கட்டும், இவனுக்கென் மாயாவிலாஸங்களைத் தோன்றச்செய்கின்றேன் என, தியானஞ்செய்கின்றனன்.

(இராமர் எதிர்நோக்கி) வியப்புடன்.

இராகம். காபி.

கண்ணிகள்.

விந்தையானசயனமட்டும் விளங்கக்காணு
விரசமாதுயிதிற்புறண்ட விதம்போற்றேனு
சந்தணங்கள்ரசங்கள் வற்றித்தானுலர்ந்து
சையைநமையமீதில்த் தானுதிர்ந்து
அஞ்சனங்கலந்தகண்ணீர் அதிப்பிரவாக
அணைடயில்வடிந்த தடையாளமாகு
கஞ்சநாளஹாரமெல்லாம் கசங்கிவாடி
காணுதுபர்காணுபுறங் கவிலும்காடி
இளந்தளிர்கள்புழுங்கிவெம்பி யென்றவண்ட
வெளுடையசுந்தராங்கம் யிதிற்புறண்ட
விளங்குகிந்தவிதம்பலவ விரிப்புமாத்திர
மெத்தவும்வியப்பதாக மேவும்நேத்திர

(கராளன்) வெண்பா.

சொல்லனங்க வாதையினால் கொம்பனையாளோ ரொருத்தி
பல்லவ யிப்பாயற் படுத்திருந்து——மெல்லெனவே
நம்முடைய சத்தமதை நாடியொளித் தனளா ல்
கொம்மை முலையாள் வெட்கங் கொண் டு.

(——) (அடுத்ததிரை.)

இராகம் கமாஸ். ஆதிதாளம்.

பல்லவி.

மையல்சகியாமலே மிகமயங்கிறேனடி. (மையல்)

அநுபல்லவி.

செய்யும் மலர்சொரிந்தென் கையுஞ்சலித்தேன் சகி. (மையல்)

சரணங்கள்.

ந்தணம்பூசினேன் சந்ததம்வீசினே ன்
ந்தனுலானமட்டும் தருந்தபிரயாசைப்பட்டு ம். (மையல்)
தாமரைநாளங்களை தையறன் ஸ்தனங்களி ல்
நேசமுண்டாகும்படி செவ்வையாய்ச்சேர்த்துவைய டி. (மையல்)
தளிரில்பன்னீர்தெளித்து தையல்மேலொட்டவைத் து
துளிரும்படிசெய்தாலும் குழைந்துவாடுதாளுனு ம். (மையல்)

(இராமர்.) பிங்களா நன்குணாத்தனே.

(கராளன் தன்னுள்) வசனம். இஃதென்ன ஆச்சரியமாயிருக்கின்றது. ஒருக்கால், நம்மாரீசன் எங்காயினும் சற்று மறைந்திருந்துகொண்டு செய்கின்ற மாயாப்பிரயோகமோ, அல்லது, எதார்த்தமானதுதானோ இருக்கட்டும் பார்க்கின்றேன்.

(வெளிப்படை) அடுக்குமொழி.

உற்றசினேகித, வெற்றிராகவா,
சற்றுநடந்திடில், மற்றதுவெளியாம்.

(இராமர்) வசனம். நன்று, நன்று, அவ்விதமேசெய்வோம் என, பத்தடிநடந்து, எனதாசைக்குகந்த நேச பிங்களனே, இவளொருத்தி.

வெண்பா.

செய்யகலை யுடுத்தித் தேமற் பருத்தமுலை
தையலிவ ளாரொருத்தி சார்கின்றாள்——கையினி

மாத்தந்நிக் கோடொடித்த வாறென வெண்ணுளமொ   டு
பூத்தொளிர் அசோகலதை போ   ல்.

(சுராளன் சோகத்துடன் தன்னுள்.)

கொச்சகம்.

என்றமயன் மாரீச னிங்குவரக் காணே   னே
ஒன்று நினைக்கின்றேனு னுருவத்தாற் காசிபனு   ய்
நின்றவனைத் தானறிந்து நிகழ்த்து மிலக்குமனு   ல்
கொன்றுவிடச் செய்தன னக்கோசிகனுங் கூற்றனென்   றே.

(வசனம்.) நல்லதிருக்கட்டும், இப்பொழுது விதனப்பட ஸமயமன்று.

(வெளிப்படை), கலிவிருத்தம்.

பரகளத் திரப்பார் வையென் பய   ன்
நரகம் வீழ்த்த லல்லாது நல்ல   தோ
சாகர தலசாமி தன்னு ம   ற்
றொருகருப் பிணைப் பார்தி யுத்த   ம.

(வசனம்.) அன்றியும், பரிஜனமுந் தேடப்போகின்றது, ஆகையால், வேறுபக்கத்திரும்புவோம்.

(மாரீசன் சோகத்துடன்) வசனம். இவன் நிச்சியமாய் காசிபனே தான், அதற்கேதும் ஐயமில்லை.

கலிவிருத்தம்.

இப்படித் திரும்பிடும் ரகு குமார   னை
அப்படி யிழுத்தவ னுசை மாற்றலா   ல்
செப்பிடு காசிப ன்றுன் சந்தேக   மோ
எப்படி யாவதிவன் மனமீர்க் கிறே   ன்.

(என, தியானஞ்செய்கின்றனன்.)

(இராமர்) வசனம். ஆசைக்குகந்த, நேச பிங்களனே, இவ்வற்புதக்காக்ஷியை, அருமையாய்க் காண்க.

விருத்தம்.

புதுமைவீலா வளையிதுபார் பொற்கதலிசூழ் தாழ்விதுபா   ர்
இதனுக்கருகி லிலங்குகின்ற வெழில்ச்சேர் நளினநதியிதுபா   ர்
சதிர்கொள தன்சமீபமதில் தழைத்தமா கந்தத்தடியி   ல்
மதுரம்பொழியும் வண்டொலியின் வளப்பரிகுஞ் சமிதுபாரா   ய்.

(வசனம்.) ஹா, ஹா, அதிகோமள ரமணீயமான இந்தப் பிரதேசங்களிலிருந்துதான் இக்குமரியாள் குளிர்ந்த மிருணாளங்களைக் கொய்துகொண்டு வருகின்றனள் போலும்.

(சுராளன்) வசனம். இந்த ஸம்விதானம் (அதாவது) ஜோடனை அதிரமணீயமாயிருக்கின்றது, இதை விரைந்து பார்க்கின்றேன்.

(என திரும்பினன்.)

(மாரீசன் கர்வத்துடன்.)

அடுக்குமொழி.

வாடீகாசிப, மூடாஅடகுடி,
கேடாநின்றுயிர், ஒடஅடிக்கிறேன்.

(வசனம்.) பயலே, இன்றிம்மாரீசனுக்கிறையாகமுடியப்போகின்றாய்.

(——) (அடுத்ததிரை.)

இராகம் காதகாமக்கிரியை. ஓரடிவைத்து மற்றோரடி என்ற மெட்டு.

கண்ணிகள்.

பொல்லா துகாமம் கொல்லுமென்பாரது பொய்யன்றுநிசமா   மே
மெல்லியற்சகியின் அல்லல்விகாரம் மெத்தப்பெரிதா   மே
மாறிவனங்கம் போதெனவாடுதே மதனச்சரத்தா   லே
எதடியினிப்பொருக்கா திதிற்செய்வதென்னே இனிமே   லே
என்வினையிவன்மே லென்னித்துவிடில் எல்லாப்பொறியு   மடி
வின்றுவதென்னே வெண்ணுளங்களும் வெம்பிக்கறியு   தடி
கந்தமிகுஞ்சீதச் சந்தனசேத்தாற் காமத்தீயாறா   தோ
பைந்தொடியிவன்மெய் நினைந்திடவாற்றடி பார்ப்போம்சகம்வாரா   தோ.

(சுராளன் தன்னுள்) வசனம். மதுரமாகியபெண்களின் மொழிபோல் விளங்குகின்றன, கிட்டி விரைந்து அதைப் பார்க்கின்றேன், அடடா, அதை ஏன்தான் பார்க்கின்றேன்.

கலிவிருத்தம்.

வஞ்ச மாயையில் வல்ல மாரீசனு   ம்
அஞ்ச கோதரன் றன்னை யிழுத்தி   ல்
சஞ்சலிப் புறுகின்ற தென்றன் மனம்
மிஞ்சு தைரிய மெவ்வண மேவிடு   ம்.

(வெளிப்படை.) ஓ, சந்திரகுலசோம, காகுல்ஸராம, இவ்வதிரமணீயசந்தம், யாதெனக்காண்குதி.

(இராமர் கிட்டவனுகிநோக்கி) பிங்களா, ஓ, வசனம். இவர் யாவர். ஸமானவயரூப ஸம்பன்னர்களான இவ்வியமங்கள காத்திரக்கன்னியர் இவர் யாவர் சொல்.

(அப்பால்) தளிர்ச்சயன மாயாசீதையும் சகியர்களும் பிரவேசிக்கின்றனர்.

கலிவிருத்தம்.

(ஒருத்தி) சலசலோ சனிதையல் நோகா வண்ணம்
இலைசரோருக மெடுத்து வீச டி.
(மற்றொருத்தி) கலச மாமுலை காயுதம் மாருளி ர்
நலசந்தக் குழம்பூ ற்றுவை நங்கையே.

(காளன் நோக்கி தன்னுள்.)

கலிவிருத்தம்.

இகரில்வன்னமின் னேரிழை யார்கொலோ
புகழுஞ்சீதையின் பொன்னுடற்றுங்கியே
மிகவுங்காம விகாரத்தைமேவலா ல்
தருமாரீசன்றன் ஜாலமாயங்களா ம்.

(இருக்கட்டுங்கண்டறிகின்றேன், வெளிப்படை.)

கொச்சகம்.

இன்னவர் மனோக்கியர்கள் யாவர்கொலோ யெழில்மிக்கா ர்
பொன்னுலக மின்னார்கொல் புயங்கருலப் பூவைய— ரோ
இன்னிலத்தி லீலைசெய்ய யிளமைத் தருணியரா ய்
மன்மயவேள் ஜயக்கொடிக ளுடினவோ காணகியே ன்.

(இராமர் அதிவியப்புடன்) வசனம். ஆ, உத்தமசிநேகித, சத்தியபிங்களா, இவ்வியமங்களாகிரிதியர்களான, இவர்களின் மத்தியில், ஓர் ஜீவரத்தினம்போலும், ஓர் கன்னிகாமணியைப் பார், அடடா, என்னென்றுரைப்பேன்.

சிங்காரப்பத்தியம்.

வானோஅளியினமோ வரிசைச்சைவலமோ இம்மங்கைசிகாமணியின் வாசக்
கொண்டை
மானோவோற்பலந்தானோ வாளோவேலோ மாரன்றன்பாணமோ விழிகள்
கெண்டை
மீனோவிதழ்பவழந்தானோ இவள்வசனம் மேலுலகத்தமுதமோ களித்தன்
டைத்
தானோகையாயயன்செய்தானோ இவடனங்க டாளவாத்தியமோ பொற்குட
மிரண்டைத்

தானோகற்பித்தானோ யிடையுமிலையோ
சங்கிலிப்பின்னலோ மயிரொழுங் கோ
வானரம்பைகளோ துடைகள்தா னோ
வஞ்சியிவளின்று ளென்றறிகிலேனே.

கட்டளைக்கலித்துறை.

வந்துந்திமேசமதைநீக்கிவிட்டிட்டவான்றடித் தே.
சந்தந்தழைக்குஞ்சீரஞ்சமைந்ததளிர்ச்சயன த
இந்தத்தலத்திலிருக்கின்றதோயிந்திராணிகொ லோ
எந்தன்மனத்தையிழுத்திடவந்தயிவ்வேந்திழை யே.

(இல்லாமற் போனான்.)

கட்டளைக்கலித்துறை.

கொந்திங்கனம் வந்துநோக் கழிக்கின்ற நுண்ணிடையாள்
கந்தந்தரும் பூங்குழலாரி பாகன்முக்கண் ணனாழ ற்
சிந்துங்குரோதத்திலாயகன்றன் னங்கந்தீய்ந்தநெண்ணி ப்
பந்தங்குலைந்து பரதவிக்கும் ரதிப்பாவை கொ லோ.

இராகம் காபி. ஆதிதாளம்.
மாயாகானி என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

ஆரோ இதயமோகனாங்கி ஆரோ அறியேன்.

அனுபல்லவி.

ஆரோ எந்த, ஊரோ என்ன, பேரோ அறியேன், பிங்களா. (ஆரோ)

சரணங்கள்.

இடையழகும்விழிக் கடையழகும் இவள்
உடையழகுமெனை யுருக்கு தே
அடையழகும்பின்னற் சடையழகுமென்று ற்
சொல்லவசமோடா, பிங்க ளா. (ஆரோ)

வஞ்சியிவள்விரகம் மிஞ்சியிகவருந் தி
துஞ்சுருன்பாவிம தன்சரம்பா ய
அஞ்சுறான்பசப்பிக் கெஞ்சுறா டா
ஆயினோயாரோ, அன்ப னே. (ஆரோ)

(காளன்.) ஆ, நன்றாய்ப்பார்த்தனன்.

விருத்தம்.

அச்சங்கொளு நோக்கத்தின் ஸங்கத்தவள் இன்று   ள்
நச்சங்கமலத் தண்டென நற்கன்னம் வெளுத்தா   ள்
கச்சங்குச மெலிகின்றனள் கருதினிவள் தெசைக   ள்
மெச்சங்கசன் வாகின்வலி விரிசெய்வன மிக   வே.

(மாரீசன் களிப்புடன்) வசனம். இந்த க்ஷத்திரியப்பயல் இந்த காசிபனேடு, இந்த மாரீசன்றன் மாயாவலைக்குள் சிக்கிக்கொண்டனன்.

விருத்தம்.

தலையாமணிமுத்தாமின்சொற்சானகியைப்போ   ல்
விளமர்யையில்வருபெண்ணிவள்மேன்மோகித்தனனு   ல்
இளையாதகராளனிளையானல்வதைபடலா   ல்
களையாதில்மாறுயிவர்களைமாய்த்திடுவேனு   ல்.

(என) திரும்பவும் தியானஞ்செய்கின்றனன்.

(இராமர்) வசனம். அபூர்வமான அற்புதக்காக்ஷி வேறு விதமாய்த்தென்படுகின்றது, அட்டா, என்னென்று சொல்வேன் இந்தக் காக்ஷியை.

விருத்தம்.

சொன்னச் சிறுகின்னைத் தநிதுளியுஞ் சாரிகை   யே,
மன்னுட்கொவ விலைலீலையின் வளரஞ்சுக மதுர   ம்
சொன்னற் கனிவிறை தின்றிடசுமுகங்கிடையா   தே
அன்னப்புளு மிறைநாடில அவள்கொள் துயரதனு   ல்.

(காளன் தன்னுள்) வசனம். ஸரி, ஸரி, இஃதிப்பொழுது நன்கறியலாயிற்று. மாரீசனுடைய மாயாப்பிரயோகமென்றே நன்கறியலாயிற்று. இன்னும் பற்பல பக்ஷி பறவைகளும் இவளது சோகத்திற்காற்றாது விதனத்தை அடைகின்றன.

[வெளிப்படை] வசனம். அன்புமிகுந்த நண்பர் நாயகமே, ஸ்ரீ ராம ராமபத்திரா, இவ்வடவிப்பிரதேசம்; கௌசிகமகரிஷியினாச்சிரம ஸமீபமாகையால், இவள் ஜானகியாகவேயிருக்கலாம்.

[இராமர்] தன்னுள் வசனம். சரி சரி நன்குரைத்தனன், அவ்விதமிருக்கலாம், அவன் இவ்விதமான விரக அவஸ்தைகளனுபவிக்கின்றனென்று காசிபனாற்சொல்லப்பட்டிருக்கிறதன்றே, ஆகையாலிவனுரை ஒக்கும் ஒக்கும்.

[வெளிப்படை] அட்டா என் இல்லாதவார்த்தை இயம்புகின்றாய்,

[அப்பால்] காசிபர் பிரவேசிக்கின்றனர்.

காசிபர்.

கொச்சகம்.

சானகியின் பாற்செல் மனந்தளராது பிங்களனு   ல்
மான ரகுராமனுக்கு வளர்த்தேன் நடுவோரு   ம்
வானகமும் மண்ணகமும் வாழ்த்து விசுவாமித்   ர
ஞானமுனி சொன்னபடி யெல்லாம் நனிபுரிந்தே   ன்.

[சற்றுநிதானித்து] வசனம்: வேட்டையிற்சென்ற இராமன், தென்படவில்லை, அவனைத்தேடிக்காணும் பொருட்டாய், என்னுடன்வந்தபிங்களனும் என்னைவிட்டுப்பிரிந்தனன்.

இருக்கட்டும் [வசனம்] பாருஇடமாகிய இந்த மாகந்தவனத்துட்புக்கி தேடிப்பார்க்கின்றேன். [என] நடக்கின்றனர்.

[காளன்] காசிபரை நோக்கி மனக்களிப்புடன் [தன்னுள்] வசனம் இதோ காசிபவேடங்கொண்ட நம்மாரீசன், தென்படுகின்றான். இவனே இவ்விராமனுக்கு, இம்மாயாவிநோதங்களைத் தோற்றிவைக்கின்றான் ஸபாஷ் ஸபாஷ்.

[வெளிப்படை) வசனம். ஓ, ரகுகுலதிலகா, யான் இல்லாதவார்த்தையோ இயம்புகின்றேன். நன்று நன்று.

இராகம் நாதநாமக்கிரியை. ரூபகதாளம்.

பல்லவி.

நானெடுத்துரைத்ததில் ஐயமா ஓ ராமநாயகா   [நான்]

அநுபல்லவி.

மானெனும்விழி, தேனெனும்மொழி,
சானகி, தானிவள், யானறிந்தமட்டும்.   [நான்]

சரணங்கள்.

மாசற்ற, காசிபன், பேசியதல்லுவை, மோசமாமோ,   நேசனே
இராஜனே விசுவாச   னே
இவன், வாசம, லாக்குழல், மாசன, கியென்   று.   (நான்)

விருத்தம்.

சுந்தரனே புயமந்தரனே ரகுநந்தனவென் சொலயா   ன்
இந்தெழில்மாதுவை தேகியெனச்சொலு மென்னுரைபொய்யென்றாய்

விந்தையிதா முழுதுந்தெரி காசிபன்வெளியே காண்கின்ற ன்
இந்த இடத்தினெடிக்கு னழைத்திடு வேனெழி லென்னிறை யே.

(வசனம்.) சிதையின்விர்த்தாந்தம், யாவுமறிந்த காசிபன், அதோ, (
ன்படலால்; அவனே நின்பக்கல் அழைத்துவருகின்றேன்.

எனச்சென்றனன்.

இராமர் பெருமூச்செறிந்து.

கொச்சகம்.

மன்மதன்செய்வெஞ் செறுக்கால்வாடி மெலிந்த இந்த த்
கன்முலையாடன்னை யென்பாற் காசிபன் பூக்கன்னியென் றே
நன்மையதாய்ச் சொல்வான்கொல் நவிலுவன் கொல்வேறுவிதம்
என்மனதிற் கின்பசுக மெய்துமோயா னறியே ன்.

(மாரீசன்) ஓ ஓ [வசனம்.] பிங்களவேடகாசிபன், இராமனைவிட்டுப்பிரிந்து போய்விட்டான்போலும், இருக்கட்டும், நன்று, நன்று, யானே, இப்பொழுது எவ்வண்ணம் நினைத்திருக்கின்றனனோ, அவ்வண்ணமே, காசிபருபத்தைப் புனைந்துகொண்டு, இராமன்பாற் செல்கின்றேன்.

என தியானஞ்செய்கின்றனன்.

மாயாசீதை.

கொச்சகம்.

உடுபதியைக் காணுதற் பலத்துக்கப் பிருந்தே ன்
கொடிய மதவாதைகொண்டு கொழுகொம்பிலா வெனக் கு
வடுக்கண் சகிமாரிருக்கென் அவர்செய் யுபசார வை
தொடுத்திருந் தெனன்பா யென்றேன்றல் வரக்காண்கிலனே.

இராகம், பியாகு. ஸார்யகு மெறகாதனி என்றவர்ணமெட்டு.

பல்லவி.

என்சகி, யென்செய்வனோ, ஓ (என்)

அநுபல்லவி.

நான், பஞ்சபதி, பாடடைந்துங் கொஞ்சமிறங்கானோ மதன். (என்)

சரணங்கள்.

கெஞ்சம் பதைக்குதடி, கஞ்சமுகத்தா னே,
மிஞ்சுமதன், வெஞ்சரங்கட், கஞ்சியகத்துஞ்சரே னே,
கொஞ்சுமொ, றியினுளே, வஞ்சிய, ப்ரஞ்சி யே. (என்சகி

ரயைக் தேனெழுதும் நற்கனிய ருத்தியென்ற ன்
மில்தீ, யுட்காரத்துவிதாலைடைக்குழியிற், சுக்கிடா து,
கொடுரு, மிக்கொடுத்தும், அக்காதுங்க, ரிக்கின் ற. (என்சகி)
ரினமென் மேல்விரிந்து சீதபனிநீர் தெளித் து
முதலையோ, டாதுவாய்சேதிபல, த்தினுளு ம்
பஞ்சகவ, வீதமத, வாண்டிபொருக், காத டி. (என்சகி)

(என) ரோதனஞ்செய்கின்றனள்.

(இராமர்.) அட்டா யீதென்ன, ஹூ ஹூ.

விருத்தம்.

மான்விழியாள் மொழியாழ்ப் பதிலோ நவவாறுலகத்தமு தோ
தேன்ம்றுபாதி ரதங்களத்துரு தோசிர்மதா வேசமென த்
தான்மது பானமதிற்கனிதங் கோலோதையன் மென்சுத்தமி தே
நான்மயங்கிட வென்மரமனந் தன்னையே நன்குகலக்குத டா.

(அப்பால்) காசிபவேடத்துடன் மாரீசன் பிரவேசிக்கின்றனன்.

(மாரீசன்.) இப்பொழுது செல்கின்றேன், [தன்னுள்] வசனம். பிங்களவேட காசிபனே, இவனைவிட்டுப்பிரிந்தனன். அவன் திரும்பவருவதற்குள், இப்பொழுதே, இராமனை யென்மாயையினால் வளைத்துக்கொண்டேமாற்றுகின்றேன்.

(எனச்) சிந்தித்துக்கொண்டே நடக்கின்றனன்.

[இராமர்] ஆனேவகோ ரூபத்தையநுவரித்தவாக்கும், வாக்கையநுசரித்த ரூபஸம்பத்தும், என்னென்றுசொல்ல, அம்மனமன்றோ.

விருத்தம்.

இன்னவன்மொய் குழலென்னிடில் வண்டினமென்ப னென்பய னே
மன்னிருகஞ்சலச் கண்களிருக்க வேல்வன்கனை வேண்டா வே
சொன்னநன்னனினமுகுனத்தாசையென் றன்னுதனக்கானி ல்
உன்னிடில்மன்மதன்செய்சகனமோகினியொண்டொடியிவடா மே.

(மாரீசன் நகையுடன் தன்னுள்) மாரீசனால் சிருஷ்டிக்கப்பட்டவனென்று வழுத்தல்வேண்டும்.

(இராமர் எதிர்நோக்கி) வசனம். ஓ, காசிபனிதோ வந்தனன்போலும் ஆனால் இவனைப் பார்ப்பதற்கும் என்மனது இலச்சையை அடைகின்றது என்று முகம் வணங்கியிருந்தனர்.

(மாரீசன் தன்னுள்.) ஓ, இவன் தாடகாவத மஹாபாதக க்ஷத்திரியப் பயல்.

விருத்தம்.

பெற்றியுளதைரியத்தன்மனத்தெரளித்தவகங்காரப்பீடுபெற்றோ ன்
வெற்றிபெருவீரஸமுருச்சமைக்தவித்மென்னவிளங்குமெய்ய ன்
குற்றமிலமுத்மனையகல்யாணைனெனினுமிவன்கொடும்புண்கண்கட் க்
கற்றெதிரிற்சொலிக்கின்றவினைக்கமெனத்திகழ்கின்றானுண்மையெர்க்கே.

இருக்கட்டும். எப்பொழுதிவனை அக்கினியில் வீழ்த்துவிப்பேன்.

(வெளிப்படை.) கிட்டவனுகி ஜயாவிஜயீபவ, ஜயஜயராமபத்திரா.

விருத்தம்.

படையிலுக்கடர்ந்தெங்கெங்கும் பரவிவச்செதிர்க் கும்பொல் லா
அண்டயலர் கருவம்நீக்கி ஆண்மைசெய் வீராவா ழி
கொடையிற் கற்பகமேவாழி கொற்றவர்க் கரசேவா ழி
தொடையணி புயத்தோய் ராமசூரிய குலத்தோய்வா ழி.

(இராமர்.) முகத்தை நிமிர்த்திக்கொண்டு.

ஆ, காசிபனா,

(மாரீசன்,) ஆசங்கையுடன் [தன்னுள்] ஓ, இவனால் எனது பூர்வோத்திரம் அறிந்துகொள்ளப்பட்டதோ.

(வசனம்.) ஏதேது, ஒருக்காலும் இஃது ஸம்பவிக்கக்கூடியதன்று. பின்னையோவெனில் நினைக்கின்றேன், பரமார்த்த காசிபனென்று நினைத்து பிங்களவேடத்தைவிட்டு திரும்பவும் தன் வடிவத்தை தரித்துக்கொண்டதிற் பயனென்னென்று காவும் கூசினையென்றோ, இருக்கட்டும் எங்ஙனமாயினும் சரி.

(வெளிப்படை). அடுக்குமொழி.

மாதவசீடன்; குதறிவேனே,

(இராமர் தன்னுள்.)

அடுக்குமொழி.

அந்தணன்பிங்களன், சந்தித்திருக்கலாம்,
இந்தச்சொற்சீதையென், றெந்தாக்கியம்புதே.

(வெளிப்படை) விருத்தம்.

ஓங்குபுகழ் வெண்டிங்கள்முகி உருக்கொண்டெழுத்த வான்மின்னே ன்
ஓங்கிப்புடைத்து வட்டமிட்டு விம்மிவிரிந்து பொன்மார்பி

குங்கிக்குவிந்து பரந்தெழுந்த தங்கக்கலசமுலைமடவா
பாங்கிப்பெண்கள் சூழும்கடப்பாவை நல்லாளார் சொல்லா

அடுக்குமொழி.

மாதிவள், சீதைசொல்.

(மாரீசன் தன்னுள் வசனம்.) ஓ, இங்ஙனம், பிங்களவேடத்துடனிருந்தவன் காசிபனன்று சொல், அதனால்த்தான் இங்ஙனமிவனிப்படிச்செப்பிலன்.

எப்படியெனில், நீ சூத்ர வாதற்றவனெனில் சற்றுமுன் பிங்களனாகத் தோற்றியதென்னென்றே.

(வெளிப்படை.) இராமவிபோ, அவன்தானிவன்.

இராகம் ரீதிகௌளை. ஆதிதாளம்.

பல்லவி.

நங்கையிவள்சாமி சனக நங்கையிவள்சாமி,

அநுபல்லவி.

தங்குபுகழ்துரை ச்சிங்கனேஸற்சன
சங்கனேராமா மங்களசிதையா ம். (நங்கை)

சரணங்கள்.

அன்னமெனும் நடையாள்
பசுஞ்சொன்ன, நிறமென்ன, ச்சொலும்வன்ன, மேனுன்னயமட
வன்னமெனும் நடையாள்
அடிமேலடி வைத்திந்த ப்படிமிசையே பொருந்த
நடையிற்சிறந்த நல்ல வடிவினிலே மிகுந் த
வன்னமெனும் நடையாள் சோதி
மின்னலெனும் இடையாள் இவள்
அங்கமாயிர மாத்தனை தங்கமாம் புடத்தினின்று
பொங்கமா யெழுந்தாலென மங்கைவேள் வியில்வந்த (நங்கை)
மாதபிராமி
மிகவாகு, பெற்றமாகு, புகழ்பாகும், பழிப்பாகுமெனுஞ்சொல்
மாதபிராமி

இந்தவஞ்சியின் முகங்காணுங்க னஞ்சகியே னதனினும்
மிஞ்சுமத மிறிடாகிர் என்செய்வே னெனுஞ்சிற்றி டை
மாதபிராமி ஏழிந்
சீதையெனும்நாமி அந்த
மாமுனிகோசிகருந்தன் மாமுணஞ்செய்தற்கும
மாமெனக்சபட்க்காட்டி நேமமாயழைத்துவந்த (நங்கை).

காமனேவேவி
பாலுங்கசந்து, அங்கம்பசந்து, கைகாலசந்து, வாடிசைக்குங்கும்படி
காமனேவேவி
இந்தக்கண்டுமொழி சொற்பனத்தில் கண்டுடனேயே மனத்திற்
கொண்டுமையலால் வெகுப்பச் சண்டப்ரசண்டமாய் சித்த ம்
காமனேவேவி வருத்தலால்
சோமமுக்த்தேவி உனை
காலையுமாலையுமாகு பாலனேலோலனோமா
நீலவுண்ணனேகாவென ஓலமிட்டுக்கொண்டிருக்கும் (நங்கை)

(இராமர்) களிப்புடன் தன்னுள்,

ஓ. என்மனமே நீ மஹாபாக்கியசாலியாகின்றாய்.

[வெளிப்படை தொடர்மொழி] ஆசைக்குகந்த நேசாசிபர் நம் பிங்களன் இம்மங்கை சிரோன்மணியைக்குறித்து இங்ஙனமுரைத்தசொற் பயன் மன்றுள்ளதே.

(மாரீசன் தன்னுள் வசனம்.) அவன் எதார்த்த பிங்களன்றான், நம் காரணத்தே இலக்குமணனிறந்தே போயினான். அதற்கேதும் ஐயமில்லை இனியென்செய்வது.

(வெளிப்படை.) ஓ, ரகு குலோத்துங்க சிங்கநாயகமே, அப்பிங்களனெங்ஙனஞ்சென்றனன்.

(இராமர் தன்னுள்.) ஓ, ஓ, அவனிவனைச் சந்திக்கவில்லையென்பது இன்னம் ஈதென்கொலோ.

(வெளிப்படை வசனம்.) மாசற்ற நேசாசிபு, நின் வரவை நாடிச்சென்றனன், நீ காண்டிலை கொல்; ஹா, ஹா!

விருத்தம்.

விண்டலம் பாகுமேவி விளையாடித் திரிந்துலாவு ங்
கொண்டலைத் தடுக்குமூச்சிக் கொப்பினைத்தருக்கன் குழந் து
மண்டிகொனக் தன்னிலப்பிடி கன்றனை மாதங்க ஞ்
கண்டதால் வளைந்துமுன் போற்றெருந்தரிக் கின்றதே வே.

(மாரீசன் அத்யானந்தபரிதனுய் தன்னுள்) தொடர்மொழி. பிங்களனுருவாய் இங்ஙனமிருந்தது, நங்காளன்றான் சங்கையொன்றில்லையாம் எனங்ஙனமன்றே.

விருத்தம்.

பிங்களன்றனை முன்போலப் பிடித்துத்தந் தாயளந்தா ன்
சங்கடஞ்செயுமோ வென்னச் சாற்றலால்மிகச் சந்தோட ம்
பிங்களனென விருந்துபேசி ஜாலங்கள் செய்தோ ன்
சங்கையொ ன்றில்லைத்தம்பி தானிதிற்றளம் பேன்மா தோ.

களிப்படையவேண்டிய இடத்தில்க் கடுந்துயரடைந்தேனே.

(வெளிப்படை வசனம்.) ஓ, ரகுநாயக இந்தமாகந்தவனத்தில் அவ்வி தபீதியில்லை, ஆகையால் சஞ்சலப்படவேண்டாம்.

(என) த்தியானஞ்செய்கின்றனன்.

(காசிபர்.) எதிர்ப்பில் கொஞ்சத்தூரம் எட்டிநோக்கி ஓ, ஓ,

விருத்தம்.

அல்லெனுங்குழலினள் வில்லெனும்நுதலினள் எல்லியைப்பழித்தசெவ்வாயாள், கல்லெனுந்தனத்தினள் வல்லிமென்மருங்கினள் காவலன்ஜனகன்றன்பாவை, பல்லவச்சயனத்திற் பாங்கியர்சூழ்ந்திடப் படுத்துழன்றெழுந்து முட்கார்ந்தும், வல்லமன்மதன் கொல்வாதையை வகித்துவாட்டமாய் வருந்துகின்றனளோ.

(வசனம்.) அகோ, வகோ, இதுவென்கொல், அவளோ இதற்கரையோஜனைதூரத்தில் கௌசிகாச்சிரமத்தில் வசிக்கின்றனள், இவளோ அவட்கு சமானவதியான மற்றொருத்தியாக இருக்கவேண்டும். அடுத்தப்பக்கத்தில் நோக்கி,

(வசனம்.) பயத்துடன் அடட, அதோ அந்த பெரியவட்டப்பாறையடியில் மறைவாய் காய்ந்த இந்தனங்களிற்பற்றிய அக்கினிசொலிக்கின்றது ஆகையால் நினைக்கின்றேன், விரகச்சுரத்திற்காற்றாதிக் குமரி வீழ்ந்திறப்பதற்கு வளர்த்திருக்கின்ற விதம்போல் விளங்குகின்றதென்றே.

(அடட) இதெல்லாம் வாஸ்தவம்போலவே விளங்குகின்றதே.

இராகம் காம்போதி, ஆதிதாளம்.

பல்லவி.

இந்தவிதமெல்லாம் மிகச்சந்தேகமே இதிலுண்மை
என்னளவுங்கொள்ளவில்லை யந்தராத்மா.

அநுபல்லவி.

சுந்தரக்குழற்சன கன்றவத்தெழுந்தமாது
இந்துமுகச்சுந்தரியாம் பைந்தொடி சீதையிங்கேது. (இந்த)

சரணங்கள்.

அந்தகோசிகனார்தம்வ னந்தனிலல்லவோயெழி
பந்துமுலைச்சானகியும் சகிமார்களு
வந்திருக்கின்றார்களன்றி யிந்தவனத்தினிலே
சந்தமுமவளைப்போல் சுந்தரிவேறொருத்தி யோ.- (இந்த)
காமவிகாரத்தினாலே ராமாராமாவென்றிவளு
பூமகள்சானகியைப்போற் புலம்புகின்று
சோமனையுந்தென்றலையும் மாமயலாலேசிக்கும்
தேமல்முலைதனிற்கண்ணீர் மாமழைபோலப்பொழிகின்று (இந்த)
காயந்தனையேகாம நோயினாற்சுருக்கியாம
தீயின்முகம்விழவென்றோ திவளார்த்
தேயமாய்ச்சொலிக்கின்றது பாயமாய்ராக்ஷதமா
மாயமோயிதென்னமோ அபாயமாயிருக்கின்ற (இந்த)

(நல்லதிருக்கட்டும் வசனம்.) பிங்களனையாவது இராமனையாவது யான் காணுமட்டிலும் இங்ஙனம் இந்தக்கொம்புகளின் மறைவுகளிலிருந்துகொண்டு இதனைப் பார்த்துக்கொண்டிருக்கின்றேன்.

(என)ப்பார்த்துக்கொண்டிருக்கின்றனன்.

(அப்பால்) பிங்களன் பிரவேசிக்கின்றனன்.

(பிங்களன்.) வேட்டையை நாடிச்சென்ற எனதிஷ்டன் இராமச்சந்திரனை இன்னமும் எங்கென்று தான்தேடுவேன்.

(என்று) நாலுபுறத்திலுஞ் சுற்றிச் சுற்றிநோக்கி.

(களிப்புடன்)விருத்தம்.

அடவியிற்சல்லியகாடிகள்புலிகள் அரிகள்வராகங்கள்முதலா
இடவிலங்கினத்தினுடல்கள்வெஞ்சரத்தில்சிதைபட்டிறத்தல்கள்சிறக்க
நடமதுபிடித்துவனந்தொறுநடந்துசார்ந்திடத்தெய்வசத்தா
இடைதெரிகின்றன்காசிபனதனுல்இராமனிங்கிருப்பதுமியல்.

(என்) அங்ஙனமன்றே.

விருத்தம்.

சொல்லினிற்பொருடென்சோலைத்துணரலர்விரசமாக
புல்லியவுயிர்வசந்தம்பொருமந்தமாருதங்க
எல்லைவிட்டகலாதேபோல்காசிபன்றனைவிட்டேகா
வல்லவராமனிங்கேவளரிடம்நோக்குவேனு
அதோ அந்தக்காசிபன்து பக்கத்தில் இலங்குகின்றனன்.
(எங்ஙனமெனில்,)

வெண்பா.

தோள்கொண்டதூணியொடுதுய்யமலர்க்கையிடத்தில்
வாளியொடும்வில்லினொடும்மாமணிபோல்—கேளாரு
வண்ணத்திருமேனிமால்ராமச்சந்திரனை க்
கண்ணுற்றேன்றேன்மாவின்க ண.

(என) பக்கத்திற்சென்றனன்.

(மாரீசன் பார்த்து தன்னுள்.) பிங்களவேடங்கொண்ட நம் சராளனிதோ வந்துவிட்டான்.

(வெளிப்படை.) ஓ, ஜயஸ்ரீராம, ரகுராமா, இதோ, இதோ, பிங்களன்றானிங்கெய்தினன்.

(இராமர் நோக்கி ஸந்தோஷபரிதனாகி ஓ வசனம்.) என்னுயிர்ச்சக பிங்களா நின்சொல் எதார்த்தமாகப்பலித்தது, நீ என்பாற்புகன்றது மித்தையன்று, உண்மைச்சொல்லினுன்னை உறுதியாய்க்கொண்டனன்.

(பிங்களன் தன்னுள்] இதுவென்கொல். அகாரணமாயென்னை இவனிங்ஙனஞ்செப்புகின்றனன்.

இராகம் கந்தாமச்சிரியை. சாப்புத்தாளம்.

பல்லவி.

உன்சொல் நிஜமென்றறைப்பானேன் காளியவள்.

அநுபல்லவி.

முன்சொன்னதென்ன கொஞ்சமும்மறியேனே. (உன்)

சரணங்கள்.

காடெலாந்திரிந் துடல்வேர்த்து இவனைக்
கண்டிடவந்தொன் றம்பலிண்டிலேனைப்பார்த் து (உன்)
காரவைமொழிதமிலாதே இராமனிப்படிக்
கழறுவதென்னவோ காஞ்பேரமிப்போ (உன்)

(வெளிப்படை) அடுக்குமொழி.

விர்த்திசெய்வாக்ச்ச, மார்த்தவென்றுயிர்க்,
சர்த்தனேநின்சொல், அர்த்தமறிகிலேன்.

மாரீசன். பிங்களனைத் தழுவிக்கொண்டு இரகசியமாய்.

விருத்தம்.

பிங்களனென வேலக்தோன் பேயன்காபென்று வெனலு ம்
அங்குநீ யினியோனம்பா லாவிம்மாய்ந்திட்டா யென்று ம்
சங்கையுற் றிதுகார்மட்டுக் தனம்பினே னென்கரா னா
இங்குயிரு னனுய்க்கண்டே னீசுரா நினைப் பா.

பிங்களன சிரித்துக்கொண்டு தனக்குள்

அடுக்குமொழி.

மாசுகளொளித்த, காசிபமுனியும்,
வாசகப்புலம்பல், பேசுவதென்னே.

(வெளிப்படையாய்) அடுக்குமொழி.

என்னொருரகசியத், தென்னபுகன்றீர்,
இன்னமோர்தரம், பன்னிவீரே.

(மாரீசன்) பயத்துடன் பார்க்கப்பார்க்க விழித்துக்கொண்டிருக்கின்றனன்
(இராமர்.) பிங்களா, என்ன நினைக்கின்றனை.

அடுக்குமொழி.

கவலைப்படுகிறாய், குவளைக்கண்ணிருள், இவளைப்பற்றியே, விவரிக்கின்றனம், (என) ப்புருவம் நெரித்துக்காட்டினர்.

(பிங்களன் தன்னுள்) கட்டளைக்கலித்துறை.

கோங்கிளமாமுலைக்கோதைவிதேகன்குமாரிசொ லோ
பாங்கியர்சூழ்ந்து பணிசெயப் பூருகிணைப் பாங்கதி லே
யீங்கெழிற் பல்லவப் பாயலினிற் சாய்ந்திருக்கின்றன ன்
ஓங்கிவுடன்றசை முன்சொலெனக்கிங் குணர்த்தின னே.

(சற்று நிதானித்து) அகோவகோ, யீதென்னபுதுமை, அவளோ, இதற்கை யோஜனை அரத்தில் கௌசிகாச்சிரமத்தில், வசிக்கின்றனள்

(என) வியப்புடன், பார்த்துக்கொண்டிருக்கின்றனன்.

(மாரீசன் தன்னுள்.) இவன் கம்சாரனென்று பின்னையோ எதிர்த்த பிங்களன்றன், அந்தோ, அந்தோ.

கலிவிருத்தம்.

எங்காரனையெண்ணியெப்பாவ மோ
சங்கைகொண்டேன்சரியாய்முடிந்த தே.
(அல்லால்,) பிங்களனுருப்பிடன்கொண்டவ ன்
எங்கனுவதொளிந்தலைவரன்கொ ளோ.

(இருக்கட்டும்.)

கலிவிருத்தம்.

விதனமெய்திடவேவியிதாங்கொ ளோ
சதிவன்மாய்கைச்சந்திராசக்திய ள்
கதிர்குலத்தருக்காளையிராகவ ன்
கதைமுடித்திடக்கருதவேண்டுமோ ல்.

(வெளிப்படையாய்.) ஓ, அதிசுந்தர, புயமந்தர, ரகுநந்தன, இராமசந்திர. (சிங்காரக்கவி) இங்ஙனம் நோக்குக. சுந்தபந்திய, கந்தமாதிலன், சிந்தைகைத்து, வருந்துகின்றனன்.

(இராமர்.) பார்த்துக்கொண்டு தானிருக்கின்றேன்.
எங்ஙனமெனில்,

கட்டளைக்கலித்துறை.

கண்ணம்புயங்களின்வீழ்மகரந்தக்கணங்களென
பெண்ணைமுகச்சந்திராமுதத்திரத்தைப்பிந்துவென
இன்னமும்நீர்த்தனத்தாளிவணுதிர்க்கின்றகண்ணீர்
என்னைக்குலைத்தென்மனத்தினையேடறுக்கின்றதுவே

(மாரீசன்.) தியானஞ் செய்கின்றனன்.

[ஒருத்தி] இராகம் கேதாரம்.

கண்ணிகள்.

(ஒருத்தி) தேடியினிப்பொருக்காதிவள்தேகம் என்றெனக்குச்சாம்வீளம்புதே
பனிநீர், சீதச்சந்தக்குழம்பைமாதங்கத்திற் றடவித்திரும்புமுன்பொறுக்காய்
கிளம்புதே

இராஜன்வரநீலசரோசமலர்கள்மலர்ந்திலகிடுங்களித்திடுந்தா னே
(அதுபோல்) இராஜன்வந்தால்முகம்பிரகாசித்திடுவென் சுகமெய்துவளிந்தமட மானே
இராமனைக்கண்டவுடன்மாமலர்க்குவளைகள்வெழில்பெறவிளங்கிடுமல்லவோ
(அதுபோல்) இராமனைக்கண்டாளுடன்காமநோய்தீர்ந்துசுகம் எய்துவளதைச் சொல்லவோ.

இராமர் (ஜாவளி)

இராகம் கரகரப்பிரியை. சாப்புதாளம்.
எந்தநின்னுலெவரு யென்றமெட்டு.

பல்லவி.

இந்தசகியின்மொழி யென்சொல்வேன் அய்யோ.

அநுபல்லவி.

பைந்தொடி சீதையின் பக்கலிலிருக்கின்ற (இந்தசகி)

சரணங்கள்.

சுந்தரியிவளுக்கு சந்தசுகமரு
எந்தன்பேரெடுத்தியம்பினளே அய்யோ
இந்தவசனத்தாலே சிந்தைகுளிர்ந்தற டோ (இந்தசகி)

மங்குலின்மழைகண்ட பங்கஜமுங்குளிர்த் தி
லங்கச்செய்கின்றவிதமென்னவே என்றன்
அங்கமெல்லாம்புள கங்கனிறம்பச்செய் த (இந்தசகி)

(பிங்கலன் சற்றுலோசித்து தன்னுள்.) இவன் காரியனன்று, ஆகையால், யானிவ்விதம் ஆலோசிக்கின்றேன்.

என்னெனில்,

விருத்தம்.

வல்லமாயாவி யென்றேன் வஞ்சனே ராக்கதனு ம்
சல்லியுள் ளழுக்காறுகித் தாடகா வதத்துறு லே
மெல்லியற் ஜனகியைப்போல் விந்தைமாயங்கள் காட் டி
வெல்லவோ அல்லல்மிக்க விளைவிக்கவந்தான் கொல் லோ.

(என்றே) அதிற்சற்றும் ஐயமில்லை, அதனால்த்தான், இவனென்பால் வந்த ஸம்பாவிதமாயுளதிறன், அஃதென்னென்று சாவ, பதிலொன்றுஞ்

சொல்லாமல் இளைத்தான், பின்னும் மயங்கிச் சஞ்சலித்துப் பாக்கப்பாக்கவிழித்தான், இருக்கட்டும்.

(யானிவனைச்செப்புகின்றனன்.) வெளிப்பட.

(ஓ, ஓ, மித்திரசிரோரத்தின ராயபத்திரா.

விருத்தம்.

பூங்குழற் சனகமாதி புகலவியதோனுன் று
பாங்கியரிவ ரேர்கின்ற பரிவுடனவர் வயிற்கு ம்
தூங்கிட யிந்நாள்வரால் லொருக்காலு மில்லோர் மா
மீதி யெல்லாம்மாயை யென்னவே விளங்குந் தோ.

(இராமர் தன்னுள்.) இதுவென்கொல், பூர்வாபரவிருத்தமாயிருக்கின்றிவன்வசனம்.

விருத்தம்.

சானகியிவ டானென்றான் சங்கதிநன்குணர்ந்தே ன்
ஆனகாசிபனையிங்கே யழைக்கின்றே னென்கின்றத் து
போனவன் வந்தான் யெல்லாம்பொருந்து மாய்கையென்று ன்
என்னிவை யெல்லாமாயை யெனநினைப்பதுநாந் தே.

(வெளிப்பட.) காசிபனால், பிங்கனவசனம் கேட்கப்பட்டதோ.

(மாரீசன்.) இராமனிடத்தில் இக்கியத்தில்.

விருத்தம்.

நினைக்கின்றேன் மாய்கைவல்ல நிசாசரொருவனுங் க
மனக்கபடத்தினேடு பிங்கல வடிவந்தாங் கி
சனக்கெடு தலையேசெய்த தாடகை தனக்குமைந் த
நினைக்கொலை புரியவெண்ணி நேர்ந்தனனிவ னிங்கென் றே.

(இராமர்.) ஸரி, ஸரி, நன்குரைத்தனை, நீ சொல்வது யுக்தமேயாம், பிங்கனனிங்ஙனம் போந்திடுங்காலிவன் யாதாகியடைவனோ.

(மாரீசன்.) தாடகை சுபாகு இவர்கள் யாதாகினைய டைந்தனரோ. அதுவேயாம்.

(இராமர்.) இஃதிப்படித்தான்,

பிங்கலன் (தன்னுள்) அஸேதுவசனம் ஓ, ஓ, மோசம்விளைந்ததே, அன்பிற்சிறந்த, நண்பனிராகவன், நீசநிசாசர, மோசமிதென்று, நினைக்காமல், இவனை நேசாசிபனென, நினைத்து இவன் பேசமொழியாவையும் ஆசையொடு கேட்கலாயினன்.

(வெளிப்படையாய்.) இஷ்டசிகாமணி இரகுகுலமாமணி.

அபிக்குமொழி.

என்னையலாதிவன், சொன்னதைக்கேட்டிருய்,
சன்னியமாங்கொலோ, இன்னலென்றறிவையே.

(இராமர்.) புருவபங்கத்துடன், இதுவென்சொல், மொழிக்கிடையே இவ்விராக்கதனும்வந்து தடங்கல்செய்கின்றனன்.

(பிங்களன் தன்னுள்.) பயமும் துக்கமுங்கொண்டு.

இராகம் பியாகு. சாப்புதாளம்.

பல்லவி.

இனியென்செய்வேன் எப்படியுய்வேன்.
ஈதென்னமாயம் யீதென்னவனியாயம்.

அநுபல்லவி.

நனிஇராமனுயிர்க்குயிராய் வாழிருந்தேனே அவன்
அனேகப்போது விமுகங்கொண்டு எதிர்த்துநின்றனே
எவனோ பயமென்று னே. (இனியென்)

சரணங்கள்.

அன்னியனென்றுமட்டிந்தானே அரக்கனென்றனே அவன்
பின்னுமென்மேற் கோபஞ்செய்கின்றான் பிங்களனே
பேச்சென்னதுல்வே னே (இனியென்)
அங்கனிவன் கூறியுமன் கள்ளராக்கதனே சூது ம்
சூதிற்சோனன்றுதி ராமனைப்பேதித்திட்டா னே
இனிப்பிழிக்க ஒட்டா னே. (இனியென்)
விட்டுப்பிரியா னிப்போதென்னை விரட்டுகின்றனே. இராமன்
அஷ்டஅரக்கன்சொற் கேழ்க்கின்றான் சுமுகமாய்த்தானே
இஃதெக்காலமோ அறிபே னே. (இனியென்)

(வெளிப்படை) அபிக்குமொழி.

புலவர்முதல்வீரனே விவரித்துரைப்பதேன்
இவ்விஷயமதிற் வெளிக்கவேண்டுமோ.

(என) முகம்வணங்கியிருந்தனன்.

(மாரீசன்.) தியானஞ்செய்கின்றனன்.

(மாயாசீதை.) ஹா. சகிகாள்.

கலிவிருத்தம்.

குறைத்தவம்புரிந்தேற்குக்கோதிலா
நிறைத்தபாக்கியம் எங்ஙனம்சேர்ந்திடும்
உறைத்தவண்மைமல் வுத்தமராமனென்
விறைத்தனிச்சுகமெந்தனுக்கெய்துமோ.

(இராமர்.) ஹா. அடி. என்காதற்குரிய மாதுசிரோன்மணியே.

இராகம் நாதநாமக்கிரியை. ரூபகதாளம்.

அடிஅன்னமே அடிசொன்னமே என் ஆவி யே
இன்சுகவாவியே தேவி யே (அடி)
கொடிஇடைமென்கொம்பே குடிகொளுமென்அன்பே
கட்டுமுலைபொற்செம்பே வடிவுளகண்ணம் பே. (அடி)

மயிலே, குயிலே, உனக்கென்சுகமெய்துதலோ, அறிதென்றனை

கட்டளைக்கலித்துறை.

மானேநினக்கென் சுகமெய்தலோ மிகவன்மையென்று ய்
தேனேயதென்னடி செப்புதிமாரன் செறுக்குலை ர் ந
கானேமெலிந்து வருந்துகின்றேனென்கஞ்சன் மலர்க்க ண்
டானேகொடுக்கிவெளிதேபெறுவை யென்றன்சுக மே.

வேறு. கட்டளைக்கலித்துறை.

கட்டழகிசனகன்மகளே கனகாரவிந் த
மொட்டெழிற்கொங்கையின் மொய்குழலே உனை முத்தமிட்டுக்
கட்டியணைக்கக் குவளையங்கண்கள் கடாக்ஷிப்பையே ல்
துட்டமதன் பகைவிட்டுய்குவேனடி சுந்தரி யே.

[மாரீசன் தன்னுள்.] ஓ நிரம்பஸந்தோஷம், இவனுக்கிவளிடத்திலாசையை சலியாவண்ணம் ஸ்திரஞ்செய்துவிட்டேன், ஆனதால் யானினைத்த தெளிதில்முடிப்பேன்.

[வெளிப்படையாய்.] ஓ கோமளகாத்திரா, ஸ்ரீராமபத்திரா.

அடுக்குமொழி.

மாமயல்மிஞ்சுமிப், பூமகள்ஜானகி, காமமுற்றுப்பெற, நீமனம்வைப்பையே.

(இராமர்) அடுக்குமொழி.

ஓ கோக்கந்தெறிந்த, வாக்குநன்னய,
சிலாக்கியகாசிபா கேட்கக்கடவாய்,

விருத்தம்.

கானகத்தில்யாரெவளைக்கண்ணுற்றேன்கொல் [ஆச்சரியத்துடன்]
காதலியென்னுயிர்ச் சனகியவளாய்க்கண்டேன்.
எனகமெய்யினைத்தனளென்றாயுங்கால் [களிப்பனுராகத்துடன்]
என்னிமித்தமதச்சுரத்தாலெனவுநிந்தேன்.
பானகவின்மொழியாள் சந்தாபந்தீர்க்கப் [புளகங்கொண்டு]
படுவதென்றாலிங்கனமாம் பகரக்கேட்டேன்
யானகமகிழ்ச்சியொடு தழுவற்பாங்கே
என்றாலும்வதுவை இலாததஞ்சுகறேனே.

[மாரீசன்.] தியானம்செய்கின்றனன்.

[மற்றொருசகி.] எனதாருயிர்க்கண்ணாட்டி.

கொச்சகக்கலிப்பா.

கட்டிக்கரும்பே கனதனமே கண்மணியே
வட்டிக்குந்தேனே மகராசி யுன்றனக்கென்
இட்டர்க்கறிதன் கேழ்வனையே கோசிகனார்
இட்டுக்கொண்டென்பாலிற் செய்தாரவர்கா ணேந்திழையே.

[இராமர்.] ஆ, ஸரி, ஸரி, இம்மொழி பிங்களனுரைக்கக்கேட்டிருக்கின்றதுவே.

[பிங்களன்.] அகோவகோ எதார்த்தவர்த்தமானத்தையனுசரித்து சம்பாஷிக்கின்ற இம்மாயாவிலாஸம் ஆச்சரியமாச்சரியம்.

(மாரீசன்) ஓ புவனநாயகனே, இவனுரைகின்றன் செவிப்புக்கிற்றே.

(இராமர்) அடுக்குமொழி.

நீசனிவன், பேசுமொழி, காசிபனுக், கேசரியாம்
காசிபன்றான் கேட்கவேண்டும்,

(காசிபர்) வாஸ்தவமாய் ஜானகிபரிஜனந்தானா, ஒன்றுக்கொன்று புலம்புகின்றது.

(பிங்களன்) என்மனது, கொஞ்சங்கூட விசுவாசிக்கிறதில்லை.

(மாரீசன்) தியானஞ் செய்கின்றனன்.

(ஒரு சகி) அடிசகி இது நிற்க.

கலிவிருத்தம்.

கனத்தமென் முலைக்கன்னி நல்லாளிவ
டனைத்த சகண்டன்றான் விரும்புறான்
எனத் தளம்பிமனங் கொதிக்கின்றனள்
அனர்த்தமா மஃதல்லால் மற்றில்லையே.

(காசிபர்) ஓ ஓ யீதொன்று பொய்யான சமாசாரம், ஜனகராஜன்பால், இதுமட்டிலும் தசக்கிரீவன் யாசனை செய்யாமலிருக்க, யீதேதுஸமாசாரம்.

(இராமர்) அடுக்குமொழி.

ஓ ஓ இதுவென்னெனில்,

ஐந்திருகந்தானும் வந்துபிரார்த்திப்பதாய்
தந்தஇவ்வாசகம் விந்தைசந்தேகமாம்.

(பிங்களன்) சதொருக்காலும் இல்லவே இல்லை,

கலிவிருத்தம்.

அன்னியாய மிதார்பொருப்பார் கொலோ
மன்னன் பாவிவையான் வசனித்திடல்
பின்னமாம் தக்கதன்று வீண்பேச்சதாம்
என்னையோ வல்லரக்க னென்றிட்டலால்.

(வெளிப்படையாய்) அவனிக்கரசே, இவனைப்பற்றிக் கவனிக்கவேண்டும்.

(இராமர்) செவிகளை வேறுசாய்த்து) ஐந்திருகந்தானும் வந்து பிரார்த்திப்பதாய்த் தந்த இவ்வாசகம் விந்தை சந்தேகமாம். (என) திரும்பப்புகன்றனன்.

(மாரீசன்) அதிலென்ன பாதகம் ஸ்வதந்திர மிருந்தாலும், சிற்சிலவிடத்து பாதந்திரமும் வேண்டியிருக்குமல்லவோ.

(மாயாசீதை) கண்ணீர்ப்பெருக்குடன்) ஓ ஓ யெனைத் தசகந்தரனும் விரும்புகின்றான் கொல், ஊ ஊ.

இராகம் முகாரி ஆதிதாளம்.

பல்லவி

இந்தவினைக்கென்னசெய்வேன் அந்தோ அந்தோ.

அநுபல்லவி.

அந்தசகந்தரனும் எந்தனையா சிக்கின்றனே. (இந்த)

சரணங்கள்.

பத்துத்தலையுமிருபதுகைகளும் பிசாசுபோல்
சத்துருவந்தெனைவேட்கக் எத்தனிக்கின்றனே. (இந்த)
சந்தானிராகவன் வந்துமணஞ் செய்துசுகந்
தந்திடப்பெருமுன்னகைத் தொந்தரைவிளைந்ததானுல் (இந்த)
அன்னவன்வந்துயாசிக்க என்னையென்றந்தைஜனக
மன்னவனீய்ந்திடுவானோ கன்னிகாளிதென்னமாயம் (இந்த)

அடியே அடியே அவ்விதம் நடக்குமாயின் உடனே யென்சரீரத்தை மாய்த்து விடுவேன்.

இராகம் புன்னாகவராளி ஆதிதாளம்.

பல்லவி,

ஈதுசரதந்தரனே ராமனுக்கல்லா லெவர்க்குஞ்சம்மதியேனே.

அநுபல்லவி

மேதினியில் வரலாகாது பெண்ஜன்மமிது
பாதகனுக்கானாவதேது மாதேயிப்போது [ஈது]

சரணங்கள்.

சற்குணரூபதியே ளனக்குகந்த
சாமியென்னதிபதியே அவனேக
இக்கப்பொருந்துமல்லா லெவர்க்குமென்றேகம்
அக்ரமமாய்த்தொடப் பொறுக்காதிதுசுபாகம். [ஈது]
எந்தையவனுக்கெனையே பரிணயஞ்செய்
தீந்தாலுங்கர்மவினையே இதுதானென்றே
செந்தழற்குழியினி லந்தக்கணமேமாய்வேன்
கொந்துவிடத்தினை யருந்தியாவதுமாய்வேன். [ஈது]

[இராமர்] ஆனந்தபரிதராகி,,

கட்டளைக்கலித்துறை

மாணிக்கவல்லி மரகதவல்லி மதனவல்லி
எணிக்கண்மாதிவள் எண்ணமெல்லா யென்னிடத்திலொற்

காணிக்கணைக்களவும்மற்றிடத்திலைக்காமத்தினு ல்
வாணிக்குயிலினளென்மனத்தைவிலைவாங்கின ளே.

[என] ப்பார்த்துக்கொண்டிருந்தனன்.

[காசிபர்.] காளனைநோக்கி, (களிப்புடன்) இதோ பிங்களன் என்னை வந்தடைந்தனன், மிரம்ப சந்தோஷம்.

அடடா, இக்காட்டினிடமாய் வேட்டையை நாடிவந்த இராகவனைக் கண்ணுற்றனை கொல்.

[காளன்.] அவனைக்கண்ணுற்றது மட்டுமன்று, நின்சொல் வழிப்படியே என்றால் அவனை வனாந்தரவனத்திற்கு, எந்துக்கடையாய் வமாற்றியழைத்துவரலாயிற்று.

விருத்தம்.

கண்டதன்றிபுன் கட்டளையின் வழிகருதிக் கானவந்தத்தி ல்
ஒண்டியாய்வர விடுத்தனன்கணத்தே உன்னையென் கண்ணிற்காணுதா ல்
வண்டன்கோசிக னேவகொடி லக்குவன்சாமதற் கிலக்கா கி
விண்டனைவல்லுயி றென்றொருசங்கை மேவியென்மனங் கலங்கினதா ல்.

[காசிபர்.] சற்றுலோசித்து [தன்னுள்,]

விருத்தம்.

அப்பிங்களன் வடிவாகின னர்கொலிவ னர்கோ ல்
செப்புமினி யான்பக்கலிற் சேர்ந்தோங்கிடு மென் னை
ஒப்புந்தன துறவாய் நினைக்கின்ற னென்னுருவ ம்
இப்பூவினிற் புனைந்திட்ட வன்யார்கொல் யார்கொல் லோ.

இருக்கட்டும், எல்லாம் அடைவே அறிகின்றேன்.
(வெளிப்படையாய்.) இராமனிப்பொழுதிலெவணிருக்கின்றனன்.
(காளன்.) தன்னுள்.

விருத்தம்.

சிந்தை இராகவன்பாற் சென்றதா லெனைத்தேற்று து
வந்திது புகன்றனீதில் மற்றிலைத்தின்னணத்தா னோ
(வெளிப்படையாய்)
பைந்தொடி ஜனகிதன்னைப் பரிந்தெதிர் பார்த்துக்கொண் டே
இந்தமாகஞ் சந்தோஷி இருக்கின்றன் ரகுவீரன்றா ன்.

(காசிபர்.) இவள் சீதைதானென்னத் தெரிந்தனைகொல்.
(காளன்.) நகைப்புடன்.

அடுக்குமொழி.

அப்படிப்புகலினும் இப்பெரும்படியினில்
செப்பிடுன்மாயையென் றெப்பமாயறிவனல்.

விருத்தம்.

சதிமயன் வித்திச்சிக் வஞ்சம் பானிக்கிரா ரி
முதிர்வஞ்ச மாய்கைவல்லோர் இவரினும் முதன்மையாக த்
துதிபெருந் தாடகேயா சொல்லவுந் தரமோநின்ற ன்
விதவிதமாய ஜாலவினை வினைத்தெரி வேன்மா தோ.

(காசிபர்.) உத்வேகத்துடன் (தன்னுள்) இவனே, மாரீசானுசரன், இவனொரு அரக்கனாயிருத்தல்வேண்டும். இதனால் அம்மாரீசனென்பவனும் மாயையாலெனதுருவத்தை வகித்துக்கொண்டு சற்றுமறைந்திருந்துகொண்டேமாயாப்பிரயோகஞ் செய்கின்றனென நன்கறியலாயிற்று.

விருத்தம்.

இனியென்ன பிழைப்போகோகோ என்னதான்செய்வேனந்தோ
தனிமையா யொருமான்போல் லாச்சார்த்துலக் கரத்திற்சிக்கி
கனியுயிருய்வ தெங்ஙனம் அரக்கன்பால் நா னே
வனமதிலகப் பட்டிட்டேன் வாழ்வது குறிரைக்கோம் பே.

என மனதினுள் கிர்த்தாரணை செய்து, மூர்ச்சைகெட்டு விழுந்தனர்.

(காளன்.) ஹ, ஹ, களைப்புவிடுத்துக் கண்விழிப்பீராக.

கலிவிருத்தம்.

எண்ணி யெண்ணிச் சுமந்தின் றெடுத்தாட னே
எண்ணி யெண்ணி யவளிறந்த கேட்டி னே
எண்ணி யெண்ணி ரகுவீரன் பலத்தி னே
எண்ணி யெண்ணி மனவேக்கமி தாங்கொலோ.

எனத்தேற்றினன்.

[காசிபர்.] சற்று களைப்புத்தீர்ந்து எழுந்திருந்து கைகால் நடுங்கக்கனைத்து கனைத்து கண்ணீர்வடியக் கைகூப்பி அஞ்சலி செய்துகொண்டு.

இராகம் பியாகு. ஆதிதாளம்.

பல்லவி.

வல்லநிசாசரவந்தனம் வந்தனம்
மனதுவைத்தாண்டருள் ஆண்டருளே.

அனுபல்லவி.

தொல்லைசெய்மாரீச னல்லநானெளியேன்
துன்பஞ்செய்திடல் வந்துசூழ்ந்திடும்பழியே.
நல்லவார்த்தைசொல்லி நாடியைத்தாங்குறேன்
நம்பினேன்நானுனைக் கும்பிடுறேன் (வல்)

சரணம்.

தயைபுரிவாயே சாசுவதமா யே
ஸாமிஸகலஸம் பன்னனுய்நீயே
நயமுடன்நற்புகழாய் வாழ்வாயே
நாயகராக்ஷத குலபதி யே. (வல்)

(காளன்.) சோகவேகத்துடன்.

அடுக்குமொழி.

அண்ணன்மாரீசனை எண்ணிடும்பாவமே
திண்ணமதாச்சதெவ் வண்ணம்யானுய்குவேன்.

ஹ, ஹ, கஷ்டங் கஷ்டம்.

இவன் பிராமணப்பயல்தான் மஹா மூடனாகிய நான் இவனை மாரீசனென்றெண்ணி உண்டானதெல்லாம் உளறிவிட்டேன்.

[வசனம்] ஹா மாரீசா வித வித மஹா மயாதுரந்தரா எனப் புலம்பத் தொடுத்து, (அவ்வளவுக்குள்) அட்ட இப்பொழுதிப் புலப்பத்தாலென்பயன் இது தருணமல்ல இது நிற்க (கோபாடோபத்துடன்) அடடாக்ஷத்திரியச் சிறுபயலே சுமித்திரையினு தரத்தினின்றும் வெளிவந்த துஷ்டப்பயலே.

(என) உங்காரஞ்செய்து சற்றுலோசித்து, ஹ, ஹ, இவன் விஷயமாய் அளவுக்கு மிஞ்சுகின்றதென் பட படப்பு.

விருத்தம்.

படுபயலிராமனைப்போலிலக்குமன்றன் பலம்படைத்தோனவனை எட்டிப்பார்ப்பதற்கும், திடமுடையனல்லேன்யான் வீரம்பேசிச்செய்வதென்னையானையை வெள்ளாடென்செய்யும், அடல்மதமாரீசவதம் சகியேனந்தோ, அனியாயமதற்குப்பதிலமைப்பதிந்தத், தடிமறையோன் றனைவதைத்தல்தகுதியாகும் தருக்தகுமப்படித்தானே சரிசெய்வேனே.

(என) குபீரென்றெழுந்து காசிபனுடைய கண்டத்தை துண்டுசெய்ய ஆரம்பித்தனன்.

(காசிபர்.) தந்திரமாய் விடுவித்துக்கொண்டு இராமனிருக்கிற தேன்மாமரத்தை இலக்குவைத்து ஓடுகின்றனர்.

(காளன்.) பின்றொடர்ந்தோடுகின்றனன்.

(காசிபர்) இராகம் பியாகு. ஆதிதாளம்.
தேவாதிதேவனே என்றவர்ணமெட்டு.

புயபலவீமா ஜயஜயராமா ஒரு
பொல்லா அரக்கன்றான், எனைக்கொல்லவருகின்றான் ரகு
பூபா, பிரதாபா, இந்த ஆபத், திற்காப்பாய்சா மி [புய]
மோசநிசாசரன், மாரீசனுக்கனுசரன் இவன்
முதிர்வஞ்சமாயாவி, அய்யோ சதிசெய்திடும்பாவி இந்த
மூர்க்கன், வந்து, தாக்காமல்நீ, காக்கவேணும் ஸாமி, [புய]
ராமாசரணம், ஜயபூமாசரணம், ரகு
நாதனேசரணம், மனு, நீதனேசரணம், உனை
நாடி, வந்தேன், தேடி, நொந்தேன், ஓடி, என்முன் வா. [புய]

(இராமர்.) ஆ, ஆ, காசிபனுடைய சப்தம்போல் கேட்கப்படுகின்றது. அன்பிற் சிறந்த, நண்பர் நாயகமே, அஞ்சேலஞ்சேல்.
என விரைந்தெழுந்து நடக்கின்றான்.
(மாரீசன்.) இதுவென் கொல்.

விருத்தம்.

சொலித்திடு மணிமார்பா வெண்சுத்த வரனேபா னு
குலக்குண நிதியேராமா குறித்துன்பா லிடைவிடா து
அலக்கமா யிருக்கின்றேன் யான்காசிபன் றேன்றல்காண் டி
அலக்கண்சேர் இந்தச்சத்தம் யாதென் றெண்ணுகின்ற ய்.

(காளன்.) ஒருகுதியிற் காசிபனைத் தாவிக்கொண்டு, இராமனைக்குறித்து புலம்பிக்கொண்டு ஓடுகின்றனன்.

இராகம் பைரவி. ரூபகதாளம்.

பல்லவி.

பரிபாலனஞ் செய்வாய் பரந்தாமனே ஸ்ரீராமனே

அநுபல்லவி

கிருபாகர, இரவிகுல, நிருபாவெனக், கருள்வாயே (பரி)

165

சரணங்கள்.

83

பொல்லாவொருவன் புலிமான்றோ லை
போர்த்திவந்தாற்போல் காசிபன்போ லே
வல்லரக்கனுருக் கொண்டென்பின்னா லே
வந்திட்டானிதற் கென்செய்வோமே லே (பரி)

குதுவாதற்ற வேதியன்கா னே
தாய்காசிபனென் றெண்ணினே னே
வேதைவிளைந்த தென்செய்வே னே
விபத்துந்தவிர்த்தான் கதிர்ந்தா னே (பரி)

(என)ப்படித்துக்கொண்டிராமனை வந்திருகத்தழுவிக்கொண்டனன்.

(இராமர்.) மாரீசனிடம் ஓ என தாசைநேச காசிபனே, உயிர்ச்சகபின் கள்ளன் ஓடி இதோவந்தனன்.

(மாரீசன்.) களிப்புடன் (தன்னுள்) நமது காளனிவனேயாம், காசிபன்றனிவனைத் தொடர்ந்துவருகின்றான்.

(வெளிப்படையாய்) அடுக்குமொழி.

பூசல்மாரீசனென் வேசம்புனைந்திதோ
மோசமிங்குற்றனன் நேசர்காண்குதி

(காசிபர்) அடுக்குமொழி.

ஜயஜயபூமா, நயகுணசோமா
புயபலவீமா, இயல்புகேள்ராமா.

விருத்தம்.

என்னுடைப் படிவங்கொண் டிராக்கதமாரீசன்ற ன்
நின்னுடைப் பக்கல்வந்து நிற்கின்றான் சீதையென் று
தன்னுடை மாயஜாலந் தனையெதிர் காட்டியுன் னை
துன்னுமோ ராழிவீழ்த்தத் துடிக்கின்றானிவனிரா மா.

(காளன்.) களிப்புடன் (தன்னுள்) ஓ சரி சரி இவ்வனம் உயிருடன் காசிபவேஷமாரீசனைக் கண்டதும் நசன் செயலேயாம்.

வெளிப்படை.

(வசனம்.) இன்னவன் யார்கொல், என்னுருவத்தைப்புனைந்துகொண்டு முகத்தைத் தூங்கவைத்துக்கொண்டிருக்கின்றவன் யார்கொலோ.

(மாரீசன்) கலிவிருத்தம்.

இன்ன வன்றனை யரக்க னென்ன   வே
தன்னிக ரில்லாச் சதுர நாயக   ன்
புன்னுனிக் கூர்மைப் புந்தியி ராகவ   ன்
முன்னம் யோசனை முடித்திட்டானு   ரோ.

(பிங்களன்.) காசிபர் பாலனாகி,

விருத்தம்.

தூயகாசிப வென்சொல்வேன் துங்கனின் னுருவங்கொண்டான்
நேயமாய் கரனாவென்றென் னேர்நிகழ்த் தினதாவின்றே   ன்
பேயன் கரனன்றுவென் பீடைப் படிவங்கொண்டா   ன்
மாயமாரீசனன்றேன் வஞ்சனை விளைந்ததந்   தோ.

(இராமர் வசனம்.) அகோவகோ, இவனோ, பிரத்தியக்ஷ காசிபனை, மாரீசனெனவும் பிங்களனைக் கரனெனவும் பரிவாரத்துடன் இச்சீதையை, மாயையென்றும் பேசுகின்றான்.

ஈதெங்ஙனம் இயம்புவது,

விருத்தம்.

காசிபனைமாரீசனெனவு மிப்பிங்களன் றனைக் கரனவல்லரக்கனென்று   ம்
வாசமலர்க்குழலிபரிவாரத்தோடு வளர்சீதையின்னரசை மாயையென்று   ம்
பேசுகின்றானிவன்விந்தை இவ்விருவர்பிங்களராங் காசிபரிவ்விரண்டுபேரோ
நேசரின்னவ்வரிவிருவர் சிச்சியந்தானிசாமற்றிருவர் மிகவேத்திநேத்தி.

(கரனமாரீசர், பிங்களகாசிபரைக்குறித்து இராமனிடம்.)

விருத்தம்.

பருத்ததிண்டோளாய் மிக்கபலம்படைத் திடுவெங்கானா   ய்
உத்தராகவனே கேளாயுருமுன் றடைக்கல்வேண்டு   ம்
தரித்திலகிடும் வேடங்கடமைக் கண்டுசலித்திடா   தே
திரத்தஇவ்வரக்கர் தம்மைச்சிதைத்துமாய்த் திடுதியை   யா.

இராமர் கோபத்துடன் (பொதுவசனம்.) மூதண்டத்தையும் பிளக்கும் கோதண்டத்தில் நாணியிறக்கி பாணத்தையேற்றுகின்றனர்.

[காசிபர்]. ஓ ஓ ஆபத்பாந்தவ அனாதரக்ஷக அன்பர்க்குகந்தவ அபிராமராமனே, ஆதரித்தருளல்வேண்டும்.

விருத்தம்.

காட்டுவாய் மறைப்பாயன்பர் கருத்துளவிருளையெல்லா   ம்
ஓட்டுவாய் ராமசந்திரா நீயறியாதொன்றுண்   டோ
தாட்டிக மாரீசன்றன் ஜாலமாயங்களிலே   தே
நீட்டுவாய் தனுவைவேண்டா நிலைத்துளம்யோசியை   யா.

(இராமர்.) நன்றுநன், இதுவென்கொல்.

விருத்தம்.

எவரையென் னன்பாமென் றிசைந்திருக்கின் றேன்கொல்   லோ
அவரிடமெ ன்மனந்தா னவ்வளவுபொ ருந்தவில்   லை
எவரைவல்லரக்கரா மென்றெண்ணியே வெடுக்கின்றேன் கொ   ல்
அவரிடமென் னோக்கத் திற்கானந்த மாகுதந்   தோ.

(என) திகைத்துக்கொண்டிருக்கின்றனர்.

(மாரீசன் வசனம்) ஓ ஓ, இவரிடங்களில் பாணத்தை விடுகைக்கி இவன் சந்தேகப்படுகின்றனன். நன்று நன்று இதுநிற்க.

[என]த்தியானஞ் செய்கின்றனன்.

(ஒருத்தி) திரையைக் கையால்தள்ளிக்கொண்டு, பரபரப்புடன் (பிரவேசித்து) வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு) ஹ ஹ அந்தோ! அந்தோ! அடியே அடியேயாம் அடியோடே, ஹதமாய்ப்போயினோமடி, அடியே போயினோமடி,

மற்றெல்லவரும்) அதிபரபரப்புக் கொண்டவர்களாய், ஹா சகி அது என்கொல், என்கொல்; சொல்லுதி சொல்லுதி நமக்கு, யாதுசங்கடம் நேரிட்டது, அதைச்சொல்லக்கடவாய் (எனமன்றாடினர்.)

(மாயாசீதை.) உத்வேகத்துடன், படுக்கையினின்றும் கொஞ்சமெழுந்துகொண்டு, அடி சகி அதனை இன்னதென்று சொல்லக்கடவாய், என்மனது வேருடன் கெல்லுவதுபோல் என்னவோ செய்கின்றது, அதனை இன்னதென்று சீக்கிரம் சொல்லடி,

(பிரவேசித்தவள்) அந்தோ வந்தோ அடியோடேபோயினோமடி
அவ்வமங்களத்தை எங்ஙனம் புகல்வேனடி.

(மற்றவர்கள்) அஃதென்ன அமங்களமடி அதைச்சொல்லு சொல்லு,
அதற்குமேற்செய்யவேண்டியதாவதுயோசிப்போமடி,
அதைச்சொல்லு, சொல்லு.

௩-வது அங்கம்.

இராகம் பியாகு ஆதிதாளம்.

பல்லவி.

என்னடிமாயம் யென்னடி அனியாயம்
இன்னமுமியம்பிடாதேதடி யேசகி (என்)

அநுபல்லவி.

சின்னபின்னமாய்மனந் தன்னைஇவ்விசனம்
சிதறச்செய்கின்றதங்கம் பதறச்செய்கின்றதடி (என்)

சரணங்கள்.

பட்டணம்பரிபோச்சோ நஷ்டங்கள் வரலாச்சோ
இஷ்டபந்துக்களுக் கேதேனுமுண்டாச்சோசகி (என்)
படபடெனநீவந்த உடனேயெங்கட்கென்னவோ
அடிவயிற்றைப்பிசைந்து குடலைப்பிடுங்குதடி (என்)
இன்னதென்றியம்பதற் கென்னமாவதளப்பு
முன்னமேதோதறிந்து முயன்றுகொள்வோமடி (என்)

(என) பிரலாபித்தனர்.

(பிரவேசித்தவள்) யான் வேறென் சொல்லப்போகின்றேன்.

(என) கண்ணீரைப்பெருக்கினள்.

விருத்தம்.

கண்டப்பத் துள்ளான்வந்து கனபிரார்த்தனைகள்செய்து ம்
தொண்டுசெய் ஜனகனாலே சோதிமின் றேசையா ன
ஒண்டொடி தன்னைநீங்கெதற் குதவிடப்பெற்றே னல்லே ன்
தெண்டனைசெய் வேனென்னச் சீறியேமொழிந் திட்டானு ம்.

(மற்றவர்.) உத்வேகத்துடன் ஹா, ஸகி, அந்தப்பாவி தசகண்டனுல் தாதை ஜனகராஜனிடம் ஏதேனும் தீங்குகள் புரியப்பட்டனவோ.

(பிரவேசித்தவள்) விருத்தம்.

என்னென்று சொல்வேனந்தோ என்னுயிர்ச் சகிகாள்நம்ம ள்
மன்னவன் ஜனகராஜன் தலைதனைவா ளால்வெட் டி
பின்னும்மம் மடகல்லாளைப் பிடித்துக்கொண் டேகுவிங்கு ம
துன்னுமையலே போலன்றேன் துரிதமாய் வருகின்றன் ல்.

(மாயாசீதை.) ஹா, அந்தோவந்தோ என்செய்வே னென்

இராகம் நீலாம்புரி சகானு. சாப்புதாளம்.

கண்ணிகள்.

அய்யய்யோதெய்வமே, அனியாயத்தெய்வமே, அவத்திற்சோதித்தா யே
தெய்வமே
எய்யாக்கவலைக்கடல், ஷமய்யத்திலாழ்ந்தேனே, இனியென்செய்வேனை ய்
யோதெய்வமே
அருமைஅய்யாவே நீர்பெருமையாயெனைப்பெற் றனுபவித்ததிதுவோ விதி
யோ
தருமத்தறைத்திடாதெக் கருமமோவிளைந்ததே சண்டாள அரக்கன்செய்சதி
யோ
அய்யாவென்றினிநானே யாரையழைப்பேனோ, அஞ்சேலென்பதும் யெனக்
காரோ
ஒய்யாரமாயினி அம்மாவென் றழைத்தெனை உச்சிமுகந்திடுவாரா ரோ
சீருள்ளராமர்க்கெனைக்கல்யாணஞ்செய்திந்து காக்ஷிகண்டிருந்தாலாகாதா
பார்மீதிலவ்வளவு பாக்கியஞ்செய்திலேனோ பழிகாரியானேனே தா தா
பாவிராவணன் தீவினைபுரிந்திங்கு படபடெனவருவதா லே
பூவிலிருக்கலாமோ ஆவிபொருந்தலாமோ பூவையரேயினிமே லே.

(என்றலறிக்கொண்டே எழுந்தோடுகின்றனள்.)

(சகியர்.) ஹா, இவ்வனியாயத்திற்கென்செய்வோம் எனப், பின்றொடர்ந்தோடுகின்றனர்.

(இராமர்.) பரபரப்புடன், கிட்டவணுகி.

விருத்தம்.

அஞ்சேலஞ்சேல் கண்ணாட்டி ஆருயிர்ச் சனகமா தே
வஞ்சராவ் ணுபகாரம் வருமென்று நினைக்கவேண் டா
மிஞ்சுமிவ் வரக்கர்தம்மை வதைத்திடவேண்டி யென்று ம்
வெஞ்சரங் கோர்த்திலங்கு வென்றிவிற் சனத்தந்தா னே.

(காளன்.) பயத்துடன், மாரீசனிடம், இரகசியத்தில், ஹா, மாரீசா, என்ன இவ்வாறு மொழிகின்றனன். இப்பொழுதிதற்கென்செய்வோம்.

[மாரீசன்.] இரகசியத்தில்.

விருத்தம்.

கருத்துடன் புவிக்காய் களவுசெய்திட் டோன்றேனை
திருத்தமாய் வருடலென்னச் சிறுபிள்ளைத் தனமாய்ச்சொன்னாய்

உரத்தராகவனோ நம்மை உற்றவனென் றுட்கொண்டா ன்
ஆற்றிடா திருப்பாயிச்சொல் லவர்களைக் குறிப்பதா மே.

ஸ்ரீ (இராமர்) விருத்தம்.

நீங்கினைச் சனகன்பாற் செய்தசுக்ரீவன் றன்னைச்சீ ழி
யீங்குயிர் பறிப்பனிப்போ திருத்தவெம் பகழியா லே

(காபிபர் வசனம்.) அவ்விதேகன்பால் நீங்குபுரியயாதுகாரணம் வந்தே அதம்புதற்கிடமில்லை, எனெனில்.

ஸ்ரீ ஷெ விருத்தம்.

ஒக்குபெண் கேட்பதற்கும் உளமிலன் ஜனகன்பா லே
தாங்குகட் பதனலந்தத் தசக்ரீவன் சதிசெய்வா னே.

[கரானன்.] மாரீசனிடம், இசசியத்தில், எல்லாவற்றிலும் விருத்தமேசெய்து வருகின்ற இப்பிராமணப்பயலை அதஞ்செய்யவேண்டும்.

[மாரீசன்.] இது நிற்க.

விருத்தம்.

வச்சிரக்கடினக்கைக் கொடுபுடைக்க வணங்கியமுகத்தைராவதத் தை
புச்சத்தைப்பருகியோட வொட்டாமற் புரிந்தும்பர் புகழினைத்துலைத்த
மெச்சிலங்கேசன்றனை வதைத்திடுதல் மிகவெளிதாய் நினைக்கின்றான்
இச்சிறுமனிதன் ராமனைச்சயிப்பர் யாரேதுகாண் நாமெலாமிறந்தோம்

[பிங்களன்.] அதிற் சந்தேகமா.

[கரானமாரீசன்.] ஒருவருக்கொருவர் பயத்துடன், பிங்கள காபிபர்களின் வார்த்தையினால் ஒருவர்க்கொருவர் வர இதங்க விழித்தவர்களாய் இராமனிடம்.

[வெளிப்படையாய்] மாரீசன்.

இராகம் அடாணா. ரூபகதாளம்:

பல்லவி.

சாமி யிதென்னயோசனை இவனைக்கொல்ல
தாமோ மஹாராஜ னே.

அநுபல்லவி.

பூமிபுகழ் வீரர்க்குள் தலைமையா மாண்பிள்ளை
சேமமாய் ராமனென்று நீயிருக்கதென்ன சொன்னேன் [சாமி]

சரணங்கள்.

எதுகாண் கேட்டிருந்தேன் கொட்டாட்டாற் பிள்ளைப்பூச் சி
என்பார்க ளறியாயோ யிதெல்லாமிக வேச்சு
பாதக அரக்கர்சொல் நீதியாய்க் கேட்கலாச் சு
பழமையா மெங்கள்சொற் பாலுங் கசப்பாச் சு. [சாமி]

வஞ்சகமாய் வந்தவர் நேரேபோவாரோ சாது
மயிலே ஓரிறகு தாவென்று வதுதாறு து
மிஞ்சுமிவர்மே லென்ன தாக்ஷணியமதை யோ து
விளையாட்டல்ல யிவரைக் கொல்லவேணு மிப்போ து. [சாமி]

களைகடற் பொங்கிறாற் கிணர்கொள்ளுமோ அனேக ங்
கடைக்கண் சிவந்தாலுனக் கெதிர்நிற்குமோ லோக ம்
மனமுடைமை யாலிவர் அறியாதுனது சினேக ம்
மனதிற் பாராட்டிவந்தார் அதிலுமுண்டோ சந்தேக ம். [சாமி]

[என] இராமனைத் துறைசெய்துகொண்டு (இயானஞ்செய்கின்றனன்.
[காபிபர்.] திடுக்கிடென, உடல்நடுங்கிக்கொண்டு.

விருத்தம்.

வையகம் புகழுமயோத்தி மன்னவ ராமச்சந்த் ரா
வெய்ய மாரீசமாயம் யிதனையோர்க்கல் வேண்டு ம்
தெய்வமே கண்கெட்டாயோ திக்குவேறுண்டோ உண் மை
பொய்யதாய்ப் பொய்கள் மெய்யாய்ப் போனதென் கலியின்கோ ளோ.

(மாயாசீதை) விருத்தம்.

தலமிதி நெருக்கமான தருக்களினூடு தோன்று ம்
பலமதாய்ச் சொலிக்கா னின்றபாவகத் தன்னிலிந்த ச்
சிலையேறிப் பாய்ந்துதீர்ப்பேன் சீர்தந்தை யிழந்தசோக ம்
நலமகா புருடனாலே நான்கொள்வேன் சுகமுந்தா னே.

கலிவிருத்தம்.

ராம ராம நயனுயி ராம னே
மன்னா ரவிகுல சோம னே
வேம னற்குழி வீழ்ந்துன் விமித்தமாம்
காம வேட்பளை கணத்திற் றீர்ப்பனால்.

என்று சென்றனன்.

[பிங்களகாசிபர்.] தன்னுள், ஹா, ஹா, மாரீச மாயாப்பிரயோகத்தால் நடக்கிற சங்கதிகள், அடட, என்னென்ன ஆபத்தோ, அதிசயமாயிருக்கின்றது.

(வெளிப்படையாய்) விருத்தம்.

ஏதய்யா ராமச்சந்த்ரா யித்தனைமோக மெல்லா   ம்
ஓதய்யா அரக்கர்செய்கை துங்கனீயறியா துண்   டோ
ஓதய்யா அரக்கரமென் றெங்களையுளத்திற் கொண்டா   ய்
நீதய்யா யிதெல்லாம் நன்குச்சிந்திக்க வேண்டும்சா   மி

[இராமர்.] நல்லசிந்தனை, இதிற்சிந்தித்து யோசிக்கவேண்டியதுமிருக்கின்றதோ.

விருத்தம்.

தேசத்தைத் தீயில்வீழ்த்துஞ் செய்கையில் முயன்றுகொண்   டே
ஆசத்தி லெனைநினைத்தென் மேலுள்ள ஆசையா   லே
பாகொத்த மொழியாள்சீதை பிடித்திடுவார்த்தை யென்று   ற்
சாகத்தைக் கெடுத்தென்மர்மந் தனையறுக்கின்ற தந்   தோ.

காரளன் சிங்காரக்கவி.

அடிக்கடிமாறையென்று, படிக்குமிவ்வரக்கர்தம்மை,
கொடிக்குளுத்துங்கராமா, மடித்திடவேண்டுங்கண்டாய்,

[சகியர்.] பரபரப்பொடு.

விருத்தம்.

மாதரசேநமதையாவின்மரணவார்த்தையினில்வருசோகநமக்கெல்லோர்க்கும், பேதமிலாததுகாலேநீமுன்னலேபிரயாணஞ்செய்திடுதலேன்பெண்பாவாய், வேதனைகொண்டென்பின்றொடரெம்மையாளவேண்டுவதுன்கடமையன்றோவிதேகனங்கா, யேதடியுன்பிரிவும்வந்தெய்துமாதிலெம்மையுநம்பிடவேண்டாமிறப்பமந்தோ.

ஹா ஹா, சுடு சுடு; குடிகெட்டது குடிகெட்டது, அக்கினிச்சுவாலையிற் சானகி பாய்ந்துவிட்டனளோ,

இராகம் காப்பி.

கண்ணிகள்.

சானகியேமைதிலியே சகிஜனவாச்சலி   யே
மானவிதேகன்குல மாவிளக்கேபோனையோ   டி

வச்சிரமேமாணிக்கமே வாடாமருக்கொழுந்   தே
உச்சிதமாமொத்தினமே ஒயனியேபோனையோ   டி.

[வசனம்.] ஹா, ஹா, அழுதென்ன கதை, இதில் நஞ்சோகமாறுமா, நம்மாருயிர்ச்சகி, எவ்வழிசென்று, எவ்விடத்தில், எப்படிப்பிராணனை, இழந்தனளோ, நாமுமவ்வழியேசென்று, அவ்வக்கினிக்குண்டத்திலேயே ஆவியிறப்போம்.

[எனச்] சென்றனர்.

[இராமர்.] வில்லைக் கீழெயெறிந்தனராய் வயிற்றிலும் வாயிலுமடித்துக்கொண்டு.

இராகம் காம்போதி. ஆதிதாளம்.

பல்லவி.

என்னுயிர்க்குயிராக கண்ணாட்டியே   அடி
எழிற்சீதையே நீயுமிறந்தா   யோ.

அநுபல்லவி.

அன்னியாயமிது சொன்னலெவர்க்குமேச்   சே
முன்னுட்செய்சற்பனையோ, யெண்ணியதெல்லாம்போச்   சே.   [என்]

சரணங்கள்.

வடிவழகியேயுனை மனதிற்கொண்டுகளை   மே
மன்மதவிகாரத்தால் வாடுகிறனே தின   மே
பிடிஇடைச்சனகியே உன்றன்கனதன   மே
பிடித்துமருவுமுன்னீ மடிந்ததென்ன அன்   மே.   [என்]

எண்ணிக்கோசிகர்பினை யேற்றுக்கொண்டதும்போச்   சே
இதுமட்டிலுமழைத்து வந்ததும்வீணாச்   சே
வெண்ணை திரண்டுவரத் தாழியுடைந்தயேச்   சே
வீண்மனப்பால்குடித்தது வெனஇதுமாச்   சே.   [என்]

மயிலேயுனையரக்கன் வந்துதொடுவா   னோ
வஞ்சகஅரக்கனை வைத்துப்பார்த்திடுவே   னோ
அயில்விழியேயவனைக் கொல்லாமல்விடுவே   னோ
அனியாயமாயிறந்தா யதுசகித்திடுவே   னோ.   [என்]

ஹா, ஹா, இனியென்னகதி கஷ்டங்கஷ்டம்.

விருத்தம்.

என்மனோர்க்கருவேர் பரிந்தழிந்ததே யிப்புவிக்கெழிற் பெருஞ்சோபை
இன்மையேயாயின தயன்புகழ்குறைந்தது தீர்ந்தது திருக்குறுனந்த ம்
வன்மைசேர்மாரன் மண்டலஞ்செயிக்கும் மதமெல்லாமிறந்த தம்மங் கை
தன்மனங்கொதித்து தந்தையின்மரணத் தாலழற்பாய்ந்த தகஷணை மே,

[மாரீசன்.] தன்னுள், இவனுக்கு சோகாக்கினியை விருத்திசெய்கின்றேன்.

[வெளிப்படை.] ஆ, ஆ, தீயிலிவள் மூழ்கினளா.
ஹா, ஹா, அந்தோ வந்தோ ஹா, ஜானகி.

விருத்தம்.

உயர்மகமதனி லற்பவித்தவனே உத்தமவிதேக நற்குலத்து ச்
சுயம்பிரகாசத் தொளிர்மணிவிளக்கே சொற்றிரிபுவன சுந்தரி யே
நயகுணராம மயமதாஞ்சிவ நங்கையேநீயுஞ் செந்தணற்பாய் ந்
துயிரிறந்தனை கொலுனக்கு மிவ்விதியோவோர் தெய்வவிவரிதமந்தோ.

[எனப்] புலம்பி மூர்ச்சைகெட்டுக் கீழே விழுந்தனன்.

[காரணன்.] மாரீசனைக்குறித்து, ஹா, காசிபா ஆசுவாஸம்பெறுவாயாக, ஆசுவாஸம்பெறுவாயாக, எனத்தேற்றினன்.

[இராமர்.] ஹா, காசிபனுங் நமக்கு முந்தியே மோசத்தையடைந்தனன்.

[இராமர்.] சோகவேகத்துடன்.

விருத்தம்.

மலையின் மீதேறிக்கீழே மடமடென்றுருள் வேன்கொல் லோ
அலைகடலாழ் வேன்கொல்லோ ஆலமுண்டிடு வேன்கொல் லோ
கொலைசெய்து கொள்வேன்கொல்லோ

[காரணன்.] தன்னுள், அடடா, க்ஷத்திரியப்பயலே, தாடகை சுபாகு இவர்களைப்போய்க் கேட்கக்கடவாய்.

[வெளிப்படை.] மாரீசனைக்குறித்து, ஓ, ஓ, காசிபா இங்ஙனம் மயங்கினால் நமக்கு கதியாது கொல்.

[மாரீசன்.] சற்று மயக்கந்தெளிந்து, நம் உயிர்ச்சகனுக்கு யாதுகதியோ அதுவேயாம்.

(இராமர்) ஷை விருத்தம்.

குறித்தனல் தனில்வைதேகி
நிலைமை யெய்துவன்கொல்

[மாரீசன்.] தன்னுள், இதுவேசரி, எங்களுடைய கோரிக்கையெல்லாம் இதுவன்றி மற்றியாதுகொல்.

(வெளிப்படை.) ஓ, நண்பர் நாயகா அவளுன்மேல் நாட்டிய அடங்காத ஆசைவிசுவாச நேசத்திற்கிதெவ்வளவு.

(இராமர்) ஷை விருத்தம்.

வேறுநிவிர்த்தியென் மனநோய்க்குண்டோ.

(பிங்களகாசிபர்.) இரகசியத்தில், அந்தோ வந்தோ இன்னிசிசருக்களின் மாயாவிநோதங்கள் அதிசயிக்க யோக்கியமாயிருக்கின்றன. எதார்த்தமான நாமே, நமதிஷ்டனுக்கு கொஞ்சமேனும் நம்புதலுக்கிடமில்லாதவர்களாக ஆய்விட்டோமல்லவோ எனக், கிலேசத்தை அடைந்தனர்.

(இராமர்.) சோக ஆச்சரியத்துடன்.

விருத்தம்.

செந்தளிர்ச்சயனத் திருந்துசேடியர்ற்சேவித்துப் பணிசெயப்பெற்று
சந்திரகலைபோற் றனுவிளக்கொளிக டாக்ஷிக்கண வந்தவடிவாய் த்
சுந்தரமிலங்கவிருந்தவன்னங்கை தொலையிக்க திகொண்டதென்றுள்
இந்தவன்றுயரம் சகித்திடுவதமோ யென்னதானினிச் செய்குவேனே.

(நல்லதிருக்கட்டும்) யாரேறு, இதோ இருக்கிற பெரியகரும்பாறையிலேறி அப்பாற் சொலிக்கின்ற அக்கினிக்குழியில் என்மனோரதத்தைச்செய்கின்றேன்.

(என) பாறையின்மேல், பாதத்தை நாட்டுகின்றனர்.

(பிங்களகாசிபர்.) தங்களுக்குள், அந்தோ வந்தோ.

விருத்தம்.

அந்தோசேர் இனியென்செய்வோ மக்ரூர லாலிபோக் க
வந்தோமிப் பயல்களாலே வஞ்சிக்கப் பட்டோமிக் க
நொந்தோமென் றுறைப்பார்கொல் நொடியினிற் பதிலமைத்துச்
சந்தோடம் நமக்குண்டாக்குந் தந்தைகோசிகர் பாற்று

(எனப், புலம்பினராய் பார்த்துக்கொண்டிருந்தனர்.

(மாரீசன்.) தன்னுள், என்கோரிக்கை பலித்தான்.
என, ஆனந்தபரவசத்தை அடையலாகினன்.

(வெளிப்படை) விருத்தம்.

அநுசராணுஷ்மமாளனை தாடகையைக் கொன்
மனிதனிப் பாவிராமன் மாயைமதிலி மாய்த்திட்

களைவினில் வீழ்கவென்றே கல்லின்மேற் காலைவைத்தா ன்
இனியென்ன பயங்காண்டம்பி ஜயஞ்செய மிதனைப்பாரா ய்.

(கரானன்.) புருவங்களை நெறித்துங் காரத்துடன், இப்பொழுதொன்றுஞ் செப்பிடேலென்றியம்புமாறு முகத்தை அசைத்துச் சாடைசெய்தனன்.

(பிங்களன்.) காசிபனுடைய கையைத்தட்டி, நகைத்தனன்.

(காசிபர்.) ஓ, ஓ, வாசக, ரகுநாயகா, நுன்றன் உண்மைச்சிந்தைக்குகந்த, இந்த விசுவாசகேச காசிபன் பேசிய வாசகம் நுன்செவிக்கேறிற்றோ.

(இராமர்.) ஆ சங்கையுடன், இதுவென்கொல், இவனிங்ஙனஞ்செப்பியது [என முகத்தைத் திருப்பினர்.

(மாரீசன்.) கரானனைக்குறித்து, இரகசியத்தில், தம்பி கரானா, அதிசந்தோஷபரவசத்தினால் அறிவிழந்தவனாகி ஆலோசியாதிங்ஙனம் உளறிவிட்டேன், இனியென் செய்குவாம்.

(கரானன்.) மற்றியாதிருக்கின்றது.

விருத்தம்.

விரும்பி ஆக்கிப்பொருத்து வெந்தநாறிடப் பொருக் கா
தருந்திநாப் பொத்தபின்னர் ஆஜவென் றலறுமாப்போ ல்
தரும்பிற யாசமெல்லாம் சதுரமாய்ப் புரிந்தந்தத்தி ல்
திரும்பி மூடத்தனத்திற் றியங்கிறைற் செய்வதென் னே.
[இனி மான்வேடமெடுத்தோடவேண்டியதுதான்.]

(———) திரை.

இராகம் தநுசு. ஆதிதாளம்.

பல்லவி.

ராமா ரகுராமா ஜயஜய
ராமா ரகுராமா

அநுபல்லவி.

ஸ்ரீமான் றசரத கோமானருள்தவ
பூமா பலவீமா ஜயஜய (ராமா)

சரணங்கள்.

கோசலைபாலா குணசய லோ
கேசருக்கனுகூலா ஜயஜய (ராமா)
குவிபுயமந்தரா கோமளசுந்த ரா
ரவிகுலராமச்சந்த்ரா ஜயஜய (ராமா)

எல்லவரும் வியப்புடன் நோக்குகின்றனர்.

(கரானமாரீசர்.) இரகசியத்தில், இதுவென்கொல்.

விருத்தம்.

நிதானுசமனஞ் செய்திடவென் னிராக்கவன்றிலைசி லோறடிவைக்கவு ம்
நிதாக்கிடந்த வப்பாறையே ஓர்பெண்ணாய்த் திவ்யமங்களருபமா ய்
போதாம்பற் கண்முகிற்குழல்கள தன்னகளாய்ப்புகழ்சிறையுடையங்கமாய்
ஈதாரொருத்தி முனிகாரியாய்க்காண்கிறா ளினியென்னசெய்வமந் தோ.

(இதுவென்கொல்) எனச் சிந்திக்கின்றனர்.

(இராமர்.) இவர் ஆரோ, தாயார் கௌசலையைப்போலழைக்கின்றனர்

(அப்பால், முனிபத்தினி பிரவேசிக்கின்றனள்.

(முனிபத்தினி) விருத்தம்.

அருந்தவக் கொழுநரிட்ட சாபத்தாற் கருங்கலா கி
வருந்தினேன் வெகுநாளாக் மனுகுல மணியிரா ம
பரிந்துன் பொற்பதத்தூளாலே பரிசுத்த மானேன்கண்டா ய்
தெரிந்திடா யெனைக்குழந்தாய் தேவியகலிகை யென் றே.

(இராமர்.) தன்றுன், இவ்வம்மணியை, கௌசிக முனிவரால், அடிக்கடி சொல்லக் கேள்விப்பட்டிருக்கின்றோம்.

(வெளிப்படை.) ஓ ஜனனீ, ஓ பகவதி, காசரதியாகிய இந்தராமன் சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கின்றனன்.

(முனிபத்தினி) சிங்காரக்கவி.

நேசமாயெனது, மாசெலாந்தீர்த்த
கோசலகுலப்பிற, காசனேவாழி.

(சிங்கள காசிபர்.) கிட்டவணுகி, ஓ அம்மணி பகவதி, சதானந்தஜனனி, அனந்தவந்தனம், அன்புடன் றந்தனம் [எனப்பணிந்தனர்.

(அகலிகை.) குழந்தைகாள், சிந்தித்தகாரிய முற்றிக் கைகூடுமோல்.

(இராமர்.) அன்னாய், இன்னவர் யார்கொல்.

(அகலிகை.) குழந்தாய், கோசலை தனையா.

விருத்தம்.

இவன்றாய முனிவர்க்கிடன் வழிற்பெரு காசிபன்று ன்
இவனுன்ற னுயிர்க்குயிரா யிருக்கின்ற பிங்களன்று ன்
இவனேபாதகசப்பாவி யிவனே கரானத்துரோ கி
இவையெல்லா முனையோகிக்க வியற்றிடு மாரையைய யா.

(என) கைநீட்டிக் காண்பிக்கின்றனள்.

(காளமாரீசர்.) பயத்துடன், மான்வேடங்கொண்டு ஓட்டமெடுத்தனர்.

(அகலிகை.) குழந்தாய், ராமபத்திரா.

விருத்தம்.

பாவிவல் லரக்கரந்தோ பரிந்துமா னுருவங்கொண் டு
தாவியே யோடுகின்றார் சதிசெய்யப் பயல்கடம் மை
எவ்வெடுத் தென்முன்பாக யெமபுரிக் கேவிவிட் டு
வாவினைத் தொருநொடிக்குள் மனுகுல மணிவிளக் கே.

(இராமர்.) கோபமூர்த் தன்னியத்துடன், அடடா, குடிகேடர்காள் பதிதராக்ஷஸ நீசர்காள், எங்ஙனம் ஓடுகின்றீர்கள், எனப்பின்றொடர்ந்துசென்றனர்.

(பிங்கள காசிபர்) ஆசிரியவிருத்தம்.

பஞ்சசதகோடிப் பிரபஞ்சச்சொருபச் சுபாவதத்துவங்களெல்லா ம்
பரிவோடும்அனங்க வறிவினாலறிகின்ற பகவதி பராத்பரத்தி ல்
செஞ்சார்ந்தசங்கீர்த்தி நிஷ்டைபரிபூர்ணராய் நித்யராய்த் தானதா ஐ
நிமலரா யதிருருவான கௌதமபத்தினி யுனதுசபம்நீங் ஐ
அஞ்சானனீ னின்சொரூபம் அடைந்ததுங் கருதியுன் சொலினாலிவ ன்
கன்னராக்கதனைக் கடிந்திடச்சென்றதுங் காட்டிலுயிர் போய்த்திரும்பி
அஞ்சாதுயாங்களு ருவந்திருக்கின்றது மாதிதெய் வாதின மே
அகிலபுவனங்கட்கு மனுகுலம் தெய்வமல்லாது வேறேதன்னை யே.

(அகலிகை.) பாலர்காள், நன்று நன்று யுக்தமாகச் சொல்லினீர்கள், பாலர்காள், கொஞ்சம் எட்டிநடந்து இங்ஙனம் நோக்குக நோக்குக.

விருத்தம்.

சக்கரம்போற்றனுவளைத்துநாணிபூட்டி சாமிரகுராமன்விசொத்தனலே
வக்கிரதந்தக்கராளன் றன்கண்டமறுபட்டுப்புனேதருமான்வடிவம்நீங்கி
உக்கிரமாந்தன் னுருவோடிறந்துவீழ்ந்தானுயர்ந்தோங்கிவளர்ந்து சொலித்
தெழும்புவெங்காட், டக்கினியாலெறிபட்டுவிழுந்தானம்போல திசையம்பா
ரீரமர்ஆர்க்கின்றால்.

[வசனம்] ஓ, ஓ, இன்னமும் மாரீசனே, மாயையால் நயனமார்க்கத்திற்குப் புலப்படாமலே மாயமாய்விட்டான்.

ஆகவே, அம்மாரீசனைமட்டும் வதைசெய்யாமல் விட்டுவிட்டு சாரோபதனுவுடைக்கையனாய்க் குழந்தை இரகுவீரன் திருப்பிவருகின்றனன்.

(அப்பால்) சாரோபதனுவுடைக்கை ராமன் பிரவேசிக்கின்றனன்.

(இராமர் வசனம்.) அம்மணி, தெய்வத்தன்மைபொருந்திய மஹா பவித்ரமுள்ளீ பகவதிதெய்வாதீனமாய் யாம் நின்னாலனுக்கிரிக்கப்பெற்றனம்.

(அகலிகை.) குழந்தாய் கௌசல் யானந்தவர்த்தனா,

இராகம் பூபாளம் ஆதிதாளம்.

அய்யாரகுராமா, ஆதித்தியகுலராமா, அனந்தராமா, அபிரா மா
வையகம்புகழ்ந்திடும்செய்யசெங்குமுதவாயனேமங்களகுணராமா
நிந்தையிற்சினத்தாலே வீந்தன்கணவர்கருஞ்சிலையாய்ச் சபித்தாரெனைச்செய்ய
உன்றன்பதாம்புயத்திற்சிந்தும்பராகத்தாலென்னுடையவடிவங்கொண் டே
னய்யா
பத்தியாயுன்பதபதுமம்பணிவோர்க்கெந்தப்பதங்கிடைக்குமோஅறியே னே
குற்றந்தீர்த்தேனருள் கொண்டேனுன்மகிமைகூறயாருளுண்டுபெரியோனே
கணவர்க்குப்பணிவிடைகருதிமுன்போற்செய்யக்காதல்மிகுந்தேன்விடைதா
குணபூடணாரகுகுலநாயகவருள் கூராய்விடைதாராய். [ராய்

(இராமர்.) அம்மணி, இவ்வளவு செப்பல்வேண்டுமோ, நல்லதப்படியே ஆகட்டும் நமஸ்கரிக்கின்றனன்.

(அகலிகை) விருத்தம்.

பங்கயப் பதிக்குலத் துற்பன்னனே ஜனகிதன் னை
மங்கள மணம்புரிந்து வல்லரக்கரை மடித் து
தங்குமுப் புவனங்கட்குந் தானதிபதியா யாக்கு க்
துங்கநாயகனாய் நாளும் சுகமொடு வாழிவா ழி.

என, ஆசீர்வதித்துச் சென்றனள்.

(இராமர் ஆதரத்துடன்) பிங்களகாசிபர்களைக்குறித்து, [வசனம்] உயிரிற்சிறந்து, ஒளிபெற்றிலங்கும், உத்தமசண்பர்காள், உமதுமுகாரவிந்தங்களில் ஏறிட்டுநோக்குவதற்குக்கூட என்மனதிலச்சையை அடைகின்றது.

இராகம் எதுகுலகாம்போதி. சாப்புத்தாளம்.

பல்லவி.

வஞ்சகஅரக்கன்செய் ப்பீதிதிற்குள்ளாகி
மயங்கிமிகவருந்தினேனே.

அனுபல்லவி.

அஞ்சவென்றுஞ் சகாயனாமல் நான்
கொஞ்சமுமுங்கள் சொற்கேளாமல். [வஞ்சக]

சரணங்கள்.

எதிரிலுங்களைப்போல் மாயையாலுருக்கொண் டு
இராக்கதரென்று மென்முனுங்களைக்கண் டு
மதிமோசத்தால்நானும் மெய்யென்றெண்ணிக்கொண் டு
மயங்கிக்கிட்டேனே யென்னைப்போலெங்குண் டு. [வஞ்சக]
உலத்திற்படங்கொண்டு ஜனகியைப்போ லே
ஒருத்தியைக்காட்டினுன் மாயையினு லே
வெருத்ததெல்லாம்பாலென் றெண்ணினேன் தீயின்மேலே
வீழ்ந்தவருடனுனும் விழுமுயன்றேன்மென்மே லே. [வஞ்சக]
உள்ளத்திலரக்கரை மெய்யென்றெண்ணினே னே
உங்களையரக்கரென்றெண்ணிக் கொண்டிருந்தே னே
கள்ளனைப்பிள்ளையென்று பிள்ளையைமறந்தே னே
காக்காச்சிப்பியைவைத்து வெள்ளியைத்துறந்தே னே. [வஞ்சக]

(பிங்கள காசிபர்.) ரகுதிலகா, இதில் வருத்தப்படுவதென், மாரீசன் மாயையன்றோ இவ்வளவு விரோதஞ்செய்தது.

(இராமர்.) வாஸ்தவமே, ஆயினும்.

விருத்தம்.

அன்னைதாடகையைக்கொன்ற அடத்திறற் சிதையென் று
மன்னராக்கத ரென்பார்செய் மாயையில் மயங்கிட்டா லு ம்
இன்னவர் கள்ளரென்ன வினக்கதெரியாத தல்லா ல்
பன்னும்பேர்களான பதங்களில் மயக்கமுண் டோ.
(ஆகையால், எனதாசை கேசர்காள்.)

அடுக்குமொழி.

இங்ஙனம்நடந்த, சங்கதியாவும்,
நுங்கண்மனம்விட், டெங்கும்விடாதீர்.

(காசிபர்.) வசனம். அங்ஙனம் சரியே, இஃது இனியவன்ளவிலக்குவனிடத்தும், பகவான் கௌசிகரிடத்தும் தெரிவிக்கவேண்டுவதுதான், ஏனெனில், இம்மாயாப்பிரயோகங்களுக்குப் பதில் விளைவிக்கக்கூடியவராகையால்த்தான்.

(இராமர்.) அதுவும் சரியே.

(——) திரை.

ஓ, ஓ, சேனதிபர்காள்.

விருத்தம்.

வேட்டம்நாடிய ராமன்செல்வழி மிருவிலங்கினப் பிணங்களாலுதிவீர்
நிட்டமாய் வருகின்றதரவங் கண்டதோரடியா விதைமாய்ப்பி ர்

கோட்டுவெங் கரிகளோடகற்பிடி பின்சொண்டவிற் குமரிகொக்கே க
ஆட்டங்கொ ளயனமானினமினை விட்டகன்றிடுங் கூச்சலிட்டாதி ர்.

(இராமர்) ஓ என்னைத் தேடிக்கொண்டு வருகின்ற நமது பரிஜனங்க ஆரவாரம்போலும் கேட்கப்படுகின்றது.

(பிங்களன்) ஆம் ஆம் வாஸ்தவமே,
எங்ஙனமெனில்,

விருத்தம்.

படைபரியும்பேரொலியிற்றிக்கசைக்குமசெய்யுப்பதிரியந்து ம்
நடைமலைகள்பல்லுகக்களோடிமிகுத்தத்தளிக்குங்கயனங்கோட் டி
கடைமுதற்பறகாட்டிகவிக்குங்கவிகள்மரத்திலங்குங்களகுக்கத்தா ல்
அடிபொருபுல்வாயிழத்தகுட்டிதனைமான்முகக்குமணியார்கான ம்.

(காசிபர்) ஆம் ஆம் இதுவாஸ்தவமேயாம்.

(பிங்களன்) இஃதன்றி, இவ்விருலங்கள், வேட்டைக்கு வந்து வெகுநேரமாயிற்று.

(இராமர்) சுற்றி நாற்புறமும் நோக்கி; ஓ ஓ அஸ்தமயனகாலம், அதி கடோரமாய் விளைந்திட்டது போலும்.

விருத்தம்.

சஞ்சரிப்போர்சஞ்சரண் கட்டுசெவென்னச்சாலைகள் யாவிப்பவெனத்தாவிற்சார, வஞ்சகத்துமண்டலங் கண்டிடப்போதப்பாலு உச்சியின்மாகத்தேறப்பிசங்கடாகம், மிஞ்சிட்டத்தக்கொழுமா தருதளிர்களுண்ணுவேலைதனொ வளியினங்கடம்பெண்டிற்குத், தஞ்சிறைகள்விரித்துமிழ்றந்து வீசித்தாபமதை நீக்குபகற்றருணந்தானே.

ஆகையினுலே இனித்தாமதிப்பது தகாது, அதிசீக்கிரம் நமது ஜாகையில் லக்தவார்க்கைச் சேருவோம்.

(என) எல்லவரும் சென்றனர்.

மூன்றுவதங்கம் முற்றிற்று.

நாலாவது அங்கம்

ஆரம்பம்.

(அப்பால்). கந்தருவன் பிரவேசிக்கின்றனன்.

(கந்தருவன்) இப்பொழுது,

விருத்தம்.

குமர்தனத்தொழி நாடகைப்பெணைக் கொல்கரான சுபாகு வை
சமரினிற்குலை செய்தனுப்பினன் சாமிராமனென் னூட்டிற்கென்
றெமனனுப்பிடுவாசகந்தனை இந்திரன் கேட்டென்னுரு ன்
அமரர்க்கரை வதைசெய்நாடகமதில் முன்வேடமெதன்ன வே.

ஆகையினாற்றான்,

விருத்தம்.

அகிலசராசரந்தித ப்தாவிந்தன் அமராவதிக்கரசனாகண்டல ன்
மகிழ்வுடனெனைச்சித்திராங்கதா நீவதைபடைக்கதை கேட்டிலங்கைதன்னில்
முகமிரண்டைந்துளா னின்னம்வேறுமுயல்கின்றதுதரிற்றொருகோடிக்குன்
மிகவிரைவில்வந்தெனக்கறிவித்திடவேண்டுமென்றேவினானேவிவந்தேன்.

சற்றுவிதானித்து;

விருத்தம்.

சதமகபதிதனக்குச் சதிர்குணராமன்மீ தி
லதிகமாய்ப்பொருந்துவாஞ்சை அதனினுங்கடி யிலங்கைப்
பதிதசக்ரீவன்மீது பத்தப்பங் கதிகமா க
முதுபகைத்துவேஷந்தானே மூண்டிருக்கின்ற தந் தோ.

(இருக்கட்டும்) யாரோ மாயையாற்றரிக்கப்பட்டிருக்கின்ற இவ்வீராக்கதவேஷத்தொடு. அதிகக்கட்டுக்காவலோடிருக்கினும், அன்னிசாசராராஜதானியில் சர்வ சாதாரணமாய்ப் பிரவேசிக்கத்தகும், ஆகையாலங்ஙனஞ்செய்கின்றனன்.

(எதிர்நோக்கி) ஒ, ஒ, இவளார் ஓரக்கி என்னையே, நோக்கித்திருப்புகின்றனள். ஆ! இவளோ என்னரூபம், என்ன அலங்காரம் அடடா.

இராகம் காம்போதி சாப்புதாளம்.

பல்லவி.

அதிரூபவதியிந்தமாதே அடடா ஆனாலும் பேரழகி ;
அதுசொல்லொண்ணாதே (அதி)

அனுபல்லவி.

சதிர்பெருகு நீளமோர றொட்டைச்
சாணளவு அதிலுஞ் சுருட்டை சுருட்டை
குதிரைரோமம்போற் செம்பட்டை உன்ன
குழலாடுகின்ற தங்கோலஞ் சப்பட்டை (அதி)

சரணங்கள்.

ஒட்டகமுகம்போல் வதனமும் இவட்
கொருசிறுகிளாக்காயன வாயோர்தனமும்
வட்டமாமலைபோலோர் தனமும் அந்தமி
வாத்தியம்போலேவயிறும் வண்டிபோற்சகனமும் (அதி)

வாகுகள்மலம் பாம்புபோலும் மத்த
மதகரியின்கால்கள்போலே இரண்டுகாலும்
தேகமிசைதொங்குகின்ற தோலும் எந்தச்
சீமையிலுங்கண்டதிலை இப்படியானாலும். (அதி)

(இன்னமும்) விருத்தம்.

உருவமிப்படித் திகழ்கின்றதிலு முதட்டிற் குண்டலந்தாங் க
இருசெவிகளி னத்துப்புல்லக்குக ளிலங்கச்சுட்டி மூக்கிசை ய
கரமிரண்டிலும் புகசாங்களுங் கண்டத்திற் பாடகங்கவிக் க
வருமரக்கியின்பணியலங்காரவைபவ மென்னென்றுவரைவேன்.

(அப்பால், இராக்ஷஸி பிரவேசிக்கின்றனள்.)

(அரக்கி.) நீ, யாவனடா, காரனா, அல்லதன்னியன்சொல்.

(கந்தருவன்.) தன்னுள், இவளுடன் ஸம்பாஷிப்பதற்கு இவள்தானே வழிகாட்டுகின்றனள்.

(வெளிப்படை.) ஆம், காரனேதான்.

(அரக்கி.) வியப்புடன், ஆ, இங்ஙனங் கல்லுப்போல் விளங்குகின்றனையே.

விருத்தம்.

கனக்குறல்வாடிராக்கியர்கள் கட்டியழுவவர்நடுவிற் கணவாடன்னை
சினக்கொடிய ராமசரம்செற்றது கொலந்தோவென் செய்வதென்னே

தனிக்கவிட்டுச் சென்றனையென் சாமிநயர்சகியெனைத் தாரைக்கண்ணனின்
உனக்குரியான் கழுகுமுகியாரி வடித்தழுவதின்ன யொழிந்தாளல்லே ன்.

(கந்தருவன்.) தன்னான், ஆ, கராளனென்பவனுடைய கணவியோ. அக்கழுகுமுகியென்பவள், ஸரி, ஸரி மிகவுமழகாயிருக்கின்றது, ஆனாலும் வெகு பொருத்தந்தான்.

(வெளிப்படை.) அன்னவட்கிவ்வனம் இயம்பியதார் கொல்.

(அரக்கி) விருத்தம்.

தாடகைசுபாகுவுங் கராளனுந்தான் சாமிரகுராமனெனுந் தனியனாலே கேடடைந்தார் நமனுலகுசார்ந்தாரென்னக் கீழ்மூச்சுமேல்மூச்சோடலறியா வென், றோடிவந்திலங்கேசன் றனைக்காணாமலூற்றபிரகஸ்தன்முதலோர் பாலோதி, காடினன்கோகர்ன்ன மிசைத்தவஞ்செய்தற்கு நவில்சோகமா மனமாரீசனய்யா.

(ஆகையாலிந்த ஸமாசாரம் இங்குள்ளயாவருமறிவார்கள்.)

(கந்தருவன்.) ஓ, ஆனால் இலங்காபுரியில் இலங்கேசனில்லையோ.

[இராக்ஷஸி.] அன்றன்று, அதனால்த்தான்.

அகவல்.

என்றன்கணாளனை இன்புளமணாள னை
மந்திரிவித்திச் சிக்குலன்மனையி ல்.
எங்குற்றனனென் றெதார்த்தமறிக் அ
இங்கெனக்குரைக் கியம்புவையென் றே
அந்தமந்தோதரி அனுப்பினளென்னை யே
வந்தனனன்னவன் மனையிற்காணில ன்
அன்னவன்மனைமா யாவதியென்பவ ள்
யென்னிடஞ்சில தெடுத்தியம்பிட்டன ள்
போந்திவணுற்றேன் புதுமையறிந்தனா ன்
சேர்ந்தநின்காக்ஷியை நினைத்தெதிர்நிற்கிறே ன்.

[கந்தருவன்.] மாயாவதி, வழுத்தியதென்கொல்.

[அரக்கி வசனம்.] அது மிகரகஸியம், அதை யெப்படிச்செப்பலாகும், ஆயினும் இவ்வனம் ஜனகராஜன் பக்கத்தைச் சார்ந்தவரொருவருமிலரே, அவர்கள் தியாந்தரத்திலன்றோ, இருக்கின்றனர், ஆகையாற் சொல்லக்கூடும், கேட்கக்கடவாய்.

விருத்தம்.

மனிதனிராமன்மீதி லடங்காக்காதல் வைத்திட்டஜானகியை மணஞ்செய்தற்கு, சனகனிடம் தசக்ரீவன்ராமவேடஞ் சாரணனிலக்குமண வடிவங்காதி, முனிமகன்றனுருவித்திச்சிருவன்பூண்டு முதிர்மாயையாலவனை மோசஞ்செய்ய, கனிவுடன்சென்றனனென்ன வறைந்தாளென்பாற் காரிகை மாயாவதியாள்காண்கராளா.

[கந்தருவன் வசனம்.] நன்று, நன்று, வெகு இணக்கமாயிருக்கின்றது. அந்த ஜானகியினாசை இராமனிடமென்பது உலகம் யாவும் பரம்பிய சமாசாரமன்றோ.

[அரக்கி களிப்புடன்.]

விருத்தம்.

வல்லதீ கராளனாகில் மயங்குநின் மனைவிபக்க ல்
ஒல்லையிலோடி நீதானுற்ற தோர்க்ஷேமந் தன்னை ச்
சொல்லியாங் கவடான்கொண்ட துயரெலா மாற்றிப்பின்னை ர்
கல்வபற்புவு சம்மானம் நயம்பெறப் பெறுவன்மா தோ.

[கந்தருவன் வசனம்.] என், துக்கப்படவேண்டிய இடத்தில், சந்தோஷிக்கின்றாய், யானோ, கராளனன்று, அன்னியனான்.

[அரக்கி.] திடுக்கிட்டு நடுங்கிக்கொண்டு, ஆனால் கராளன்கதி அவ்விதமே முடிந்ததானோ.

(கந்தருவன்.) அதிலுஞ் சந்தேகமா.

(அரக்கி.) அந்தோவந்தோ, என் மனோரதம் வீணாய்முடிந்தது, நீ அன்னியனென்றால் யாவன்.

(கந்தருவன்.) யான் விபீஷணனுக்கனுசரன்.

(அரக்கி வசனம்.) நல்லதிருக்கட்டும், யானோ மஹா ராஜாத்தியாகிய மந்தோதரியின்பால் எவல்கேட்கச் செல்கின்றேன்.

[எனச்] சென்றனள்.

(கந்தருவன்.) யானோ.

விருத்தம்.

தசமுகன் கபடமெல்லாஞ் சனகன்பால் முன்புணர்த் தி
விசையுடன் விண்ணாடெய்தி விளங்கிடு குலிசக்கையா ன்
சசிமண வாளர்க்குப் பின்சாற்றுவேன் ஜானகிப்பெ ண்
ணசைமணம் விரோதமின்றி நலம்பெற விசைப்பேன்றா னே.

(எனச்சென்றனன்.)

(அப்பால், ஜனகராஜனும், சதானந்தரும் பிரவேசிக்கின்றனர்.

(ஜனகர்) விருத்தம்.

நிசிசரர்பதி வந்தென்பாற் கேட்குமுன் னிருபனா ன
தசரதன் புதல்வனுக்குச் கன்னியை மணஞ்செய்தி ய
நிசமென தாசையீதை நிறைவேற்றி வைப்பார்சொல் லோ
குசிக நந்தனராலுந் தான்கூடாத கொள்கைதா னோ.

இராகம் ஆரபி. ஆதிதாளம்.

பல்லவி.

என்னவாகுமோ அறியேன் சதானந்தரே.

அநுபல்லவி.

தன்மையாம் சதானந்தமுனியே இங்கு
கன்னிமாமணத்தினிற் றெய்வம்நமதுபக்கி ல். [என்]

சரணங்கள்.

அந்தஅரக்கனென்ன செய்வானோமாய ம்
அவன்வந்துகேட்கி லதைவிடவுண்டோ அபாயம்
இந்தஜனகிதன்னை அதற்குமுன்னேசேய ம்
இராமன்றனக்குமணஞ் செய்யவென்னபிப்பிராய ம். [என்]

எனதபிப்பிராயம்போற் பிணைகொண்டுமாமு னி
எந்தைகோசிகர் இராமனையழைத்துந னி
இனிதாய்வருவேனென்று சென்றார்காணிலன்ற னி
இராக்கதமோசமின்றிச் செய்வாரோயேதோவி னி. [என்]

கன்னியெழிற்ஜனகி தானோராகவன்மே லே
காதல்மிகமிகக்கொண் டிருக்கையினா லே
கன்னயமாமணமென் கனினக்கண்ணா லே
நான்காணக்கிடைக்குமோ யாதோயினிமே லே. [என்]

(சதானந்தர் வசனம்.) ஓ, மஹாராஜனே இதுவென்கொல், விசாரப்படவேண்டுவதில்லை; குசிககுலபயோநிதி பாரிஜாதராயிருக்கின்ற அந்த விசுவாமித்திர மஹாமுனிவரின் மகிமையென்ன, தெரியாததா, ஹா, ஹா, வீண் கவலை வேண்டுவதில்லை.

இராகம் கல்யாணி. ஆதிதாளம்.

பல்லவி.

சிந்தைக்கவலைவிடுவீர் மனச்சந்தேகங்கள்போக்கிடுவீர்

அநுபல்லவி.

விந்தைநரிக்கரிபயந்தே விலகிப்போமோ
அந்தராவணனிங்கு வந்தாலதனாலாமோ. [சிந்]

சரணங்கள்.

வாக்யுமதுகன்னி யோகமென்சொலவோவ ன்
பாகக்கோசிகர்பின்னை யாகயேற்றுக்கொண்டதா ல்
மோகமையலொழித் தேகத்தைப்பணிசெய் யு
னேகயோகிமகிழ்வி தேகமன்னவும தா. [சிந்]

சொற்கஞ்செய்யவுஞ் சார்வர்க்கம்வர்க்கமாய்வந் தெ
திர்க்கமுடியாமலே வெட்டிமுற்றும்விட்டவ ன
முக்கமுற்றுமுந்துநித்து நிற்கவருள்செய்தவ ர்
யிக்கவன்பாயப்பினை யிருக்கையிலேஉமக்கே ன். [சிந்]

வண்டேயெனுங்குழற் பூச்செண்டேயெனுந்தனங்க ற்
கண்டேயெனுஞ்சொல்சீதை பண்டேசெய்நற்றவத் தி
றண்டேயிவ்வனைவருக் கொண்டேவந்ததெனப்பி தீ
சண்டவிஜயசோ தண்டராமன்வருவா ன். [சிந்]

விருத்தம்.

சித்தமே சாக்ரமாகச் செய்தவாக் கினியிற்று னே
க்ஷத்திரிய த்வமென்னுந் தங்கநற் கட்டிதனை னா
னவத் தருக்கிப் பிராமணத்துவ அணியதா க
நித்தியந் திகழுநின்ற நிர்மல விசுவாமித்திர ர்.

(வசனம்.) ஆகையால் கவலையடையவேண்டுவதில்லை, ஜானகிக்கும் இராமனுக்கும் பாணிக்கிரஹண மங்களம் நிறைவேறிடினும் திரிபுவன ஜயவீரனா, இராவணன் வந்தென்செய்வானோ என்ற கவலையும்வேண்டுவதில்லை. (எனெனில்.)

விருத்தம்.

இயல்பினிற்சிரம் பகமுதலத்திர சத்திரவேற்ற மந்திராங்க ள்
உயர்முனிகௌசிகர் கற்பிக்கக் கற்றுணர்ந்தோங்கு முதாரகம்பீரச்
சயபலத்திநும் பதின்மடங்காகித் துலங்கிடு ராமனைக்கொண் டு
புயமலையரக்கர்பதியினைச்செயிக்கப் பொருந்திடுமையமேனையா.

(அப்பால், கௌசிகவேஷங்கொண்ட வித்திச்சிருவனோடும், இலக்கும

னவடிவங்கொண்ட சாரணனேடும், இராமவேடங்கொண்ட இராவணன் பிரவேசிக்கின்றனன்.)

(இராவணன்) விருத்தம்.

வன்சுபாகுவினொடு வலியமாரீசனை மாயைசேர் தாடகையிவ ளை
என்சொலிவிடுத்தனம் அன்னவரதனையியற்றவொன்றிருந்தாலு ம்
இன்சொலச்சனகியின்கரம்பிடித்திடவேயியல்நரவடிவத்தைப்புனைந்து ம்
என்செய்வேம்மனதுதான்கொஞ்சமுஞ்சலியாதிருத்தலைவகித்திலவென்னே

(வித்திச்சிருவன் வசனம்) ஓ, ராஜாதிராஜா மஹாராஜா இதுவென் கொல், நிர்னிமித்தமாய் இவ்வளவு கோழைத்தனம் வகிக்கலாகுமா.

விருத்தம்.

கலந்திகழ்கனிச்சோலைகொண்ணயனாட்டமும்நாணிவிற்சரங்கொள்
பலங்கொளுங்காமும்நீலவம்புதம்போற்படிவமுந்திகழுமைப்பார்த்து க்
கலந்தொளிர்கருடமணிமுத்தாரம்போற்கதிர்பசும்புல்லருகமைந் து
மலர்ந்திடுமிலுப்பைமாலைசூட்டிடுவள்மங்கைராகவனைமகிழ்ந் தே.

(இராவணன்.) அதிற்கூட அவ்வளவாத்திரமில்லை.

(பின்னையோவெனில்,)

விருத்தம்.

முன்னர்பொற் குறியிட்டகற் கரங்களும் முகில்போன் ற
பின்னிவிட்ட தோர்பின்னலுங் கண்டனன் பேரா சை
துன்னுகின்றது மென்னெனி லங்கவள் சுபமேவு ம்
நன்னயந் திகழவயவ முழுவதும் நாடுற வே.

(சாரணன்.) இராஜாதிராஜா, மஹாராஜா ஒரே ஒரு விண்ணப்பம்.

விருத்தம்.

இரதியைப் பழிக்குமந்த வெழிலுடை நங்கைநின்பா ல்
வரித்துநன் மாலைசூட்ட வந்தபோ திருகண்ணா லே
சிரமுத லங்கமெல்லாந் தெரிசித்து மனோக்துபின்ன ர்
இருபது கண்களாலு மிலங்கைபோய்க் காண்டல்வேண்டு ம்.

(இராவணன்.) முகத்தைச்சுளுக்கி, மிதிலேசனிருப்பிடத்தையடுத்தனம்.

(இராவணன்) விருத்தம்.

சங்கரர் சடையிலங்குஞ் சந்திர ரேகைபோ ல.
தங்கநற் சேத்தைப் பூந்தனிநிறந் தழைக்குமே னி

மங்கைதேன் மொழியானந்த வனமூலைச் சனகன்பா வை
எங்ஙனங் காண்கின்றான் சொலங்ஙன மெய்திட்டோமா ல்.

(வாசற்காப்போன்.) பிரவேசித்து, ஜயஜய மஹாராஜா, விஜயீபவ.

(ஜனகர் வசனம்.) ரே, ரே, உஜார ஸேவகா, தெரிவிக்கவேண்டியதைத் தெரிவித்துக்கொள்வாயாக.

(வாசற்காப்போன்) விருத்தம்.

மகிபனே போற்றிபோற்றி வள்ளல்விதேகா போற் றி
பகலவன் குலத்தில்வந்த பாலகர் இருவரோடு ம்
இகபர முணர்ந்து மாயையென்பதைத் துலைத்தமுத்த ர்
மகமுனி விசுவாமித்திரர் வாயில்வந் தணுகினா ல்.

(ஜனகர், அத்தியானந்தபரிதராகி வசனம்.) பகவன், சதானந்தரே திரிசங்குச்சுவர்க்க சிருஷ்டி கர்த்தரான நூதன பரமேஷ்டியாகிய விசுவாமித்திரமுனிவர் இருபாலர்களோடு விஜயமாவதால் நாமே அதிசீக்கிரத்தில்யெழுந்தருளியாகி அர்க்கமுதலிய உபசாரங்கள்செய்து அழைத்துவரவேண்டும் சதானந்தரே.

(சதானந்தர்.) நல்லதப்படியே செய்கின்றேன்.

(எனச்சென்றனர்.)

(சனகர்.) இதுவென்கொல்.

வெண்பா.

இல்லிடத் திராகவரோ டெய்தியுயிர் கோசிகரு ர்
சல்லிய வென்சிந்தை சலிக்கின்ற—தெல்லையற் று
மீதுசு பரங்களெனும் மீன்பற்றவே கனிவ ப்
போதாகு கின்றவிதம் போ ல்.

இதற்கென்செய்வாம்.

[அப்பால்] சதானந்தமுனிவரும், இராமலக்ஷ்மண கௌசிக வேடதாரிகளான இராவணன் முதலானபேர்களும், பிரவேசிக்கின்றனர்.

[சதானந்தர்.] ஜனகரிடத்திலே, விசுவாமித்திராதியரென்று, வித்திச்சிருவாதியரைக் காண்பித்தனர்.

[ஜனகர்.] ஆஸனத்தினின்றெழுந்துசொல்லு.

விருத்தம்.

அத்துவிதத்தையன்றி யனித்தியமான வெல்லா ம்
மித்தை யென் றுணர்ந்து நான்குவேதத்தின் முடிவைச்சார்ந் த

தத்துவா தீதாபோற்றி சத்தமகிமை தங்கு ம்
முத்தனே போற்றி விசுவாமித்திர முனியேபோற் றி.

[வீரத்துவஜனுகிய, விதேகன் நமஸ்காரிக்கின்றனன்.]

[வித்திச்சிருவன்.] அனககுல, ஜனகராஜா, நினக்கனேகமங்களமுண்டாகுக.

[சாரணன்.] இரகசியத்தில், இராவணனைப்பார்த்து.

விருத்தம்.

புவனங்க ளெல்லாமிக்கப் புகழ்மக ராஜன்நீ யே
தவமக ளைமணந்து ஜனகன்றன் மருகனுவ ல்
அவன்மிகத் தன்யனன்றே அனேக மங்களமுண்டா மே
இவனது வாழ்த்தலாலோ எய்துவ திலங்கைவேந் தே.

(இராவணன்) களிப்புடன் ஆம், ஆம்.

(வித்திசிருவன்) புருவத்தைநெரித்து, நயனபாஷையில், இராவணனை ஜனகராஜனுக்கு வந்தனஞ்செய்யும்படி யேவுகின்றன்.

(இராவணன்) சாரணனிடம் இரகசியத்தில்.

விருத்தம்.

எண்டிசைக்கதிபர் தாமுமென்பதம் பணியவேண் டி
கண்டுகாத்திருப்பர் நானுங்காதல் மந்தோதரிப்பே ர்
பெண்டினேடேல்வந்தாற் பேச்சினிற்கழிப்ப தல்லா ல்
தெண்டனிட்டறியேனின்ன யிவனுக்கோ சென்னிதாழ்ப்பேன்.

என்மனம் இலச்சையை அடைகின்றது, என்செய்குவேன்.

(சாரணன் தன்னுள்.) தூர்அகங்காரத் தூர்ப்புத்தி குடிகொண்ட இவனுக்கு, ஞானவிலாபமுஞ் சந்தேகந்தான்.

(இரகசியத்தில்) வெளிப்படை [வசனம்.] இராஜாதி ராஜமஹாராஜனே, எதிப்படி உத்திரவாகின்றது, காலத்திற்குத்தக்கபடி கோலமென்றுரையினுங் கேட்டிருப்பதில்லையோ (எடுத்தவேடத்திற்குத்தக்கபடி நடக்கவேண்டும் மஹாராஜனே.)

☞ (இராவணன்) விருத்தம்.

தசரதர்புதல்வனுனே தான்பணிகின்றேனையா.

☞ (சாரணன்) விருத்தம்.

தசரதர்புதல்வனுனே தான்பணிகின்றேனையா.

☞ (ஜனகர்) ஷை. விருத்தம்.

குசலமுற்றிருப்பீரின்பங் கொண்டெற்கீர்த்தி கொள்வீ ர்
திசையெலாங் கட்டியாள்வீர் செல்வர்காள் வாழிவா ழி.

[சதானந்தர்] பகவன் காதிமைந்தரே.

விருத்தம்.

நடிவாரெழிவின்மிக்கா ரிங்கிதப்பார்வையுஞ் சொ ற்
சாடைநன்னடை யுணர்த்திச்சதைப்பற்றுஞ் சமமதாக ச்
சோடியாயிருத்தலாலே சொல்விலக் குவளார்கொல் லோ
நாடெலாம் புகழ்பெற்றேங்கும் ராமகாமன்றனார்கொ ல்.

[வித்திசிருவன் தன்னுள்,] இங்கொருவருமில்லை.

இராகம் கரகரப்பிரியை, ஆதிதாளம்.

பல்லவி.

இவனே இராமன், ரவிகுலசோமன்.
என்சதானந்தரே எழிற்காமன் [இவனே]

அநுபல்லவி.

அவனிபுகழ் நவமேகசாமளன்
ஆருயிரனுஜன்மீ தனுக்ரகமுள்ளான் [இவனே]

சரணம்.

உருக்கியதங்கம் ஒத்ததோர்தே க
ஒளியோடன்னன்பணி யொழியாஉணர்த்தனு க
இருக்கின்றனே இவனேஇலக்ஷ்மண ன்
ஏற்றகுணவிசேடம் வாய்த்தவிலக்ஷண ன். [இவனே]

[இராவணன்] சாரணனுக்கு தனித்துச்சொல்.

இராகம் இந்துஸ்தான் தண்டகம் ஜாவளி
ஸாமிக்கு ஸாரியேவாரி என்றமெட்டு.

பல்லவி.

இன்னஞ்சானகி வரக்காணேனே

அநுபல்லவி.

அன்னவடனைக்காண ஆத்திரமாகுதே [இன்னம்]

சரணங்கள்.

சகசண்டித்தனமெல்லாஞ் சாற்றுகின்றான்ஜனக ன்
மகளையழைப்பியா வகையே தோ [இன்னம்]

எப்போதுகாண்பே னென்றென்மனந்துடிக்கி தே
மைப்படுவிழியினுள் வாரா னோ. [இன்னம்]

[சாரணன் தன்னுள்]. அகோவகோ இம்மூடசிகாமணிக்கென்ன அவஸரம், அடடா இப்போதுதானே ஜனகதரிசனமே.

இராகம் காம்போதி. ஸாலம்யாவிறுன என்றமெட்டு

பல்லவி

இத்தனை ஆத்திரம் சுத்தமோசமாமே.

அநுபல்லவி

அத்தையவிவனுக்கமை வதையமாமே [இத்தனை]

சரணங்கள்.

க்ஷேமங்கேட்குமுன்னஞ் சேதிசொல்லுமுன்னம்
பூமிவந்திங்குநாம் பொருந்தமிருக்குமுன்னம் [இத்தனை]

கருதிச்சனகனைக் கண்டதற்குள்ளாகப்
பரபரப்பேனந்தோ பாவமென்னமோகம் [இத்தனை]

மூர்க்கநாயகனிம் மூடசிகாமணிக்
கேற்குமோயேதோ யேந்திழையம்மணி. [இத்தனை]

(வெளிப்படை) இரகசியத்தில்.

அடுக்குமொழி.

வெற்றிலங்கேசா, கொற்றவமணியே
உற்றதுபொருந்தும், சற்றுபொறுத்தருள்.

[சதானந்தர்] பகவான் கௌசிகரே.

[இராவணன்] சாரணனிடம் இரகசியத்தில்.

(கோபத்துடன்) விருத்தம்.

அம்முனிமாமாரீசனு விறந்தொழிந்த பின்னு ம்
இம்முனியியம்பாவின்ற இத்தக்கௌசிக சப்தத்தா ல்

நம்மவனைனுப்பாளுமீ நவிந்திடப் பெறுவனென் றே,
எம்மனத் தெண்ணுகின்றே னினிஇதற்கென் செய்வோ மே.

[சாரணன் இரகசியத்தில்] மகாராஜ அது இந்தச்சாணகியின் பாணிக்கிரகணோற்சவ பரியந்தந்தானே.

[சதானந்தர்]

விருத்தம்.

தரணிதனில் வயதறுபதாயிரங்கடாவிகடந்தன பிள்ளைத்தவஞ்செய்தந்த நிருபதசரதன் வருந்தியப்பின்புராய கேவயிபண்டகசுதால் நியமித்திட்ட ஒருமகத்தின்வி திருவேனையாலுலகமூன்று மொளிர்கின்ற குணத்தினராயொப் பில்லாராய், அருமையதாமிரண்டு புதல்வர்கள்வந்தவதரித்தவிதமெனக்கானந்தமையா.

[விசுவாமித்திரன் தன்னுள்] வசனம். ஓ, இவன் அகலிகை மகனன்றோ, ஆனந்தாம்புதியில் ஆழ்கின்றனன்.

அடடா, அதிகக்களிப்பு, விதனக்குறிப்பு வென்னும் பழமொழியறியான் போலும்.

வெண்பா.

எவ்வளவிற் சந்தோட மெய்தினன்கொல் ஜன்மத்தில்
அவ்வளவில் மாரீசனு விறந்தான்—வெவ்வழிமே ற்
ருவிவரு ராமனெனச் சாற்றுமுனா கேட்குமு ன
மெவிவெ னவ்வி தன மே.

[வெளிப்படை.] ஆனந்தம் உமக்குமட்டுமன்று, சதானந்தரே அகில உலகத்திற்குமே ஆனந்தந்தான்.

[இராவணன்.] இரகசியத்தில், சாரணா.

விருத்தம்.

சனகபரிணய மெனுஞ்சொல் வானமுதத்தை யென்செவியூற்றுற ய்
அநுசார்களுடன் முனிவன்கௌசிகன் அந்தனம் போந்திடுகின் ற
இனியவரவினைத் தடுத்தல்தாடகைக் கெளியதாகுங் கொலில்லைசொ ல்
எனவென்றன் மனங்கலைகொண் டுருகின்றதென் செய்வன்சாரணா.

(சற்றுயோசித்து.)

ஆசிரியவிருத்தம்.

உயர்மாமரத்தளிர் நுனியினீர்த்திவலைபோ
ஒருகணமும் உறுதியற்
உயிர்வாழ்வுகொண்டன குனதுணை விறுக்கா
உபகரண மொக்கின்றவ

துயர்மாந்தர் தம்மோடு பொரவென்னை யுதித மோ
தோள்வலியு யுத்தமதமு ந்
சொல்லுனக் குளதாயினீடித்த வாயுட் த்
சொலிக்கின்ற சூர்க்கனோ டு
பயமானசமர் விளைப்பாயென்று சாமு ளி
பரித்துளாத்தானு முன்ன ம்
பாரிலத்தயாதனைவதை செய்திருப்பனே ல்
பபெய விராமனிவ னே
னயமாயுதித்திடுவ தெங்ஙனஞ் சனகியா ம்
நங்கைதன் மனத்தாசையு ம்
நாடிவெ தெங்ஙனங் காரியாம்சங்களி ல்
நான்மூடனுன் மூட னே.

(சாரணன் இரகசியத்தில்) வசனம். மகாராஜ் காரதலோக்கினுல், இராகந் தப்பிரபுவாகிய தம்மால் எதிர்த்து உயித்தஞ்செய்யத்தகாத மனிதனென்று அத்தயரதன் விடுபட்டானென்பது சரியே,

(கேட்கக்கடவீர்.)

விருத்தம்.

ஆதிதவத்தா லீசனருளத்திர சத்திரப்பயிர்ச்சைத் துணிவுமுள்ளா ன்
அதிபலபராக்கிரமன் மந்திரதந்திர மிகுந்தோனடமே கொண்டோ ன்
முதிர்பகையால் க்ஷத்திரியர்குல மறுப்பதாய்ச்சபதம் மூண்டுவந்தோ ன்
சதிர்பரசுராம னைவனுந்தானந்தத் தயரதனைக்கொல்லாமற் றவிர்த்திட்டானே.

(இராவணன் இரகசியத்தில்) ஆனந்தோற்சாகத்துடன்.

கலிவிருத்தம்.

நன்குணர்த்தினை ஞாபகம் சார ணு
தன்குமா ரரோடச சுதன்ற னை
என்கருத்திற் கிசைந்த சிநேகித ன்
வன்கொடாழிக்கை ராமனுல் மாய்ப்ப னே.

(சாரணன் இரகசியத்தில்) மகராஜ் கமரு தாடகா மாரீசருக்குத் தப்பினலன்றே, இந்தயோஜனை யோசிக்கல்வேண்டும்.

(ஜனகர்.) பகவன் கௌசிகரே.

விருத்தம்.

தசரதனார்தனயருதித்திட்ட தன்மைதனைக்கேட்டுச் செவிக்கமுதந்தனைத்துகின்றேன், குசிகமுனிநந்தனருங்கருணை யாலேகுறித்தவனைக்கண்டுகொண்

ஞானந்தங்கொண்டேம், பசியறைசவல்முடியான் சனகிதன்னைப்பரிணயமுமவணினைப்பின்படிசெய்வித்தால், நிசமெமக்குமட்டுமன்று நித்தியானந்தம் திமிகுலமெல்லாம்விளங்கும் விமலமூர்த்தி.

(ஆகையால்) வசனம். விசுவாமித்திரரே இப்பொழுதே அதிசிக்கிறத்தில் யாகதீக்ஷையில் பிரவேசியுங்கள். நாங்களும் கன்னியின் கல்யாணக்காரியத்தில் எத்தனஞ்செய்கின்றனம்.

(சாரணன் வசனம்.) இரகசியத்தில், மகராஜ், திரிலோகாதிபதியான இவ்விலங்கேசுவரன் வந்து பரிணயஞ்செய்வதில் அதனினும் நித்தியோற்சவமாகாதா.

(இராவணன்.) அதிலென்ன சந்தேகம், நித்தியோற்சவமென்பதற்கையமா.

(வித்திச்சிகுவன் தன்னுள்.) இதுவென்சொல், வீண்சங்கடம். நல்லதிருக்கட்டும், அதிலென்னபாதகம்.

கலிவிருத்தம்.

கோசிக னரக்கரார் கொல்லப்பட்டா னெனி ற்
மோச மாகாது நாமுயன்ற காரிய ம்
நாச மாகாதிவன் நாடிடில் நாப்ப னே
வேசங் கொளுமறைத் தோடிட வேண்டுமா ல்.

(இராவணன்.) அவ்விதமேயாம், ஏனெண்ணமும்.

(சதானந்தர்.) ஜனகமகாராஜனே.

விருத்தம்.

வேந்தருக் கரசேனான விதேகரே யுமதுகன் னி
மாந்தளிர்க் கரத்தாளான மங்கையூர் மிளையயன்பா ய்
வாய்ந்தெழில் விலாஸனான வள்ளலிவ் விளையானுக் குப்
பாந்தமாய்க் கொடுக்கல்வேண்டும் பரிணயமிக நன்றுமா ல்.

(வித்திச்சிகுவன்.) இரகசியத்தில், அட சாரணு.

விருத்தம்.

அட்ட சாரணநாம் நம்மளதிபனுக் குதவியாக த
திடமுடன் வந்தோம் அஃதிற்சித்தியுன் வரவுகன் றே
இடைவழி தனிற்புதைய லெதிரினிற் கிடைத்தல்போ ல
மடமயி லினையாளிற்கு வலுவிலே வாய்த்ததப் பா.

(ஆனல், என்வரவுதான் பிரயோஜனமில்லாமற் போச்சுது.

(சாரணன்.) இரகசியத்தில், ஆ, அங்ஙனுயன்று.

(வசனம்.) ஏதுகாண், வித்திச்சிருவ, உமது வரவுதான் முதன்முதலிற் கைகண்டபலன், என்னெனில்; நீர்இப்பொழுது யாகதீக்ஷை செய்வதில் அந்தக் கோசிகனுடைய மக்கள், சீடர்கள், பக்தர்கள் முதலியனசகிதமாய் அனைது பாரியே உமக்குப்பாரியாகவிருந்து புற்பிடிக்கப்போகின்றனர் அல்லவோ, ஆகையாற்றான் உம்முடைய வரவே முதன்முதலிற் கைவருமென்றுரைக்கல்வேண்டும்.

(வித்திச்சிருவன்.) இரகசியத்தில், சாரணா.

விருத்தம்.

ஆமடா மெய்தானப்பா ஆகிலுமெனக்கு வாய்த் த
மாமுனி நாரிமிக்க வன்கிழ டவடனங்க ள்
கூமடி புறனும்பைபோற் கூவனும் கொண்டாளப் பா
காமினிச் சொல்வதென்னை சாரணா நகைக்கின்று யோ.

(ஜனகர்.) வசனம். பகவன், சதானந்தரோ அதுமட்டு மன்று. பின்னையோவெனில், ஜனகனுஜன், குசத்துவஜன் மிதிலையினின்றும் தன்னுடைய கன்னிகைகள் மாண்டவி சுருதி கீர்த்திகளை பரத சத்துருக்னர்களுக்கும் கல்யாணஞ்செய்து கொடுக்கவேண்டியதென்று பெண்களை அனுப்பியிருக்கிறான்.

(இராவணன்.) சாரணனிடம், இரகசியத்தில்.

விருத்தம்.

என்மூடத் தனத்தாலே யின்னமு மிருவர்தம்மை த
தன்மாயஞ் சூட்டியந்தப் பரத சத்துருக்னராக ப்
பின்கூட்டிவந்தேனல்லேன்பிழைசெய்தேனினியென்செய்வேன்
தின்மார்க்கமுனிவனின்றேன் சொல்லெல்லாந்தோல்லைதானே.

(சாரணன் இரகசியத்தில்,) வசனம். வித்திச்சிருவன் விசுவாமித்திர வேடத்தோடு வந்தும் காரியத்தைக் கெடுத்துவிட்டனன், என்னசொல்லப் போகின்றேன்.

(சதானந்தர்.) பகவன், கௌசிகரோ, என்ன தசரதர் பரத சத்துருக்னர் இவர்களை அழைத்துவரவில்லையோ.

(சாரணன்.) இராவணனிடம், இரகசியத்தில்.

விருத்தம்.

பெண்டுபிள்ளைக ளோடுற்ற தயரதன்றனைப் பின்கூட்டி க
கொண்டுமோ முனியிங்கெய்தக் குறித்துச்சென்று னன்றேநான்
கண்டுவந் துரைத்தேன் முன்னர்கௌசிக னுருவெடுத்த னே
அண்டுமோ வித்திச்சிருவ னறிவிலனதை விட்டா னே.

(இராவணன் இரகசியத்தில்,) வசனம். இருக்கட்டும் இப்பொழுது ஜானகியைக்கொண்டுவ் விஷயத்தைப்பற்றி யோசிக்கல்வேண்டியது.

(வித்திச்சிருவன்.) பரிவார ஸஹிதரான தசரதர் மார்க்கத்திலுண்டாய சிரமத்தினால், இடைவழியிற்றாமதிக்கின்றனர்.

☞ (ஜனகர்) விருத்தம்.

ஆரடா சேர்வைக்காரா,

[வாயிற்காப்போன்] வசனம்.

மகாராஜ், ஆக்ஞாபனம் உத்திரவாகட்டும்.

☞ ,(ஜனகர்) ஷை விருத்தம்.

அதிவிரைவாகச்சென்று
சிரப்பெறு கன்னிமாரைச் சிக்கிரமழைத்து வாரா ய்
கூர்தவத்தினி லுயர்ந்த கோசிக முனிவர்தம்மு ப்
பார்புகழ் கனிமொழித்த பாதவக்கனத்திற் கின் றே.

(வாயிற்காப்போன்) அப்படியே ஆகட்டுமென்று சென்றனன்.

(இராவணன்.) சாரணனிடம் இரகசியத்தில், அடா சாரணா, என்விஷயத்தில் தெய்வானுகூலமிருக்கின்றது.

விருத்தம்.

பூமகளிப்போது வந்தாற் புயல்வண்ண ராமனுட ல்
ஆமெனு மென்னெண்ணங் கண்டால் லங்கரிக்கு ம்
தாமரை நற்பூவுறையைத் தான்கவர்ந் திலங்குமி ரு,
காமனிவேனை நலங்காட்டும் கடைக் கண்ணு லே.

(——) இசை.

விருத்தம்.

சதிர்ஜனகனுடைமக்ட்டுமேவிவாகந்தான்புரியமாமையிருவாக்கர்வேந்தன், துதிஇராஜ்ரமனுருப்புனைந்துகாஜிகனுருவேர்டிலங்குவித்திச்சிருவனும், மதயிருக்சாரணிலக்குவன்றன்வேடம்வகித்திடவனவனும் வந்திட்டமனென், நிதிவிபாஞ்சமதியினில்வாயிற்காப்போர்யாரேனுமிறைவன்பாலியம்பல்வேண்டும்.

எல்லவரும் கேட்கின்றனர்.

(இராவணன்.) வித்திச்சிருவனிடம்) இரகசியத்தில், உத்வேகத்துடன்

☞ விருத்தம்.

பேசாமலின்றி இத்தைப் பிறருணர் வகையுமில் லை
வேசீ கூடத்தன்னை வெளியிட்டதார் சொலந் தோ

(வித்திச்சிருவன்.) இரகசியத்தில், பயபக்தியுடன், மகாராஜ். என்னென்றுசொல்வேன் ஆச்சரியமாச்சரியம்.

☞ ஷை விருத்தம்.

ஆசைப் பெண்டாட்டி மாயாவதியன்றி யறியார்மற்றோ

(சாரணன்.) தன்னுள், ஓ, ஓ, சம்பிரமித்திகோ

☞ ஷை விருத்தம்.

மோசஞ்செய் திட்டானெந்த முண்டையின் மகனோமுற்று ம்.

(வெளிப்படை.) பகவன், சதானந்தரே இவ்விதஞ் சப்தங்கொடுத்தது யாரென விசாரிக்கல்வேண்டும்.

(சதானந்தர்.) தன்னுள், ஓ, இவர்களே, இராமலக்ஷ்மண கௌசிக வேடதாரிகளாய்வந்த இராவண சாரண வித்திச்சிருவர்களோ.

(வெளிப்படை.) இலக்ஷ்மணா, அஃதென்னென்று விசாரிப்போம்.

(ஜனகர் கவலையுடன் தன்னுள்.) அடடா, இதுவென்கொல் விபரீதமாயிருக்கின்றது.

கலிவிருத்தம்.

எம்மனோ ரதம் யாவு மிசைத்தி ட
இம்மை நீர்முனி யெய்தின னென்று மே
செம்மை யாய்மனத் தேர்ந்து களித்துட ல்
விம்ம லுற்றனன் வேறாய் முடிந்த தே.

(வெளிப்படை.) அடா, அங்ஙனம் ஆரடா.

(வாயிற்காப்போன் ஓடிவந்து,)

அடுக்குமொழி.

ஒன்றோர்பணிலம், பன்றுவிளையும்,
பொன்றுய்மிதிலை, மன்றுபோற்றி.

ஆக்ஞாபனம், உத்திரவாகட்டும்.

(ஜனகர்.) அடா, சேவகா அங்ஙனமறைந்ததாரென விசாரிக்கல்வேண்டும்.

(வாயிற்காப்போன்.) மகாராஜ், அதிலென்ன விசாரணையிருக்கின்றது

விருத்தம்.

அண்ணலே திவ்யமேனி ஆனதோர் புருடன்வந்தி வ்
வண்ணம் இங்கறைந்துவிட்டு வான்றனிற் கிளம்பிச்சென்றா ன்
மண்ணில் வேறிராமலக்கு மணர்களா யிருவரோடு ம்
கண்ணிய முடனேமற்றோர் கௌசிகர் வருகின்றா ரோ.

[ஜனகர்.] ஓ, இதுவென்கொல், சதானந்தரே, இதுவென்னபுதுமை

(சதானந்தர், ஜனகரிடம் இரகசியத்தில், இங்ஙனஞ்செப்பிய இந்திரஜாதனாயிருத்தல்வேண்டும்.

☞ விருத்தம்.

எய்தினர் தாங்கோலோ இங்கினிவரு கின்றார்தா னோ
பொய்திக ழரக்கரென்னப் பொருத்தமா யறியல்வேண்டு

(வெளிப்படை.) வித்திச்சிருவனிடம்.

☞ ஷை விருத்தம்.

மெய்திகழ்-தவந்நிறைந்த விசுவாமித்திரரோ இந்த த்
செய்திகள் புதுமைத்தாகும் யாதினை யென்செய்வோ மே.

(வித்திச்சிருவன்.) தன்னுள்.

☞ விருத்தம்.

காசினிதனிற் போலீசுக்காரன் சோரனைப் போலந்த க்
கோசிகனெமைத் தடுத்துக் கொண்டன னினியென்செய்வே ம்

[வெளிப்படை.]

☞ ஷை விருத்தம்.

வேசமெம்மைப் போற்கொண்டு மேவராக்கதர் வாட்டு ம்
மாசதானந்த நாங்கள் மற்றோர்பாற் செல்கின்றோமா ல்.

(இராவணன்.) சாரணனிடம், இரகசியத்தில்.

சாரணா, ஆனால் இந்த க்ஷத்திரியப்பயலால் தாடகாதியர் இறந்தேபோயிருப்பார்களோ.

(சாரணன்.) இராவணனிடம், இரகசியத்தில்,

அதேது, ஈதொருக்காலும் கடக்குமா.

விருத்தம்.

அலங்கனன் மார்பாவெங்க ளாண்டவ அதிபரோ டு
கலங்கிடா வல்தாட காதியர்தமையுங் கொல்ல ப்
பலங்கொண்டா னெனிலோ அந்தப்பாலகன் றன்னுக்கம ம
விலங்கைமே வரக்கரெல்லா மிறந்தன ரெனக்கொள்வா யே.

(இராவணன்.) வித்திச்சிருவனிடம், இரகசியத்தில் (இனிநாம்செய்வதென்ன?

[வித்திச்சிருவன்] இராவணனுக்கு, இரகசியத்தில் (வசனம்.) மகாராஜ், திரஸ்கரிணீ மகிமையால் நம்மை நாம் மறைத்துக்கொண்டு இங்கிருந்தே

நடக்கின்ற நடபடிக்கைகளைக் கண்டறிந்து, உசிதம்போல் நடக்கவேண்டியது.

[இராவணன் வசனம்.] ஸரி, ஸரி, உரைத்தது வெகு பொருத்தமாயிருக்கின்றது, அப்படிச்செய்கின்றது.

[ஜனகர்] சதானந்தரிடம், இரகசியத்தில், (வசனம்.) சதானந்தரே இவர்கள் நெருங்கி, நெருங்கி இரகசியம் பேசிக்கொள்கின்றார்கள். அதனால், நினைக்கின்றேன், இவர்களே இராக்கதர்கள், இவ்வித வேடத்துடன் வந்திருக்கின்றனரென்றே.

[சதானந்தர். அவ்வண்ணம் யானும் நினைக்கின்றேன், ஆகிலுங்கண்டறிவோம்.

[வித்திச்சிருவன்.] மகாராஜ ஜனகா.

விருத்தம்.

பார்த்திவ விசாரமென்கொல் பகர்தசக் ரீவன்றன்னை ச்
சீர்த்தியா யுசிதம்போல்ச் செய்யுபசாரஞ் செய் து
சேர்த்தியா யனுப்புவாயுன் னேரிழை யீவதா க
வார்த்தை யொன்றுரையேல் நாங்கள்மற்றொர்பாற் செல்கின்றோமால

[ஜனகர்.] நல்லதென்றெழுந்திருந்து அஞ்சலிசெய்துகொண்டு (மார்க்கங் காட்டுகின்றனர்.)

இராவணன் முதலானவர்எழுந்திருந்து அடுத்தபக்கத்திற்சென்றனராகி திரஸ்கிரிணியால் மறைந்துகொண்டு ஸமீபத்தில் வந்திருந்துகொண்டார்கள்.

(சதானந்தர்) வசனம். மகாராஜ ஜனகா, வருகின்ற கௌசிகர் முதலானவர்களை அர்க்யமுதலிய உபசாரங்கள்செய்து அழைத்துவருகின்றேன்; (எனச்சென்றனர்.

அப்பால், இராம லெக்ஷுமண ஸஹிதராய், கௌசிகர் பிரவேசிக்கின்றனர்.

(கௌசிகர் தன்னுள்.)

விருத்தம்.

கனவிலிருந்த ராமனைக்கண்டு காமமுற்றி குலையர்பே ண
இனமுறுதனிரின மணியினிருந்தாள் இரவொடு பகலையுங்கழிக்கு ம்
வனமுறுஜனகி மீதினில்ராமன் மாறிடாமயல் கொளவருதே ம்
கனிவுள ரொருவர்க்கொருவ ரெவ்வனத்தர் காதல்கூர்சேர்க்கைதானன்றே.

இன்னமும் ஆசிரியவிருத்தம்.

உத்தமகுணத்தின ராமலக்குமணர்கள் ஓங்குபுய வீரனொளிறும்
ஒளிர்கிரப்பகமா திமந்திரப்படைகள்யாமுதவிடப்பெற்றனராகில்

மத்தவனுகூலமேனன்னெனிலிராவணன்மேவுதன்னவரையமரில்
செவ்வுயிர்பறித்தவிஷயத்திலுங்காதல்சேர்மெல்லியற்சனகமாதை
த்தியோகன்மணமியற்றுவிஷயத்திலும்நனியனத்தடங்காச்சினம்
கவில்ராமன்மீதுகொண்டடல்முனைவானெனில்கவியாது முப்புவனமு
த்தரையில்வென்றவனெனினும்ராவணனையேஎமபுரிக்கேற்றவிப்ப [ம்
வெவ்வளவுபலம்வேண்மெல்வளவுமிராமனுக்கெய்தியதுகண்டாகன்றே.

(அன்றியும்) விருத்தம்.

மாயையிலிராக்கமனர்வல்லரென்றே மாராபிராமலக்குமணர்களோடும்,
யமொடுகுமரியின்விவாகந்தன்னைநீர் விக்னமாகநிறைவேற்றவெண்ணி,
ஙகரியும்பாய்பரியுங்கனகத்தேருங்காலாளும்மேலாளுங்கணக்கில்லா து
மேயவனுந்தயாதனைப்பிரிந்துமுன்பே வினாவிலெமது[illegible]லில்மேவிவந்தேன்.

(வெளிப்படை.) பாலர்காள்.

இராகம் பியாகு [illegible]தாளம்.
பொன்னூர்மேனியனே [illegible] வர்ணமெட்டு.

பூவலங்காரர்களே புகழ் புண்யகுமாரர்க[illegible] ளே
மேவெழிற்சூரர்களே விநய மேவிவீர[illegible] ளே
உத்தமநற்குணர்காள் எங்கும் ஒப்பில்லா[illegible]ளர்கா ள்
வெற்றிநற்புடணர்காள் விளங்கு மெய்ராம[illegible]ணர்கா ள்
வாசகமிதொன்று மற்ற மகிபர்களேபோலன் று
பூசிதமாய்நின்று ஒழுக்கம் பூணுவீர்மிகநன் று
தவமுனியாக்ஞவல்க்யர் தம்மாற்றவிர்த்தளைமனாரதுக்க ம்
உபதேசம்யாவுமொக்க உணர்ந் தோங்குமகிமையிக்கா ன்
ஜனகமகாராஜன் சோடசலேசிறராஜ ன்
முனிவர்க்கெலாம்ராஜன் நிர்க்கமுத்தன்ஞானராஜ ன்
ஆனபடியாலே நீவிர் அச்சனகன்பா லே
போனவுடன்மென்மேலே வணக்கம்பொருந்தவீரொருக்கா லே.

(இராமலக்ஷ்மணர்.) நல்லதப்படியே செய்கின்றோம்.

(இலக்ஷுமணர் வசனம்.) பகவன் முனிநாதரே, இவ்வரசனுடைய யாகபூமியில் உழுகின்ற கலப்பையினுனியினின்றும் சீதையென்றொரு கன்னிகாமணி உண்டாயிருக்கின்றனென்றோர் ஆச்சரியசமாசாரங்கேட்கப்படுகின்றதன்றே.

(கௌசிகர்.) ஆம், ஆம்.

(இராமர் தன்னுள்.) அனுஸ்மரணத்துடன்.

ஆசிரியவிருத்தம்.

மாதனற்குழியில்வீழ்விழவப்படிச்செய்தமாயையென்றேதிண்ணமாய்
வரிசையாயோர்ந்தனனெனினுமாதங்கமும்வளர்கோபமும்எனித
மீதுபொழுதும்விட்டகன்றிலவிதேகனைஇன்னல்வதைசெய்தகா
வெய்திடுசம்சாரமெய்யன்றனிசமாயியற்றிநின்றுசாலுமென்
பேதமையிலாதுதெளிவாயுணர்ந்தேனெனினும்பிசகிடாதோர்கொடிக்கு
பேயுன்நிசாசரன்கொடியமாபாதகன்பீடுபௌலஸ்தியன்ற
ஒதிடுசிரங்களீரைந்தினையும் எவிருலோர்ப்பனங்காய்கள்போ
உருளும்படிக்கறுத்தெறிவதில்மிகவாசையுண்டாகுதுண்டாகு

(இன்னமும்) விருத்தம்.

தவதனகௌசிகர்மகமாமெனுறும்வியாஜஞ்சாற்றியெனைச்சகலபெருக்களோடும், அவனிகுமாரியின்மன்றல்முடிப்பவேண்டிஅழைத்துவருகின்றனரென்றெனதுசொந்த, நவின்மனமெய்வணம்வர்த்திக்கிறதென்றக்கால்நன்குநினைக்கின்றதாச்சுவாஸம்நல்குந், குவிதையைகொள்கின்றதப்படித்தான்மிக்கக்குளி னந்தமடைந்துலவுகின்றே.

(வெளிப்படை) விருத்தம்.

புதுமைவேறென்றுகேள்வி என்னெனிற் புராரியா லே.
இசம்பெற வளித்ததென்றும் சுராசுரர் யாவராலு ம.
அதுவனைக் கொளுந்ததென்றும் அவ்விதே காதிபன்று ன்
நிதமர்ச்சித் திடுவதென்றும் வில்லொன்றும் நிசந்தான்சொல்லோ.

(கௌசிகர்.) புன்னகையுடன், ஆம், ஆம், இதுவுமிருக்கின்றது, என எல்லவரும் நடக்கின்றார்கள்.

(சதானந்தர்,) பிரவேசித்து, மகாராஜ ஜனக.

இவரே, பகவான், குசிகநந்தனர் இவர்களே, தசரதகுமாரர்கள்.

(ஜனகர். தன்னுள்) எமது சதானந்தகுரு, இவர்களது வேடத்திற்கனுருணமாய் ஸம்பாஷிக்கின்றனர்.

[வெளிப்படை.] நிரம்ப ஸந்தோஷம்.

(என, உபசரிப்போர் உபசரித் தெல்லவரையும் உசிதாசனங்களில் வீற்றிருக்கச்செய்தனர்.)

(சதானந்தர்.) தன்னுள்) இவர்களோ இராக்ஷதர்கள், இருக்கட்டும். ஆயினும் யான் இவ்விதம் புகல்கின்றேன்.

(வெளிப்படை.) இராமலக்ஷுமணர்களோடும் கௌசிகபகவான் இங்ஙனம் வந்தருளியது தெய்வாதீனமேயாம்.

[ஜனகர்.] தன்னுள்) யானும் சதானந்தகுருவின் வார்த்தையையநுஸரித்தே பேசுகின்றேன்.

(வெளிப்படை) விருத்தம்.

விதிவசத்தாய் சிவபெருங்கர் நயாதர் வீட்டில்வந்தா ர்
விதிவசத்தாய் அயராதொரு வேள்வியை முடிக்கப்பெற்றா ர்
விதிவசத்தாய் புதல்வராவர் விளக்கென வவதரித்தா ர்,
விதிவசத்தாய் தம்முன்னேன்பால் மேவினர் இருவர்தா மே.

(இராவணன்.) வித்திச்சிருவனைக்குறித்து,

இதுவென்சொல், அடடா, வித்திச்சிருவா, இச்சனகன் பரமார்த்த புத்தியுடன் பகர்கின்றான் சொல்.

(வித்திச்சிருவன்.) அதேது, மகராஜ் நம்மிடங்களிலன்றோ இவனுக்கு வாஸ்தவபுத்தி.

(கௌசிகர்.) ஆம், ஆம், வர்த்தமானத்தைக் கேளுங்கள், குமாரசதானந்தராலும், இவ்விடமான ஜனகராஜனாலும் ஸாவதானமாகவிருந்து கேட்கக்கடவது.

[இருவரும்] நல்லதென்று, செவிகொடுக்கின்றனர்.

(இராவணன்) அடுக்குமொழி.

காடியக்கௌசிக, மூடன்றாரத்துமா,
கேடென்புகன்றிடப், பீடிகைகள்போமேன்.

[வித்திச்சிருவன்.] அடட், இதுவென்ன அறியாததா, அடடே, மார்க்கமத்தியில் வந்து தடுத்துக்கொண்ட நமது பரிஜனங்களை வஞ்சித்துக் கடந்துவந்தோமென்றே புகல்வான்.

(சாரணன்,) அங்ஙனமவர்களை வஞ்சித்திடாமற்போனால் இவர்களிங்கெப்படி வரக்கூடும்.

☞ கௌசிகர் விருத்தம்.

மகிமைனத்தாரங்களோடு மக்களோடு மதிபதயாதனைவர வழைத்துக்கொண்டு, மிகவிரைவில்வருகையில் மண்மாரிபெய்து மேவிதொடையிற்றுடிக்கப்பெற்றோம்,

(இராவணன்.) களிப்பதிகரித்தவனாய்,

பல், தாடகாய், நல்ல நல்ல சம்பிரதாயமா யுன்னால்வந்து மறிக்கப்பட்டது.

(வித்திச்சிருவன்.) அவர்களெவ்வாறு அவளை வஞ்சித்து கடந்துவந்தார்களென்பதைக் கேட்கவேண்டுவது.

(இராவணன்.) விலக்ஷணக்குறிப்புடன்.

வெண்பா.

இந்தச்சிறுவ னொருவிம்முனி யின்செய்திய தோர்
விந்தைக்குறி யிதனைமெய் மறந்தேன்—சந்தோடத்
தான்மதுபான த்தில்வருதன் மையைப்போற் சாலவுமே
யான் வசமற்றிட்ட படியால்.

☞ (கௌசிகர்) முன்விருத்தத்தொடர்ச்சி.

ஒருபுதல்வன் திரிஇவனென்றிருந்திட்டாலுமே யொன்றுகார்முகத்திலெழும்பிற்றையா,

(இராவணன்.) இந்த க்ஷத்திரியப்பாலனிடத்துப் பெருமையை ஆரோபணஞ்செய்தற்குச்சீர்கெட்ட இம்முனி எத்தனை எத்தனஞ்செய்கின்றனன்!

(சாரணன்.) ஆ, சங்கையுடன்) மேல் என்னநடபடிக்கை நடந்திருக்கின்றதென்பதைக் கேட்டறிதல்வேண்டும்.

☞ (கௌசிகர்) முன்விருத்தத்தொடர்ச்சி.

புகுந்தவன் மார்பிலிரண்டாய்வகிர்ந்துபூமியில்வீழ்த்தியுதாவி போக்கிட்டானே.

(ஜனகர்.) சதானந்தரைக்குறித்து, இரகசியத்தில்.

☞ விருத்தம்.

பரித்திடுமோவை வல்லபாவி வல்லரக்க னின்றோ ன்
தரித்திடு வேடந்தன்னைத் தளர்ச்சியுறு நன்றாய் த்
திரப்படுத்திடவே திண்ணம் செப்பிடு சதையிதா மே

☞ (சதானந்தர்.)

உரைப்பதென் முழுதுங்கேட்டா லுற்றதுபொருந்து மன் றே.

(ஜனகர்) வெளிப்படை வெண்பா.

இந்தச்சிறு பைய்ய னெவ்வளவு கன்னமதச்
சிந்துரத்தோராயிரங்கள்சேர்பலத்தான்—அந்தத்
தானியசனித்தீக்குறல்வாய்ச்சொற்றடைப்பேர்
தீனவரக்கி யெவ்வளவு தீ.

(இராவணன்.) ஸரி ஸரி, ஜனகனால் நன்றாய் ஆக்ஷேபனை செய்யப்பட்டது.

(சதானந்தர்) அடுக்குமொழி.

மதிகுலமகாராஜா, அதிபதிமிதிலேசா,
விதிபலமுளதாகில், எதுவுமுடிந்திடுமால்.

(வித்திச்சிருவன்.) அதனைச் சம்மானித்துப்பேசுகின்றான் சதானந்தமுனைத்தன்.

(சாரணன் வசனம்.) ஹா, தாடகாய் ஸ்திரீ என்றறியப்பட்டும் இம்மனுல் விடாமற்போயினையா.

(இராவணன்.) ஆ, சங்கையுடன்,

அவளது அனுசரர்கள் எவ்வகைபுரிந்தார்களோ அதுவறிந்திலம்.

(ஜனகர்.) மேல் மேல்.

(கௌசிகர் வசனம்.) அப்பால், சுற்றுங்கூர்த்த சுபாகுமுதலிய கொடியராக்கதர்கள் குழந்தை இராகவனை வந்து வளைந்துகொண்டார்கள்.

(இராவணன்.) ஆம், தாடகாவதத்தை எப்படிச்சகிப்பார்கள்.

(சாரணன் வசனம்.) ஓ, ஓ, தானே வீரனென்று மானித்துக்கொண்டிருக்கிற இந்த ராமனால் அவர்களிடத்தும் என்ன என்ன அக்கிரமம் செய்யப்பட்டதோ.

(கௌசிகர்.) மற்றென்ன கேட்கக்கடவீர்.

கட்டளைக்கலித்துறை.

குலையுண்டிடும் கபந்தங்களோ டென்வாய்குடித் தெப்ப டி
நிலைகொண் டிடாதசமூகமா மடினர்கின் கனத் தே
வலிகொண்ட சீசசுபாகுவைக் சேனையை மாய்த்துநெடுஞ்
சிலைகொண்ட ராமசரம் லீலைப்படிச் செய்தது வே.

(சதானந்தர்.) ஜனகரைக்குறித்து, இரகசியத்தில்) இவ்விதமிருக்க இவர்களிடம் என்னென்று நினைக்கின்றீர்.

(ஜனகர்.) சதானந்தரைக்குறித்து இரகசியத்தில்,

நமது கன்னி ஜானகி பல பரீக்ஷையின்பேரில் கொடுக்கவேண்டியவளென்று பிரதிக்ஞை செய்யவேண்டியது.

(சதானந்தர்.) இரகசியத்தில், அஃதெப்படிக்கொத்தது.

(ஜனகர்.) இரகசியத்தில், சிவதனுவை நாணியேற்றிடுவதே தான்.

(சதானந்தர்.) இரகசியத்தில், ஒவ்வாமினைப்பொடு நகைத்து.

விருத்தம்.

அமரகுலமடங்கலும் வந்திறைஞ்சிநிற்ப அசைந்திடுமாமேருவினை வங்கங்கொண்டு, குமரிடுமெய்ப்பூதகணம் நெருக்கமாகக் குலவிடவுமிலங்கிடு வக்கைவேந்தன்னே, தமதுசரவிராஜனியாற் செவ்விவானிற் சதிர்பெறப்பக் தாடு தசக்ரீவனுக்கே; உமையிடப்பாகன் றனுவாவேனாற்ற வென்னேவோர் பெரிகா பணியமீறுதவாதன்றே.

(ஜனகர்.) இரகசியத்தில், பகவன் சதானந்தரே அதிலிருக்கின்ற கூடார்த்தத்தைச் சொல்லுகின்றேன்.

விருத்தம்.

சித்தகந் தருவராலுந் தேவதான வீர்களாலு ம்
வித்தியா தரர்களாலும் மேவுவல் லரக்கராலு ம்
இத்தனுவினைக் கொணுதென் றியம்பி யீய்ந்திட்டார் முன்ன ம்
உருத்திர பகவானுன தாலிகு ஆசிதந்தா னே.

(சதானந்தர்.) இரகசியத்தில், அங்ஙனமாயின் இந்தப் பந்தயம் மிக நன்று.

(வித்திச்சிருவன்.) எல்லவரையும் வதைசெய்ததாய்த் தான் இயம்புகின்றானே இக்கௌசிகன்.

(சாரணன்.) இஃது வாஸ்தவமே, இல்லாமற்போனால் ஒருவராலுந் தடுக்கப்படாத மஹா மாயாதுரந்தர மாரீசன் முதலானவரைக் கடந்தெங்ஙனம் வரக்கூடும்.

இலக்ஷ்மணன். விருத்தம்.

முதல்வரின் பகழிபாய்ந்து முனிந்துமா ரீசன்றன்னை க்
கதியுடன் அறத்திற்றெங்கோ காண்கிலனின் னமுந்தா ன்
அதமதாய் மடிந்திட்டான்கொல் அல்லதுதப் பிட்டான்கொ ல்
விதமின்ன தெனவுணர்ந்திலம் மெங்கள் வெற்றிவேந் தே.

(இராவணன்.) கோபத்தோடு பெருமூச்செறிந்துகொண்டு,

(இராவணன்) ஆசிரியவிருத்தம்.

கஞ்சனமெனிற் கிட்டவந்துலவ வஞ்சிடு
ஞாயிறுதன்னொளி யுள்வாங்கு
நற்றீச்சுடா மனப்பீதியா லகிலமு
மடுதடுக்கிட வாளை

மிஞ்சியிவ் விலங்கேச்சர னின்னமு ம்
வியனுலகு காக்கின்றன ன்
மேனகைமேவற் றெழிற்றுடைப் பெணொ டு
வீரபற்படை கடமையு ம்
வஞ்சமிகுமாலயச் சுபாகுவையும் வதைசெய் து
வரிசையா யிவ்விராம ன்
வல்லுயிர்படைத் தினமும்வாழ்ந்திடவு மென்ன மோ
மாருமவிவனையந்த ப்
பஞ்சமுனி கோசிகனபயமது தந்துகா ப்
பாற்றிடவு மென்னமோதா ன்
பற்கள்குடை கின்றதப்பா கடித்துமிழ்வதி ற்
பழுதென்கொல் பழுதென்கொ லோ.

(என்று பற்களைக்கடித்து கண்கள்சிவந்து ஆக்கிரமித்தாரவாரித்து, எழுந்திடவாரம்பித்தனன்.

(வித்திச்சிருவன்.) தடுத்துக்கொண்டு, இராஜாதிராஜ மஹாராஜனே சற்றுப்பொருத்தருளல்வேண்டும், மேலும் பார்த்துக்கொள்வோம்.

(ஜனகர்.) தன்னுள்) என்னிதயம் தெளிவெய்துகின்றதுபோலும்.

(வெளிப்படை) ஆனால் மாரீசன் இந்த ரகுகுமாரனால் முடிக்கப்பட்டான் கொல்.

(கௌசிகர்.) ஆம், ஆம்.

(சாரணன்.) தன்னுள்) அந்தோவந்தோ.

விருத்தம்.

இத்தனைகால மிவன்புயபலங்க ளிசைத்தனத் தனிநிறைவா கி
வெற்றியையடைந்து மேவினவர்கால் விளம்பிடுதலறு தவா லே
சத்திபிவனுற்பின்னையதனடைந்துவரிசையிற்குன்றினவிதனு ல்
இத்தன்மையெனில்ராகுவாற்கதிரோனெய்திடுநிலைசையொத்தவின்றே.

(இராவணன்.) பற்களோடு பற்களை நொறுங்கக்கடித்து ஹா, ஹா, இந்த க்ஷத்திரியப்பயலை இனியெளிதில் விடப்போகிறதில்லை.

விருத்தம்.

உருத்திரன்கிரியை யெடுத்தவென்கைகளோ நிருபதுமினமுளை வே
பருத்ததிண்டோடிசை மன்னரைத்துளைத்தபகழிசேர் தூணிபத்துள வே
கருத்தமெய்யம்மயன் கொடுத்ததாங்கூற்றினுங்கடியதோர் சத்தியுமுள வே
உரைத்திடலெஞ்சயந்தரிப்பதேனுயித்தத்திலோங்குவரெவரென்றனுள ரே.

(வித்திச்சிருவன்) விருத்தம்.

அங்குலித் தட்டினாலே அச்சிறு மனிதன்ரு னே
இங்குயிர்தரிக்குமோகாண் எலிவேட்டைக்கேன் டம்மாளம்
தங்கனக் கற்கடன்ளச் சதிர்கடப் பாறையே ளே
எங்கணும் புகழ்லங்கேச இத்தனைகோபம் வேண்டா ம்.

(சதானந்தர்.) ஜகத்தினில் ராமன்; மகுத்துவமுடையான்.

(இலக்குமன்.) அரனுற்றுன்.

விருத்தம்.

துங்கமா முனிவராமித் தாயகௌ சிகாவென் ளே
டெங்கணுயக விரம னேற்றமங் கிரங்கவெல்லா ம்
பொங்கமா யருளப்பெற்றுர் பொருந்துமத் திரங்கடாமு ம்
தங்கையில் வாங்கப்பெற்றுர் தைரியம் பெற்றுரன் றே.

(வித்திச்சிருவன்.) மகராஜ் இலக்குமன்சொல் செவிக்கிலக்காயிற்றே.

(இராவணன்.) அடட, இந்தக் கொட்டுக்கெல்லா மிந்தப்பேயாமோ, இதற்கெல்லாம் பயப்படுவதும் ஙாமோ.

(சாரணன்.) ஆரம்பமுதலே அக்கௌசிகனே நமக்குக் கெடுதல்விளைவித்துக்கொண்டு வருகின்றுன்.

[கௌசிகர்.] தன்றுள்) வசனம் இந்த ஜனகராஜனும், சதானந்தரும், என்னையுமிப்பாலர்களையும் வேருய்நினைக்கின்றுர்களெனத்தோற்றுகின்றது.

அதனுல் இவர்கள் முன்னதாகவே மாயாவியளாயிருக்கின்ற அரக்கரால் ஏதேனும் வஞ்சிக்கப்பட்டார்கள்போலும்.

[நல்லதிருக்கட்டும்.] வெளிப்படை.
வசனம் ஓ, ஓ, அனகசூல ஜனகராஜனே, ஓ, ஓ, சதானந்தராய்விளங்க[illegible]ற சதானந்தரே என்பாலேதோ அன்பாற்சொல்ல இச்சிக்கின்றீர்கள்போ[illegible]

அஃதை எடுத்துரைப்பதில் தடையென்கொல், அஃதையமறவி[illegible]பல். செய்வீர்.

[ஜனகர்.] சதானந்தரை நயனபாஷையால் ஸம்ஞைசெய்தனர்.

(சதானந்தர்) விருத்தம்.

திரிபுவனத் திலுந்தான் திகழ்மன்னர் புதல்வருக்கு ள்
ஒருவன் யாவொனினு மீசனுயர் தனுவளைப்பனுகி ல்
அருமைநற் குணத்தொப்பில்லா வற்புதக் கன்னிசீ தை
வரசௌந்தரியை அன்னோன் மணந்திடப் பெறுவன்மா தோ.

[இவ்விதம் ஜனகராஜனுடைய கோரிக்கை.]

[கௌசிகர் வசனம்.] கலீரென நகைத்துக்கொண்டு, அகோவகோ, எம்மிடத்தும் உங்கட்கவநம்பிக்கை யெய்தியதென்கொலோ.

ஆம், இவ்வாறற்றேனுல் யாவராலுந்தடுக்கப்படாதவர்களையும் கொடிய மாயையின்றிறத்தால் வேறிற்பெறும் நானாவிதவடிவினர்களையும் இருக்கின்ற மோசவிசாசரர்களின் நெருக்கத்தில், யார்க்குத்தான் யாரிடத்தில் நம்புதலுண்டாகும்.

ஆகையால், எங்கே அந்தத் திரிபுராந்தகனுடைய சராஸனத்தை வரவழையுங்கள், ஆரோபித்தினிமித்தம் அதிசீக்கிரம்வரும்படி செய்யுங்கள்.

(ஜனகர் வசனம்.) பகவன், சதானந்தரே தாமேசென்று சம்புவின்றனுவுக்குச் சம்பாவனைசெய்து சுணத்திலிவண் சார்ந்திடச்செய்வீர்.

(சதானந்தர்.) நல்லதவ்விதமே செய்கின்றேன்.
எனச்சென்றனர்.

(இராவணன்) விருத்தம்.

ஈசன்கைலா யந்தன்னை யெடுத்தெரிந்தி ட்டவென் கை
கூசுமல்வில் லின்பாலே கொஞ்சமும் நகட்டொறு தே
காசினிதனி லவ்வில்லைக் கைக்கொண்டு வளைப்பதற்கு ப்
பேசுமிச்சிறு வனுக்கென் பேதமை பலமுமுண் டோ.

(வித்திச்சிருவன்,) அந்தோவந்தோ.

விருத்தம்.

ஈதென்ன சர்வமுட்டா ளிப்படிச் சபதஞ்செய்தா ன்
பூதலம் பாதலம்வின் பொருந்துமே தலத்திலுந்தா ன்
மாதுமை நாதன்வில்லை வளைத்திட ஒருவனுண் டோ
பேதமை கொண்டாளித்துச் சபதம்வீண் பெற்றியா மே.

[இராவணன்.] ஆகாயத்தில் லகுபிபத்தை காட்டிக்கொண்டு ஹா வராகீ, ஹா ஜானகி அதிவிந்டவீனும், அடட, என்சொல்வேன் கஷ்டமிகஷ்டம்.

இராகம் காபி.

பல்லவி.

மோசம்விளைந்ததடா முற்றும்வீணாச்சுதே.

அநுபல்லவி.

ஜனகிநின்னிஷ்டம் எல்லாம்வெளியாச்சுதேடி.

சரணங்கள்.

எனெனிலென்னிஷ்டன் பெண்ணு ம்
இவளையபகரிக் கொண் ணு
தென்றுனை யெடுக்கவெண் ணு
திருந்தேனடி, என்கண்ணு ய். [மோசம்]

ஒருவன்மேலாசை கொண்டா ய்
உனைக்கேட்கில் திண்டுமிண்டா ம்
ஒவ்வாதென்றோர்ந்தேன் கண்டா ய்
ஓகோபாவம் உரைகண்டா ய். [மோசம்]

பின்னும் உன்னுவலா லே
பேய்கொண்டான் செய்கைபோ லே
பேசன்னான் வடிவா லே
பீடிழந்து வந்தும்மே லே. [மோசம்]

வேடம்பூண்டு வந்துநின்று ம்
வினைவிளைந்தாற்போல ஒன்று
வில்வளைப்புச் சபதமென் று
விபரீதமாக யின் று. [மோசம்]

தனுவளைப்பாம் விவகார ம்
சாற்றலாமோ அதிபார ம்
தந்தைசெய்த நிஷ்டூர ம்
தகாதடி யின்னேர ம். [மோசம்]

என்னாலாகாத வில் லை
யார்வளைப்பா ரெவருமில் லை
ஏற்றமனு னெங்குமில் லை
என்னசொல்வேன் மிகத்தொல் லை. [மோசம்]

மணமில்லா வகையா லே
மகிமையி லெவ்வனத்தா லே
வசைசொல்வார் புவிமே லே
மாதேசிதே, ஆதலா லே. [மோசம்]

விருத்தம்.

அந்தர கிரியானது வளைக்கலா மதைவளைக் க
எந்தனு லாகாதென்றால் யாவரா லாகுமந் தோ
இந்தவிற் சபதம் வைத்ததென்ன விச்சனகன்செய் த
விந்தையென் சொலுவேன் சீதைமணமென்ன விதமாயா மோ.

(சாரணன்.) மஹாராஜ் அவளிடத்து அவ்வளவெண்ணமிருக்குமாயின் அவளை எவ்விதமும் அபகரித்துக்கொண்டு போகவேண்டியதுதான்.

[சதானந்தர் பிரவேசித்து]

விருத்தம்.

பூபதி ஜனகமன்னு புகழ்மதிக் குலமாணிக் க
தீபனே செல்வமன்ற னிமித்தம்பந்தய மாய்ச்சொற் ற
மாபெருங்கிரி நிகர்த்த மஹேச்சுர னருள்மகாப் ர
தாபவிச் சாபந்தன்னை சாற்றியபடி கொணர்ந்தே ன்.

[கௌசிகர்.] அடலுறுந்தாய் இராமபத்திரா இதனைப்பாராய்.

(இராமர்.) குரு வாக்கியப்படியே, எனக்குபீரனவெழுந்து சராசனத்தினருகிற் செல்கின்றனர்.

☞ (இராவணன்) விருத்தம்.

திடுக்கிடா இவன் வின்னேற்றித் தீரமாய்நடக் கின்றான்கொ ல்
☞ (வித்திச்சிருவன்)
வெடுக்கெனக் காத்திற்றாக்கி வில்லினைவளைப்பான் சொல் லோ
☞ (சாரணன்)
குடக்குசச் சனகிபாம் நற்கோகில வாணியைத் த
மடக்கொடி ஜனகிதன்னை மணமுஞ்செய்திடுவான் சொல் லோ.

(அப்பால், அழைத்தசேவகன் முன்னால் கொஞ்சத்தூரத்தில் நடக்க சிவந்த பட்டாடைகட்டி பவிஷாய்நடக்கின்ற சீதை முதலிய கன்னியர் பிரவேசிக்கின்றனர்.)

(சீதை.) தங்கைகாள், மஹானுபாவரான கௌசிகமாமுனிவர் வந்திருக்கிறதினால் நாம் வந்தனஞ்செய்யவேண்டியது.

(இராமர்.) இதுவென்சொல், தன்னுள்,

விருத்தம்.

ஓங்கமுத வீரதக்காற்றுமொரு சாரிகையி ன்
யிக்கினிய வாலாபம் இதுமுன் னனுபவித் த

தங்கெழின் மாயாமயமாம் ஜானகிதன் வாய்மொழியை ப்
பங்குட னினைப்பிக்கின்ற பான்மையிது வென்பகர்வே ன்.

(ஊர்மிளை.) நங்கைகளெல்லீர், அக்கா ஜானகியின் வசனம்கேட்டீர்களா.

(இராமர்.) பார்த்து (தன்னுள்) ஓ இவள் ஸாக்ஷாத் ஜானகியோ.

விருத்தம்.

தென்றலிற்சீதத் திங்களிற்றிருக்கின் சீர்களிப்புட னறுங்காவின்
நன்றளவிழைவு கள்ளிருளகற்றும் நற்சுகக்குயிலி னாதத்தி ன்
ஒன்றியவின்பமோ தனத்துருசி ஓங்கிலை திருடியமின்னா ன்
என்றனுக்கெதிர்முன் காண்கிலாதவ ளவ்வேந்திழையின்று காண்டனனே.

(அடடா, இவளை இந்த இரண்டுபுயங்களாலு மிருகத்தழுவி குளிரும்படி ஆலிங்கனஞ்செய்யவேண்டும்.)

(சற்றுலோசித்து.)

விருத்தம்.

ஆத்திர மடைதலாலென் அரன்றனு வினைத்தரியன் றே
சேத்திரா கந்திதன்னை நிமிடம் நீங்காதவண்ணி ம்
கோத்திரத் தனமென்மார்பிற் குத்திடத் தழுவல்செய்ய ப்
பாத்திரமாவே னந்தப்ரதிபந் தந்தனைத் திர்ப்பே னே.

(என விரைவில் நடந்து வில்லைநோக்கின்றனர்.)

இராகம் பியாகு.: ரூபகதாளம்.

பல்லவி.

ஈதொன்று சேதி என்னடிமானே.

அநுபல்லவி.

மாதரசேயென் காதில்வீழ்ந்ததடி. (ஈதொன்று)

சரணம்.

கோசிகருடன்வந்த இராஜமைந்திருவ ர்
கோடிமன்மதனிணை யாவாரா ம். (ஈதொன்று)

(சீதை.) ஆம், ஆம்.

(மாண்டவி) ஷை சரணம்.

அவரிலொருவரொரு அரிவைதன்மனத்தன் னை
அபகரித்திட்டவ ருவாரா ம். (ஈதொன்று)

(சீதை.) அழுக்காறுடன், ஆ மாண்டவி என்னடிபுலப்பம் சும்மா யடக்கிக்கொள்ளேவா.

(என்று கையிலிருந்த லீலாகமலத்தாலடித்தனள்.

(ஊர்மிளை.) சிரித்துக்கொண்டு.

விருத்தம்.

மாண்டவி வசனத்தாலே மனஞ்சகியாத தென் றோ
எண்டியுன்றனைச் சொன்னாள்கொ லேந்திளமுலையினா ளே
வேண்டியபடி தனக்கு மேற்போட்டுத் தாங்கிக்கொண் டு
தாண்டிவந்த தட்டுகின்றாய் ஜானகியுனக்கேன் கோப ம்.

(சீதை) விருத்தம்.

விரித்திடவேண்டாங் கண்டாய் விஸ்தாரக் காரிநீ யே
தரித்தபேர் ஊர்மிளைதான் சமத்திதான் சரிதான்போ போ
ஆற்றிடேலுன் மதத்திற் காளல்ல வெதிருன் பா
லுரைத்திடல் தகுதியன்றே தூரத்தி லோடிடா யே.

(சுருதிகீர்த்தி.) ஹா, ஸகி, ஜானகி எதடி இத்தனைகோபம்.

இராகம். நாதநாமக்கிரியை. ஏகதாளம்.

பல்லவி

சுந்தராங்கியே கோபமேதம்மா.

அநுபல்லவி

மந்தரக்கனதனமைதிலியே அடி. (சுந்த)

சரணங்கள்.

கந்தர்ப்பனைநேர் ராஜமைந்தரொருவனைத்த ன்
கனவினிற்கண்டு மிகமயற்கொண் டு
வந்தகோடைகாலத்து சந்ததம்நதிதீர்போ ல்
வற்றிமெலிந்ததேகமுற்றதாரோ அடி. (சுந்த)

சுதீராபிஷேக தாரைகொண்டிலகி டு
செய்யதனித்தங்கப் பதுமையைப்போ ல்
கோரவிரகவாதை மீறிடமெய்வெளுத் து
குளித்தவன்போற் கண்ணீர்வடித்தவளா டி. (சுந்த)

காமவேட்கைநெங்கோவி மாமலர்க்கணை யே வி
சருநிவெயுன்னங்கத் துளைத்தான்பா வி

சோமனுங்தென்காலும் வேமனலாச்சுதென் று
சொன்னவளாரிந்தக் கன்னியர்க்குள் அடி. (சந்த)

விஸ்தாரரமணீய உத்தியானவனத்தி ல்
விளங்கிமொதுள நெருக்கத்தி லே
சுற்றிசாளிகோஞ்சேர் மத்திமாதவீமண் ட
பத்திற்றளிர்ச்சயனத் திருந்தசா டி. (சந்த)

செந்தளிர்ச்சயனத்திருந்த பூங்கொடியின்மே ல்
சந்தனக்குழம்பிட்டு சகியரா லே
தந்தனன்ஞள ஆரம் மென்றனங்களிஞேர ம்
சாற்றிவைத்திடப் பெற்றதையலாரோ அடி. (சந்த)

சீதநிழலுமந்த வாதமுமாயுகந் த
சிறந்தயிடத்திற் சகியர்சேனையுட ன்
எதடிநாதன்வா ராதிருப்பதென்னெ ன்
றிப்படியோராட் கழித்ததாரோ அடி. (சந்த)

(தவிரவும், உதயகாலத்தில் காமவிலச்சையுடன் ஒருவரும் இல்லாதயே காந்தஸ்தலத்தில் சகியினிடத்தில் இவ்விதம் இரகசியமாயுரைத்தவளாரோ.

(மாண்டவி.) அடி, அடி சுருதிகீர்த்தி அதெப்படி சொல்லு சொல்லு.

(சீதை.) சுருதிகீர்த்தி இப்படிச்செப்புவள்.

(சுருதிகீர்த்தி)/ஆசிரியவிருத்தம்.

அரிதரிதுகண் சற்றுறங்கிடவெ தொருவே ளை
அவசமாயிமை சாற்றிடி. ல்
அப்போதுநிகழுமென் சொற்பனத்தினில் மிக் க
அபிராமவர சுந்தர ன்
இரவிகுலமதில்வந்த ஸரஸகுணசீலஞ ம்
இராமனெனு மெய்வன ன்
எதிர்வந்திலங்கு மன்னவன் மெள்ளமெள்ள வே
என்பக்கல் வந்தெய்துமா ல்
தெரிவையர்க்கரசி நானுன்னடிமை யென்றிடு ஞ்
செப்புமுலை மேன்முந்தியா ஞ்
சேலையைக் கூசாதிழுத்திடும் புருவங்க ள்
சிறிச்சுளிப்பதி லவ ன்

கரமெடுத்தஞ்சலிகள் செய்யும் யோமாற்றினி ற்
சுளிபோற் சலைத்துமுத்தி க்
கனியொடு புறம்பினினகைப்பன் றிகெனை க்
கண்விழித்திடிற் காண லே.
(என்றே)

(ஊர்மிளையும் மாண்டவியும்.) சீதையின் முகத்தை நோக்குகின்றனர்

(சீதை.) தன்னுள், இலச்சையுடன் ஓ, ஓ, இவர்களால் நமது விருத்தாந்தம் யாவும் அறிந்துகொள்ளப்பட்டது. இனியென்செய்வது கதியென்கொல்.

(வெளிப்படை.) தங்கைகாள் நீவிர் அறியீர். இதுவெல்லாம் பரிகாஸவதியான யென்சகி சீலவதியின் கேலிக்கட்டுமானம். எங்ஙனெனில்,

கொச்சகம்.

பாலருக்குஜூத்தோர் பகர்கட்டுக் காதைகள்போ ல்
சீலவதி கன்னியென்றே சீதைமெய் வெளுத்திளைத்தா ள்
மாலடைந்தா ளிப்படியப்படி யானுளென்று வந் து
கேலிசொல்லிக் கிண்டிவிட்டாள் சுருதிகீர்த்திக்கே வனிச ம்.
(மாண்டவி.) எதிரோநோக்கி.

ஆசிரியவிருத்தம்.

இதுவென்கொல் பாதலம்புகுகின்ற குகையெ னை
இலங்கயப்பெட்டி தன் னி
லேயிருப்பதில் நிதம்பூசைசெய் சுகந்தங் க
ளேற்றயிச்சிவச யமெ வ்
விதமிங்குவந்ததோ அதன்பா லகோவ கோ
வினயமதிகுண சீலஞ ய்
மிக்ககம்பீரனுய் குமாரனுய்ச் சகலக லை
விக்ஞானனு யெவர்க்கு ம்
அதிபெற்றிலங்கு சிறந்திபோற் கனனக் தீ
சொருபனுய் முகில்வண்ணனு ய்
தோற்றமிவ்வுடச பூமிக்கலங் காரனு ய்
சுந்தர விலாஸனு டி
அதிவிசாலம்பெற்று கர்ணந்த மேவிடு ம்
அம்புயக்கண் கடைகளி ல்
அருணனும் கரிகரபுயத்தனுய் நிற்கிரு ன்
ஆர்கொலிவனோர் கொலம் மா.

(சீதை.) நிதானித்து தன்னுள் (வசனம்.)

ஓ, இந்த சுந்தராகிருதியானது என்சொற்பனத்திற் காணப்பட்ட மனோரதவல்லவனிவன்றானென்று வழுத்தல்போதும், ஆகையால் இனி யென்மனோரதம் பலிக்குமென்பதிற் சந்தேகமில்லை.

இராகம் தனாசி. ரூபகதாளம்.

பல்லவி.

கண்ணாளனைக் கண்டேன்

அனுபல்லவி.

விண்ணாட்டரசனுங் கண்ணாயிரத்தானுங்
வேதனும்புகழாதித்தியகுல நாதனும்ப்ரக்யாதனை.

சரணங்கள்.

அங்கஜன்றன்பாணங்களென்ற ன்
அங்கமெல்லாந்துளைக்கவும் தென்றல்
அடிக்கவும், யான்றுடிக்கவும் இந்த
இக்கட்டுடவும் யானேவதைக்கண் டு
தெய்வந்தான் தந்ததுவோ இவனையெ ன் (கண்)

இந்தமன்னனை இந்தவேளை ய
னைந்துமய்யலைத்தீர்க்கவோ யான்
என்செய்வேன், மதன்மிஞ்சுறான், என்
சிந்தையினிலேவேமுடிந்த து
எந்தன்பாக்ய மிவ்வுருவாய்வந்த து. (கண்)

பச்சைக்கிளிமொழி லென்றனங்க ரு
வந்துதினவுகள் இன்பதும் மதப்
பயல்செய்வீம் பதையுமே நான்
எந்தவிதத்திலு மொருவைபார்க்கிறே ன்
இனியென்ன மனக்கவலை தீர்க்கிறேன். (கண்)

(ஹா, ஹா, என்செய்யப்போகின்றேன் மதனவாதை சகிக்கவசமா இதுதான் சமயமென்றே மன்மதன் என்னைக்கொல்கின்றனன்.

இராகம் காபி. ஆதிசாய்ப்புத்தாளம்.

பல்லவி.

இவனையணைந்துசுகம் பெறுவேன் இவனையணைந்துசுகம்

அனுபல்லவி.

புவனாலங்காரனை புகழ்ரகுவீரனை
புயல்வண்ணன்கனவினிற் பொருந்துசெம்பீரனை
எவனையுதாரனை யென்மனசோரனை (இவனை)

சரணங்கள்.

கரும்புவின்றானே வண்டு மலர்கள்
கணைகளாக்கிக்கொண்டு
உருவிலிறும்படைத் தோங்குறான் நேர்த்தி
ஓர்பெண்டுனை வருத்துறானபகிர்த் தி
வருமென்றுதினையாமல் வாட்டுகின்றா னே. (இவனை)

கடலில்வயித்தாலே பழக்கம்
கானகூட்டத்தைமேவே.
உடலிற்புனைந்து கொண்டொருவிதமா ச
உற்றதெனக்கபடத்தொடு நிலவீசு ம்
உடுபதிதகிக்கிறான் ஒகோவென்செய்வே ன் (இவனை

தென்றிசை பொருந்தலாலே எமன்
சேர்க்கையிருதியாவே.
தென்றலெனுமனிலன் சிறுான் பா வி
சிறிதுந்தயையில்லாமல் ஸ்திரீபழி மே வி
கொன்றிடத்திரிகின்றான் குடிகேடுபுரிகின்றா ன். (இவனை)

(என) பொதுவிருத்தம்.

வள்ளவிராமன்றன்னை வகைவகை நோக்கிக்காம ந்
துள்ளவும்பரவசாழ்தி தோகைஜானகி யாழ்ந்தென்ற ன்
உள்ளபுண்ணியங்களெல்லா முருக்கொண்டு வந்ததோவெ ன்
றுள்ளத்திற் புகன்றுகொண்டாளோ வியம்போனின்ற ளே.

(மற்றகன்னியரும் பார்த்துக்கொண்டு நிற்கின்றனர்.)

(சதானந்தர்.) இனகாகுல ரகுகுமாரனை பாருங்கள் பாருங்கள்.)

(ஜனகர்) விருத்தம்.

சகடமோதெட்டிலப் பஞ்சசதவல்லவீரரா
விகமிகவருத்தத்தோடு மேவியேயீர்த்துவந்
மகராசனத்தை லேசாய்மதித்து மிப்பாலன்கொஞ்ச
முகமிற்பயமில்லாம லதனையேநோக்கின்றான

☞ (கௌசிகர்) விருத்தம்.

அனைவரும்பாரீர் ராமனவ்வில்லை விளையாட்டா
தனதுசெங்கரத்திற் றாக்கித்தரையினி லிருத்துகின்ற

☞ (இலக்குமணன்.)

அனுவிதைகொடிவளைத்துச் சாற்றிநாணேற்றுகின்றார்.

☞ (ஜனகர்) சந்தோஷவியப்புடன்.

எனதுளக்கவலையோடும் வளைத்திட்டான்.

☞ (சதானந்தர்.)

"இறுத்திட்டானால்.

(சனகர்.) ஆச்சரியத்துடன்.

விருத்தம்.

ஊழிகாலத்துறும் முழக்குலத்தோசை யாமெனவொப்பி லன்ராகவன்
பாழிசேர்பனை வில்லிறுத்திட்டவோர் பாரசத்தத்திலான பயத்தினால்
ஆழிசூழ்புவனங்கள் திகிலடைந் தந்தரப்படியே கனைப்பெய்தி ன
கீழ்விழுந்து தெளிந்தபினுந் திகைகிட்டெழுந்த தென்னென்றுவியந்தன.

(அகோ அகோ, சதானந்தர் இரகசியத்தில், ஓ மகாராஜ ஜனகா, உற்ற சங்கதி முற்றுமறிந்தனம்.

விருத்தம்.

மாமுனி விசுவாமித்ர மாதவரின் யோத்தி க்
கோமகனிவையா ரின்றேன் கோதண்டராம னின்றே ன்
நாமமுற் றருவமாகிக் கபடமாய் முன்னர்வந்தோ ர்
திமைசேர் அரக்கரெஞ்சேற தெளிந்திட வெளியாச்சென் றே.

(ஜனகர்,) இரகசியத்தில், ஆம் ஆம், கன்கறியலாயிற்று.

(சதானந்தர்.) இரகசியத்தில், நம் கவலைக்கடல் கடந்தவாறு கபடக்கவினின்றும் கரையேறியது தெய்வச்செயலேயாம்.

(கௌசிகர்.) ஓ, மதிகுலஜனக மகாராஜனே, கேட்கக்கடவீர்.

இராகம் காபி. ஆதிதாளம்.

பல்லவி.

வில்லொடித்த வேடிக்கைபாரீர்.

அநுபல்லவி.

தொல்லைவினைகளைந்து ஆதியாம்வேத
சோதியையறிந்து தொழுமைப்பா

தொல்லுலகெலாம் புகழும்விதே க.
அரியகுலோர்த்தங்களால் நமக்குநேரா க. (வில்)

சரணங்கள்.

திரிபுவனத்திலுள வீரர்தன்னா லே
சித்தப்பிரமணங்கொண்டு திருப்படியென்மே லே
பிரளயகாலத் திடியைப்போ லே
பெரியவோசைசொண்டே புவிமே லே. (வில்)

அயன்வாய்மூடினான் அனேடப்பாகத் தை
அனைத்தான் வலக்கையா லாப்பனைத்தக்கத் தை
வியன்மார்பணிந்து மறைத்தான்மாலங் தை
மென்குழற்பெண்டுகளோ ரகுகிக்கயிவ்விதத் தை. (வில்)

(ஜனகர்.) ஆம் ஆம், இது வாஸ்தவமே.

(வித்திச்சிருவன்.) ஓ, இந்த க்ஷத்திரியப்பயல் மகாபராக்கிரமசாலிதான் என் அங்கனமன்றே.

விருத்தம்.

இந்தமகாராஜன் எமனூரில்நன்னமியற்றிடு வெஞ்சமரினிற்ற வீரைக்தான, கந்தரமுங்கணைகளைக் கண்கனிற்றீக்கனை மெமுப்பக்கனைவிடுபோற் கர்ச்சித்தானால், சிந்துரங்கள் செவிடுபட்டுத்திசையோ ரெட்டுந்திகிலடையச்செய்தனவச்சத்தமொப்பாம், வித்தையான் வில்லொடிந்த ஓசையோரில் மிகப்பலவானிரவிருவச் சிறுவனுமே.

(சாரணன்.) என்ன என்ன, வித்திச்சிருவனால் மிக மிக வர்ணிக்கப்படுகின்றதேபோலிருக்கின்றது. யாதொரு சசரதனாப்பங்கமானது எம் மகாராஜனுடைய மனோரதத்தை வேர்களைந்ததாயிருக்கின்றதோ, அப்பேர்க்கொத்த விஷயத்தில் மிக மிகப்புகழ்ச்சி விஸ்தரிக்கின்றவிதமென்னே.

(இராவணன்.) வித்திச்சிருவனைக்குறித்து, கோபமாக செய்துகொண்டு.

விருத்தம்.

இந்திரன் றனுவொடித்திப்பயலனைத்தேதியிலைமணந்துமே பணிச்சனகன்றனும், மந்திரங்கள்புகன்றிகின்றவனிதெல்லாமாமு வே கோபிகள்சிக்கட்டப்பிக்கின்றேன், சிந்தையுற்றப்பபனுருவக்தரித்துவைக்கு ப்பலனும்சக்கரவில்விலங்கவேந்தன், வந்தவழிபோகத்துவருகின்றபோ, அருக்யவினைமென்கொல்லினைக்கும்வயெவன் கொல்லோ.

(வித்திச்சிருவன் தன்னுள்.) ஓ, இவ்வரசனே கோபமடைகின்றான். ஹா ஹா, நன்று நன்று, ஆகையாலிவனை அனுசரித்தே பேசுகின்றேன்.

(வெளிப்படை.) யாதொருகாரியம் இக்காலோசிதமோ அதை இங்கிதந்தெரிந்த மகாராஜனுக்கு யானெடுத்துரைப்பதென்னே.

(இராவணன்.) அங்ஙனமாயின், இதனைக் கேட்கக்கடவாய்.

விருத்தம்.

சத்துருமென்ற மனைக்கொன்ற நரனைமுன் கொல்லல்வேண்டு ம்
மித்திரனெனினும் பின்னர் விதேகனை வெட்டல்வேண்டு ம்
சித்திரப்பதுமை யன்ன சீதையைச் சேரவொட் டா
தித்திரங் கொடியவஞ்ச மியற்றிய வித்திற லே.

(சாரணன்.) இங்ஙனமாயின்.

கட்டளைக்கலித்துறை.

கைச்சதையா லத்தமானிடக் குட்டிவக்கத் தலத் தை
தொக்குதொக்காக நொறுக்கிக் கொழுமையை நுகர்ந்து கொண் டே
அக்கணமே ஜனகன் றனை வாட்கொடுறுத் திரத்த ம்
மிக்கவுறுஞ்சிக் குடிப்பன் விடைதரல் வேண்டுமின் றே.

(வித்திச்சிருவன்.) தன்னுள்,

விருத்தம்.

இதுபுதுமை இதுபுதுமைவிடவரவை எதிர்த்திடவோர்மண்டிகமிசை யுதென்ன, அதிகருவத்துடனெழுந்தான்சாரணன்யோஜனிலையிடத்தகு மேதுஞ்செய்வான், விதவிதமந்திரங்கள் முனியருளப்பெற்றவினங்குருக் வீரன்முன்வேந்தன்றனும், குதிகொளமர்செயநியிடம்பொறுப்பான்கொல் லோகடத்தாடிச்சிலபம்பலைகொன்றிடாதே.

(வெளிப்படை.) அடடா, மூர்க்கா என்ன உளறுகின்றாய்.

ஓ, இராஜாதிராஜ மஹாராஜனே, சற்று தயைசெய்து கொஞ்சம் செவிகொடுக்கவேண்டுகின்றேன்.

(இராவணன்.) ஸரி ஸரி, இதத்தைச்சொல்கின்ற மந்திரிகளின் வார்த்தைகளை கேட்கவேண்டுவதுதானே கடமை (எனத்திரும்பினன்.

(வித்திச்சிருவன்.) ஆலோசிக்காத காரியம் அத்தனையுமபத்தமென்றபடி யோசியாதெதிலும் பிரவேசிக்கலாகாது. அத்தனை யோசியாது அவசரத்தில் பிரவேசித்த ஒருகாரியம் முடிவுபெறாமல் மத்தியில் கெடுதலை அடை-

---

யுமாயின் அக்காரியத்தையே திரும்பவும் மந்திரிகளுடன் நன்காலோசனை புரிந்து முடிவுக்கு கொண்டுவரவுங்கூடுமாதலால்.

விருத்தம்.

தலங்களெலாம்பரவுகின்ற புகழ்ப்பிரதாப தசக்ரீவசாரணன் சொல்மிகவுந் தப்பாம், பலங்களெல்லாந் தெரிந்ததுதான் விருதாப்பீத்தல் படபடப்பாயுளறுகின்றன்கேட்கொணுதே, இலங்கையிற்போ யமைச்சர்களோடுறனிந்து நாமேஇன்னவினைஇணக்கவழிஇசைப்போம்சாமி, கலங்கவிடா தும்மனதைத்திருத்திக்கொள்வீர்கடுகெனச்செல்வோமிதுவென்கருத்தையயாவே.

(இராவணன்.) ஸரி ஸரி, வித்திச்சிருவன் விளம்புவது ஸரியே, நன்று நன்று, இத்தச் சீதாதரிசன குதூகலத்திறுவென்னை திரும்ப விமானமேறி இலங்கைபோய்ச்சேருவோம், யாதொருத்தி பலாத்காரமாய் அபகரிக்கப்படவேண்டியவளோ அது விஷயமாய் யோசிக்கவேண்டும்.

என இராக்கதர்கள் எல்லவருஞ்சென்றனர்.

(ஜனகர்.) அத்தியானந்த பரிதராய்,

இராகம் பியாகு. ரூபகதாளம்.

லோகருவே சங்காரமதருவே என்றமெட்டு.

பல்லவி.

மாதவரே, மாமுனியே வந்தனமய்யா.

அனுபல்லவி.

காதிவம்சோதமிந்தியே அருள்க்
கௌசிகரோ கருணைநிதியே ஞானப்
பதியே நீரே சுதியே. [மாதவ]

சரணங்கள்.

கலைக்காட்டமெறிந்த கனலே அரக்கர்
கிலைடக்கனலவித்த புனலே தவச்
செனலே இருளைத் துனலே. [மாதவ]
சிந்தித்ததுதவிடுக் தேனுவே மனச்
சந்தேகவிருளைக்கும் பானுவே தவப்ர
தானுவே காதி குனுவே. [மாதவ]
மனவிசாரந்துலைத்தாய் வந்தனம் மகன்
நினைவின்படிமுடித்தாய் வந்தனம் அநேக
வந்தனம் அன்பாய்த் தந்தனம். [மாதவ]

(சதானந்தர்.) பகவன், கௌசிகரே.

விருத்தம்.

வெற்றிவேல் விழியாள் சீதைவீர ஸ்ரீராமனுக்கு ம்
பெற்ற ஊர்மிளைப்பெண்ணுளைப் பின்வரும் வள்ளலுக்கு ம்
மற்றதற் கனிஷ்டருக்கு மாண்டவி சுருதிகீர்த் தி
உற்றவிம் மணப்பொருத்தம் உமக்குஞ் சம்மதமதா மே.

(கௌசிகர்.) நன்று நன்று, அவ்விதமேயாகட்டும்.

(சீதை தன்னுள் தொடர்மொழி.) முக்கணன்றன் உக்கிரகோதண்டத்தை வெடுக்கென முறித்தெறிந்திட்ட மனோரதவல்லவன்றன் மிக்கமதவேதண்டகண்டம்போல் நீண்ட வாகுபலத்தால் ஒருமன்மதன்றன் இக்குவில்லு முறிக்கத்தக்கதுவே.

அடுக்குமொழி.

கன்னமதச் சிறுவேழங், கன்னலைப்போ ல்
மன்னனிந்த வல்லவனால், தன்னுமரன் வில்லுமிகச், சின்னபின்னமானதுவே. ஆச்சரியமாச்சரியம்.

அடி ஊர்மிளாய், இதென்னடி.

(ஊர்மிளை வசனம்.) அந்தோவந்தோ, இந்த ரகுகுமாரன் மனோச்சவன்றன் சராசனமிறுத்த பிரளயகால இடிநேர்த்த பயங்கரமான பெருஞ்சப்தத்தால் கிடுகிடென நடுங்கினவர்களாய் ஒருவருக்கொருவர் கையொடுகை பற்றி காலொடுகால்பின்னி முகுளிதநேலோற்பலலோசனைகளாயிருக்கின்ற நமக்கு இப்பிரமைகொண்டு ஒன்றுந் தோன்றாதிருக்கின்றதடி.

(மாண்டவி.) ஆகையால், நாம் கௌசிகர்தம் பாதவந்தனத்தைச் செய்துவிட்டு அந்தப்புரஞ்செல்வோமடி.

(சுருதிகீர்த்தி.) நன்று நன்று, அவ்விதமே செய்வோமடி.

(ஜனகர்.) ஆனந்தஸ்நேக பெருமானத்துடன், வத்ஸ ராம, ராமமங்களராமா, மனோக்கியராமா வாராய் என்னருகில் வாராய்.

இராகம் கமாஸ். ஆதிதாளம்.

பல்லவி.

வா வா வா கண்மணியே
ரவிகுல மாமணியே. (வா)

அநுபல்லவி

மூவுலகிலும்நிகரில்லாத ரூபா
மூவருந்தேவரும் புகழும்ப்ரதாபா. (வா)

சரணங்கள்.

கோசலதேசத்திராஜன் செய்தவமீடேற சேயாய்க்
குவலயத்தில்வந்தவதரித்த ஐயவீர
மோசநிசாசரியை நாசஞ்செய்தாயிஷ்ட
முனிபத்தினிக்கருள்செய்தவனே ஸ்ரீமானேநிட்ட. (வா)

ஐம்பதுபத்தாக்கிங்கர், கொணர்ந்திடுவில்லைச்சால வேசாய்
அரைக்கணத்தில்வண்டாயொடித்தெறிந்தசிறு பாலா
நம்புமுனிவர்களைப் பொய்யென்றிருந்தேனே பாவி
ராகுதனைமெய்யென்றிருந்தேனே மேவி. (வா)

பூவைஜானகிசெய் புண்ணியமென்னசொல்வே னே அவட்குப்
பொருத்தங்கணவனுக் கேவாத்தவமென்செய்தே னே
ஆவலாயுந்தனைத் தழுவவேணும் ராமா
ஆசையாலென்னருகில் வாய்யனுபிரா மா. (வா)

(இராமர்.) முகம் வணங்கினவராய் கௌசிகர் பக்கத்திலிருந்தனர்.

(வாயிற்காப்போன்.) கன்னியர்கள் வந்துவிட்டார்கள்.

(சீதை நோக்கி தன்னுள்.) அந்த ஆரன் வில்லொடித்த ஆதிவீரசிங்கம் அதோ இருக்கின்றது, என் கை கால்கள் பயத்தினால் விஸ்வாச நடைகொள்ளவில்லை.

(என மாண்டவியின் பார்சுவத்தில் மறைந்து நடக்கின்றனள்.

(இராமர்) தன்னுள் கட்டளைக்கலித்துறை.

மின்னனையா டனைக்காணை மென்மேலும் விருப்புமுன் னா
என்னிருகண் கநிதன்னைத் தடிக்கின்ற தேற்றகு ரு
சன்னதி யென்பதிலுண்டாம் விஷயத்தாரணியி ன்
கன்னயகாதச் சிவனைத்தால் சனிதான் றனைய னே.

(ஊர்மிளை) தன்னுள் விருத்தம்.

அரன்றனுவொடித்திவனுடைப்பக்கலாட்கப்பேரொளியழக ன்
வனைகிர்புயத்தன்மன்னவனிலக்குமணனிவனிருக்கின்றான்மகிழ்ந்தி த்
திருவுருவத்தைத்தெரிசித்தவென்றனுசிந்தையிசசித்தஜன்வி லா
மிருகமதாகவசித்தனைனென்னைமிகமயக்கின்றனின்வித் தை.

(என் ஜனகராஜன் பக்கத்தைச்சார்கின்றனள்.)

(இலக்குவன் தன்னுள்.) ஓ ஓ யென்ன சௌந்தரியம்.

இராகம் பியாகு. ரூபகதாளம்.

பல்லவி

இவள்கடைக்கண் கயிற்றாலிழுத்திட்ட வென்
இதயந்திரும்பிவர வில்லையே.

அநுபல்லவி.

கவரீலமுகிற்குழலால்மறைத்தா னோ
நங்கைநெற்றிற்றிலதமாய்வைத்தா னோ
கவலையுண்டாக்குதே காதல்மயக்கு தே
காமன்கணைக்கு லக்காக்கு தே. (இவள்)

சரணங்கள்.

கச்சுமென்றனத்திலோ கனசகனத்தி லோ
கனிவாயிதனமுதங் கமழுமெவ்வனத்தி லோ
இச்சையுடன்பொருந்தி யெனைமறந்திட்ட தே
இன்புறவே மயங்கிட்ட தே. (இவள்)

மாரன்கொலுமண்டப வாசலில்காட்டி ய
வாழையாந்துடைகளிலோ வளைபூட்டி ய
ஆமனையகையொய் யாரத்திலோமுங் கி
அயிக்கியமாயினவே மயங் கி. (இவள்)

கட்டிடையிலோதந்திடை யுந்திப்புடையி லோ
காரிகைஅஞ்சமென நடக்கின்றநடையி லோ
எட்டுணை யுமிவளை விட்டகலா து
இருந்துரமிக்கின்றதே இதுபொல்லா து. (இவள்)

(எனப் பராமுகமாயிருந்தனர்.)

(ஜனகர்.) குழந்தைகாள் இந்த பகவான் கௌசிகரை வந்தனஞ்செய்யுங்கள்.

(கன்னியர்கள்) விருத்தம்.

ஐயனேபோற்றி யெங்களரிய போற்றி ஞான த்
தூய்யனேபோற்றி கன்மத்துக ளறுத்திட்டோய் போற் றி
மெய்யனேபோற்றி விசுவாமித்திர முனியே போற் றி
கையிடைக் கன்னிமார்க ளெங்களேபோற்றி போற் றி.

226

(கௌசிகர்.) கன்னியர்காள், உங்கள் உங்கள் மனோரதம் நிறைவேறுக நித்தியகல்யாணமுண்டாகுக.

(கன்னியர்கள்.) கொஞ்சம் நாணுற்றுத் திருமணப்பந்தலைத்திருட் காரக்கிருக்கின்றனர்.

(கௌசிகர்.) சந்தோஷம் சந்தோஷம் குழந்தைகாள், நன்று நன்று, ராஜனே, இப்பொழுது யாகசாலையிற் பிரவேசிக்கின்றேன் ஓ மிதிலேசா, நும்சபதத்தைப் பூர்ணம்செய்யின்.

(ஜனகர்.) ஏ சேவகர்காள்! அமைச்சர்களை வரச்செய்வீர்.

(சேவகர்கள்.) உத்தரவுப்படியே.

[எனச்சென்று மந்திரிமார்கள் சகிதம் திரும்பவந்து] மந்திரியர் வந்திட்டார்கள் மகாராஜனே.

(ஜனகர்.) ஓ ஓ மந்திரிகளே, கன்னிகைகளின் விவாகோற்சபம் ஆகையால் வாசலிற் வாழைகளுட்டி பழவிதானங்கள் அதிசீக்கிரம் சிறப்புச் செய்யும்படி திட்டஞ்செய்யுங்கள்.

(மந்திரிகள்.) உத்தரவுப்படியே,

(எனப் புறவேலைக்காரர்களைக்கூவித்து,

இராகம் காம்போதி ஆதிதாளம்.

கன்னிகள்.

ஸ்ரீமன்மிதிலேசன் செல்வமகள் சீதாதேவிக்கும் ஸ்ரீராமன்றனக்கு ம்
திருமணமின்றென் றறிவியுங்க ளெல்லாத்தேசங்கடோறும்சேவக ரே
மாமஞ்சட்காப்பிட்டு மங்களபத்திரிகை மன்னர்க்கெலா மனுப்பிடுங்க ள்
வாரணங்கண்மேற் சிங்காரித்து டம்மானவாத்தியங்களை முழக்கிடுங்க ள்
வீதிகடோறும் பூப்பந்தல்விதானம் விதவிதமாக விதானித் து
மேற்கட்டிகள்கட்டி ரத்னங்களால் ஜலக்குண்டுகளாலும் நிதானித் து
தூணுக்குத்தூண் ஜெருச்சாணுக்குச்சாண் கல்லெனப் பதுமையுண்டாக்கி
தோரணங்கள்கட்டி பன்னீர்தெளித்தெங்கும் வொம்புபெறத் தீபப்பேரக்கி
வாழைகமுகுகளுட்டி வரிசையாய் மாணிக்கத் தீபங்களேற்றி ப்
பானைவாய் திருக்கல்யாண மண்டபம்வான் றச்சனுற்செய்யின்றேத் தி

நல்லதப்படியே செய்கின்றோம்.

(எனச் சென்றனர்.

(——) திரை.

மிதிலேமானகரா ளெங்கள் வெண்மதிக் குலத்தோய்காரு
அதிபெறு பொன்றூடாருங் குவிசினைத் துபாதிர்த்தான

பதியெனுந் தயரதேந்த்ரன் பாலரும் மனைவிமாரு ம்
கதியுள படையுஞ்சூழக் களிப்பொடு வந்திட்டார ல்.

(ஜனகர்.) பகவன் கௌசிகரே இது தேவவிரத சமாசாரம் ஆகையால் எமது ஆசாரியசதானந்தர் இராம லெக்ஷ்மணர் கன்னிமார்கள் இவர்களுடன் நாம் எதிர்சென் றுபசரித்து அழைத்துவரவேண்டும்;

(கௌசிகர்.) ஆம் ஆம்; அப்படியே.

(ஜனகர்.) அடா தேவவிரதா வருகின்ற கோசலேசுவரன்றன் அந்தப்புரஸ்திரீகளை உபசரிப்பதற்காக எமது அந்தப்புரஸ்திரீகளை அழைத்துவருவாயாக.

(என எல்லவர்களுஞ்சென்றனர்.)

விருத்தம்.

திருவெனும் சீதாதேவி சிந்தைக் கிசைந்தராம ன்
திருமணக் கோலங்கொண்டான் சீதையுங்கோலங் கொண்டா ள்
திருமண மண்டபத்திற் சீர்பெறக்களித்து வந்தா ர்
திருமண முறையேசெய்தார் தேசத்தோர் மகிழ்ந்தார்மா தோ.

நான்காவதங்கம் முற்றிற்று.

ஐந்தாவதங்கம்.

ஆரம்பம்.

(அப்பால் விராதன் பிரவேசிக்கின்றனன்.

விராதன் விருத்தம்.

அடவியிற்சன்னியாசிகளுக்கபயமீந்தே அரக்கர்குலமறப்பதெனச் சபதம்பூண்டு, மடமயிலாஞ்சனகியொடு மனுசனொடும் வசிக்கின்றன் ராமனெனக்கேள்வியாகி, சந்நிதியிலன்னவனை வதைத்திடுவோமென்றெண்ணி சக்ரமக்கான் விடுக்கத்தாவிவந்தேன், இடமுடையபாதெரு யித்திட்டபோதுஞ் சிறு மனிதனினியேது திண்ணைக்கானே.

(கர்வபுன்னகையுடன்.)

விருத்தம்.

பலசாலிஇலங்கைவேந்தன் அவனிறுங்கான்பலிஷ்ட ன்
தலைமையன்னவரிலும்அச் சதிலவன்சாற்றலாகு ம்

நிலமிதன்யெவர்க்குமேலாம் நிகரற்றபலவானன்றே னோ
குலவிடும்வீராமென் றெவரென் முன்குறித்துரிற்பா ர்

(வசனம்.) அங்ஙனமாயின். தனக்குத்தாழ்மையான பலவானுமில் இராவணனை இலங்கைக்கரசாக்கி வைத்ததெல்லாம் கேசரியின் சுதனென்று நமது சம்மதத்தினாலல்லவோ) சற்றாலோசித்து ஆச்சரியமாச்சரியம்.

விருத்தம்.

நிசிசாசரர்குலத்தைச் சிதைத்திடச்சபதம்பூண் டே
சராதயிரியமென்செல்வேன் கமிமாலயமேபோலா ம்
காறுமாமிலேபென்றாலுங் கடிந்திவன்றனை வதைத்து ம்
சிரிபெறுமவனுத்தாரந் தந்துநமக்கப்பா மே.

விருத்தம்.

முகுளங்கனிநறுந்தாசையை மூட்டுங்கிழல்காட் டும்
வகுளங்களுயர்ந்தோங்கிடு வனையினடமதி லே
அகளங்கமதிலியோடில இன்றுனன்னானை ப்
புகழுங்குயில்வடிவாய்கனி பொருந்தக்கண்டனே ன்;

விருத்தம்.

பலவானசத்தனைவாடியின் பக்கல்வளையிக் க
இலையாவொளிர்குடிசிற்றலை எதிரிவிளையாறு ம்
விலைவர்ளியைக்கிழ்வைத்துறை வென்வாடமையுறா வி
துலையாறுசேனைக்கின்றன் தாய்விண்டலமதி லே.

(அகோவகோ, இவனுடையதீரமும் பராக்கிரமமும் என்னென்று சொல்வேன்; அடடா,

(கோபாழ்ந்தனத்துடன்)

இராகம் காம்போதி, ஆதிதாளம்.

பல்லவி.

இவனைச்செயிப்பார் திரிபுவனங்களிலு மில்லை
என்றாலாகுமோ ஆகாதே,

அநுபல்லவி

கவலையில்லாமலத் தானுப்பிடவந்தேன்
என்னிடேன்மிகவும்வெ குண்டேன்மனம்நொந்தேன் (இவ)

சரணங்கள்.

அரியையரியுமத கரியைவெல்லாமேகல்
வரையைத்தலையாயும்வெள்ளி திட்டாலும் மேரு
கிரியைநிகர்புயவன் னாளைவெல்லவோவென்றால்
கிட்டவாகிலும்போக எட்டுமோவொருக்காலும். (இவ)
திரிகம்பீரனை வீரசபாவத்தன்
சிவசிவசாலக படசித்தன், மிக
தூரத்திருந்துகாண இவனவுபயமானுல்
சொல்லவேணுமிவனை சொல்லவுநான்ருறே சக்தன் (இவ)
இவனுக்கிவளவானுல் இவனினும்பெரியவன்
இராமனைக்கெயிப்பதற்க் கிடமேது, இந்த
அவனியிலுயிர்மீ தாசையற்றவர்
ளவனுமுனை நிற்கவேண்டும் அவனைகொல்வாரப்பாது. (இவ)

விருத்தம்.

மனிதனொன்றனைக்கப்போமோ வதுத்தவரிவர்பார்த்செல்லே ன்
இனியென்னசெய்வேனந்தோ இவனுயிர்த்தலைவியா ன
வனிதைஜானகியாமின்னுள் வனப்பினிலுயர்மோட் ட
அனங்கடைஇவளைகானே அனைந்திடஆவல்கொண்டே ன்.

ஷை விருத்தம்.

பைங்தொடி இரதியும்பி பாவையினெழிற்குசோ ரோ
இந்தவல்லியைநீக்கா திருக்கின்றராமனென்ன ஞ்
சுந்தரச்சடிகைப்பார்த்த விடத்தினிற்றலங்காரின் ற
மந்தரத்தனவைதேகிமணியை யெவ்விதம்யான்கொள்வே ன்.

இராகம், பியாரு. ரூபகதாளம்.

பல்லவி.

வஞ்சியிவள் நெஞ்சிரங்கியே கொஞ்சவாராளோ
என் மிஞ்சுமையல் தீராளோ (வஞ்)

அநுபல்லவி.

பஞ்சபாணன்றன் வெஞ்சரங்களும் பாயுதென்மேலே
கஞ்சமலர்க்கண்ணாற்பாராளோஎன்றன் காதல்தீராளோ
கட்டிமுத்தந்தாராளோ. (வஞ்)

சரணங்கள்.

மங்கைஇவடன்செங்கமலம்போல் வதனமுத்தனமும்
எங்கணும்புகழுங்கனன் ரதசக்ரங்களும்
கண்டிருக்குதென் மனமும். (வஞ்)
பாக்கியமென்செய்தேனே இந்தப்பாவையைக்காண
பாக்குள்யார்க்குமிலக்கியந்நியாய் பார்க்கையிற்றேண
பகருதேஇவள் கானம். (வஞ்)
மன்மதன்பாணம்பிரயப்பாய வாடிநொந்தேனே
கன்னமிலைஇவளேரிட்டுப்பார்க்கக் கண்ணிற்காணேனே
கலந்தணைந்திட லானேன். (வஞ்)

விருத்தம்.

வனசமலர்மாலையொன்று கோவிலங்கின் வன்கரத்தில்விளங்க இராமானதன்மேல், அனவரதமாசைகொண்டா னவதென்னை அவ்வாறுமென்னினும் யானவனைவிட்டு, வனிதையிவடனித்திருக்கும்வேளை வாய்மனிதனன்றேனுருவுதனை வகித்துக்கொண்டு, மனமுவந்தஇடத்திலவடனைச்சேர்ந்திட்டம் வந்தபடிமருவிசுகம் சுகிப்பேன்மன்றே.

ஷை விருத்தம்.

குவளையங்கண்ணி இக்கோதையைக் கொள்வே ல்
இவனுடை வியோகத்தாலி ராமனிறப்பனு ல்
துவலின் யானுமன்னொடியிற் பொன்றுவ ன்
கவலைகொள்காரணமொகாரிய மாருமா ல்.

(வசனம்.) ஆகையால் ஜானகிதனித்து அவனைவிட்டு வெளியே வருகின்ற வரவை சமயம்பார்த்துக்கொண்டிதோ சமீபத்திற்றெம்பகின்ற கோவிதாரவனத்திற்றங்கியிருக்கின்றேன்.

நன்று நன்று இவ்விடத்திற் சடாயுவைக் காணப்படவில்லை, பல் வரி வரி, நிச்சயமாய், தன்றமையன் ஸம்பாதியை வந்தனஞ்செய்துவரப் போயிருத்தல்வேண்டும்.

(எதிர்நோக்கி) ஓ ஓ இலங்கைத்தீவில் நின்றும் சூர்ப்பனகை வருகின்றனள்கொல்.

[எனநடக்கின்றனன்.]

[அப்பால்] சூர்ப்பனகி பிரவேசிக்கின்றனள்.

